திருமந்திரம்

நான்காம் தந்திரம்

4







மெய்யுரை ஆசிரியர் :

தத்துவக்காட்சியர்

• வீர. உலகநாதன்


திருமந்திரம் – தந்திரம் – 4

திருமூலர் திருமந்திரம்

(நான்காம் பாகம்)

மெய்யுரை

T.N. Loganathan..



உரை ஆசிரியர் :

தத்துவ காட்சியர் திரு. வீர. உலகநாதன்

டி.டி.4, வீட்டு வசதி வாரியம்,

திருமூலர் திரு மந்திராலயம்

சாலை ரோடு, திருச்சி – 620 002.

வீர உலகநாதன்

[ஒரு தத்துவ மேதை]

இரங்கற்பா

[எண் சீர் விருத்தம்]

1. பிற நாட்டார் ஆதிக்கம் போக்கிடவே செய்த
பீடுடைய பெம்மான் செக்கிழுத்த செம்மல்
பிறந்தவூர் ஓட்டப்பிடாரது தன்னில்
பிரிதொரு மேதை தத்துவத்தில் பெரியோன்
சிறப்புமிகு தமிழில் வல்லவனாய் பிறந்த
சீரியதோர் பேரான் உலகநாதன் என்பான்
திருநெல்லைக் கழகமென்ற ஒரு சங்கம்
திகழுறவே திருச்சியில் அமைத்தார் அன்றோ!

2. உலகினிலே நற்பேர் பெற்றவர் என் அண்ணன்.
உயர்ந்திடவே மக்கள் நலவாழ்வு வாழ
தலமெங்கும் பிணி நோய் கள்வாரா திருக்க
தக்கோர்க்கும் மற்றோர்க்கும் தியாணப் பயிற்சி
திலகமென விளக்கி எல்லோரும் போற்ற
சிறந்ததோர் ஞானியாய் மிக்கச் செய்து
பலவேறு சமயத்திலுள்ளோர்க்கும் தினமும்
பல்கலையும் சொல்லி வளர்த்து வந்தார்தானே!

3. அவ்வையருள் விநாயகர் அகவலுக்கு
அருமையான விளக்க உரையது தான் ஈந்து
செவ்விய ஓர் ''மனிதனும் தெய்வமாகலாம்''
செய்திடுமென் நூலுக்கு சிறப்புரையும் தந்து
செம்மையுள ''மறைபொருளாண்மை'' யென்ற நூல்
சேயோன்றன் ''கந்தர் கலி வெண்பா உரையும்
செப்பிடு நல் இதர நூல்களுமே இயற்றிச்
செய்த உலகநாதன் சேவை மிகப் பெரிதே!

4. தவப்பயனாய் மூலர் செய் திருமந்திரத்தின்
நான்காம் தந்திர விளக்கம் வெளியீடு முன்னே
உவந்துமே ஈசனுன்பால் பேருளம் கொண்டு
உலகில் உம்முயற்சி முடிப்பதற்கு முன்னே
அவனியில் அதிகம் செய்து விட்டீர் என்று
ஆதிசிவன் ஆணையிட்டு நீவீர் இன்றே
புவனியில் பேய் சேவை செய்திடுவாய் என்ன
பூத உடலை விட்டு உத்தமன் தன் பாதம் சேர்ந்தீர்!

5. அன்னாரது அன்பு மனைவியராம் கோமதி
அழுது கண்ணீர் வடித்துப் புலம்பி நிற்க மற்றோர்
என்ன செய்வதென்று ஏக்கமுற்று வருந்த
என்ஞான்றும் தோன்ற மும்மறைவும் இயற்கை
என்று தேற்றி இறையருளிதுவென்று எண்ணி
ஏற்றமிகு மனைவியைத் தேற்றி நிற்பர்.
அன்னார் தம் ஆத்மா சாந்தி பெற சிவனை
அன்பு செய்து வணங்கி அஞ்சலி செய் வோமே!

இவண்

அ. சண்முக சுந்தரம்
மற்றும்
குடும்பத்தினர்

D6 மகராஜ நகர்
28.1.2000

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

குருவடியே திருவடி
குருவருளே திருவருள்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

– திருமந்திரம்

எனது ஞானாசிரியர் தவத்திரு. தத்துவக்காட்சியர் வீர உலகநாத ஐயா அவர்களின் திருவடியைத் தொழுது வாழ்த்தி வணங்கி அவர்தாம் இயற்றிய திருமூலர் திருமந்திரம் 4ஆம் தந்திரத்துக்கு அடியேன் மெய்யன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி முன்னுரை எழுத முன் வந்துள்ளேன். இச்சிறியேன் எழுதும் உரையில் பிழையிருப்பின் பெரியோர்கள் பொருத்தருள வேண்டும்.

திருமூல நாயனார் நமக்குத் தந்த அறிவுப் புதையல் திருமந்திர நூலாகும். இந்நூலுக்கு முன்னுரை எழுத வேண்டுமானால் அவர்தம் நிலையில் நின்று எழுத வேண்டும். அந்நிலை எய்தா அடியேன் எழுதும் உரை எங்ஙனம் அமையுமோ?

மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாகுமே

– அகஸ்தியர் ஞானப்பாடல்

ஆக மனது செம்மையாகும் வரை மந்திரங்கள் செபிக்க வேண்டும். தவம் புரிய வேண்டும். தவம் என்றால் முயற்சி அல்லது சாதனை. முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார். விடாமுயற்சி வெற்றி தரும். முயற்சி திருவினையாக்கும் ஆக நிறை நிலையாம் இறை நிலை அடையும் வரை ஒரு உயிர் அல்லது ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடியை நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இறைவன் நாம ரூப மற்றவன். அவனுக்கேது திருவடி என்று அன்பர்கள் எண்ணக்கூடும். இறைவனை "ஆதியந்தமில்லா அருட்பெருஞ்ஜோதி" என்று ஆன்றோர்கள் தம்தம் தவ வலிமையால்

நமக்கு உணர்த்தியுள்ளார்கள். அந்த ஜோதி நம்மில் நுழையுமிடம் திருவடி. அதுவே மலரடி, இணையடி, கழலடி. அந்த அடி நம் ஒவ்வொருவரிலும் "கண்களாக" உள்ளன. அந்தக் கண்களையே நினைப்பது இறைவனின் திருவடிகளை நினைப்பதாகும். அதுவே இரு சுடர். இந்த இரு கண்களையே இரு ஒளியாக பாவித்து பலகால் ஒழுகி வந்தால் அறிவுக்கண் திறக்கும். நடு நாடிப் பயிற்சி திருவடியுணர்வும் கிட்டும். இதற்குப்பின் நீங்கள் தனித்தன்மை இழந்து இறைத்தன்மையில் கலந்து மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவீர்கள். இதை எப்படிப் பெறுவது என்பதை மிகத் தெளிவாக தெரிவிக்கும் நூலே திருமந்திரம்.

இந்த நான்காம் தந்திரம் தவத்தில் வரும் உணர்வுகள் குறித்து நமக்கு பலவற்றைத் தெரிவிக்கிறது. ஒவ்வொரு தந்திரமும் நமது பக்குவ நிலைகள் குறித்து இயம்புகின்றது. அசபை என்ற பேசாப் பேரொளி வட்டத்தை உணர்ந்து நவாக்கரி சக்கரம் என்ற நமது உடலை முழுமையாக பயன்படுத்தி தவ நிலை உயர்வு பெறச் செய்துள்ளது.

நேயத்தை ; ஞானத்தை; ஞாதுருவத்தினை;
மாயத்தை; மாமாயை தன்னில் வரும்பரை;
ஆயத்தை; அச்சிவன் தன்னை ; அசோக
வியத்தை; முற்றும் விளக்கியிட்டேனே

எனக் கூறியுள்ளார்.

ஆக மற்ற நூல்களைப் படிப்பது போல் படிக்காமல் மிகவும் நிதானமாக பொருளுணர்ந்து படித்து மனதை அறிவாக்கி மனதை அதோடு இணைத்து எப்போதும் "அறிவே" நான்; எனக்கு ஆக்கமுமில்லை அழிவுமில்லை; எனக்கு நானே ஆதாரம் என்ற நினைவில் மனத்தை இருத்தி நீங்கள் முழுமையான அறிவு ஆக முயற்சியுங்கள். இதுவே நீங்கள் எனது குருபிரானுக்கு காட்டும் நன்றியுணர்வு.

குருவடியே திருவடி
குருவருளே திருவருள்

இவண்
அன்பு மாணாக்கர்களில்
ஒருவன்

தலைப்புக்கள்

ஆக

(இவை எல்லாம் உள் உடம்பில் நிகழ்வன)
உணர்வால் உணரலாம்

திருமந்திரம்
நான்காம் தந்திரம்

அசபை (பேசா எழுத்து)

போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்
தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின்றேன் அறையோ சிவ யோகத்தை
ஏற்றுகின்றேன் நம்பிரான் ஓர் எழுத்தே. 864

மௌன நிலைதான் முதல் நிலை. அதிலிருந்து பிறந்தது நாதம், விந்து, கலை, இம்மூன்றும் சேர்ந்து ஆதிசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, யோக சக்தி, ஞான சக்தி, மாயா சக்தி இவை ஆறும் இறங்கு நிலை. இது ஏறும் நிலை மட்டுமே திருமந்திரத்தின் நோக்கம். ஆனால் ஏற்ற நிலையை அறியாமல் நாம் இருக்கும் நிலையே முதலும் முடிவுமாக நினைத்து வாழ்பவருக்கு அநுபவம் வாய்ந்த திருமூலர் சாற்றுகின்றேன் என்றார். சிவஜோதியை அடையும் வழியை காட்டுகின்றேன் என்றார். அடிமை வாழ்க்கை வாழும் அனைத்துயிர்க்கும் என்றும் நம்மை விட்டு நீங்கா (இமைப் பொழுதும் என் நெஞ்சை விட்டு நீங்காத) திருவடி உணர்வை, தமிழ் ஆகம மொழியில் போற்றுகின்றேன். உள்ளத்து உணர்வால் ஓயாது போற்றுகின்றேன். அதனால் திருவடியை கூடுதலாகிய சிவயோகத்துக்கு வேண்டத்தக்க சக்கரத்தையும், ஓம் என்ற பிரணவ ஒலியின் ஒண்மறையையும், அந்த நாதத்தின் முடிவான மௌண பீடத்தையும் காட்டுகிறேன் என்கிறார். நாம் சாக்ஷியாக இருந்து காணுவோமே. பேசும் எழுத்து 'வ'. நமசிவாய' மந்திரத்தில் வனப்பாற்றல். பேசாத எழுத்து நம் கண்களில் உள்ள நெருப்பு. காற்று போய் நெருப்பில் சேருவதே 'சிவ'. 'ய' விரிவு. அதுவே ஜீவாத்மா. 'ய' வ்விரண்டும் கண்ணதாய் என்பது சிவ வாக்கியர் வாக்கு.

ஓர் எழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்து அங்கு இருவராய்
மூவெழுத்தாலே முளைக்கின்ற சோதியை
மா வெழுத்தாலே மயக்கமுற்றதே. 865

ஓர் எழுத்து என்பது 'ஓம்' என்னும் பிரணவம். இது எழுத்தில் (எழுச்சி) மூன்றாக இருந்தாலும் ஒலியில் (உச்சரிப்பில்) ஒன்றேயாம். இதைத்தான் பேசாத எழுத்துக்கு அடுத்த நிலை. நாதசத்தி, இந்த மூன்று வேறுபாடுகள் மூன்று மூன்றாக ஒன்பது ஆயிற்று. அதனாலேயே பிரணவம் என்கிறோம். ஓ என்பதை பகுத்தால் அ+உ. 'அ' என்பது சூழ் ஒளி 'உ' என்பது குவிதல் (நாதம்). ஓசையும் ஒளியுமான நிலை. இது ஈரெழுத்து. ஒன்றே அவனானான். இரண்டு இன்னருள் இவை அன்னை அத்தன் என்னும், சக்தி, சிவன். சிவம் என்பது சதாசிவம் என்றும், ஆகாய நிலை என்றும் வான், விண் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படும். பரமான்மா ஜீவான்மா அடுத்து மூன்றில் நின்றனன். அ+உ+ம் நிலையில்லாததில் நின்ற நிலை. இது சுடர் (சூரியன்) சந்திரன், அக்னி, நம்மில் அறிவு மனம், உடல் இதில் ம் மாயையினைக் குறிக்கும். மனம் (சலம் மகள் 'ம' நடப்பாற்றல்) உயிருக்கு மயக்க நிலை.

தாண்டவமான தனி எழுத்து ஓர் ஐந்து
தாண்டவமான தனுக்கிரகத் தொழில்
தாண்டவக் கூத்து தனி நின்ற தற்பரந்
தாண்டவக் கூத்துத் தமனிய ந்தானே. 866

இந்தத் திருக்கூத்துக்கள் ஒப்பில்லாத திரு ஐந்தெழுத்தின் அருள் கூத்து ஆகும். அவை அனைத்தும் ஆவிக்கு அருளும் அருளிப்பாடே ஆகும். அக்கூத்தினை அருளுபவன் முழுமுதல் சிவனே. பரிபூரணர், பூரண அறிவுநிலை. தாண்டவமான தனி எழுத்து ஓர் எழுத்து. ஐந்து எழுச்சி நடமுறை, தொழில் தொழில் - நடனம் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல், தற்பரம் தான் தனியாகவும் நின்று தமனியம்.

தேவர் உறைகின்ற சிற்றம்பலம் என்றுந்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றுந்
தேவர் உறைகின்ற அம்பலம் என்றுந்
தேவர் உறைகின்ற தென் பொதுவாமே. 867

தில்லை வாழ் அந்தணர் மூவாயிரம் என்பர். அது நாம் குறிப்பிடும் சிதம்பரம் என்ற ஊர் அல்ல. இது எல்லோருக்கும் பொதுவான இடம். மூவாயிரம் என்று சொல்வது அறிவு நிலையில், அரூப நிலையில் சொன்ன மனம், புத்தி, சித்தம் என்ற மூன்று நிலையையே குறிக்கும். ஞானேந்திரியங்களோடு புத்தி சேரும் போது அது விஞ்ஞான மயகோசம். சித்தம் சேரும் போது சித் ஆகாசம். மனம் சேரும் போது மனோமயகோசம். உடலோடும் சேரும் போது அன்னமயகோசம். தென் என்றால் தெளிவு நிலை. சிவன் உறைகின்ற இடம். சித்த பீடம். ஒளி பீடம். மௌன பீடம்.

ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயமாகும் அத்தாண்டவம்
ஆமே சங்காரத் தரும் தாண்டவங்களே. 868

உலகியலை சாத்திரங்கள் நாடகசாலை என்றே கூறுகின்றன. இந்த ஐந்து நிகழ்ச்சிகளையும் கூத்தாகவே வர்ணிக்கின்றன. தாண்டவம் என்பது ஆவிகளை முன்னேற்றப்புரியும், அருளின் செயலாகும். அற்புதத் தாண்டவம் என்பது அருள் நிலை. ஆனந்தத் தாண்டவம் என்பது ஆகாய நிலை. சிதம்பரம். அனவரதத் தாண்டவம் (நெருப்பு, அனாகத நிலை, காற்று, நீர், ஆவி நிலை) ஊழிக்காலத்து ஆயுள் முடிவு பேரொடுக்கம் என்பது மோட்ச நிலை. அற்புதம் - வியப்பு - ஆனந்தம் - பேரின்பம் - அனவரதம் (இடைவிடாமல்).

''தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாம்
ஊன்றுமலர் பதத்தே உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு'' (சைவ சித்தாந்தம்)

தானே பரஞ்சுடர் தத்துவமாய் நிற்குந்
தானே அகார உகாரமதாய் நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவ கூத்துக்குத்
தானே தனக்கு தராதலந் தானே 869

இங்கே அத்வைதம் பேசப்படுகிறது. எல்லாம் தானே காரணம், தானே காரியம் தானே பயன், ஒப்பில்லாத பேரொளிப் பிழம்பு தானேயாம். என்றும் அழிவின்றி ஒன்று போல் யாண்டும் செறிந்து நிற்கும் மெய்ப் பொருளும் தானேயாம். அகர உகரமாகிய அறிவோனும், உடையானுமாக விளங்குவதும் தானேயாம். அருட் பெரும் கூத்துக்கு தனி முழு முதலாய் விளங்குவதும் தானேயாம். தனக்கு நிலைக்களமாக இருப்பதும் தானேயாம். தராதலம் (நிலைக்களம்) தாங்கும் இடம். நீங்களும் நானும் யார்? அவனே தான்.

தராதல மூலைக்குத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமசிவாயந்
தராதலம் சொல்லிற் தான் வாசியாகுந்
தராதலம் யோகம் தயா வாசியாகும். 870

தராதலம் என்பது தாங்கும் சத்தியே. முதல் நிலை பரம். பரந்த நிலை. வெளி. அடுத்து அரு உரு நிலை. வெப்பக்கடல் ஐம்பூத அணுக்களின் நுண்ணிய தன்மை. காற்று, நெருப்பு, நீர் சேர்ந்த மூக்கூட்டு, அடுத்த நிலை வாசியாகும். காற்று மண்டலம் வாசி உயிர்ப்பு. தாங்கும் ஆறு நிலைக்களங்களுள் மூலாதாரம். அதற்கு தெய்வமாக விநாயகரே குறிப்பிடப்படுகிறது. அதுவே வாசி ந, ம, வ, சி, ய என்ற மந்திரச் சொல் இதையே குறிப்பிடுகிறது. கீழ் நோக்கிய முக்கோணம்.

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா இடம் என்ப
ஆமே திருக்கூத்து அடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. 871

நான் என்பது தான் எழுவாய் கடவுள். அது சமநிலையிலிருக்கும் வரை அமைதி. அது எழுச்சி பெற்று வேறு வேறாக பிரிந்த போது ஒன்று என்பதை மறந்து நட்பு, பகை, இப்படி ஒன்று, இரண்டு என்று ஒன்பது வேற்றுமைகள், 10, 100, 1000, 10000 என்று பெருகிக் கொண்டும், கடைசியில் ஒன்றாவதே இயக்கம். ஒன்றைத் தவிர மற்ற யாவும் கற்பனை என்று காட்டுவதே சூனியம். ஒன்று இல்லையெனில் சூனியம் எத்தனை இருந்தாலும் பயனில்லை. இதல் அகரம் என்பது ஒளி சிவ மாகவும் 'உ' காரம் ஒலி சத்தியாகவும், ஓசை, ஒளியாக செயல் படுகிறது. சத்தி சிவம் விளையாட்டு. இத்தாரணி சத்தி சிவமின்றி தாபரம் வேறில்லை. சத்தி தான் என்றும் சமைந்து உருவாகும். இவை இரண்டும் சுட்டறிவுக்கு எட்டாத துணைப் பொருள்கள் ஆதலால் அறியா இடம் என்பர். அறிவு உருவாம் முழு முதல். ஐந்தொழில் திருக்கூத்தாகிய பெரும் பொருளாகும். இறவாத மாறாத இன்ப நிலையம். சிவலோகமேயாம். பரம் மேலான மெய்ப் பொருள். சிற்பரம் மேலான அறிவுரு. சிவகதி இன்பநிலை.

ஆனந்தம் மூன்றும் அறிவு இரண்டு ஒன்றாகும்
ஆனந்தம் சிவாயம் அறிவார் பலரில்லை
ஆனந்த மாகும் அறிய வல்லார்க்கு
ஆனந்த கூத்தாய் அகப்படும் தானே. 872

அகப்படும் என்றால் சமநிலையிலிருந்து எழுந்த எழுச்சி சமநிலையாகி அடங்கும் என்பதே பொருள். சம நிலையே சைவம். இறவாத இன்ப நிலை. அகர, உகர, மகாரட்கள் இதைத்தான் சாகாக்கால் (பிராணசத்தி) வேகாத்தலை (ஆகாயம்) போகாப்புனல் (மாயை) அறிவாற்றல் அறிவு என இரண்டிடம். அறிவாற்றல்

ஆணை சக்தி. அறிவு சிவம். இவற்றுடன் 'ய' கரம் (ஜீவன்) ஒன்று கூட சிவய என்றாயிற்று. இம்மூன்றும் ஒன்றே என்று அறிவார் வெகுசிலரே. இறவாத இன்பத்தை அதனுடன் புணர்ந்து அறியவல்லார்க்கு அவ்வின்பம் வெளிப்பட்டு அகப்படும். விளையாட்டாகவே பார். ஆனந்தம் மூன்று அ, உ, ம் அறம் பொருள் இன்பம், மூன்றையும் விட்டது வீடு. சசி - சக்தி, சிவம் ஆன்மா சசி ரேகை.

படுவ திரண்டும் பல கலை வல்லார்
படுவது ஓங்காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே. 873

இணைந்திருக்கும் ஹம்ஸ மந்திரம் (சிவ) இரண்டு அனுபவத்தில் புரிந்தவர்கள் பல்கலை வல்லார் ஆவர். அகம் பிரம்ம ஹம்ஸம். அம்சம் என்றால் சாரூபம். அறிவும், ஆணையும். அறிவே சிவம், ஆணையே சக்தி. இவ்விரண்டின் விரிவே 'ஓம்' நமசிவய, இம்முறை குறிப்பதே சங்காரத் தாண்டவம். பரவும் - வியாபகமாகும். பக்தி என்பது முறையாகச் செயல்படுவது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்படுவது. கோணம், புலம், திசை; வாறு பேறு சிவப்பேறு. சங்காரம் - பேரொடுக்கம் எல்லாம் அடங்கிய இடம்.

வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே பொதுவாகும் மன்றின் அமலமே. 874

வாறு என்பது பேறு மாறிக் கொண்டே இருக்கும். மாயா உலகத்திலிருந்து நிலை பெற்ற சதாசிவ (ஆகாயப் பேறு) அத்தி சத்தி சிவம் இரண்டும் இணைந்திருக்கும் இடம். வாயுவும் மனமும் கடந்த மனோன்மணி நிலை. ஆதி நிலை. அவ்

ஆகமத்தின் வளப்பமிக்க விளக்கமே. மலமகற்றி சிவப் பேறாக்கும். அனைவருக்கும் பொதுவாம் அம்பலத்தின் கண் நடிக்கும். திருக்கூத்தும் ஐந்தொழிலின் விளக்கமே. மாறிலா முரண்பாடில்லாத வண்டுறை - வளப்பமிக்க துறை; புன்னை - புல் கை; புல்லும் மலமாகிய ஆணவம் (அறியாமை) நெறி நூல் - வேதம் துறை நூல் - ஆகமம்.

அமலம் பதி பசு பாசம் ஆகமம்
அமலம் திரோதாயி ஆடும் ஆனந்தமாம்
அமலம் சொல் ஆணவம், மாயை, காமியம்
அமலம் திருக்கூத்து அங்கம் இடந்தானே. 875

ஆவி உருவத்தில் இருக்கும் உயிர் இனங்களை ஒளிமயமாக்கும் (அறிவு) நோக்கமே சிவ நோக்கம். அதற்கு உபகரணமாக வந்தது பதி பசு பாசம். திருந்திய முதல் ஐந்தெழுத்து ஒளிவடிவம். (அறிவு) இரண்டாவது ஐந்தே ஆவி ரூபம் (உயிர்) அரு உரு மூன்றாவது ஐந்தெழுத்தே ஸ்தூலம் (உயல்) திரு ஐந்தெழுத்தால் சீரிய முறையில் வைத்துக் கண்டால் (நெற்றிக்கு நேரே இடைவெளி உற்று உற்றுப் பார்க்க சித் அம்பலமாகும்). பசு, பாசங்கள் பதியின் நாட்டத்தால் முறையே பசுப்பிணி விடும். தூய்மையாகும். மனமே - திரோதாயி அதுவும் மாறி அருள் ஆற்றலாக வளப்பு எய்தும் சுந்தரச் சோதியாகும். அந்த மில்லாத அறிவின் அரும் பொருளாகும்.

தானே தனக்குத் தலைவனுமாய் நிற்கும்
தானே தனக்கு தனமலையாய் நிற்கும்
தானே தனக்கு தனமயமாய் நிற்கும்
தானே தனக்குத் தலைவனு மாமே. 876

தனம் என்பது ஸ்தானம். நிலைபெற்ற இடம். தலைமைப் பதவி. முழு முதல் சிவன் தானே ஆற்றலாகவும் நிற்பன். தானே தனக்கு அழிவில்லாத பெரும் செல்வமாகவும் நிற்பன். தானே தனக்குள் சிவமாயும் நிற்பன் ஆக சர்வ வியாபி. எல்லாம் ஒன்றே.

தலைவனுமாய் நின்ற தற்பரக் கூத்தனை
தலைவனுமாய் நின்ற சத் பாத்திரத்தை
தலைவனுமாய் நின்ற தாது அவிழ்ஞானத்
தலைவனுமாய் நின்ற தாளினை தானே. 877

எதையாவது சார்ந்து சார்ந்த வண்ணம் அடிமையாக வாழும் உயிருலகம் உயர உதவும் சிவம். பொன்றாத் தலைவனாய் நின்று அருள்பவன் தற்பரக் கூத்தன். அவனே என்றும் ஒன்று போல் விளங்கும் நிலைப் பொருளாகிய சற்பாத்திரம். (சத்து)

இணையார் திருவடி எட்டெழுத்தாகும்
இணையார் கழலிணை ஈரைந்ததாகும்
இணையார் கழலினை ஐம்பத்தி ஒன்றாகும்
இணையார் கழலிணை ஏழாயிரமே. 878

எட்டெழுத்து என்பது எட்டு அறிவு - அல்லது எட்டு நிலை ஒரே அறிவின் எட்டுத் தொழில் எனலாம். தொழிலால் ரூப நாமம் வேறுபடலாம். ஆனால் எழுவாய் ஒன்றுதான். செயல், செயப்படு பொருள் வேறுபடலாம். அது அம், உம், ஓம் நமசிவய கழலிணைகள் இரண்டும் ஈரைந்தெழுத்து, ஞானேந்திரியம் ஐந்து. கர்மேந்திரியம் ஐந்து சிவய நம (சூட்சமம்) நமசிவய (ஸ்தூலம்) ஸ்தூலத்தில் ஆறு ஆதாரம் ஐம்பத்தொரு எழுத்து (4+6+10+12+16+2+1 = 51) முப்பது எழுத்து எண்பது முகத்தில் உடலில் 50 எழுத்து, இவை இரண்டு என்பது எழுச்சிகள் உடலுக்கு ஒன்பது வாசல் மனதுக்கு எண்பது வாசல், அறிவுக்கு ஒரே வாசல் - பள்ளிவாசல் - நடு நாடி உடலில் 72000 நாடி நரம்புகள் உண்டு. அதை ஏழு உலகம் என்பார். பூர், புவ, சுவ, மக, தபோ, ஜனோ, சத்யலோகம், மனிதன் சத்ய லோகம் வரை போக இல்லை. இவன் பூர், புவ, சுவ என்றாகும். கோணத்திலேயே - 3 DIMENSION வாழ்கிறான். ஏழு சத்திகள் : அலைமகள், கலைமகள், மலைமகள், நிலமகள், சலமகள், தலைமகள், நிலை மகள். எழுவகை தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், கலப்பித்தல்,

களிப்பித்தல். இவ்வெழுவகை ஆற்றலும் முறையே, சரஸ்வதி (வாணி) திரு (லட்சுமி), பார்வதி (மலைமகள்) மகேஸ்வரி, மனோன்மணி, விந்து (ஒளி) நாதம் (ஒலி) என்றும் கூறுவர்.

ஏழாயிரமாய், இருபதாய், முப்பதாய்
ஏழாயிரத்தும் எழுகோடி தானாகி
ஏழாயிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழாய் இரண்டாய் இருக்கின்ற வாறே. 879

ஒன்றுக்கு முன்னே சூனியம் எத்தனை போட்டாலும், ஒன்று இல்லையாயின் மதிப்பு இல்லை. அதுவே வளர்பிறை பிரவிர்த்தி மார்க்கம். ஒன்றுக்கு பின்னால் போடும் சூனியம் தேய்பிறை. ஆனால் ஒன்று ஒன்றாகவே இருக்கும். இருள், ஒளி இரண்டுக்கும் ஒன்றே இடம். அருள் சக்தி ஏழால் (சப்தம்-7), ஒளியில் (வர்ணம்-7) சப்தபதி. இவை முகத்தில் முப்பதும் உடலில் ஐம்பதும் எண்பதாகும். காதில் 7 சப்தம், கண்களில் ஏழு வானவில் வர்ணம்; நாசியில் பத்து தொழில் செய்யும் காற்று, நாக்கில் அறு ருஜி எல்லாம் சேர்த்து 7+7+10+6=30 உடலின் மூலாதாரம் - 4, சுவாதிட்டானம் - 6, மணிபூரகம் - 10, அனாகதம் - 12. விசுத்தி - 16, ஆக்ஞா - 2, ஆக 50 க்கும் இடம் ஒன்று 51 எல்லாம் சிவத்தில் அடங்கும்.

இருக்கின்ற மந்திரம் ஏழு ஆயிரமாம்
இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன் திருமேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணம் தானே. 880

மந்திரம் என்பது மனதின் ஆற்றல், மணம் என்பது காற்று, அனல், நீர் என்பதின் கூட்டு, அதாவது கானல் நீர், இவை மூன்றும் எண்ணங்கள் உரு ஆவதற்கு வேர். அவை செயலாற்றும் இடம் மண், இது ஏழு விதமாகத்தான் செயலாற்ற முடியும். அதாவது மண் ஆவி, நீராவி, நெருப்பு ஆவி, காற்று ஆவி,

ஆதாயத்தில் குழல் ஆவி, ஒலி பரப்பில் ஒளி கடைசியில் மௌன நிலை, ஆதவே இவைதாம் ஏழு ஆராய்ச்சி என்பது. அத்தனையிலும் அமைதியைத் தரக்கூடியது அசபா மந்திரம் அதாவது கூட்டமில்லாத ஏகாந்த நிலை, பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பது இந்த ஐந்தையும், மூன்றையும் கடந்த நிலை, அது பதினொன்றாவது நிலை.

தானே தனக்கு தகு நட்டந்தானாகும்
தானே தனக்கு அகார உகரமதாய் நிற்கும்
தானே ரீங்கார தத்துவக் கூத்துக்கு
தானே உலகில் தனி நடந்தானே. 881

ரீம் என்பது முதல் நாதம், மாயையின் பீஜ ஒலி, சிவ என்னும் நெருப்பு காற்று, (ஆவி) ஈரெழுத்தும் சிறந்த திரு கூத்தாகும். அவையே ஓசையும் (2) ஒளியுமாகும் (அ) மேலும் உலகத் தோற்றத்துக்கு தோற்ற ஒடுக்கங்களுக்கு (நீரில் எழுத்து) முதற்காரணமாயுள்ள மாயைக்கு அடிப்படை வான் சிறப்பு மந்திரமாயுள்ள ரீங்கார மந்திரம். ஆக எல்லாமும் ஒன்றன் பல எண்ணமே.

நடம் இரண்டு ஒன்றே நளினமதாகும்
நடம் இரண்டு ஒன்றே நமன் செயும் கூத்து
நடம் இரண்டு ஒன்றே நகை செயா மந்திரம்
நடம் சிவலிங்கம் நலம் செம்பு பொன்னே. 882

இந்த ஏழில் ஓசையும் ஒளியும் / இரண்டு விரும்பத் தக்கவையாகும். ஏனைய ஐந்தும் நகைப்புக்கு உரியது. அது அற்புதக் கூத்தும் ஆனந்த கூத்தும் ஆகும். காலத்தின் முடிவும் (ஊழி முடிவு) உலக முடிவு (உருவ முடிவு) பிரளயம் - சங்காரம். மகிழ்ச்சிக்கு ஏதுவாய் அகத்தும் புறத்தும் ஆகும் இரண்டு கூத்துகள். அகக்கூத்தை அனவரதக்கூத்து என்பர். புறக்கூத்தை பொது கூத்து என்பர். செம்பு போன்று செம்பில் களிம்பு போன்று பொன்னாக்கிப் போற்றி திருவடியில் வாழ்விக்கும் திருக்கூத்து ஒன்று.

செம்பு பொன்னாகும் சிவாய நம வெனில்
செம்பு பொன்னாகத் திரண்டது சித்பரம்
செம்பு பொன்னாகும் சிரியும், கீரியும் எனச்
செம்பு பொன்னான திரு அம்பலமே. 883

மந்திரம் என்பது மனதின் திறம் என்றோ. அதனால் அதை சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. சொல் என்பது பின்கலை அதற்கு முன்நிலை - மூன்று. மூலத்தை திருத்தாமல் சொல் பயனில்லை. சொல் என்றால் அதில் ஒரு பொருள் உண்டு. அதை உணராமல் பேசுவது அறியாமை. அறிந்து உணர்ந்து புரிந்தால் அது சிவமாகும். சிவனால் ஆட்கொள்ளப்படும் எல்லாம் சிவச் செயலாகும். சிவம் என்பது அன்பு. எல்லாம் சிவமயம் என்றால் அன்பு மயம்.

திரு அம்பலமாக சீர் சக்கரத்தை
திரு அம்பலமாக ஈராறு கீறி
திரு அம்பலமாக இருபத்து ஐந்தாக்கி
திரு அம்பலமாகச் செபிக்கின்ற வாறே 884

அறிவு என்பது ஒன்றுதான். அது ஜோதி சுடர், சூழ் ஒளியாக இயங்கி வருகிறது. அது எட்டுத் திசையும் பதினாறு கோணமாகும். அதை 8 + 16 = 24 இருபத்து நாலும் அதற்கு இடமாக ஒன்று இருபத்தைந்து. இதை நீட்டமும் அகலமுமாக குறுக்கு நெடுக்குமாக போட்டு கணிப்பார்கள். ஈராறு - குறுக்கு ஆறு நெடுக்கு ஆறு வரை கீறி திரு அம்பல சக்கரமாகும். இருபத்தைந்து அறைகளாக்கி எழுத்துக்களை மாற்றி மாற்றி செபிப்பது. நமசிவய, மநசிவய, சிவயநம, வநமசிய, யநமசிவ என்பது போல ஒவ்வொரு எழுத்தையும் மாற்றி கணித்தல்-செபித்தல் கடைசியில் சிவ சிவ என்பதில் வந்து நிற்கும்.

வாறே சிவாய நமச்சிவாய நம
வாறே செபிக்கில் வரும் பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்து காணலாம்
வாறே செபிக்கில் வரும் செம்பு பொன்னாமே. 885

சிவயநம என்றும் நுண்ணிய திரு எழுத்து ஐந்தையும் பொருள் உணர்ந்து உணர்ச்சியில் ஐக்கியப்படுத்தி மனதுக் குள்ளேயே ஜெபித்தால் அத்தகையோருக்கு பிறப்பில்லை. அப்பொழுது 'நான்' சாக்ஷியாக ஐம்பெரும் தொழிலையும் கூத்தாகக் காணலாம். வாறு-பேறு. வாறு- வலிமை -வாறு - ஆறு.

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் பொறி கிஞ்சுகத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கில்
பொன்னாகும் வல்லோர்க்கு உடம்பு பொற்பாதமே. 886

தனக்கு உவமை மற்றொன்றில்லாத பேரொளி. அதை இப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. அம்மந்திரம் இரண்டாம் நிலையில் 'உ' உதட்டைக் குவித்துச் சொல்ல வேண்டும். கிஞ்சுகம் - உதடு. புகை என்பது சுவாசம். புகுந்து ஐந்து கரமாகிறது. அதை ஜெபிக்க ஜெபிக்க உடல் பூரிக்கும். அதை உள் அடக்கி உட்பிராணாயாமம் ஆக்கினால் உடல் அருள் உடலாகும். பொன்னார் மேனியாகும். உறைந்து நிற்பார்க்கு அருள் விளக்கத்தால் அவர் உடல், (இருள், மருள், அருள்) ஆகும். அருள், ஒலி, ஒளி யுடம்பாகும். அனுபவம் வராத வரை இரகசியம்.

பொற்பாதம் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத்து ஆணையே செம்பு பொன்னாயிடும்
பொற்பாதம் காணத்திருமேனி ஆயிடும்
பொற்பாத நன்னடம் சிந் தனை சொல்லுமே. 887

புத்திரர் என்றால் உருவத்தால் அல்ல, அருவமான புத்தி. புந்தி, ஞானக்கொழுந்து, நந்தி மகன் சீலத் தொண்டால் - சீலம் என்பது விசாரணை அதனால் திருவடி காட்சி - சரியை- சலோகம். நோன்பு என்பது கற்றதைக் கேட்டதை செயல் படுத்துதல் - கிரியை - சாமீபமாகவும் திருமேனி தீண்டலும் உண்டாகும். சத்தி சிவமாகும். அடி யோகநிலை - சாரூபமாகும் ஞானம் சாயுஜ்யம்.

சொல்லும் ஒரு கூட்டில் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயந்து உடனே வரும்
சொல்லினும் பாசச் சுடர் பாம்பு நீங்கிடும்
சொல்லும் திருக்கூத்தின் சூக்குமம் தானே 888

நாம் பொன்னாகி விட்டால் பொன்னால் பொன்னுக்கு என்ன பயன்? மற்றோர் உடம்பில் புகுந்து அவ்வுடம்பின் சார்பால் துன்புறும் சிற்றுயிர்கட்கு துன்பம் நீங்கி இன்புறு வழி காட்டலாம். சுடர் பாம்பு என்பது குண்டலி. அதாவது நூல்கண்டு மாதிரி சுற்றி சுற்றி பந்து போலானது. அது காற்றின் சுழல். அப்படி சொல்லாலும் செயலாலும் தணக்கென வாழாதவரை பார்க்கத்தான் செய்கிறோம். ஆனால் வெகு சிலர். சூக்குமம் அருமறை இரகசியம்.

சூக்குமம் எண்ணாயிரம் செபித்தாலு மேல்
சூக்குமமான வழியிடை காணலாம்
சூக்குமமான வினையைக் கெடுக்கலாம்
சுக்குமமானது சிவனது ஆனந்தமே. 889

''எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருப்பினும் கண்ணார் அமுதனை காண்பார் ஒருவரில்லை. உள் நாடிக்குள்ளே ஒளிபெற நோக்கிடில் கண்ணாடி போல கலந்து அங்கிருந்தானே. ''உள் நாடிக்கு உள்ளே பார்ப்பது எப்படி? நெற்றிக்கு நேரே புருவ இடைவெளி உற்றுப்பார் அங்கே ஒளிவிடும் மந்திரம் (மனதின் திறம்) பற்றுக்கு பற்றாய் பரமன் இருந்திடம். இதைவிட என்ன சொல்ல முடியும்? அப்படி நம்மிடம் பார்த்ததை (ஒளியை) பார்த்திடில் பார்வை ஊடு அறுந்திடும். ஊடு பாவு என்பது - குறுக்குக்கோடு - எல்லாம் செங்குத்தாகும். உலகாணி ஒண் சுடர் ஆகும். நில வாணி ஐந்தினுள் நேருற நிற்கும். கண்ணுக்குள் ஒளியை பார்த்துவிட்டால் தன்னை உணர்ந்து தலைவனை உணர்ந்தவர் ஆவீர்.

ஆனந்தம் ஒன்று என்று அறைந்திடும் ஆனந்தம்
ஆனந்தம் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்று அறைந்திடம்
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும் அது ஆயிடும்
ஆனந்தம் ஹம் ஹ்ரீம் - அம் - க்ஷம் - ஆம் - க்ஷம் ஆகுமே 890

உயிரெழுத்து பனிரெண்டில் அ,இ,உ,எ,ஒ, என்ற ஐந்தும் ஆண் எழுத்து என்று சொல்வர். ஆ, ஈ, ஊ, ஏ, ஓ பெண் எழுத்து. ஐ,ஔ இரண்டும் அலி எழுத்து ஆண், பெண், அலி மூன்றும் சேர்ந்தது ०° அக்கன்னா.

சமநிலைதான் ஆதி, அறிவு. அதில் இருந்து மேல் எழுந்ததே ஆண் அலை. அது மறுபடியும் கீழ் நோக்கி வீழ்ச்சி அடையும் போது சமநிலையையும் கடந்து கீழே போவதே பெண் அலை. எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடமாயிருப்பது ஆதி சக்தி. எழுச்சியையே எழுத்து எனக் குறிப்பிடப்படுகிறது. இது எல்லா மொழியிலும் உண்டு. உச்சரிப்பு மாறுபடலாம். ஆங்கிலத்தில் (AEIOU VOWELS) ஏ, ஈ, ஐ, ஓ, யு இந்த எழுத்து இல்லாத ஆங்கில வார்த்தை கிடையாது. இந்த ஐந்தெழுத்தே பல்லாயிரம் காவியங்கள் ஆயிற்று. ஆனாலும் ஆண்டவன் ஓர் எழுத்தே. இந்த உயிர் எழுத்துக்களே வித்து எழுத்துக்கள். வித்து எழுத்தை பீ ஜா அக்ஷரம் என்பர்.

மேனி இரண்டும் விலங்காமல் மேல் கொள்ள
மேனி இரண்டும் ஊடு மிக்கார் விகாரியா
மேனி இரண்டும் ஊ - ஆ - ஈ - ஏ - ஓ என்றும்
மேனி இரண்டும் ஈ - ஓ - ஊ - ஆ - ஓ - ஏ கூத்தாமே. 891

அன்புருவே கொண்ட சிவன் உருவமில்லாத பரசிவம் அரு, உரு என இருவகையாக ஆனான். ஒன்று சொல்உருவம். மற்றொன்று பொருள் உருவம். சொல் உருவம் என்பது மந்திர உருவம். பொருள் உருவம் என்பது முகம், கை, கால் திருவடி உறுப்புகளோடு கூடிய பொருள் உருவம். இவ்விரண்டினும் மிக்கு விளங்குபவன் சிவன். அங்ஙனம் தோன்றினும் திரிபு எய்தா செம்பொருளாகவே இருப்பான். திரிபு - விகாரம்.

கூத்தே சிவாய நம சிவாயிடும்
கூத்தே ஈ - ஊ - ஆ - ஏ - ஓம் சிவாய நம ஆயிடும்
கூத்தே ஈ, ஊ, ஆ , ஏ , ஓம் சிவாய நம ஆயிடும்
கூத்தே ஈ, ஊ, ஆ, ஏ, ஓம் நமசிவாயகோள் ஒன்றும் ஆறே 892

'ஈ' என்பது ஈசனைக் குறிக்கும் மந்திர எழுத்து 'ஊ' என்பது நாதத்தை குறிக்கும் மந்திர எழுத்து 'ஆ' என்பது ஒலியின் விரிவு விந்து நினைவோசை 'ஏ' என்பது ஏழாவது நிலை ஒளியும் ஓசையும். 'ம்' என்பது பிரணவ எழுத்து நவாக்காரி, இவை சொல்லாக மாறும் போது சிகாரம் சிவய நம, சிவய நம, நமசிவாய என்ற மூன்று நிலை, இச்சை செயல் அறிவு இயற்றலால் இலயபோக அதிகாரப் பொருளாயிற்று. ஏகத்து உருவும், அருவும், உரு அருவும், ஆயிற்று ஏன்? இருள் மலத்தில் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தி அளித்தற்கு.

ஒன்றிரண்டோடு ஆட ஓரொன்றும் உடனாட
ஒன்றினில் மூன்றாட ஓரேழும் ஒத்தாட
ஒன்றினாலாட ஓர் ஒன்பதும் உடனாட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே 893

மாணிக்கம் என்பது சிகப்பு நிறம். ஐந்து தொழில்களில் சிறப்பு வாய்ந்தது. 'சி'காரமே. ஒன்று இரண்டு என்பது நிலம், நீர் இரண்டும் ஆகும். ஓரொன்று என்பது ஒப்புவமை சொல்லமுடியாத சிவம். அஃது உடனாட என்பது திருவருளுடன் கலந்தாட. ஒன்றில் மூன்று ஒளிப்பொருள் அக்னி. அகரம் சிகரமாகும். அதுபோல் ஒளியுடைய இரு பொருள்கள் சூரியனும் சந்திரனும் இம்மூன்றும் ஆட (ஓரேழ் என்பன சூரியனில் உள்ள ஏழு நிறங்கள், அது ஏழு உலகங்கள் என்றார்) இருவகை எழு ஒலி -7, ஒளி-7 ஆக ஒன்பது காண்டல் காட்டல் என்றும் சொல்லலாம். இவற்றை முறையே அறிவு, ஆற்றல், ஒலி, ஒளி, அருள், ஆண்டான், அரன், அரி என்னும் அருவம், நாலு + அரு உருவம் ஒன்று + உருவம் நாலு ஆக ஒன்பது என்பதை மெய் நிலைகள் என்பன. இவைகள் எல்லாம் ஆட ஆடுவது மாணிக்க கூத்து.

இருந்த இவ்வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த ரேகைமேல் ஈராறு இறுத்தி
இருந்த மனைகளுள் ஈராறு பத்து ஒன்று
இருந்த மனை ஒன்றில் எய்துவன் தானே. 894

இது 884-ம் மந்திரத்து விளக்கமே பொருந்தும், அதில் இருபத்தைந்தையும், (நமசிவய - குறுக்கும் நெடுக்கும்) இதன் கண் மேலும் பனிரெண்டு உயிர் எழுத்துக்கள் வரைந்தால் பதினொன்றாகும். ஆக முப்பத்தாறு தத்துவங்கள் ஆகும். இவற்றின் மத்தியில் 'சி' கரம் இருந்தருள்வன். தாமரைப் பூவின் மத்தி போல்.

தான் ஒன்றி வாழ் இடம் தன் எழுத்தே யாகும்
தான் ஒன்று அந்நான்கும் அன்பே எழுத்தாகும்
தான் ஒன்று நாற்கோணம் தன்னை ஐந்தெழுத்து ஆகும்
தான் ஒன்றிலே ஒன்று அவ்வரன் தானே. 895

எல்லா எழுச்சிகளும் ஐந்து தலைப்புக்களிலேயே அடங்கும். ''ஆறு அங்கமாக வரும் மாமறை ஓதியை கூறங்கமாக குணம் பயில்வாரில்லை.'' அப்படி நம்மையே ஆராய்ச்சி செய்யாமல் இல்லாத இடம் எல்லாம் தேடினால் எப்படி கிடைப்பான் 'சி' கரம் நடு நாடியாக இருந்து மற்றைய வ, ய, ந, ம என்னும் நான்கு எழுத்துக்களும் சேர்ந்து ஆண்டவனுடைய புகழ் சேர் திருப் பெயராகும். 'நந்தி நாமம் நமசிவய' என்னும் திருமுறையால் உணரலாம். நாற்கோணம் உள்ளிட்ட நான்கு பெரும் திசைகளும் இந்நான்கு எழுச்சிகளாகும் 'சி' கரம் யாண்டும் உடனாய் நிற்கும் தன் எழுச்சி 'சி' கரம் ஏனைய நான்கும் 'சி' கரம் ஒழிந்த நாலு.

அரகர என்ன அரிய தொன்றில்லை
அரகர என்ன அறிந்திலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே 896

பொதுவாகவே கடவுள் என்றாலே ஏதோ ஒரு அபூர்வமான பொருள் போல் கற்பனை செய்கிறோம். அதுவே நாமாக இருப்பதில் நம்பிக்கை இல்லை. நம்மை நாமாகவே தாழ்த்தி மதிப்பிடுகிறோம். ஹரன் ஹரி என்பது நீரும் நெருப்புமே. இவை இரண்டும் அருவம், அரு உரு, உருவம் என்று மூன்று மாறுபட்ட நிலையில் உள்ளது. மூன்றுக்கும் பொதுவான இடம் ஒன்று இருக்கிறது. இவை பற்றி அறிந்துவிட்டால் அமரரும் ஆவர் என்றால் அமைதி அடைவர், இதைத் தேடி அலைய மாட்டார்கள். அதனால் கற்பனை எண்ணங்கள் ஏற்படாது.

எட்டு நிலை உள எண்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும், இருமூன்றும் ஈரேழும்
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பன்மொழி பாலே. 897

திருமூலர் திருமந்திரத்தில் முதல் பாட்டே இந்த எட்டையும் பற்றி கூறிவிடுகிறது. ஒன்று அவன்தானே, இரண்டு அவன் இன்னருள் (அருவ நிலை), இதை அத்தன், அன்னை, ஒளி, ஒலி, சக்தி சிவம் என்பர். மூன்றில் நின்றனர் சூரியன், சந்திரன், அக்னி, அதாவது ஒன்று என்பது ஜோதி. அதனுடைய சுடர் சூரியன், சந்திரன், அக்னி. இது நம்மிடம் நான் என்ற எண்ணம் சுழுமுனா நாடி அகம் ஒன்று. இரண்டு அகமும் புறமும் உள்ளம், உடல் அல்லது உயிர், உடல் மூன்று என்பது வலக்கண் (சூரியன்) இடக்கண் (சந்திரன்) நெற்றிக்கண் அக்னி. முகப்பகுதி உள்ளம். அகத்தின் அழகு முகத்தில், உடல் கர்மேந்திரியம், எண் சான் உடம்புக்கும் சிரசே பிரதாணம். அடுத்து நான்கு உணர்ந்தனன். நாலு என்பது மனம், புத்தி, சித்தம், அகம் என்ற அந்தக் கரணங்கள். இவை எல்லாம் புறக் கண்களுக்கு புலப் படாதவை, ஐந்தை வென்றான். பொறி வாயில் ஐந்தவித்தான் - பொய் தீர் ஒழுக்கம், ஆகவே ஒழுக்கம் என்பதே ஐம்புலன் வென்ற பின் தான். அது ஆறாவது அறிவு, ஆறில் விரிந்தனன். ஏழு உம்பர் சென்றான். உணர்ந்து அமர்ந்தனன் எட்டே. ஆகவே ஒன்றும் எட்டும் ஆதியும் அந்தமும் நடு வீட்டை சூழ இருப்பது

எட்டவீடு. இந்த அமைப்பில் ஒன்று என்பது பிரணவம். ஓம். நமசிவய என்பது ஆறு எழுத்து அருமறை. ஒட்டு - அமைப்பு பான் மொழி - திருவருள்.

மட்டு அவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்ட வல்லார் உயிர் காக்க வல்லாரே 898

திரு என்பது அருவமாக புறக்கண்ணுக்கு புலப்படாமல் இருக்கும். அதை இரகசியம் என்பர். சிதம்பர இரகசியம் என்பது அதுதான். அதுதான் முதலாவது நாம் ஆராய்ந்த அசபை. அதை உருவகப்படுத்தி வெளிக்காட்டி கொள்வது திரு அம்பலம். அம்பலம் என்பது எட்டும் எட்டு விதமான சக்திகள், எட்டுத் தலைவர்கள், எட்டு திசைகள், இவை எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதை உணராமல் தனித்தனியாக பாவித்துக் கொண்டு (அது உண்மை அல்ல) வேறுபட்டு வாழ்வதே அறியாமை எனப்படும். அது தான் விட்டகுறை. எட்டில் ஒன்றை மட்டும் கருதி, இரண்டை, மூன்றை, நான்கை, ஐந்து வரை நான் என்று உணர்ந்தவன் மனிதன். அவன் அறிய வேண்டியது. ஆறு, ஏழு, எட்டு அதையும் அறிந்துவிட்டால் பூரண அறிவு சிவநிலையை அடைகிறான். இதை எல்லாம் சிந்தித்து செயல்படுவதே வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது. இல்லறம் வேண்டாம் என்று சொல்லவில்லை. இல்லறம் எதற்காக ஏற்பட்டது என்று புரிந்து வாழுகிறோமா என்பது தான் கேள்வி. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும பயனும் அது. அன்பு இல்லையெனில் என்புதோல் போர்த்த உடம்பு.

ஆலயமாக அமர்ந்த பஞ்சாக்கரம்
ஆலயமாக அமர்ந்த இத்தூலம் பொய்
ஆலயமாக அறிகின்ற சூக்குமம்
ஆலயமாக அமர்ந்திருந்தானே. 899

இந்த ஐந்து எழுச்சிகள், ஐந்தை இடமாகக் கொண்டு, ஐந்து தொழில்கள் செய்து ஐந்து பயன் அடைகிறது. அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். இந்த ஐந்தும் யாருக்கு ஒருவனுக்கே. அவனிடம் போய் சேருவதே லயம் எனப்படும். அப்படிச் சேராமல் அங்கங்கே தனித்தனியாக உறைந்து கொள்வது ஏழு கிரகங்கள். அதையே கோணம், குற்றம் உள்ளது என்பது, அதை அறுக்க ஏற்பட்டது கோளறு பதிகம். இப்படி தனித்தனியே பிரிந்து அழியும் புலனைந்தையும் ஒன்று என்று அறிய வைத்து ஒன்றாக்குவதே இறைவனின் செயல் இயக்கம். இயற்கை.

இருந்த இவ்வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த அதனுள் இரேகை ஐந்தாக
இருந்த அறைகள் இருப்பத்தைந்தாக
இருந்த அறையொன்றில் எய்தும் அகாரமே 900

இது பற்றி 884ம் திருப்பாட்டில் விளக்கம் உண்டு. அதன் மத்தியில் 'சி' கரமே அகரமாக அமையும். அதைச் சுற்றி எட்டுக் காவலர் எட்டுத்திசையில் எட்டுத் தொழில் செய்வர். இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பர்.

மகார நடுவே வளைத்திடும் சத்தியை
ஒகார வளைந்திட்டும் பிளந்து ஏற்றி
அகாரம் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகார நற்காலது நாடுமே 901

மகாரம் என்பது நீர் சத்தி. அதன் சுபாவம் கீழ் நோக்கமே. அதாவது பள்ளத்தை நோக்கி ஓடுவது, மேட்டில் ஏற முடியாது. அதனுடன் ஏது சேர்ந்தாலும் கீழேயே கொண்டு போகும். நம் நாசி வழி உள் செல்லும் நீர் காற்றை வளைத்து வயிற்றுப்பக்கம் இழுத்துச் செல்லும். அதை அப்படி போகவிடாமல் ஒகாரம் ஒளி சத்தியால் அதை நெருப்பின் சத்தியால் ஆவியாக்கி மேல் நோக்கிச் செலுத்தினால் அது தெளிவடையும். அதற்குரிய நெருப்பு

கண்களாகும். சிகாரம் கண்களாகவும் அந்த நெருப்புக் காற்றே 'அ' காரம் அறிவு ஆகும். நடப்பாற்றல் நகாரமும் வகாரம் வனப்பாற்றல் இரண்டும் சிகாரத்தோடு சேர்ந்து சிமயநம என்று மாறும்.

நாடும் பிரணவ நடு இரு பக்கமும்
ஆடும் அவர் வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முக நமசிவய
வாடும் சிவாயநம புறவட்டத் தாயதே. 902

"ஒரு சுடராய் உலகேழும் ஆனான் கண்டாய்' ஓங்காரத்து உட்பொருளாய் நின்றான் கண்டாய்" என்பதில் எல்லாம் அடங்கி விட்டது. அந்த ஓங்கார வட்டம் நம் கண் ஒளியே என்றால் ஏன் நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறது. உடல் இல்லையாயின் உலகம் இல்லை என்பதை எல்லோரும் தெரிந்து தான் இருக்கிறோம். அப்படி இருந்தும் இன்னும் எதைத் தேடுகிறீர்கள். உலகப் பொருள்களால் ஆனதே உடல். அதை ஆராய்தலே போதும். உடலின் பிரதி பிம்பமே உலகம். உடல் ஸ்தூலம், அடுத்து உயிர் இல்லையாயின் உடலுக்கு மதிப்பு இல்லை. உயிர் என்றால் என்ன சிந்திப்பார் இல்லை. உயிரும் உணர்வு இல்லையாயின் உயிருக்கும் மதிப்புமில்லை. உணர்வோ மகாசூட்சுமமாக உள்ளது. உலகம், உடலில் அடங்கி உடல் உயிரில் அடங்கி, உயிர் உணர்வில் அடங்கி உணர்வு ஒலி, ஒளியில் அடங்குவதே முறை, மறை. ஆகவே அறிவுதான் நான் என ஒப்புக்கொள்வதை ஏன் மறுக்க வேண்டும். ஒப்புக் கொண்டால் அதுவே ஆதி நிலை. அது நாட வேண்டிய பொருள் இல்லை. அதுவாகவே நீ இருக்கிறாய். அது நடு நாடியாகிய உன் முகத்தில் கண்ணாக உள்ளது. கண்களில் மூன்று வட்டம் உள்ளது. புறவட்டம், மன வட்டம், அறிவு வட்டம், புறவட்டம் ஹர ஹரா. அதனுள் வட்டம் ஹரிஹரி, அதனுள் வட்டம் அஜபா. "அண்டங்கள் ஏழும், அகண்டமும் ஆழியும், கொண்ட சரா அசரங்கள் முற்றும் குணங்களும், பண்டை மறையும், படைப்பு அழிப்பு ஆதியும் கண்ட சிவனும் என் கண் அன்றி வேறு இல்லையே!"

ஆயும் சிவாய நம மசிவாய ந
வாய நமசிவா யய நமசிவாய
வாயுமே வாய நமசியெனும் மந்திரம்
ஆயும் சிகாரம் தொட்டு அந்தத்து அடைவிலே. 903

இது பஞ்சீகரண தத்துவம் என்பர். அதாவது, மண் என்று எடுத்துக் கொண்டால் மண் மாத்திரம் அல்ல. ஒரு மண் அணுவில் பாதி மண் ஆகவும், மற்றொரு பாதியில் நீர் நெருப்பு, காற்று ஆகாயம் அரைக்கால் அரைக்கால் பங்காகவும் இருக்கும், மண் அதீதமாக இருப்பதால் மண் அணு என்கிறோம். சமநிலை என்பது எல்லாம் 1/5 பாகமாக இருந்தால் சமநிலை. பாகுபாடே இல்லாமல் இருப்பதே பரந்த நிலை. மவுன நிலை. ஒரே நிறையில் இந்த பூதங்களும் கீழே வைக்கப்பட்டால் எப்படி இருக்கும். அதாவது எல்லாம் ஒவ்வொரு கிலோ. இப்படி இருப்பது இயற்கை. ஆனால் நாம் நம்மை எப்படிப் பார்க்கிறோம். மண்ணை மேலாகவும், அதனுள் நீர், அதனுள், நெருப்பு, அதனுள் காற்று, அதனுள் ஆகாயம் என்று எதிரிடையாகவே பார்க்கிறோம். இதைச் சிந்தியுங்கள். ஒவ்வொரு கோட்டுக்கும் நடுவில் உள்ள வெளியே பரவெளி. சுத்த வெளி, ஆகவே இதை எல்லாம் அறியும் அறிவே நான் - ஆய்பவன். ஆயும் அறிவு கடந்த அரனுக்கு தாயும் மகளும் தாரமுமாவானே.

அடைவினில் ஐம்பதும் ஐயைந்து அறையில்
அடையும் அறை ஒன்றுக்கு ஈரெழுத்தாகி
அடையும் மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவில் எழுத்து ஐம்பத்தொன்றும் அமர்ந்ததே. 904

நம்முள் அமைந்திருக்கும் அமைப்புக்களை கூற வந்தது திருமந்திரமே ஒழிய உங்களை கட்டம் போடவோ, கட்டிடம் கட்டவோ சொல்ல இல்லை. உங்கள் திருப்திக்கு போட்டு பார்ப்பதை யாரும் தடுக்க வில்லை. ஆனால், நான் போட்டது தான் சரி என்று சொல்வது அகம்பாவம். ஐந்தாக வந்த அல்லது

தந்த பொருளை ஐந்து ஐந்தாக வகுத்து 25 ஆக்கி அதை இருபாதி செய்து 50 ஆக்கியது யார்? மாயா சக்தி. அதில் நாம் மயங்கி உண்மையில் ஒன்று என்பதை மறந்துவிட்டோம். அதை ஞாபகப்படுத்த வந்ததே நான் என்ற அறிவு.

அமர்ந்த அரகர வாம் புறவட்டம்
அமர்ந்த அரிகரி யாம் அதனுள் வட்டம்
அமர்ந்த அசபையாம் அதனுள் வட்டம்
அமர்ந்த ரேகையாம் ஆகின்ற சூலமே 905

ஒன்றை மூன்றாக்கி பார்ப்பதே முதல் பிரிவு நிலை. வெளிப்பார்வை உருவம் - பிர்மா - படைப்பு, அதற்கு காரணம் மனதின் தூண்டுதல் - துள்ளல் மனதை தூண்டுவது எது - அறிவு அதுவே பானு. அது அசபை. அதற்கு முந்திய நிலை மவுனம் பரம் பிர்மா, விஷ்ணு, ருத்திரன் மூன்றும் கிரந்திகள். கிரந்திகள் என்பதே தேக்க நிலை (GLANDS) ''முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டினேன். இரண்டிலே தண்ணியே இல்லை, ஒன்று பாழ்'' என்று எங்கள் ஊர் நாடகத்தில் பபூன் பாடக்கேட்டது. வயது ஏழில். அது போல் நம் கண்ணில் ஊசி முனையில் இவை நடக்கின்றன. இன்று ஒரு அரிசியில் பகவத் கீதை எழுதுவதாக எழுதிக் காட்டுகிறார்கள். இது புற நிலையில் நம் கண்களில் ஏன் உலகம் முழுவதையும் எழுதக்கூடாது? அப்படி எழுத்துத்தான் தலை எழுத்து. உலகாணி ஒண்சுடர் உத்தமசித்தன் சித்திர குப்தனாக செயலாற்றுகிறான். அவன் கையில்தான் நம் கணக்கு உள்ளது. அவன் பார்வையிலிருந்து தப்ப முடியாது. கண் காணி இல்லையென்று கள்ளம் பல செய்வார். கண் காணி இல்லாத இடமில்லை. ''கண் காணியாய் கலந்து எங்கும் இருந்தானை கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே'' அவனைக் காணாத கண் ஒளிபடலமாயிற்று. காணாது கண்டார் களவு ஒழிந்தாரே'' நீயே அதுவாக இருப்பதால் எப்படி பார்ப்பது. பார்த்ததை பார். பார்ப்பான், பார்க்கப்படு பொருள், பார்வை மூன்று.

சூலத் தலையினில் தோற்றிடும் சத்தியும்
சூலத் தலையினில் சூழும் ஓங்காரத்தால்
சூலத்து இடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்து
ஆலப் பதிக்கும் அடைவது வாமே. 906

ஒளி நாம் உள் புகும் போது அணுவின் அணுவாய் நீர், நெருப்பு, காற்று ரூபத்திலேயே உள் செல்லும். அதுதான் முப்பொருள் உண்மை. நீர் தான் உயிர், நெருப்பு உருவம், காற்று பரப்பும் சக்தி. இந்த மூன்றும் நாடி நரம்புகளில் புகுந்ததும் ஓம் என்ற நாதம் பிறக்கிறது. அதையே கோ என்பது. கோவிந்தா நினைவு ஓசை. பஜ கோவிந்தம். அதுவே ஹரிஹரி நாமம். பசு, உயிர் அந்த மூன்றெழுத்து பரைநாதம் பச்சந்தி, மத்யமா, வைகரி என்று நாலுநிலை அதாவது கண் ஓசை, காது ஓசை, நாசியின் ஓசை, பிடரி ஓசை, தொண்டை ஓசை, கடைசியில் வாயோசை வைகரி - விகாரம், கண்டவர் (கண்) ஊமை எழுத்து. பேசும் வாய் கண்டதில்லை. அப்படியானால் உண்மை எப்படி வரும். ஆகவே பேச்சிலும், மூச்சிலும் வீணாக்கும் சத்தியை அறிவில் அடங்குவதே முறையாகும்.

அதுவாம் அகார, இகார, உகாரம்
அதுவாம் எகாரம் ஒகாரம் அது ஐந்தாம்
அதுவாகும் சக்கரம் வட்ட மேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்கு நம் பேரே. 907

இயற்கையை உணர்ந்தால் ஒழிய இந்த எழுத்து ஜாலங்கள் வார்த்தை ஜாலங்கள், பொருள் ஜாலங்கள் எல்லாம் நமக்கு புரியாது. இதில் ஆண், பெண் எழுத்து எல்லாம் நமக்கு புரியாது. இதில் ஆண், பெண் எழுத்து அலி எழுத்து என்ற வேறுபாடுகள். அதை எதோடு சேர்த்தால் என்ன ஆகும் என்பதை புரிந்து செயல்பட வேண்டும். அப்படித் தெரியாமல் செய்வதால் குழப்பம் ஏற்படும். ஆகையால் நாம் ஒன்றும் நம் செயலால் குழப்பாமல் சக்தி சிவம் விளையாட்டை சாக்ஷியாக பார்ப்பதே உத்தமம். நாம்

அவனாக வளரும் வரை பொறுமையாக இருக்க வேண்டும். முன்னைப் பாட்டில் ஓதப்பெற்ற திரு ஐந்தெழுத்து என்பது திருத்தப்பட்ட அதாவது அறிவு ஒலியாகிய முதல் ஐந்தெழுத்து அ இ,உ,எ,ஒ என்னும் உயிர்க் குறில் எழுத்து ஆண் எழுத்து எனப்படும். இவை நமசிவய எனும் வட்டத்தில் அமைக்க (ந்+அ=ந), (ம்+அ=ம), (ச்+இ=சி), (வ்+அ=வ), (ய்+அ = ய) இவற்றில் சிகாரத்தைத் தவிர மற்றதில் அகாரமே முன் நிற்கிறது. இ என்பது இச்சை, செயல், அறிவு என்பதாகும். இயற்றலால் இலய போக அதிகாரம் பொருள் ஆகும். சிகாரமாகிய கண் ஒளி அகாரமாயிற்று. ஆக்ஞா சக்கரம் - ஆணையிடும் இடம்.

பேர் பெற்றது மூலமந்திரம் பின்னது
சோர் வுற்ற சக்கர வட்டத்துள் சந்தியின்
நேர் பெற்றிருந்திட நின்றது சக்கரம்
ஏர் பெற்றிருந்த இயல்பிதுவாமே. 908

மூலம் என்பது ஆதி, அறிவு அதை விளக்க வந்தது மனது. மனதின் திறன் மந்திரம். அது நிறை மொழி மாந்தர் சொல், ஆனால் அசுத்தத்தை சுத்தம் செய்ய வந்த மனம் (அறிவு ஐம்புலனுடன் நான் என்றதாகி நெறியறியாது நீரில் மூழ்கி) அறியாமையால் ஆட்சி செய்யப்படுவதுதான் பரிதாபத்துக்குரிய விஷயம். அதையே சோர்வுற்ற சக்கரம் என்றார். அதை நேர் செய்ய அனுப்பப்பட்டவர் அகஸ்தியர். அகத்தை இருப்பிடமாகக் கொண்டவர். அது நம்மிடம் மேலைத் துவாரமாக உள்ளது. ''மேலைத் துவாரத்தில் மேல் மனம் வைத்திரு, மூலத்துவாரத்தில் முக்காரமிட்டிரு என்றார், 'வேல் ஒத்த விழியை வெளியில் விழித்திரு' என்றார் அதையே நேர் பெற்றிட நின்றது சக்கரம் ஏறு நிலைக்கு இதுவே வழி என்றார்.

இயலும் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்குமுன்னா இருந்ததே. 909

நடக்கக்கூடிய காரியமாக யோஜிக்க வேண்டும். நம் தகுதியையும் உணர வேண்டும். நாம் எதை அடைய வேண்டும் என்பதை தீர்மாணமாக முடிவுக்கு வந்து அதை நோக்கி செயல்பட வேண்டும். எல்லோரும் விரும்புவது சுகம். சுகம் என்றால் என்ன? சும்மா இருப்பது செயலற்று இருப்பது. சும்மா இருந்தால் சோறு வருமா? சோறு யாருக்கு? அப்படி நான் என்று ஒன்று இருப்பதாகத் தெரியவே இல்லை. ஒன்றும் இல்லாத ஒன்றை அடைய இந்த ஆட்டபாட்டம். நான் யார் என்ற கேள்விக்கு பதில் சொல்லாவிட்டால் அவன் தான் பதி. பதி என்றால் கணவன், கண் + தன் = கணவன், கண் + பதி = கணபதி, கண் + தன் = கந்தன். இந்த மவுன நிலையை கூறவந்ததே நாதம். இது புயலாகி, புனலாகி, அனலாகி, மண், விண் என பல நிலைகளை அடைந்தது. அலைகள் எல்லாம் நிலை பெறாதவை. நிலைத்தது எது நிலை பெறாதது எது என்று பகுத்து அறிந்து நிலை பேற்றை பெறுவோமாக.

ஆறு எட்டதன் மேல் ஆறும் பதினாறும்
ஏறு எட்டதன் மேல் விந்துவும் நாதமும்
சீறிட்டு நின்று சிவாய நம என்னக்
கூறிட்டு மும்மலர் கூப்பிட்டுப் போகும் 910

நாம் வாழ்க்கை என்று கூறுகிறோமே, அது என்ன என்ற கேள்வி எழ வேண்டும். அதற்கு பதில் வழக்கப்படுத்திக் கொள்வது என்பதே பதில். வழக்கம் என்றால் என்ன? பழக்கம் என்பதே பதில். எதைப் பழக வேண்டும். பொதுவாக மனிதர்களாக பிறந்தவர்கள் மனிதர்கள் செய்வதை பார்த்து அது போல் நாமும் நகல்கள் (COPY) போல் வாழ்வதுதான் என்று முடிவெடுத்து வாழ்வது தான் சகஜ நிலை. அவர்கள் சாமானியர்கள். கொஞ்சம் சிந்திப்பவன் இந்த பழக்கம். வழக்கம் எதில் முடிகிறது என்று கவனித்தால் (CONSERVATION) இந்த கவனம் சிலருக்கு சின்ன வயதிலேயே வருகிறது. அவன் விழிக்கிறான் என்பதே பொருள். அவன் கவனம் முடி வரை செல்கிறது. எல்லோரும் சாகத்தான் செய்கிறார்கள்.

என்பதைக் கண்டான். வீரனும் சாகிறான். அப்படியானால் வீரம் அவனைக் காப்பாற்ற இல்லை. ஞானியும் சாகிறான். பணக்காரனும் சாகிறான். அரசனும் சாகிறான். ஆண்டியும் சாகிறான். ஆண், பெண், சகல உருவமும் அழிவிலேயே முடிகிறது. அப்படி சாக அடிப்பது எது? என்ற கேள்வி எழுந்தது. இப்படி கேள்வி மேல் கேள்வி எழுவதே கேசரி யோகம். கேள்விக்கு சரியான பதில் கிடைத்தால் அது யோகம். அந்த யோக நிலை ஞானம் என்ற தெளிவு நிலைக்கு கொண்டு செல்லும் அதுவே ஞானத்திலே முடிவு. அது என்ன தெரியுமா? செயலாற்ற தன்மையும், மவுனமுமே என்றும் நிலை பெற்றது. செயல்களும் சொல்லும் நிலை இல்லாதவை என்பதே.

இதை அடைய ஏற்பட்டதே உலகம், உயல், உயிர், உணர்வு, அறிவு, பேரறிவு, இவை ஒவ்வொன்றையும் பற்றி பகுத்து அறிந்தால் தான் இயற்கையின் அடுக்கு நிலை விளங்கும். இதை விளக்க வந்ததே நந்நூல் ஆகும்.

இதில் மனிதன் என்பவன் பதினெட்டு நிலையில் 9வது நிலையில் உள்ளவன். அதாவது எட்டு நிலையை கடந்தவன். மேற்கொண்டு எட்டு நிலையை கடந்து அக்கரை சேர வேண்டும். ஆக பதினெட்டு நிலைகளில் அக்கரை இக்கரை என்று இரண்டு நிலை. இடையில் பதினாறு நிலை. இவை எல்லாம் இயற்கையின் ஏற்பாடு. இயற்கை என்பது இறைவனின் செயல். இப்பொழுது இறைவனை ஒப்புக் கொள்ளாமல் முடியாது. அப்படி ஒப்புக் கொண்டு அவன் எண்ணமே இயக்கம் என்பதை உணர்ந்து அதற்கு இசைந்து நடந்தால் வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் ஆகிறோம்.

ஆகவே, மனதின் ஆட்சியில் அடங்கி கிடக்கும் நாம் அறிவின் ஆட்சிக்கு மாற வேண்டும். அதற்கு நாம் மனம் என்றால் என்ன? அறிவு என்றால் என்ன? இதில் நான் என்பது எது என்பதை அறியாமல் எப்படி செயல்படுவது. எதைச் செயல் எல்லாம் படுத்துவது என்று அறிதல் வேண்டாமா? இதை எல்லாம் சிந்திக்காமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்வது

வாழ்க்கை ஆகுமா? எழுமின் விழிமின் அடைய வேண்டிய இன்ப நிலையை அதற்குரிய ஆற்றலை அடையுங்கள். அப்படி ஆறு ஆதாரமாக எட்டு அறிவாக அமைந்ததே இந்த உடல்.

இது 6x8=48 இதில் ஆறு உடலாகவும், எட்டு முகமாகவும் அமைந்தது. இந்த ஐம்பதும் அடங்கியது ஒன்றது. அது முழு உடலும் முகமும், அந்த எட்டு அறிவையும் கண் – 2, காது–2, நாசித்துவாரம் – 2, வாயால் அறிவது ருசியும், பேச்சு – 2, ஆக எட்டு. அதற்கு துணையாக இருப்பது நாதமும், ஒளியும். இதை எல்லாம் அறிந்தால் இந்த அறியாமை என்னும் இக்கரை (இம்மை) ஆணவம், மாயை கண்மம் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிடும். ஆகவே மேலே சீறிட்டுப் பாயுங்கள்.

அண்ணல் இருப்பது அவள் அக்கரத்துள்ளே
பெண்ணில் நல்லாளும் பிரான் அக்கரத்துளே
எண்ணி இருவர் இசைந்து அங்கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருள் அறிவார்களே. 911

சிவன் சீவனாகும் போது சத்திக்குள் அடக்கமே. ஏனெனில் சத்திதான் என்றும் சமைந்து உருவாகும். $M=Ec^2$ என்பது ஈன்ஸ்டீன் பார்முலா. அதாவது 'M' என்பது பொருள் MASS. தோற்றத்துக்கு வருவது சத்தியின் (ENERGY) அணுவின் தொகுப்பே என்கிறார். இதை நம் திருமூலர் 7000 ஆண்டுகளுக்கு முன்பே கூறினார். ஆனால், சிவன் (C^2) அதை புலனாகாத சத்தி என்றார். எப்படியோ ஆங்கிலத்திலும் 'சி' என்றே அமைந்தது. இன்றும் கலிபோர்னியாவில் 'சி' வா என்ற பெயரில் ஒரு கருவி உண்டு. UNDNOWN ENERGY இவை இரண்டும் முரண்படாமல் ஒன்றுக்கு ஆதரவாக அமைந்தால் இன்பந்தான். மண், நீர், பெண், ஆவி. நெருப்பும் காற்றும் ஆண் இவை இசைந்து வாழ இடம் கொடுத்தது ஆகாயம். 'சி' காரமாகிய சிவன் வனப்பாற்றலாகிய 'வ்' காரத்தோடு சேர 'சிவ' ஆயிற்று. இந்த நான்கு ஆவியும் நடுவுள் நின்றால் சிறப்பாகும். திருவடியை உணரும். அந்த உணர்வுடையவர் புண்ணியவான் என்பர்.

அவ்விட்டு வைத்து அங்காரம்விட்டு மேல் வைத்து
இவ்விட்டு பார்க்கில் இலிங்கமதாய் நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர் கொழுந்தாமே 912

லிங்கம் என்று நாம் கோயில்களில் காணுவது மூன்று பொருளை விளக்குவது ஆகும். அடிப்பகுதி அயன் பிரம்மா. நடுப்பகுதி - வட்டம். அர (அறிவு) என்பது தொழிலினையும், 'இ' என்பது இன்பத்தினையும் குறிக்கும். மரமாகிய நீர் சத்தியை உச்சித் தொளையில் உயிர்ப்பு சக்தி (நீர்க்காற்று) செல்வதை உணர்ந்த பின் அவ்விடத்து தொம் தோம் என்ற நாத சத்தியால் உணரலாம். தோல் வாத்தியம் போல் வளி - உயிர்ப்பு பிராணவாயு. தொம் - ஒலிக்குறிப்பு. தோம் - என்பது ஓங்காரத்தின் குறி. அகரத்தை எழுதி, அதன் மேல் அர என்று எழுதி அதன் மேல் 'இ' எழுதிப் பார்க்கில் அது லிங்க ரூபமாகும்.

அவ்வுண்டு சவ்வுண்டு அனைத்தும் அங்குவிது
கவ்வுண்டு நிற்கும் கருத்தறிவார் இல்லை
கவ்வுண்டு நிற்கும் கருத்தறி வாளர்க்கு
சவ்வுண்ட சத்தி சதாசிவம் தானே 913

'அ' வ்வுண்டு - அறிவு உண்டு. சவ்வுண்டு - சத்தி, ஆற்றல் உண்டு, இவை இரண்டும், இருந்தால் எல்லாமே அதுதான். அங்கு 'க' என்பது காற்று. 'வ' காரம் அதுவும் ஏன் அங்கே வந்தது. அன்னையையும் அத்தனையும் இழுத்து ஏனைய உயிர்களை காட்டி அவைகளையும் தன்னை ஒத்த அறிவாக்கவே. அத்தன்மையின் மெய்மையினை (உயிரினங்களோடு பின்னி சடம் போல் கிடப்பதை) அறியும் அடியவர்க்கு அந்த சத்தியின் வண்ணம் சதாசிவம் தோன்றும். "சப்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி அணுவுக்குள் அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி, வேடமும் நீரும் விளங்க நிறுத்தி கூடும் மெய்த் தொண்டர், குழாத்துடன் கூட்டி" என்பார் அவ்வையார்.

அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத்தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்
அஞ்செழுத்தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே 914

ஒரே எழுத்தான (எழுச்சி) சிவபெருமான் முதல் ஐந்தாகப் பிரிந்தனன். ''தனது அருளாலே பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும் தஞ்சம் என நிற்கும் தனிப் பொருளாய் எஞ்சாத பூரணமாய் நித்தமாய் போக்கும் வரவும் புணர்வும் காரணமும் இல்லாத் க்தியாக நிற்பவன்''. ஐந்து தொழில்களை குறிப்பது ஐந்து சொல். சிறப்பு (சி), வனப்பு (வ), சிறப்பு என்பது சிவத்தை குறிக்கும். அன்பு, சிறப்பு எனும் செம்பொருள் காண்பது அறிவு என்றார் வள்ளுவர்.

'வ' வனப்பு, அழகு ஆருயிர்களை சிறப்பாகிய சிவத்துடன் கூட்டி பேரின்பம் உறச்செய்யும் பேரருள்.

'யா' யாப்பு - பிணிப்புடையது. புல் எனும் மலம் எனும் ஆணவ அழுக்கு ஆவிகளுடன் செம்பில் களிம்பு போல் தொன்மையே ஒட்டியுள்ளது.

அப்பிணிப்பினை நீக்க, மருந்துக்கலம் போல் உடம்பினையும் மருந்துக் கூட்டம் போல் ஊனினையும், மருந்துவ மனைபோல உலகினையும் கூட்டி யாப்புறுத்தினன் யாப்பு - கூட்டு, ஆதலால் ஐந்து எழுத்தும் முற்றும் தனித்தனி மாத்திரையே (பெரிய திரை)

'ந' நடப்பு - நடத்துதல். ஆவிகளை மேற்கூறிய மலம் மாயை கன்மங்களுடன் குழந்தைகளை கை பிடித்து நடத்துவது போன்று நடத்துதல். இதனையே ஆட்டுவித்தல் என்பது. இதனை ஆதி எனவும் கூறுவர். இது தொழில் ஆற்றலாகும். அம்மை எனினும் ஒன்றே. தொழிலாற்றல் அறிவாற்றலோடு பிரிவின்றி ஒன்றாக இசைந்தே தொழில் செய்யும். அதனால் ஆதிக்கு தன் உடம்பை பகுத்துக் கொடுத்தவன் பகவன்.

'ம' மறைப்பு – அனாதிகாலம் தொடங்கி மலத்தால் மறைந்து கிடப்பது. அம்மல் ஆற்றல் ஒவ்வோர் ஆவியையும் பல்வேறு வகையாய் பற்றி உள்ளது. அவை இறைவனை காண வொட்டாது மறைக்கும் ஆவி தன்னையும் காட்டாது. மாசு படர்ந்த கண்ணாடி போல் அந்த ஆவியைப் படர்ந்து நிற்கும். அவ்வாற்றலை சிறிது சிறிதாக தேய்த்து அடக்குவதற்காகவே இருவினை, இரு மாயைகளை ஆண்டவன் ஆவியுடன் கூட்டி அருளினான். இதனை திரோதன சத்தி எனவும் கூறுவர்.

கூத்தனைக் காணும் குறி பலபேசிடில்
கூத்தன் எழுத்தில் முதல்" எழுத்து ஓதினார்
கூத்தனோடு ஒன்றிய கொள்கையராய் நிற்பர்
கூத்தனை காணும் குறியதுவாமே. 915

முதல்வனைக் காண விரும்புபவருக்கு குறி ஒன்று சொல்கிறார். அன்புதான் சிவன். அப்படி அன்பே வடிவாக இங்கே சிலர் வாழத்தான் செய்கிறார்கள். தனக்கென வாழா பெரும் தியாகிகள் அவர்களையே நாம் மஹாத்மா என்கிறோம். அப்படி பட்டவர்களையே சிவனுக்கு சான்று என்கிறார்.

அத்திசைக்குள் நின்ற அனலை எழுப்பியே
அத்திசைக்குள் நின்ற நவ்வெழுத்து ஓதினால்
அத்திசைக்குள் நின்ற அந்தமறையனை
அத்திசைக்குள் உறவாக்கினன் தானே. 916

'ந' என்பது நடப்பாற்றல் அதுவே வளப்பாற்றலும் ஆகும். நவ்விரண்டும் காலதாய் மாறி மேல் நோக்கிச் செல்லுதலே அத்திசை. நெருப்போடு சேர்ந்து உச்சிக்குப் போனாலே அவனைக் கண்டு விடலாம் என்கிறார். மறைய நின்று உள்ள மாமணிச் சோதியை உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முழுகி வாங்கி கடையமுன் நிற்குமே. கண்டு கண்டு உள்ளே கருத்துற வாங்கிடில் இன்று கண்டு இங்கு இருக்கலுமாமே என்கிறார் அகமுக பயிற்சியே தேவை. அதுவே தியானம்.

தானே அளித்திடும் தையலை நோக்கினால்
தானே அளித்திடும் மேலுற வைத்திடும்
தானே அளித்த மகாரத்தை ஓதிடத்
தானே அளித்ததோர் கல் ஒளியாகுமே. 917

தையல் - குண்டலினி துண்டு துண்டாக இருந்த துணியை நூலால் தைப்பதததுதையல். அது போல் ஆகாயத் தத்துவமே குண்டு + அலி + நீ. மகாரம் - நீரோடு சேர்ந்த காற்று - நாதம். கல்லொளி - உலாவப்பிராணன். (கண் ஒளி) இவை யாவும் சிவனே தானகவே அளித்தருளும். தூமாயை குண்டலினி, அதை ஆராய்ந்தால் சிவம் தானாகவே மேல் நிலையில் வைத்திடும். அதே மாதிரி நாதத்தையும் கவனிக்கவும்.

கல்லொளி என நின்ற வடதிசை
கல் ஒளியே என நின்றனன் இந்திரன்
கல் ஒளியே என நின்ற சிகாரத்தை
கல் ஒளியே எனக்காட்டி நின்றானே. 918

கல் ஒளி என்பது ஒரே இடத்திலிருந்து ஒளியை மட்டும் பரப்பும் விளக்குப் போல. அது நான்கு இடத்தில் உள்ளது. அரும் பெருஞ்சோதி ஒன்று அது பரம் சோதி. அடுத்த சுடர் சூரியன். சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. மற்ற ஏழு கிரகங்களும் அதை சுற்றுகிறது. அடுத்து நம்மிடம் உள்ள கண் ஒளி. இம்மூன்றுக்கும் ஒரு சுடராய் இருப்பவன் சிவன்.

தானே எழுகுணம் தண் சுடராய் நிற்கும்
தானே எழுகுணம் வேதமுமாய் நிற்கும்
தானே எழுகுணம் ஆவது ஓதிடில்
தானே எழுந்த மறையவனாமே 919

நாம் இவை எல்லாம் படிக்கும் போது நம் அநுபவத்துக்கு வராத நிலைகள். ஆனால் இன்றும் நம்மிடம் இருப்பவை. அதை அறியத் தூண்டுவதே இத்தகைய ஆன்மீக நூல்கள். அவைகள்

கூறும் வழிகளில் சென்று அநுபவத்துக்கு கொண்டு வரவேண்டும். கற்றதனால் என்ன பயன்? எல்லாம் தானே எனும் போது நாமும் அவனாகத்தான் இருக்க முடியும். அதை அறிய முயற்சி செய்வதே தவம். திருவினை அதற்கு சுருதி நம்மிடம் உள்ள ஸ்தலம் கண், கண்ணீர், தீர்த்தம், மூர்த்தி சுவாசக்காற்று, இவை முறையாகச் சென்றால் சத்குரு தானாக வாய்க்கும்.

மறை அவனாக மதித்த பிறவி
மறை அவனாக மதித்திடக் காண்பர்
மறை அவன் அஞ்செழுத்து உன் நிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத்து தாமது வாகுமே 920

கடவுள் என்ற சொல் மறை பொருள்தான் என்ற உண்மையை ஒப்புக் கொள்ள மறுப்பவர்கள் யாவரும் இறைவனுக்கு விரோதிகள். மறைகள் நிந்தனை சைவ நிந்தனை பொறா மனமும் அதே சமயம் பிறவி தீது எனா பேதை தம்மோடு சேர்தலே கூடாது. நான் தனி என்ற நினைவே பிறவி. அவன் உயிருக்குள் உயிராய், காயத்துள் காயமாய், ஆதிக்கு சமமாய், ஐந்தொழிலுக்கும் அப்பாலாய், ஓசையாய், ஒளியாய் எல்லாமும் அவனே. நாம் அறிந்த அறிவு எல்லாம் கையளவே. பூரண அறிவே அவன். அறிவில்லாமல் எதுவும் நடைமுறையாகாது.

ஆகின்ற பாதமும் மந்தவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீ இருதோள் வவ்வாய் கண்டபின்
ஆகின்ற அச்சுடர் அவ்வியல்பாமே. 921

இந்த அஞ்சும் அறிவில் ஒளியாகவும் மனதில் ஓசையாகவும் உடலில் நெருப்பாகவும் செயல்படுகிறது. உருவம், அரு உரு, அரு மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றே. உருவம் தோன்றும் அழியும். அது இயற்கை நியதி. நினைவு ஓசையாக கொஞ்ச நாள் இருக்கும். ஒளி என்றும் நிலை பெறும். நாம் எதில் பழக்கப் படுத்திக் கொள்கிறோமோ அதுவாக ஆகிறோம்.

அவ்வியல்பாய இரு மூன்று எழுத்தையும்
செவ்வியல்பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியல்பாக ஒளியுற நோக்கிடில்
பவ்வியல்பாக பரந்து நின்றானே. 922

நான்காம் தந்திரத்தில் முதல் தலைப்பு அசபை - அதில் 30 மந்திரம் 25+5+30. இது நம்மில் முகப்பகுதி, வெளி உலகில் ஆகாயமாகும். இரண்டாவது தலைப்பு திரு அம்பலச் சக்கரம் உடல் பகுதியில் உள்ள உள்மனமும் வெளி உடலும் சேர்ந்த அருஉருவ உருவம். அசபை ஞானேந்திரியம். திரு அம்பலம் உடல். இடையில் உள்ள மனம் முகத்திலும் சேரும் உடலிலும் சேரும். ஞனேந்திரியங்கள் என்பது திருத்திய முதல் ஐந்தெழுத்து. இரண்டாவது மனம் திருந்தியும் திருந்தாமல் இருக்கும் மனித நிலை. அறிவு அறியாமையில் உள்ள நடுநிலை உடல் அசுத்தமாயை பாசம் ஸ்தூல பஞ்சாக்ஷரம். இருமூன்று 2+3 = 5, திருவைந்தெழுத்து, ஒவ்வியல்பு (ஒளி) ஓங்கார இயல்பு மந்திரங்களை உய்த்து உணருமாறு எழுத்துக்களை மாத்திரை கூட்டியும் குறைத்தும் வழங்குவர். அது சிவ-சிவா என்பது போல.

பரந்தது மந்திரம் பல்லுயிர்க்கும் எல்லாம்
வரம் தரும் மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடும் மந்திரம் சூழ்பகை போக
உரம் தரும் மந்திரம் ஓம் என்று எழுப்பே 923

(மந்திரங்கள் இவ்வாறு பரவின ஓசையில். சூழ்பகை பிறப்புக்குக் காரணமான இன்ப துன்பங்கள்)

913 மந்திரத்திலிருந்து - 'அவ்வுண்டு என்பது முதல் இதுவரை' சில மந்திரங்கள் விளக்கப்பட்டன. அவை வரம் தரு மந்திரமாகும். அவை நிவர்த்தி மார்க்கம் – பிறவியை நீக்குபவை. இவை எல்லாம் உள் அடங்கி ஓம் என்றும் ஓர் எழுத்து உண்மை யாகும். ஓம் ஒளியை நாடும். நாதத்தின் அந்தம். நாதத்தின் முடிவில் நஞ்சுண்ட கண்டனே.

ஓம் என்று எழுப்பித்தன் உத்தம நந்தியை
நாம் என்று எழுப்பி நடு எழு தீபத்தை
ஆம் என்று எழுப்பி அவ்வாறு அறிவார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந்தாரே. 924

ஓம் என்பது நாம் கூற வேண்டிய மந்திரமில்லை. கேட்கப்பட வேண்டிய மந்திரம். அப்படி எழும்பினால் அதன் பின்னாலேயே நமசிவய மந்திரம் தொடர்ந்து ஒலிக்கும். இதன் நடுவில் திரு விளங்கும். சிகரம் தெரியும். சிவயநம ஆகும். சிகரம் அகரமாகும். மாமன்றம் என்பது திரு+சித்+அம்பலம். திருச்சிற்றம்பலம் நந்தி விலக சிவதரிசனம் கிட்டும்.

ஆகின்ற சக்கரத்துள்ளே எழுத்து ஐந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத்தொரு எழுத்துள் நிற்கப்
பாகொன்றி - நிற்கும் பராபரன் தானே. 925

(பா கொன்றி - பகுத்தறிவுக்கு பொருத்தி, இது அக வழிபாட்டை குறிப்பதாகும். 904-ம் பாட்டு புற வழி பாட்டைக் குறிக்கும்)

பரமாய அஞ்சு எழுத்துள் நடுவாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம் பரந்து ஓதில்
பரமாய வாசி மயநமாய் நின்றே 926

அஞ்சு எழுச்சிகளாய் ஆனதே இந்த பிரபஞ்சம். பரம் ஜோதியாய் பரந்திருக்கும் நிலையே பிரபஞ்சம். அதில் மண் மஞ்சள் ஒளியாகவும் நீர் வெண்மையாகவும், நெருப்பு சிவப்பாகவும் காற்று கருப்பாகவும் இவை எல்லாம் கலந்து ஆகாயம் நீலமாகவும், காற்று உலகம் கருப்பாகவும், நீர் உலகம் வெண்மையாகவும், மண் உலகம் மஞ்சளாகவும் உள்ளது. மஞ்சளும் நீலமும் சேரும் போது (பிரம்மா விஷ்ணு) பச்சை மாமலை போல் தோன்றும், சிவயநம என்ற ஐந்து எழுத்தில்

நடுவில் நிற்பது 'ய' கரம். இவ்வைந்தெழுத்தை மாற்றி மாற்றி அமைத்து பார்ப்பது அறிவின் செயல். அது ஒரு விளையாட்டு இந்த சிவயநம எனும் போது நெருப்பு முதன்மையாகவும், காற்று இரண்டாவதும், நடுவில் உயிராகிய ஜீவனும் அதன்பின் நடப்பாற்றல், மறைப்பாற்றலுமாக உள்ளது. நாம் மனிதர்களாகிய ஜீவன் யகரத்தை தலைமையாக கொண்டு வாழ்ந்தால் எப்படி இருக்கும் என்று பார்க்கிறோம். ய என்பது யாப்பு. கூட்டுப் பொருள் . மநவசிம, மவயநசி, சியநமவ, வசியமந என்று நான்கு வகையாக பகுத்து, கூட்டிப் பார்ப்பது ஒரு அனுபவ உண்மையை அறிவதே. அப்படியெல்லாம் பார்ப்பது நாம் இருந்த நிலையே சுகம் மாறுதல் அவசியம் இல்லை என்ற முடிவே முத்தி எனப்படும்.

நின்ற எழுத்துக்கள் நேர் தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர் தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர் தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே. 927

என்றும் நின்று நிலவும் திரு ஐந்து எழுத்து ஐம்பூதங்களும் அதற்குரிய வர்ணங்களும் நிறங்களுக்கேற்ற செயலும், குறியும் விளங்குவன. அதன் உள்ளீடாய் இருந்து செலுத்துபவன் சிவன். தோற்றம் எல்லாம் பொய் என்பது புலனாகும். உண்மைக்கு அழிவில்லை என்பது புரியும். அதற்கு சான்று நாமேதான். நான் எனது என்று சொந்தம் கொண்டாடுகிறோமே. இவற்றில் எதாவது நம்மை சாவிலிருந்து காப்பாற்ற முடிந்ததா? ஆதவே தோற்றம் எல்லாம் போலியே திருஅம்பலச்சக்கரத்தால் (கண்ணின் ஒளி வட்டம்) பெறப்படும் நன்மைகள் பல. அவற்றுள் சிறந்தன படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் கூத்தப்பிரான் திருஉருவை கீழிருந்து மேல் நோக்கில் நமசிவய எனவும், மேலிருந்து கீழ் நோக்கி சிவயநம என்றும் தோன்றும் தெளிவு நிலை சிவ எனும் மந்திரம்.

நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வாய் நின்ற வாய் நன்னாடனை
கன்றதுவாக கறந்தனள் நந்தியும்
குன்றிடை நின்றிடும் கொள்கையனாகுமே 928

அழிவில்லாத திருவம்பவ சக்கரத்தினால் எல்லா உலகமும் நிலை பெறுகின்றன. இத்திரு அம்பல சக்கரத்து நிலை பேறாக உள்ள சிவபெருமானை அச்சக்கர வழிபாட்டால் நந்தி எம்பெருமான் பசுவின் கன்று பால் பெறுவது போல் பெற்றுக் கொண்டனன். அது போல் அவன் நின்ற குன்றிமை நிற்பார் நிலைத்த பேறாகுமே.

கொண்டது இச்சக்கரத்துள்ளே குணன் பல
கொண்ட இச்சக்கரத்துள்ளே குறி ஐந்து
கொண்ட இச்சக்கரக் கூத்தன் எழுத்தைந்தும்
கொண்ட இச்சக்கரத்துள் நின்ற கூத்தே 929

திரு அம்பல சக்கரத்தால் பெறப்படும் நன்மைகள் பல அவற்றுள் சிறந்தன படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் ஆகும். மேலும் கூத்தபிரான் திரு உருவை கீழிருந்து மேல் நோக்கின் நமசிவய எனவும், மேலிருந்து கீழ நோக்கில் சிவயநம எனவும் வழங்கும்.

வெளியில் இரேகை இரேகையில் அதிதலை
களியில் உகாரமாம் சுற்றிய வன்னி
நெறிதரு கால் கொம்பு நேர்விந்து நாதம்
தெளிவும் பிரகாரம் சிவமந்திரமே 930

(பிளவுகள் அல்லது கோடுபோன்ற கீற்றுக்களே ரேகை எனப்படும். சுளி என்பது வட்டம்)

பரவெளியில் சக்கரங்களோ, கீற்றுக்களோ கிடையாது. ஆனால் திரு அம்பல சக்கரத்தில் சுளி, கீற்றுக்கள் உண்டு. குற்றமற்ற உகரம் தீயின் அடையாளம். நெளிவு சேர்ந்த கோடு

விந்து வாடும் (ஒளி). நெளிவில்லாத நேர்கோடு நாதமாகும். இவற்றைத் தெளியும் போது சிவ எனும் மந்திரம் தானாக உருவமாகும். தானாத வருவதே உண்மை. நம் செயலால் வருவது போலி.

அகார உகார சிகார நடுவாய்
வகாரமோடு ஆறும் வளியுடன் கூடி
சிகாரமுடனே சிவன் சிந்தை செய்ய
ஓகாரமுதல்வன் உவந்து நின்றானே 931

அகரம் என்பது சிரசு, சிகரம் என்பது கண்கள் உகரம் என்பது வாய் உதடுகளில் உச்சரிப்பு. இவை மூன்றுக்கும் நடு வாய். அகர உகரம் ஓம் என்ற பிரணவ ஒலியையும் சிகரம் என்பது ஐந்து ஒளியையும் குறிக்கும். இவை ஓம் நமசிவய என ஆகும். இவற்றை ஆறெழுத்து மந்திரம் (சடாக்ஷரம்) என்பர். சரவணபவ. சிவசிவ என்று இடைவிடாது மனம் நினைவு ஓசை செய்து கொண்டிருந்தால் காற்றைப் பிடிக்கும் கணக்கறியலாம்.

அற்ற இடத்தே அகாரமதாவது
உற்ற இடத்தே உறு பொருள் கண்டிட
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்த பொன் போலும் குளிகையே. 932

ஐந்தில் விட்டது எதுவோ அதை அல்லவா பற்ற வேண்டும். அது காற்றும் ஆகாயமும், நிலம், நீர் நெருப்போடு நிறுத்திக் கொள்வது மனித வாழ்க்கை. அவன் தெய்வமாக வேண்டும் என்பதே இயற்கை நியதி. இதை உணர்ந்து வாழ வேண்டும். அதை உற்ற இடத்தில் உறு பொருள் கண்டிட - கண்களுக்கு மேல் (சிகாரம்) வ - நெற்றி - 'ய' உச்சி வரை சென்றால் - 12. துவாத சாந்த நிலை அதற்குமேல் போவது சாந்தியந்தம். 4 X3 = 12, 5 X 3 = 15 + 1 = 16 கலாந்தம். 16 + 2 = 18 தேறிய மூவாறும் சிக்கென நின்றிடும், ஆறும் அந்தமாகி (யோகாந்தம், நாதாந்தம்,

போதாந்தம், கலாந்தம், வேதாந்தம், சித்தாந்தம்) நடுவுடன் கூடினால், தேறும் மூவாறும் சிக்கென நின்றிடும் கூறும் கலை பதினெட்டும் ஒன்றாகக் கூடினால் ஊறும் உடம்பு உயிர் உடம்பெனலாமே. இந்த உயிர் நிலையையே யாரும் அடைய வில்லையே?

அவ்வென்ற போது உவ்வெழுத்து ஆலித்தால்
உவ்வென்ற முத்தி உருகி கலந்திடும்
மவ்வென்று என் உள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வணம் சொல்லுவேன் எந்தை இயற்கையே 933

அகரத்தோடு உகரம் சேர்ந்தால் ஓம் என்ற பிரணவ ஒலி கேட்கும். வானத்தில் மயிலாடக் காணலாம். மயில் குயிலா வதையும் கேட்கலாம். நாத, விந்து கலை ஆதியாகும். மகர நிலையாகிய நந்தியின் கண் சிவம் முன்னின்று வழிபடுத்தும். எந்தையாகிய சிவன் அருளைப் புகழ வார்த்தை கிடையாது என்கிறார் அனுபவம் பெற்ற திருமூலர், பிரணவத்தில் உச்சரிப்பை குறிக்கிறது இந்த மந்திரம்.

நீரில் எழுந்து உலகர் அறிவது
வானில் எழுத்தொன்று கண்டு அறிவார் இல்லை
யார் இவ்வெழுத்தை அறிவார் அவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலார் தாமே. 934

பிறப்பதற்கே தொழிலாகி இறப்பவர் மனிதர்கள். நம் உடலில் 1¾ பங்கு நீரே. கண்கள் ஒளிக்குத்தான் இடம். அங்கேயும் நீர் குளமாக குவிந்து கிடக்கிறது. நீலிக்கு கண்ணீர் நெற்றியில் என்பர். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைக்க வேண்டும். இரும்புண்ட நீர் போல் உள்வாங்க வேண்டும். அது நெருப்பால் சூடு செய்யப்பட்டு வெந்நீர் ஆக வேண்டும். அது தான் திருநீறு. மந்திரமாவது நீறு. நினைவுகளே சூடுதான். அது சிவன் நினைவு சுத்த உஷ்ணமாகும். சீதம் உஷ்ணம் ஆவதே சீதோஷ்ண

ஸ்திதி. சீதையை அக்னி பிரவேசம் செய்யச் சொன்ன காரணம் அவளை சுத்தம் என்று காட்டவே. கற்புக்கரசி என்றும் கனல்தாம். அவர்களே நெருப்பு. நெருப்பை நெருப்பு எனச் செய்யும். கற்பெனப்படுவது சொல் திறம்பாமை. ராமனுக்கு ஒரே சொல், ஒரே பத்தினி, ஒரே அம்பு, வானில் எழுச்சி பெற நீர்கனம் குறைந்து ஆவியாக வேண்டும். அதுவே மேகலை, மேலே போன மேகம் வெண்மேகம் கீழே வராது. கார் மேகம் மழை நீராக கீழே வரும். அதுவே பிறவி. செத்தார் நீருடன் சேர்ந்தார். சித்துடன் சேரிடில், செத்தார் இருந்தார். ஆகவே பிரணவ ஒலியைக் கேட்டவர் பிறப்பதில்லை. அதை அகமுக பயிற்சியில் பழகவும் கேசரி யோகம்.

காலை நடுவுற காயத்தின் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பதும் ஆவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூல நடுவுற முத்தி தந்தானே. 935

உடம்பில் சுவாசக் காற்று இடது நாசி, வலது நாசி, அல்லது உள் மூச்சு, வெளி மூச்சாக நடைபெறுவதை ஒரே மூச்சாக்கினால் அடி நடு நாடி ஆகும். பலமாக ஊன்றி நிற்கும். அத்தோடு ஒன்றானால் அது அக்கரமாகும். அதாவது எட்டு அறிவாகும். அதல்லாமல் நீருடன் சேர்ந்து கழுத்துக்கு கீழே போகுமானால் ஆறு ஆதாரங்களோடு சேர்ந்து ஐம்பத்தொரு எழுச்சிகள் ஆகும். இதைத்தான் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது ஆரம்ப நிலையிலேயே மகார சத்தியுடன் சேராமல் ஓகாரத்தைப் (ஒளி) பின்ந்து ஏற்றி சிகாரம் கண்களாகவும், 'அ' சிரசாகவும் மாறும் (901 மந்திரம் பார்க்க)

நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிகள் அத்தின் பயன் அறிவார் இல்லை
ஓவியராலும் அறிய வொண்ணாது
தேவியும் தானும் நிகழ்ந்திருந்தானே. 936

விண்ணை நோக்கிச் சொல்லும் 'நா'. சொல் நாவி. அது தொப்பூழிலிருந்து வராது. உள்நாக்குக்கு மேல். "கண், நாக்கு, மூக்கு, செவி கூட்டத்துள் பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்று உண்டு. அண்ணாக்குக்கு நேரே அகண்ட ஒளி காட்டி புண்ணாக்கி என்னை பிழைப்பித்தவாறே."

அவ்வொடு சவ்வென்று அரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்றதும் யாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்று யாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியுமாமே. 937

'அ' என்பது அத்தன் (ஒளி) 'ச' என்பது சக்தி (அன்னை) இது அரனுக்குரிய மந்திரமாகும். ருத்திரன் - அரன். அதாவது அக்னி கலையும் பார்வை சக்தி - பார்வதி இதை அறிந்தவர் திருவடி உணர்வு பெறுவர். திருவடி உணர்வு அசபா மந்திரத்தில் முடியும். சிகரம் அகரமாகும்.

மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியில் உள்ளே உதயம் பண்ணா நிற்கும்
சந்தி செய்யாது நிற்பர் தாமது அறிகிலார்
நந்தி தொழுது போய் ஆர்த்து அகன்றார்களே. 938

மனதின் திறம் மந்திரம். கண்கள் என்ற கண் மலரில் உதிப்பது. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும். மலர்மிசை ஏகினான் - மாணடி - அதுவே அவன் திருவடி. 'எழுத்து அறிவித்த வன் இறைவன்'. அதுவே உந்தி. 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்'. அங்கே தான் அந்தியும் சந்தியும் ஏற்படுவது. 'நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை என் புந்தியில் வைத்து போற்றுகின்றேனே'. இதை எல்லாம் விட உறுதி மொழி தேவையா? ஆர்த்து - ஆர்ப்பாட்டம் செய்து அவனை அடைய முடியாது. பதி அது மேவி பணிய வல்லார் ஆர்த்த பிறவியை அகல விட்டு ஓடுவர்.

சேவிக்கும் மந்திரம் செல்லும் திசை பெற
ஆவிக்குள் மந்திரம் ஆதாரமாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்கு சமாமே. 939

தொழுகை மந்திரம் சேவிக்கும் மந்திரம். பிறவியின் நோக்கமே சேவை செய்வது தான். என் கடன் பணி செய்து கிடப்பதே. ஆட்சி அல்ல. என்ன ஆணை பிறக்கிறதோ - தூண்டுதல் அதைச் செய்வதே நம் கடன். அதற்கு ஆறு நிலைக்களமாகும். காது, கண் - 4, நாசி - 1, வாய் - 1, ஆறு வாசல். இந்த அஞ்சும் அதற்கு இடம் ஒன்று ஆறு. நெஞ்சத் தாமரைக்குள் நிலைபெறு மந்திரம் எது என்று ஆராயின் அது குற்றமற்ற திரு ஐந்து எழுத்து. அஞ்சிலே பிறந்தது அனுமார் ஐந்து பேர் அறிவும் கண்களே கொள. அவை மதம் கொண்ட யானைகளை அடக்க ஏற்பட்ட அங்குசம். ஆயுத எழுத்து சூரியன், சந்திரன், அக்னி "யானை ஐந்தையும் அடக்கி அறிவெனும் ஞானத்திரியை கொளுவி அதனுட்புக்கு கூன் ஈருறை நோக்க வல்லார் ஒருவர்க்கு வானகம் ஏற வழி எளிதாகுமே".

அருவினுள் அம்பரம் அங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவாய்
உருவிடம் ஊறுஉறு மந்திரமே. 940

(அம்பரம் - ஆகாயம் விந்து. உகாரம், விந்துமருவிய ஆகாரம் - பிரணவம், சிகாநடு - நமசிவய மந்திரத்தில் 'சி' நெடுப்பு நடு)

அருவம் அரு உரு ஆவதுக்கு அறிகுறி பரைநாதம். ஒளியும் ஒலியும் ஆண். அது துடி - துள்ளல் என்பது தான் எழுச்சி அலை போல் எழுவது. விந்து (ஒளி) அது மின்னல் போல் ரேகை இந்துவின் இளம்பிறை போல் எயிறு. மூன்றாம் பிறை போன்றது. அது நீருடன் சேர்ந்து 'ய' வ்விரண்டும் கண்ணதாய் அக்ஷன் அக்ஷி

ஆகிறது. அது 'சி' கரமாக மேல் நோக்கும் போது அக்னி கலை தோன்றும். அது நீரோடு சேர்ந்தால் மன்மதன். நெருப்போடு சேர்ந்தால் முருகன் (ஆறாவது அறிவு). இருள் ஒளி இரண்டுக்கும் ஒரே இடம் நெற்றி.

அறு எழுத்து ஓதும் அறிவார் அறிகிலர்
அறு எழுத்து ஒன்றாக ஓதி உணரார்கள்
வேறு எழுத்தின்றி விளம்ப வல்லார்கட்கு
ஓரெழுத்தாலே உயிர் பெறலாமே. 941

ஓம் நமசிவய என்பது ஆறு எழுத்து மந்திரம். நாம் ஒவ்வொருவரும் ஆறு அங்கங்களால் ஆனவர் தாம். ஆறையும் நாம் ஒரு ஆளாகவே பார்க்கிறோம். ஒரு ஆளை யாராவது ஆறாக பார்க்கிறோமா. ஆனால் அவரையே தந்தைக்கு மகனாகவும் மகனுக்கு தந்தையாகவும், மனைவிக்கு கணவனாகவும் அலுவலகத்தில் ஆபீஸராகவும், பேசும் போது பேச்சாளர், தூங்கும் போது தூங்குபவராகவும் இப்படியே ஒருவரைப் பலவாகவும் பார்க்கிறோம். ஆனால் அந்தப் பகுதிகளை சுட்டிக் காட்ட முடியாது. உருவத்தைத்தான் சுட்டிக் காட்ட முடியும். கடவுளும் இப்படித் தான் இருக்கிறார். இதை அறியாமல் ஒரே கடவுளை பல உருவம் நாமங்களாய் அழைத்தாலும் அவன் ஒருவனே.

ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூவைந்தும்
ஆதி எழுத்தவை ஐம்பதோடு ஒன்று என்பர்
சோதி எழுத்து நிலை மூன்றுல
நாத எழுத்திட்டு நாடிக் கொள்ளீரே. 942

மந்திரம் கட்டு எல்லாம் முதலாக ஓதப்படும். ஓங்காரத்துடன் ஏனை உயிர் எழுத்து பதினைந்தும் கடை மொத்தம் உயிரெழுத்து பதினாறு. இங்கே எழுத்து என்பதை நாம் எழுதும் எழுத்தை வைத்து மண்டையை பிய்த்துக் கொள்ளாதீர்கள். நம் உள் உடம்பில் முகத்தில் முப்பதும் உடலில் ஐம்பதும் ஆக என்பது

எழுச்சிகளை குறிப்பிடும். இந்த என்பதையும் எட்டு சாண் உடம்பாக பார்க்கிறோம். சோதியாகிய ஒளி எழுத்து சிவம். ஆறு எழுத்தும் (பிரணவ எழுத்தோடு கூடிய) தூல பஞ்சாக் கரம். தூலத்தை சூக்குமத்திலும், சூக்குமத்தை காரணத்திலும், காரணத்தை மகா காரணத்திலும், மகா காரணத்தை முத்தி பஞ்சாக்கரத்திலும் ஒடுக்கினால் ஏகமாகும். ஏனைய எழுத்துக்கள் எல்லாம் விகாரம் வைகரி அதாவது பொய் போலி.

விந்துவிலும் சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலைவி பதினாறு கலையதாய்
கந்தர வாகரம் கால் உடம்பாயினாள்
அந்தமும் இன்றியே ஐம்பத் தொன்றாயதே. 943

எழுச்சிகள் - உருவங்கள் எல்லாமே சக்திகள் தாம் விந்துதான் சுழிமுனை நாடி. அதாவது நினைவோசை. அதன் எழுச்சியே ஆறு ஆதாரம். 51 எழுத்து 51க்கு முன்னால் முகத்தில் 16 கலையாகும். இவை எல்லாம் ஆதி தான்.

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பதெழுத்தே ஆவது அறிந்த பின்
ஐம்பதெழுத்தும் போல் அஞ்செழுத்தாமே. 944

நாம் காணும் காட்சி எல்லாம் இந்த ஐம்பது விதமான தாது பொருட்களே காரணம் என்பதை அறியலாம். இவை இடம் மாறி அமைவதால் வேறு வேறாகத் தெரியலாம். இதை ஆராயப் போனால் ஐம்பது என்பது ஐந்தின் பல தோற்றங்களே. எப்படி ஆங்கிலத்தில் ஈ(ஏ), E(இ), I(ஐ), O(ஓ), U(யு) ஐந்து உயிரெழுத்தே பல காவியங்கள் ஆனதோ, தமிழில் எப்படி மெய் எழுத்து 18, உயிர் எழுத்து 12-ம் 30 எழுத்தும் எத்தனையோ பல்லாயிரம் நூல்கள் ஆகி உள்ளன. அப்படியே ஏழு சப்தமே எத்தனையோ இராகங்கள் ஆயின. அதே போல் உலகமே இந்த அஞ்சு எழுத்தில் (நமசிவய) அடங்கும்.

அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்சு எழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்சு எழுத்தால் அகலிடம் தாங்கினன்
அஞ்சு எழுத்தாலே அமர்ந்து நின்றானே. 945

ஒன்று என்பவனின் செயலே ஐந்தொழில். அதற்கு ஐந்து வர்ணம், ஐந்து குணம், ஐந்து மணம், ஐந்து இடம், ஐந்து செயல் என்ற கணக்கில் பலவாக பெருகிற்று. அஞ்சையும் தாங்க ஒரு அகன்ற இடமே ஆகாயம். அஞ்சிலும் அவனும் கலந்தே இருக்கிறான்.

வீழ்ந்து எழலாம் விகிர்தன் திருநாமத்தைச்
சோர்ந்து ஒழியாமல் தொடங்கும் ஒருவற்கு
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்தடும் என்னும் புரி சடையோனே. 946

வேற்றுமையில் ஒற்றுமை காணப்பயில வேண்டும் சடையோன் என்பது ஜடமாக இருக்கும் உடல். அதுவே அசுத்தம். அறியாமை. அதை புரிந்தும் அத்துடன் இருக்கும் அறிவு தான் நான் என்று புரிந்து வாழ்பவன் அநுபவ அறிவை அறிந்தவன். அறிவு நிலையிலிருந்து (மேல்நிலை) வீழ்ந்து தான் இருக்கிறோம். சக்தி தாம் நம்மை வீழ்த்திற்று. அதுவே மாயாசக்தி அதிலிருந்து விடுதலை பெற உதவும் ஞான சக்தியும் உண்டு. இச்சாசக்தியின் செயல் மாயையிலும் விழலாம். எழுச்சி பெற ஞான சத்தியை அறிந்து அதனுடைய தொடர்பு கொண்டால் அது தொழில்களின் நுட்பம் தெரிந்து முறையாக இடைவிடாது கணித்தால் உலகியல் நுகர்வுடன் இருந்தாலும் இவற்றின் நிலையாமையை அறிந்து தொடக்கின்றி வாழலாம். புரிதல், விரும்புதல். (சடை) திரு+ஆ+திரை நான். நான் என்பது நட்சத்திரம். சடை - பின்னல். ''ஒன்றாய் வேறாய், உடனாய் விரும்பி உறையும் புணர்ப்பினன் புரி சடையோன்'' புணர்வு என்பது - அத்வைதம்.

உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலுமாய் நிற்கும்
விண்ணின்று அமரர் விரும்பி அடி தொழ
எண்ணில் எழுத்து அஞ்சுமாகி நின்றானே. 947

புரிந்தவர் வாழ்க்கை முறை மற்றவர்களிடம் இருந்து வேறு பட்டிருக்கும். அவர்கள் பொதுத் தன்மையை உடமையாகக் கொள்வர். நான் என்பது பொது என்பதை உணர்வர். எல்லாம் எல்லோருக்கும் உரிமை கொள்ளும் வாய்ப்பை அருளுவர். ஏன், எப்படி எதற்கு என்ற கேள்விகள் எழும். அதற்குப் பதிலை நாடி அலைவர். காரணம் காண துடிப்பர். அவர்கள் பசிக்கு சாப்பிட மாட்டார்கள். நோய்க்கு மருந்து போல் உணவு கொள்வர். இயற்கையை உணர்ந்து அதை இயக்கும் இறைவன் பால் அல்லும் பகலும் அன்பு செலுத்துவர். அவன் அருளைப் பெற்று அவனுடன் ஐக்கியமாவர்.

ஐந்தின் பெருமையே அகலிடமாவது
ஐந்தின் பெருமையே ஆலயமாவது
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகை செய்ய பாலனுமாமே. 948

ஐந்து எழுச்சிகள் அருமையை உணர்ந்து அளவிலா பெருமையினாலே (பெருக்கம்) எல்லா உலக நடவடிக்கைகளும் ஒழுங்காக நடைபெறுகிறது. அந்த நடப்பாற்றலை அறிந்து நாமும் அதன் கைப்பிடித்து மறைப்பாற்றல் ஆகி அதன் பின் சிறப்பாற்றல், வளப்பாற்றல் கடைசியாக எல்லாம் ஒன்றாவதே அகலிடம் யாப்பாற்றல். பல எண்ணங்களின் நோக்கமும் ஒன்றே. அதாவது அறிவு ஒளியாக வேண்டும். ஒளியே - விழுமிய தன்மை. பால் என்பது ஒளிமயமே. பால் கடல் தெளிந்த நிலை. உப்புக் கடலை விட்டு பால் கடலில் சயனித்தலே அமைதியைத் தரும் அறிதுயில் அறிவோம்.

வேர் எழுத்தாய் விண்ணாகி அப்புறமாய் நிற்கும்
நீர் எழுத்தாய் நிலம் தாங்கியும் அங்குளன்
சீர் எழுத்தாய் அங்கியாயு உயிராய் எழுந்து
ஓர் எழுத்து ஈசனும் ஒண்சுடருமாமே. 949

ஒரு மரம் எழுச்சி பெற வேர்தான் காரணம். அது போல் மனிதன் எழுச்சி பெற வேர் எது? எப்படி மண்ணால் மறைக்கப்பட்டுள்ளதோ அது போல் மண் சத்தியால் ஆன உடல் அதை மறைக்கிறது. எழுச்சி பெற வெப்பம். சூரிய வெப்பம் மண் உள் புகுந்து நீரை ஆவியாக்கி மண்ணுக்கு வெளியே தாவரமாகிறது. மனிதனுக்கு வேர் முகத்தில் உள்ளது. அகத்தின் அழகு முகத்தில். அதில் ஆணிவேர். உலகுக்கு ஆணி ஒண் சுடர் உத்தம சித்தன் நிலம் முதல் வான்வரை (ஐந்தினும்) நேருற நிற்கும். அப்படியானால் நம்மூலாதாரம் - எண் சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம். மூலஸ்தானம் இருட்டில் தான் கோயிலிலும் இருக்கும். அதை குருக்கள் பூஜை தட்டில் ஒளியேற்றிக் காட்டுவர். அப்புறமே தரிசனம் கிட்டும். அப்படி நம்மிடம் குரு எது? வெளிச்சமே குரு. அது பூப்போன்ற கண்கள் வழியாகப் புகுவதே ஞானம். "விளக்கினைப் பிளந்து விளக்கினை ஏற்றி விளங்க வல்லார் விளக்குடையான் பாதம் மேவலுமாமே". கண் ஒளியை ஏற்றி மூலதனமான மூளைப் பகுதியை பார்ப்பதே அது. ஈசன் ஒரே ஒளிதான் ஐந்தோடு சேர்ந்து தொழில் புரிகிறான். சுருதிகண் தொழில் அறிவாளர் சுருதி கண்ணாக பழுது அறியாத பரம குருவை வழி அறிவர் நல் வழி அறிவாளர்.

உரை ஆசிரியரின் தனிக் கருத்து

இன்று (14.4.1995) வெள்ளிக்கிழமை தமிழ் புத்தாண்டு யுவ ஆண்டு பிறப்பு நாள். யுவ என்பதின் பொருள் இளமை. மனித வாழ்வு நூறு ஆண்டு பூரண ஆயுள். அதில் முதல் 25 இளமை. அதையும் மூன்றாக பிரித்துக் கூறுவர். 3 x 8 = 24 + 1. இளமையிற் கல் என்பது முதுமொழி. கல்வி இல்லை எனின் மரத்துக்குச்

சமம். கல்வி என்பது இந்த உலகத்தில் வாழ அல்ல. இந்த உலகத்துக்கும் அப்பால் என்ன என்பதை அறிந்து பூரண அறிவை கல் முதல் விண் வரை அறியும் அறிவு. அதுவே சாகாத கல்வி. அதையே கல்வி என்பர். கற்றவர் கண்ணில் மற்றொரு கண் உண்டு. அதுவே மூன்றாவது கண். அது திறக்காத வரை விண்ணை நோக்கும் ஆற்றல் வராது. அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது என்றனர். ஏன் அரிது? ஏதோ பிறந்தோம். இறந்தோம் என்பது மிருக வாழ்க்கை. அப்படி எத்தனையோ கோடிப் பிறப்புக்கள் உண்டு. ஒரு கொசு கூட பிறந்து இறக்கிறது. மனிதர்கள் அப்படி சாகக்கூடாது. சான்றோனாக வாழ வேண்டும். அவன் செத்தபின்பு அவன் பெயர் வழங்கப்பட வேண்டும், வாழ வேண்டும் என்பது போல் சான்றோராக வாழ வேண்டும். அதற்கு அஷ்டாங்க யோகப் பயிற்சி தேவை. இமயம், நிமயம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதிப் பயிற்சி. இவை அகமுகப்பயிற்சி. மனதை அறிவாக்கும் பயிற்சி. இது பற்றி திருமந்திரம் மூன்றாவது தந்திரத்தில் பார்த்தோம். அதாவது மனம் ஒருமுகப்பட்டால் சித்தி பெறலாம். இது தெய்வத்தை நோக்கி இருந்தால் பர அறிவாகும். அதாவது அறிவுக்கு எல்லாம் மூலாதாரம். மூல அறிவுக்கு போய் விட்டால் சிற்றறிவு எல்லாம் அதனுள் அடங்கிவிடும். அபார அறிவு என்பது எட்டு அறிவு. எட்டும் ஒன்று ஆகும் போது அது கடவுள் நிலை எனப்படும். அது போல் மனிதருள் தேவர்கள் உண்டு. மனிதருள் கடவுளும் உண்டு. ஆனால் கோடியில் ஒருவர். ஏனெனில் எல்லா நிலைகளையும், எல்லா ஆசைகளையும் கடக்க வேண்டும். தியாகம் சேவை, அன்பு, கருணை அருள் தேவை. இந்த பரிசுத்த நிலையில் நம்பிக்கை இல்லை. இதற்கு உலகியலில் இருக்கும் துஷ்டர்கள் உறவு நீக்கப்பட வேண்டும். பீஷ்மாச்சாரியார், துரோணாச்சாரியார் போன்றவர்கள் கூட துரியோதனக் கூட்டத்தில் சேர்ந்ததால் அவர்களும் நல்ல முடிவை அடையவில்லை. லாரி கார் என்றால் ஐந்து அடி விலகினால் போதும். துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு என்றார்கள். எவ்வளவு என்று குறிப்பிட வில்லை. இந்த விலகல் நாமும் பயில வேண்டும். இதையே

யாதனின் நீங்கியான் நோதல் அதனின் இலன்'' என்றார் வள்ளுவர். வாழ்க்கையை நாலு பாகமாக பிரித்து நான்கு ஆசிரமங்கள் என்று வகுத்தார்கள். பிரம்மச்சர்யம். கிருஹஸ்தம், வானபிரஸ்தம், சந்யாசம் (ஒவ்வொன்றும் 25 ஆண்டுகள் - அதில் மூன்று மூன்றாக பகுத்து 12 ஆக்கினார்கள்). இது இயற்கை நியதி. இயற்கையை கற்பது தான் கல்வி. இயற்கை அறிவே அறிவு. அதன் உருவமே நாம் எல்லோரும் நாம் அறிவு என்பதை மறந்தும் ஐம்புலனை நான் என்று கருதி வாழ்வதே அறியாமை. ஆதவே யுவ ஆண்டு பிறந்த இந்த நாளிலிருநது மனத்தில் மாற்றம் கண்டு பேரறிவை நோக்கி சிற்றறிவார் யாத்திரை துவங்கட்டும். வாழ்க வளம் பெருக.

நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவில வல்லார்க்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே. 950

நாலாம் எழுத்து என்று 'வ' நமசிவய என்று பொருள் பண்ணுகிறார்கள். 'வ' என்புத காற்று - நம்மிடம் சுவாசம். காற்றின் மாறுபட்ட தோற்றமே பேச்சு. ஆனால் அதை மாற்ற உதவியது நீரும், நெருப்பும். நாதத்துக்கு நாலு நிலையுண்டு. பரை நாதம் பச்பந்தி, மத்யமா, வைகரி என்ற நாலு நிலைகள். முதல் நாதம் கண்ணில் தோன்றும் நினைவு ஓசை, விந்து . அது நாசியில் வரும் நீருடன் சேர பச்பந்தி ஆயிற்று. நீரும்,நெருப்பும் சேர்ந்து காற்றாகி காதின் ஓசையயாயிருந்து (மத்யமா) நாலாவது நிலை வாய்பேச்சு வைகரி - விகாரம். அது தான் நாம் பேசுவதெல்லாம் பொய் என்பது. ஏன் எனில் வாய் கண்டதில்லை. கண்ட கண் பேசாது. ஊமை எழுத்தோடு (கண்) பேசும். எழுத்தோடு சேர்ந்தால் உண்மை புலனாகும். அது நன்னெறி. கால் கண் ஆற்றலோடு சேர்ந்து மேல் நோக்கினால் அது மேல் நிலையாகும்.

பட்ட பரிசே பரம் அஞ்செழுத்தின்
இட்ட அறிந்திட்டு இரவு பகல் வர
நட்டம் அதோடு நடுவே நிலையம் கொண்டு
அட்ட தேசப் பொருளாகி நின்றானே. 951

இட்டம் - தியான உறைப்பு, தியானம் ஏழாவது நிலை. இது கை வந்தால் சமாதி நிலையில் கொண்டு விடும். ஏனெனில் தியானம் நடு நிலையாகும். நடு நாடியே நடு நிலையும் இது பற்றியும் 3வது தந்திரத்தில் அட்டமாசித்தியில் ஆராயப்பட்டு விட்டது.

அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வரும் முப்பத்தில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவமாய்
யகாரம் உயிர் என்று அறையலுமாமே. 952

உயிர் எனக் குறிப்பதாய, உயிர் மெய் இருபத்து நான்கும் 'அ'காரமாகும். அதுவே 'சி'காரமாகிய எழுத்தும் 'சி' வயநம எனும் அஞ்செழுத்தில். பரத்தைக் குறிப்பது 'ஓம்' என்ற எழுத்தில் 'உ' என்பது. அது உணர்த்தும் மெய்யாக ஐந்து எழுத்தும் உணர்த்தும் மெய்யாகும். மலமென குறிப்பதாய உணர்வு மெய் ஏழும் மகாரமாகும். இம்முப்பத்தாறு தத்துவங்களும் சிகரம் சிவமாகி உயிர்க்குயிராய் வகரம் சிவனின் திருமேனியாய், யகரம் திருவருளின் கைப்படும் உயிராய் திகழுமென்க.

நகரா மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஒகார முதற் கொண்டாரு கால் உரைக்க
கார முதல்வன் மனத்தகத்தானே. 953

நமசிவய என்பதில் சிகரம் நடுவாகும். இரண்டு வகாரம் என்பது இடப்பால் வலப்பால் மூச்சு. இஃது உயிர் அடையாளமாக 'ய' காரத்தை குறிக்கும். இவ்வைந்துடன் 'ஓம்' மொழியை

முதற்கொண்டு உள்ளன்புடன் ஒருமுறை ஓதினால் 'ம' காரமாகிய நாதமெய்க்கு தலைவனாய் சிவபெருமான் ஓதுவார் நெஞ்சை இடமாகக் கொண்டு எழுந்தருள்வார். வளியுடன் - (வள்ளி) ஜீவான்மாவும்.

அஞ்சுள யானை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்சு எழுத்தும் அங்குச மாவன
அஞ்சையும் கூடத் தடுக்கும் வல்லார்கட்கே
அஞ்சாதி ஆதி இகம் புகலாமே. 954

காடாகிய தொண்ணூற்றாறு மெய் (தத்துவ) கூட்டத் தாலாகிய இவ்வுடம்பினுள் ஐம்புல யானைகள் (யானையைக் காட்டி வள்ளியை பயமுறுத்தியதை சிந்திக்கவும்) தன் மனம் போல் மதத்தோடு திரிகின்றன. அவற்றின் போக்கைத் தடுத்து நேர் வழியில் செலுத்த வேண்டுமானால் அங்குசம் (தோட்டி) போன்ற கருவி வேண்டும். அதுதான் வேலொத்த விழி. அதையே சிவயநம என்று ஐந்தெழுத்து. அதை இடையறாது நாடுபவர்க்கு திரு ஐந்து எழுத்திற்கு முதல்வனாகிய சிவபெருமான் ஆதி என்று ஓதப்பெறும் திருவருள் ஆற்றலின் திருவடி புகுதலாகும்.

ஐந்து கலையில் அகராதி தனிலே
வந்த நகராதி மாற்றி மகராதி
நந்தியை மூலத்தே நாடி பரையொடும்
சந்தி செய்வோருக்கு சடங்கில்லை தானே. 955

'அ' என்பது ஒளி. அது தான் நடப்பாற்றலாகி 'ம' நீருடன் சேர்ந்து செயலாற்றும். நம் தீயை அது பிறந்த ஒளியுடன் சேர ஒலியாக்கி சந்திக்க செய்தால் அவர்களுக்கு ஜடமாகிய உடல் வேலை இல்லை. என்றும் நிலையாக உள்ளே ஒளி மயமாகவே மாறலாம். ஐந்து கலை - நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதம். அகரம் - ஒளி வர்ணங்கள் சிகரமுதலாக உச்சரித்து

மருவும் சிவாயமே மண்ணும் உயிரும்
அருமந்த யோகமும் ஞானமுமாகும்
தெருள் வந்த சீவனார் இவற்றாலே
அருள் தங்கி அச்சிவமாவது வீடே. 956

'சிவய' என்னும் மூன்று எழுச்சிகளும் அறிவும், ஆற்றலும், ஆவியுமாகும். அறிவு - ஞாணம், ஆற்றல் - யோகம், ஆவி - உயிர் யோகம் என்பது உயிர் + திருஅருளுடன் கூடுதல். அஃதாவது முழு முதல் சிவத்தை அகத்தே திரு உருவில் கண்டு வழிபடுதல். இந்நிலை அருவ நிலை. அருமருந்தாக மாறும். அப்படி கூடிய நிலை சிவமெனப்படும். அதுவே வீடாகும். பேறு - ஆன்மா சிவமாகி அநுபவிக்கக் கூடியது முத்தி.

அஞ்சுக அஞ்சு எழுத்து உண்மை அறிந்த பின்
நெஞ்சகத்துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சகமில்லை மனைக்கும் அழிவில்லை
தஞ்சம் இதுவென்று சாற்றுகின்றேனே. 957

ஐந்து மலங்களும் நீங்குதற்கு அழுக்கை அழுக்கால் அழிப்பது போல திருந்திய முதல் ஐந்து எழுத்து உதவியால் - பழகாத காட்டு யானையை பழகிய நாட்டு யானையை வைத்து திருத்துவது போல. சூட்சும பஞ்சாக் கரத்தை பயன்படுத்த ஸ்தூலம் சூட்சுமமாகி காரண சரீரத்தையும் கடந்தால் சிவமாகும். பிறவிக்கு வித்தாகிய தீய நினைவுகள் தோன்றா. இவ்வுடம்பும் விரும்பும் நாள் அளவு அழியாதிருக்கும். இந்நிலையே நமக்கு நிலைத்த புகலிடமாகும். உக = நீங்க; அம்+சுகம் = அஞ்சுகம். அஞ்சு மலங்கள் நசிக்க உருவம்; என்பது உண்மை அல்ல. அருவமே உண்மை என்பதை அறிந்தவருக்கு உருவகவர்ச்சி நீங்கும். ஏன் எனில் நாம் அநுபவம் என்று குறிப்பிடுவது அணுத் தன்மையதே. நாம் எதையும் உணவாக்க உருவத்தை அப்படியே விழுங்குவதில்லை. அதை இடித்தோ, அரைத்தோ, அவித்தோ,

மாவக்கி, உருவத்தை அழித்தே உணவாகக் கொள்கிறோம். ஏன் நாம் அப்படித் தான் இருக்கிறோம். உணர்வாகவே நுண்ணியமாக இருக்கிறோம். அது தான் உண்மை. அதை அறிந்தபின் நெஞ்சின் பாரம் பரமாகும்.

சிவாய வொடு அவ்வே தெளிந்து உளத்து ஓத
சிவாய வொடு அவ்வே சிவன் உருவாகும்
சிவாய வொடு அவ்வும் தெளிய வல்லார்கள்
சிவாய வொடு அவ்வே தெளிந்திருந்தாரே. 958

அருவமே 'நான்' ஒளியே நான் அறிவே நான் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் அதையே 'சி' என்ற நெருப்பும் 'வ' என்ற காற்றும் 'அ' என்ற ஒளியாக மாறும். அப்பொழுது எல்லாமே சிவ ஒளிமயமாகும் தானே. அதே நினைவுடன் இருந்தால் அருவமாகி பெரிய ஜோதியாவதில் சந்தேகமே இல்லையே. அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை.

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஒரு கால் உரைக்க
கார முதல்வன் மதித்து நின்றானே. 959

ஓம் நமசிவய என்பது உலகியல் - ஸ்தூலம். ஓம் சிவயநம என்பது வீட்டியல். விடுதலை நோக்கிச் செல்லும் மனதின் திறம் - மந்திரம். உலகியலை வேதநெறி என்றும் வீட்டு இயலை ஆகமநெறி எனவும் கூறுவர். வேதாந்தம், சித்தாந்தம் என்பதும் அதுவே. சிகாரம் (நெருப்பு) வகாரம் (காற்று) யகாரம் (உயிர்) இவை மூன்றும் நகாரம் (மண்) மகாரம் (நீர்) இதை விட்டு நீங்கி, ஓகாரம் ஒளியுடன் சேர்ந்தால் அதை மகார முதல்வன் (விஷ்ணு) மனம் மகிழ்ச்சியுறும். மீனாக்ஷியை சொக்கனுடன் சேர்த்த திருப்தி ஏற்படும். சக்தியை சிவத்துடன் சேர்ப்பதே திருக்கல்யாணம்.

நம் முதல் ஓரைந்தின் நாடும் கர்மங்கள்
அம் முதல் ஐந்தில் அடங்கிய வல் வினை
சிம் முதல் உள்ளே தெளிய வல்லார்கட்கு
தம் முதலாகும் சதாசிவம் தானே 960

நமசிவய என்பது ஐந்து எழுச்சிகளையும் அவை செய்ய இருக்கும் ஐந்து தொழில்களையும் குறிக்கும். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்பதே அது. இது உலகியல் படைப்பு, அழிப்பு வரை. 'சிவய நம' என்பது துடைத்தலுக்கு முன் நெருப்பாக வந்து காற்றோடு சேர்ந்து 'ய' என்ற ஆகாயத்தில் சேருவதால் அது விடுதலை மந்திரமாகும். ஜீவனின் முதல் நிலை சதாசிவமே. தன் நிலையாகும். ஆகவே விடுதலை விரும்புவார்கள் கண்களில் உள்ள ஒளியை நினைந்து சிரசு பக்கமாக வழி உண்டு பண்ணினால் சிவலோகம் சேரலாம்.

நவமும் சிவமும் உயிர் பரமாகும்
தவம் ஒன்றிலாதன தத்துவமாகும்
சிவம் ஒன்றியாய் பல ஆதாரவால் அச்
சிவம் என்பது தானாம் என்று தெளிவுற்றதே. 961

நகர முதலாய நமய என்ற மூன்று நவம் என்று மூன்று மூன்றாக ஒன்பது நிலையாகும். சிவ என்ற இரண்டும் மேல் நோக்காகும். இப்பிரிவு இரண்டும் முறையும் உயிரும் சிவமுமாகும். இதில் எதை நாம் விரும்புகிறோமோ அதை அடையலாம். அப்படி இரண்டையும் பற்றிய சிந்தியாதவர் இயற்கை இழுத்த வகையில் செல்வர்.

கூடிய எட்டும் இரண்டும் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள்ளே வைத்து
ஆடிய ஐவரும் அங்கு உறவு ஆவார்கள்
தேடி அதனை தெளித்து அறியீரே. 962

எட்டு என்பது ஏழு ஒலி ஏழு ஒளி இவை இரண்டுக்கும் இடமான ஆகாயம். நம்மிடம் காது, கண் இவை இரண்டுக்கும் இடமான மேல் முகம் (கபாலம்) இவற்றில் அகரம் ஒளி. உகரம் ஒலி. இதை உயிர் இறை என்பர். எட்டும் இரண்டும் கூடுங்கால் பத்தாகும். பத்தென்பது யகரம். அஃது உயிர். உயிர் சிவத்தோடு ஒன்றி ஒரு மணப்பட்டு நாடப்படும். நந்தியை நாடி திருவடியுணர்வில் வைத்தால் நான், எனது என்ற அகம்பாவம் ஒழியும். அதுவே விடுதலையாகும். இங்ஙனம் தேடும் நிலையை தெளிந்து உணர்க. சிகரமே அகரமாகும்.

எட்டும் இரண்டும் இனிது அறிகின்றலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. 963

எட்டும் இரண்டும் பத்து. இதன் குறி 'ய' கரம். உயிரின் அடையாளக் குறி. 'ய' வ்விரண்டும் கண்ணதாய் என்று குறி காட்டுவார். இந்த உண்மையை யாரும் அறியமாட்டார். இதை அறியாதவர் ஆறும் நாலும் பத்துத்தானே என்பர். எப்படிப் பார்த்தாலும் பத்து பத்தாகவே இருக்கும். கூட்டலில் மாற்றலாம். 1+ 9 = 10, 2 + 8 = 10, 3 + 7 = 10, 4 + 6 = 10, 5 + 5 = 10 6 + 4 = 10, 7 + 3 = 10, 8 + 2 = 10, 9 + 1 = 10 ஆனால் 10 எப்படியும் பத்து தான். அதை மாற்றிப் பார்ப்பது மாயை. எப்படிப் பார்த்தாலும் ஒன்று ஒன்றாகவே இருக்கும்.

எட்டு வரையில் மேல் எட்டு வரை கீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்திலே அறை நாற்பத்தெட்டும் மிட்டுச்
சித் அஞ் - செழுத்தும் செபி சீக்கிரமே. 964

நம் தாயக்கட்டம் வரைவது போல் மத்தியில் 'சி' காரத்தை மத்தி கட்டத்தில் வைத்து, நாலு திசைகளுக்கும் 12, 12 கட்டமாக அமைத்து விளையாடுவது. இது போல் விளையாடுவது தான்

உடலை வைத்து விளையாடுவது. அதற்கு ஆறு சோவி வைத்து குலுக்கிப் போட்டு மலர்ந்தது, குவிந்தது என்று எண்ணி, அதற்குத் தக கட்டத்தில் காய்களை நகட்டி, சிகாரத்தை (மத்திய கட்டம்) அடையச் செய்வர். இதையே சூதாட்டம் என்பது.

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆன இம்மூவரோடு ஆற்ற அது ஆதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமும்
சேனையும் செய் சிவசங்கரர் தானே. 965

நான் என்று வந்தவர் ஒருவர். நம் உள்வந்ததும் அவர் இருவர் ஆனார்கள். ஆக முவர் ஆயிற்று. சூரியன் (அறிவு), சந்திரன் (மனம்) அக்னி (உடல்) இவர்களுக்கு உதவி செய்ய ஆறு காவலர். இவர்களுக்கு பெயர் சூட்டியவர்கள் நாம் தாம். தானவர் - ஐயனார். சட்டர் - வயிரவர், சதிரர் - விநாயகர். ஆற்றவர் - வாயில் காப்போர். சேனை - சிவகணங்கள்.

பட்டண மாதவ மாறும் பராபரன்
விட்டனர் தம்மை விகிர்த நம என்பர்
எட்டனை ஆயினும் ஈசன் திறத் திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறியே னே. 966

சிவனை அறிந்தவர்கள், எல்லாம் சிவன் செயல் என்று உண்மையை சரியை (சிவம்) ஞானம் நோன்பு(கிரியை) ஞானம் செறிவு (யோகம்) ஞானம் அறிவு அதாவது கேட்டல், சிந்தித்தல், தெளிவு பெற்றவர் சாலோகம் (சிவலோகம்) சாமீபம், சாரூபம் சாயுஜ்யம் அவன் உருவமற்ற ஒளி வடிவம் பெற்று ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதியில் ஐக்யம் ஆவர். தன் எண்ணம் சொல் செயல் எல்லாம் அவன் எண்ணம், சொல் செயலாகவே கருதுவர். மனிதருள் - கடவுள்.

வித்தாம் சகமயமாக வரை கீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப் பின்
உத்தாரம் பன்னிரண்டாதி கலை தொடும்
பத்தாம் பிரம சடங்கு பார்த்து ஓதிடே. 967

இறைவனின் நினைவே விந்து (வித்து) அதன் காரியமே விண், வான். சந்திரன் 16 கலை, சூரியன் 12 கலை, அக்னி கலை - எட்டு 36 தலங்கள் ஆயின. வித்து - விந்து. நத்தார் - விருப்பம் கலை பதினாறு - சந்திர மண்டலம். பன்னிரண்டு ஆதி அத்தன் ஆதிய சூரியன், கலை தொடும் பத்து - அக்னி மண்டலம்.

கண்டு எழுந்தேன் கமலம் மலர் உள்ளிடை
கொண்டு ஒழிந்தேன் உடன் கூடிய காலத்து
பண்பழியாத பதிவழியே சென்று
நண் பழியாமே நமவெனலாமே. 968

என் உள்ளம் என்றும் அகத்தாமரையிலேயே உள்ளிடை கண்டேன். அகத்துள் ஒன்றித்து ஒருமை கொண்டுள்ளேன். பண் பழியாத பதி வழி - பதி அது மேவி பணிந்தேன். உண்மை அறிந்து நமசிவய வாழ்க என்றேன். நாதன் தாள் வாழ்க. இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க என்றேன். குருமணி வாழ்க என்றேன். கண்ணில் மணி ஆடும் ஈசனை உணர்ந்தேன். கண் அகத்தே நின்று காதலித்தேன்.

புண்ணிய வானவர் பூமழை தூவி நின்று
எண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நம என்ற நாமத்தைக்
கண் என உன்னிக் கலந்து நின்றாரே. 969

கண் மலர் வாடாமலர். அதை ஏற்றி ஏற்றி மகிழ்வர். இணையடி என்பது அவனிடம் என்ன என்ன செயல்படுகிறதோ அதுவே தான் நம்மிடமும் செயல்படுகிறது. அது இன்பமோ

துன்பமோ அது பற்றிக் கவலை இல்லை. கொலையும் கொல்பவனும் கொலையுண்டவனும் ஒருவனே எனும் போது யார் யாரை குற்றம் சொல்வது. எல்லாம் நன்மைக்கே. காரண காரியம் நமக்கு புரிய இல்லை. அவ்வளவே.

அறு எழுத்தாவது ஆறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலு என்பர்
சாவித்திரியில் தலை எழுத்து ஒன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற்றார்களே 970

ஆறு எழுச்சிகளை ஆறு சமயங்கள் என்பர். கோயில்களில் ஆறு கால பூஜை என்பர். நம் வாழ்க்கையில் ஒரு நாளை 24 மணி நேரத்தை நாலு ஆறாக பிரிந்து பேசுவது. வயது நூறை ஆறு ஆறாக பிரித்து 16 x 6 = 96 + அந்தக் கரணம் நாலு என்பர். இதற்கு எல்லாம் சாவி என்பது பூட்டைத் திறப்பது. ''நம்பூட்டொத்த மெய்யில் பொறியப்பட்ட வாயுவை தேட்டற்ற மாநிலத்து சேர்ப்பது ஓம் என்ற சாவித் திரியாகும்'' மூன்று கண்களே அவை. வலது கண் சூரியன். இடது கண் சந்திரன். நெற்றிக்கண் அக்னி. இந்த உண்மையைச் சொல்வது காயத்ரி மந்திரம். ''ஓம் பூர்புவ சுவ சவிதுார் வரேண்யம் பர்கோ தேவஷ்ய தீமஹி தியோ ந ப்ரஸோதயத்''. அதாவது என் அநுபவத்தில் உள்ள நனவு, கனவு, தூக்கம் மூன்று நிலையிலும் என் அறிவைத் தூண்டி விடுகின்ற பேரொளி பிழம்பின் திருவடியை தியானிப்பேன் ஆக. பேரொளியை உணர்ந்தவர் - பிறக்க மாட்டார்கள்.

எட்டினில் எட்டறை இட்டு ஓர் அறையிலே
கட்டிய ஒன்று எட்டாய் காண நிறையிட்டு
கட்டி இவற்றை பிரணவம் ஆழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட்கு உமாபதி யான் உண்டோ. 971

எத்தனை கட்டம் போட்டாலும் மத்தியில் இருப்பது வெட்ட வெளி தான் நித்யம். இதைத் தான் ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பது. இதன் கதை தான் மகாபாரதம். பஞ்ச பாண்டவர்

கர்ணனுடன் ஆறுபேர். கவுரவர்கள் நூறு நபர். ஆறு அறிவுள்ள இடம் முகம். அதுதான் இந்து பிரஸ்த்தம். உடம்புடன் கூடிய 96 தத்துவமே கவுரவர்கள். என்னதான் பஞ்சபாண்டவர்கள் கவுரவர் களை அழித்தாலும் இவர்களும் கண்ணனுக்கு அப்புறம் வாழ முடியவில்லை. இது எதைக் குறிப்பிடுகிறது என்றால் தோற்றத்துக்கு வருவது கடவுளே ஆனாலும் காலத்துக்கு உட்பட்டவர்களே. அதனால் கட்டங்களை போட்டுக் கொண்டு மண்டையை குழப்ப வேண்டாம்.

நம் முதல் அவ்வொடு நாவின ராகியே
அம் முதலாகிய எட்டிடை உற்றிட்டு
உம் முதலாகவே உணர்பவர் உச்சி மேல்
உம் முதலாய் அவன் உற்று நின்றானே. 972

'உ' ம் என்பது உணர்ச்சியை குறிப்பிடும். அதுவே முதல் அனுபவம். நாம் உடலால் அநுபவிக்கும் இன்ப துன்பம் உணர்ச்சியில் தான் ஆரம்பிக்கிறது. உணர்ச்சியில்த்தான் முடிகிறது. உணர்ச்சி இல்லையேல் கட்டை தான். உயிரும் இல்லை. உடலும் இல்லை. அதைத் தூண்டுவது ஒளியே அதுவே 'அ' கரம். அதை 'அம்' என்றார். இதை அகம் என்றும் கொள்ளலாம். அது உடலோடு சேரும் போது நான் எனது என்ற அகம்பாவமே 'நம்' செந்தமிழும் 'நா' பழக்கம். வான் பற்றி நின்ற மறை பொருள், ஊன் பற்றி நின்ற உணர்வுரு மந்திரம்.

நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றாக மவ்விட்டு ஓலையில் சாதகம்
துன்று மெழுகை உள் பூசிச் சுடரிடைத்
தன்ற நின்றிட தம்பணம் காணுமே. 973

மூச்சை உள்ளே அடக்கி ஸ்தம்பிக்க வைக்கும் நிலையைக் கூறுகிறார். நடுநாடிப்பயிற்சி. ஆண் குறியிலிருந்து சிரசு வரை ஒரு தூண் போன்ற உணர்வே நடு நாடி. அந்த உணர்வு இருக்கும் போது நாசியில் சுவாசம் வெளிவராது. உச்சி வழியாக நுண்ணிய

வேர்வை போல் வெளியேறும். அந்த உணர்வு ஆண் பெண் உடல் உறவில் கிடைக்கும். இன்பம் நீடித்து நிற்கும். இதற்கு பெயரே பிரம்மச்சரியம். பிரம்மத்தை உணர்ந்த பிராமணன். அவனுக்கு வெளியே காமம் கிடையாது. ஒன்றும் தேவை இராது. உணவு கூடத் தேவை இல்லை. அதனால் செயலும் கிடையாது. இங்கே என்னடா என்றால் அரசம் பலகையில் எழுதிப் பார்க்கச் சொல்கிறார்கள். அரசம் பலகை என்பது நம் முகத்தில் உணரும் எட்டு அறிவு 2 காது, 2 கண், 2 நாசித்துளைகள், வாய் = பேச்சு ருஜி – 2, ஆக எட்டு உணர்வுகளை நீரோடு (மகாரம்) சேர்க்காமல் நெருப்போடு சுவாசத்தை சேர்ந்து பழகினால் அது மேல் நோக்கம் ஏற்படும். நாம் ஏதாவது கடினமான வேலை என்றால் 'தம்' பிடி என்கிறோம். அதாவது மூச்சை உள் அடக்கச் சொல்கிறோம். அதுவே தம் பணம். ஆகவே இது அகமுக பயிற்சியே தவிர வெளியே ஆவியுடன் பேசுவது அல்ல.

கரண விரளிப் பலகை யமன் திசை
மரண மிட்டு எட்டின் மகார வெழுத்திட்டு
வரண மிலை ஐங்காயம் பூசி அடுப்பிடை
முரளிற் புதைத்திட மோகன மாடுமே. 974

பயன் கைகூடச் செய்தற்கு துணையாக இருக்கும் கருவியை – சாதனத்தை கரணம் என்பர். நம்மிடம் கரணம் என்பது மனம், புத்தி, சித்தம் அகமேயாகும். இரளி – என்றால் ஐந்தைக் கொன்று அதை சூட்சுமமாக நாலு ஆன இடம். "உருவத்தால் ஆன பயன் உத்தமனை காண்பதுவே". 'உத்' என்றால் வடதிசை. அங்கே 'நான்' என்ற எழுவாயை (அறிவை) அடைவதே பயன். பிறவிப் பயன். இறைவன் திருவடி. அதற்கு ஏற்பட்ட சாதனம் கண், காது, நாசி, வாய் என்ற நாலு இந்த ஞானேந்திரியங்கள் 'உடலை' நான் என்று கருதினால் அது தென்திசை. எமன் திசை. விடுதலை விரும்புவேன். வடக்கு இருத்தல் என்றே கூறுவர். ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் காரணங்கள்

நான்கும் சிந்தை ஆவதே' முன்னேற்றம். அடுப்பு என்பது முக்கண்கள். 'குணங்கள் ஒரு மூன்றும் திருந்து சாத்வீகமாக வேண்டும். அதற்கு அடுப்பை அணை கோலி விட்டத்தை பூட்டி மேற்பையை தாழ்கோத்து நட்டமிருக்க நமனில்லை. இதை விட்டுவிட்டு வெளியே எந்தப் பலகையும் தேடி அலையாதீர்கள்.

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்தில்
பாங்கு படவே பலகாப் பலகையில்
காண் கரு மேட்டில் கடுப்பூசி விந்து விட்டு
ஓங்காரம் வைத்திடும் உச்சாடனத் துக்கே. 975

(திக்கு பாலர்கள்)


(வடக்கு)

வாயு - குபேரன் - ஈசானன்

(மேற்கு) வருணன் - | வெட்ட வெளி | - இந்திரர் (கிழக்கு)

நிருதி - ஏமன் - அக்னி

(தெற்கு)



இது எட்டு திசை பாலர்கள் என்பது . வட மேற்கில் ஐயனார் என்பது வாயு இருக்குமிடம். அது ஐயனார் ஐயப்பன் யாருக்குப் பிறந்தவன்? விஷ்ணுவாகிய நீர் அணுவுக்கும் (மகாரம்) நெருப்பணுவாகிய உருத்திரனுக்கும் பிறந்தவன் - ஐயப்பன்.

சாஸ்தா - சாத்தான் என்பர். ஆங்கிலத்தில் SATURN என்பர். ஐந்து விதமான நீரே ஐயப்பன். அவருடைய கோட்டந்தான் வாயு மூலை. கோட்டம் என்றால் கோவில். காங்கு கருமேடு என்பது வெப்பமுள்ள கருப்பு காற்று என்பதே பொருள். அது நம் கண்ணில் உள்ள கருமணி. கங்கு - சிவப்பு நிறம் நெருப்போடு கூடிய கரிசட்டி. கடுகு - சிறுத்த இடம்.

உச்சியம் போதில் ஒளி வன்னி மூலையில்
பச்சோலையில் பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சதுரத்தில் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே. 976

வன்னி மூலை என்பது அக்னி மூலை (தென்கிழக்கு) பஞ்ச காயம் - உடல். பாரித்து - பூசி. முதுகாடு - சுடுகாடு - (நெற்றி). இது வெளி நிலைகளை குறிப்பிடுவதல்ல. சடங்குகள் செய்து தவம்புரிவோர்கள் கடந்தனில் உள்ளே கருதுங்கள் என்கிறார் திருமூலர். அண்டத்தில் உள்ளவை எல்லாம் பிண்டத்தில் என்பதை மறவாதீர்கள். உருவத்தில் அர்த்தம் பண்ணினால் அநர்த்தமேயாகும் திக்பாலர்கள் என்பதை நம் முகத்திலேயே, கண்களை மையமாக வைத்து கணிக்க வேண்டும். ஆதிய உச்சியம் போதில் ஒளிவன்னி என்பதை கண் மணியின் மத்தியில் உள்ள கனல் உடன் கூடிய கருப்பு வட்டமே. 'உருதரிக்கும் நாடியில் ஒடுங்குகின்ற வாயு. பச்சோலை என்பதை நீர்ப்பட்டு (பச்சந்தி) அதனால் வரும் சலங்கை சப்தம். பஞ்ச காயம் ஐம்புல அறிவும் கொள. முச்சதுரம் என்பது முக்கண். வெண்காயம் சுக்கானால் என்பதே சுக்கு. கடுகு என்பது கண்ணில் உள்ள ஊசித்துவாரம்.

ஏய்ந்த ஹரிதர மேட்டின் மேலே பூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்லம் பலகை வசியத்துக்கு
ஏய்ந்தவை எண்பதினாயிரம் வேண்டிலே. 977

நாடகங்களில் வேஷம் போட அரிதாரம் பூசுவார்கள். ஒரு மாதிரியான கலர்பொடியை எண்ணையில் குழப்பி துணி மூடாத பகுதிகளில் தடவி நிறத்தையே மாற்றி விடுவார்கள். இது இயற்கையிலும் நடக்கிறது. மனித வடிவம் சூரிய ஒளியில் வரும் ஏழு ஒளியை சம நிலையிலிருந்து மேல் எழுந்தது எல்லாம் மேடு. முதலில் மேட்டின் மேல் தான் ஒளி தாக்கும். முகமே மேட்டுப்பகுதி - அதுவும் வெளி உடம்பு. வெளியே துருத்திக் கொண்டு இருப்பது தோற்றத்துக்கு (PROJECTION) வருவது. மேல் எழுந்த பகுதி முகடு. அங்கே எண்ணங்களே (எண்ணை - அது வணப்பாற்றலாகிய காற்றை வாகனமாகக் கொண்டு வாசனையாக வருகிறது. அது எங்கே எங்கே மேடு தட்டுப்படுகிறதோ அங்கங்கே சாயம் பூசுகிறது. விலவம் பலகை என்பது வானத்திலிருந்து வரும் ஏழு வர்ணம் (இதை கட்டி அரிதாரம், காட்டரிதாரம், கனத்தி அரிதாரம் தகட்டரி அரிதாரம், கானகரிதாரம், பொன்னரிதாரம் (அறிவு) நிறச் சாயங்களால் வசியம் செய்து, அதன் மேல் வர்ணம், நாதம் எழுப்பி எழுச்சி பெறுவது அவை போலாகும். அவை எவ்வளவு நேரம் நிற்கும். தானாகவே அடங்கும். இது தான் நம் வாழ்க்கையும் யாருமே சொந்தக் காலிலே நிற்கவில்லை. எதையாவது சார்ந்தே வாழ வேண்டி உள்ளது. அதுவே அடிமை வாழ்க்கை. வேடத்தை உதறினால் போதும். நாம் கடவுள் தான்.

எண்ணாக கருடனை ஏட்டில் யகாரமிட்டு
எண்ணாப் பொன் ஒளி ஏழு வெள்ளி பூசிட
வெண் ஆவல் பலகையில் இட்டு மேல் நோக்கி
எண்ணா எழுத்தாட எண் ஆயிரம் வேண்டிலே. 978

நாம் அன்றாட வாழ்க்கையில் சில முன்னாலேயே சிந்தித்து திட்டமிட்டு செயல்படுகிறோம். அது திட்டமிட்டபடி நடந்தால் நமக்கு மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் தோல்வி அடையும் போது வாடுகிறோம். ஏன்?. நம் செயல் என்ற எண்ணம். ஆனால் இயற்கையை உணர்ந்தவன் நாம் செய்வது ஒன்றுமில்லை, தூண்டும் சக்தி (இச்சா சக்தி) ஒன்று தூண்டியே செயல்

படுகிறோம். அதனால் பயனைப் பற்றி கருதுவது இல்லை. அந்தத் தூண்டுதலை எதிர்த்து நிற்கும் ஆற்றல் நம்மிடம் இருந்தால் அந்த தூண்டிலில் விழமாட்டோம். அந்த தீ தூண்டுதல் யாருக்காக எப்படி, ஏன் என்று கேள்வி எழ வேண்டும். அதுவே புரட்சிக் கனல். நாம் பாடுபட்டது தான் மிச்சம். பயனெல்லாம் மற்றொருவனுக்கு என்றால் ஏன் உழைக்க வேண்டும் என்ற மனப்பான்மை வரும். பயங்கரவாதிகள் இப்படித்தான் உருவாகிறார்கள். ஆகையால் எல்லோரும் சமம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். நான் மாத்திரம் அவர்கள் தயவு இல்லாமல் வாழ முடியாது என்ற எண்ணம் நல்ல எண்ணம். உன்னைப் போல உணர்வு எல்லோருக்கும் உண்டு. இதைக் கடந்த உள்ளம் நினைக்கிறது. அது தோற்றத்துக்கு வராது. ஆனால் அதன் செயலே எல்லாம். நம் உள்ளத்தை விட்டு ஓரடி கூட விலகி இல்லை. அதை உள்ளம் புரிந்து கொள்ளாது. அது தான் விந்தை. அதை உணர்ந்து நான் எனது என்று வரட்டு கவுரவம் பேசாமல் அவனிடம் சரண் அடைவதே நாம் செய்யக் கூடிய செயல்'' அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமையும் எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ? நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே அதற்கு நாயகமே!'' (திருவாசகம்)

உரை ஆசிரியர் குறிப்பு

4/3 அருச்சனை

அரு என்ற சொல் அருவம் என்ற சொல்லின் சுருக்கம். அருவம் என்ற சொல் உருவம் இல்லாத பொருள் என்பதின் சுருக்கம். அப்படி ஆனால் விரிவின் சுருக்கமே அருவம். அதையே யந்திரம் (உடல்) மந்திரம் (மனம்) தந்திரம் (அறிவு) இப்பொழுது 'நான்' என்ற எழுவாய் ஜனித்த இடம் அருஜனித்த இடம் அருச்சனை. உடலை நான் என்று வாழ்ந்த நாம் இனி மேலாவது அறிவு நான் என்று வாழுங்கள் என்பதே இத்தலைப்பின் நோக்கம். அருஉருவாக பன்னிரெண்டு உயிர் எழுச்சிகள் பெற வேண்டும். அதை முதல் எழுத்தை 'அ' (ஒளி) வித்து - வித்தை கெடுத்து

அது வந்த இடத்துக்கே அனுப்பிவிட்டால் உடலில் வளராது. இதுவே பார்த்ததைப் பார் என்பது. பார் முதல் பூதம் என்பது. கண்ட அது என்பது. கண்ட அத்தைக் கொண்டு கர்மத்தை முடித்தவர் பிண்டத்தில் வாரார் என்பது. "காணும் கண்ணுக்கு காட்டும் உள்ளம் போல் காண உள்ளத்தை கண்டு காட்டலால் அயரா அன்பின் அரன்கழல்செலுமே. அயன், அரி, அரன் மூன்றுக்கும் முதல் எழுத்து 'அ'கரமே. அகரமே அகராதி, அகரமே சிகரம். சிகரமே நம் கண்கள். கருவின்றி நின்ற கரு. உருவின்றி நின்ற உரு. அது எல்லாவற்றிற்கும் பொது இடமாக உள்ளது. நிலம் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எல்லாமாக இருக்கும் வெட்ட வெளியும் அதுவே. இருள் ஒளி இரண்டுக்கும் ஒரே இடம். இருபதமானது இரவும் பகலும் உருவது ஆவது உயிரும் உடலும். அருளது. அறமும் தவமும். அருள் வழியும் அதுவே.

அம்புய நீலம் கழுநீர் அணி நெய்தல்
வம்பு அவிழ் பூகஈம் மாதவி மந்தாரத்
தும்பை வருணம் சுர புன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி, செவ்வந்தி சாத்திடே. 979

இதனை படித்து விட்டு வெளியே பூக்கும் பூக்களைத் தேடி ஓடினால் கடவுள் உங்களைப் பார்த்து சிரிக்கிறார். "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன் பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர். தம்மை நாணியே" (தேவாரம்) இங்கே பூ என்பது நம் எண்ணங்கள். பூ பூக்கும் இடம் நம்தவனம் – நந்தவனம் அறமும் தவமும் உள் நின்ற போகமே. எண்ணங்கள் பூக்கும் இடம் நம் கண்ணில். அதுதான் அதை கண் மலர் என்கிறோம் அப்படிப் பார்க்கவும். அம்புய நீலம் என்பது ஆகாய வர்ணம் – தாமரை. அதுவே நீர்த்திவலையாம். மறைக்கப்படும்போது கரும்குவளை, அது நெருப்போடு சேரும் போது (சிவப்பு) செங்கழு நீர், நெய்தல் என்பத உப்புக்கடல் பிரதேசம், அது பத்துக் காற்றோடு சேர பல ஆகிறது. மாதவி நீரின் ஸ்தூலப்பகுதி. அது மந்தம், மந்தரம் அது

துன்பம் கொடுக்கும் போது துன்பம் இன்பம் கொடுக்கும் போது மகிழ்ச்சி. அமுதம் சுரக்கும் புன்னை, மல்லிகை ஆவியின் வாசனை, செண்பகம் என்பது செம்பொருள் பாதிரி - உமையொரு பாகன், செவ்வந்தி - மஞ்சள் நிறம். ஆக 14 பூக்கள் சொல்லப் படுகின்றன. அதாவது ஒலியில் ஒவு ச.ரி.க.ம.ப.த.நி. ஒளியில் ஏழு (வாண்வில் நிறங்கள்). இவை எல்லாம் அருவ உலகம். நம்மால் அறியப்படாதது. அதையும் அறிந்தவர்களே பூரண அறிவு பெற்றவர். நம் அநுபவத்தில் ஒலி, ஒளி உள்ளே போனது புலனாகிறதா? என்றால் இல்லை என்றே பதில் வரும். ஆகாரம், தண்ணீர் வாய் வழியாக சாப்பிடுவது புரிகிறது. ஆனால் சுவாசம் ஒளி, ஒலி மூன்றும் உள்ளே போவதே தெரியவில்லை. ஆனால் உள்ளே போவது உண்மை. ஆனால் அதை உணர முடியவில்லை என்று நாம் எட்டறிவையும் ஒரே நேரத்தில் அநுபவிக்கிறோமோ அன்று தான் பூரண அறிவு பெற்றவர் ஆவோம். உடலை மட்டும் நான், எனது என்று அதீதமாக மதித்து நினைப்பதே வெறி என்பது. எல்லா அறிவையும் சமமாக நினைக்க வேண்டும். அதுவே அருச்சனை.

சாங்கம தாகவே சந்தொடு சந்தணம்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரம் கார் அகில்
பாங்கு படப் பனி நீரால் குழைத்து வைத்து
ஆங்கே அணிந்து நீர் அர்ச்சியும் அன்போடு. 980

முதல் அருவப் பொருள் நாதம், விந்து, ஒலி, ஒளி அது நம்புலன் அறிவு காது, கண், அடுத்து அருஉருவாக வரும் ஐந்து புலன் அறிவை (அரு உரு) இதுவும் நமக்கு புலப்படாத அந்தக் கரணம். அகம், மனம், புத்தி, சித்தம் நான்கையும் அறிந்த அறிவு. சாங்கம் என்பது அறிவு இல்லை. அறிவைச் சார்ந்து வாழ்வது வாசனை - வாசி. திருவாசி என்பது நம் ஒவ்வொரு உருவத்தை சுற்றி நிற்கும் ஒளிவட்டம். ஆவி உருவமானது. அறிவைச் சார்ந்த சந்தன நிறம். சாத்வீக குணம். சந்தன மரம் நேரடியாக வேரால்

இரை எடுக்காது. மற்றொரு மரத்தின் வேர் மூலம் தன் உணவை எடுத்தே வளரும். பின் மஞ்சள் நிறம் பொன்னார் மேனியிலிருந்து தோன்றுவது. சிகப்பு நிறம் - குங்குமம். அபிராமி அந்தாதியில் இதையே குறிப்பிடுகிறார். ''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம். மாதுளம் போது மலர்க்கமலை துதிக்கின்ற மென்கொடி மின்கொடி குங்கும தோயம்'' என்பது இதையே. இது இரஜஸ் குணத்தை குறிப்பிடும். சாத்வீகம் சீதக்களபம். செந்தாமரைப்பூ இரஜஸ் குணம். அது கற்பூர வாடை வரும். கார் - நீர்த்துளி மேகம். மேகலை, அது கார் அகில். இதை சரியான பங்கு கூட்டி தரும் சிமிழ்ப்பில் கூட்டு வித்து - பாற்பான் அகத்தில் பாலும், தெளிதேனும். பாகும், பருப்பும் கலந்து தந்தால் துங்கக் கரிமுகத்தான் சங்கத்தமிழ் மூன்றும் தருவான். இயல், இசை, நாடகம், இதை எல்லாம் நினைவால் அருச்சனை செய்யவும். தன்னை அருச்சிக்க தான் இருந்தானே.

அன்புடனே நின்றமுதமும் ஏற்றியே
பொன் செய் விளக்கும் புகை தீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையும் கால்
இன்புடனே வந்து எய்திடும் முத்தியே. 981

சான்றோர் நூல்களை படித்து விட்டு, அறிவில் குறைந்த நமக்கு புலப்படாததை உருவத்தில் உவமை காட்டிச் சொன்னார்கள். அந்த உவமானத்தையே அடைய வேண்டிய லட்சியம் என்று கருதி அங்கேயே நிற்பதே அறியாமை. அதாவது அறிவு அறியாமை எனப்படும். ஆகவே வெளி நிலையில் செய்யும் சடங்குகளால், சம்பிரதாயங்களால் நாம் பயன் பெற முடியாதது என்பதை உறுதியாக நம்ப வேண்டும். அறிவிற்கு அறிவே ஆதாரம் என்பதைத் தான் சாங்கம் (சங்கமம்) என்பது. அதையே பெரும் துறை. உருவம் என்பது அருவத்துக்கு நேர் எதிரானது. (NEGATIVE) நிவர்த்திக்கப்படவேண்டியது. அது இல்லை இல்லை என்று பாலிப்பதே நேத்தி பாவனை - நேத்திரம் - நேத்திக் கடன் என்பது. உரை ஆசிரியர்கள் அநேகர் வெளி நிலைகளை காட்டுவது

துன்மார்க்க நிலையாகும். அதுவே மக்கள் மனதில் பதிந்து வேரூன்றி விட்டது. அது வேரோடு களையப்பட வேண்டும். அதுவே மூளைச்சலவை என்பது. உள்ளம் கருத்து வெளியே வெளுத்து எப்படிப் பேசுவார்கள். துணி துவைக்க வழி உண்டு. உள்ளம் வெளுக்க வழி இல்லையே என்பர். மனத்துக்கண் மாசு அறவழி சொல்பவரே சன்மார்க்கிகள். அதற்கு துணிவு வேண்டும். ஏனெனில் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தவர்கள் தாம் அதிகமாக இருப்பதால் அறிவாளர்களை, பண்பாளர்களை அழித்து விடுகிறார்கள். அதனாலேயே அநேக அறிவாளிகள் தங்களைக் காட்டிக் கொள்வதில்லை. விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. குடத்து விளக்காகவே அழிந்து விடுகிறார்கள். சாங்கம் என்பது அறிவு. உபாங்கம் என்பது மணம் அல்லது உயிர். பிரத்யாங்கம் என்பது உடல். பிண்டம் சுருங்கில் பிராணன் நிலை பெறும். உடல் இல்லாமல் வாழலாம். உயிர் இல்லாமல் வாழலாம். ஞானம் பெற்றவர்களுக்கு இவை தேவை இல்லை. அதுவரை உயிர் உடல் தேவையே.

உள் அன்புடன் படைப்பினை குழைத்து விளக்கம் மிக்க திருவிளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக. மனத்து விளக்கை மாண்பட ஏற்றுங்கள். அங்கே அகமுகம் ஆகும் போது கண்ணும் கனலிடை புகையும் ஒளியும் உண்டாகும். மணி ஓசை உண்டாகும். சிலம்பொலி கேட்கும். அங்கே திருவடி பேரின்பம் கிட்டும். அமுதம் - படைப்பு. (நிவேதனம்) - குழைத்தல் - ஊட்டல் - வழிபாட்டிற்குரிய உறுப்புக்கள் ஐந்து. அவை பூ, புகை, புனலும், படைப்பும், விளக்கும். ஒளியும், பாவும் பண்ணும்.

உய்தி வழிப்படில் உய்தாது என இல்லை
உய்தி வழிப்படில் இந்திரன் செல்வம் முன்
உய்தி வழிப்படில் எண் சித்தி உண்டாகும்
உய்தி வழிப்படில் உய்திடும் முத்தியே. 982

மேல்கண்ட ஐந்தும் அன்பினால் தொகுத்துக் கொண்டு மெய்மையாக வழிபாடு செய்தால் (சுருதி கண்ணாக) இவ்வுல கிலும் அவ்வுலகிலும் எதுவும் கிடைக்கும். இரு விசும்பிலும் இருக்கலாம். எண் வகையான சித்திகளும் கை வரும். கிடைத்தற் கரிய வீடுபேறும் கிடைக்கும். இம்மையும் நல்ல வண்ணம் வாழலாம். சன்மார்க்கத்தில் செல்வதுவே வழிபடுதல்.

நண்ணும் பிறதார நீத்தார் அவிந்தார்
மண்ணிய நைவேத்தியம் அனு சந்தானம்
நண்ணிய பஞ்சாங்கம் நண்ணும் செபம் எனும்
மண்ணு மன பவனத்தோடு வைகுமே. 983

ஐம்புலனும் அடக்கியவர்கள் என்று சிறப்பித்து சொல்லப் படுவார் பிறன்மனை நோக்காதவர். பிறர் மனை என்பதை பெண் என்று உருவகப்படுத்தி பெண்ணாக குறிப்பிடுவதல்ல. மண், நீரால் ஆன இந்த உடலையே குறிப்பிடுகிறது. வேறு உடலை நான் என்று கருதும் அறிவையே பொருள் பண்ணும். அறிவு ஐம்புலனுடன் 'நான்' என்று ஆகக் கூடாது. இந்த உடலை மலம் என்று கருதும் ஊமர் ஸ்தலம் என்று தரித்தமை கண்டீர். இதை நலமெனக் கருதுவீர்களானால் பலமாக பற்றும் இவ்வண்டத்தே. அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை. நைவேத்தியம் என்பது பக்குவமான, பதமான மனம். தூய்மையான மனம் அறிவாகும். நீரை வெந்நீராக்கி, அந்த ஆவியை ஒளியாக்குவதே சத். அது சித் ஆவதே ஆனந்த நிலை. மனம் அறிவொளி ஆவதே நைவேத்தியம். அதற்காக ஏற்பட்ட உபகரணங்கள் ஐந்து அங்கங்கள். அதன் தன் மாத்திரையே - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். நாம் சாப்பிடும் ஆகாரமும் நீரும் அணுவுக்கு அணுவாவதே அனு சந்தானம். இதை எல்லாம் எண்ணி பாவித்தால் அதுவாகவே மாறலாம். மனபவனம் என்பது அதுவே செபம். எப்பொழுதும் அரும்பெரும் ஜோதியை எண்ணினால் எண்ணியதை எண்ணியபடி எய்தலாம்.

வேண்டார்கள் கன்மம் விமலனுக்கு ஆளப்பட்டோர்
வேண்டார்கள் கன்மம் அதில் இச்சை அற்ற பேர்
வேண்டார்கள் கன்மம் மிகு சிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதி ஓர் ஆய்ந்த அன்பே. 984

எல்லாம் ஒன்று என்று உணர்ந்தவர் பல கர்மங்களில் ஈடுபட மாட்டார்கள். நானே எல்லாம் என்று உணர்ந்தவனுக்கு கர்மம் தேவை இல்லை. அவனே விமலன். மலமில்லாத நேர்மையானவன். சிவனைக் கண்டவர் அவனுக்கே அடிமையாவார்கள். சிவனடியார்கள் இரு வினைகளையும் வேண்டார். பயன் கருதி செயல்படமாட்டார்கள். சிவயோகமாகிய செறிவு நிலையில் உள்ளவர் எல்லாம் சிவச்செயல் என்று பயன் கருதாது செயல் படுவர். தலையான அன்பு வாய்ந்தவராகி அறிவு நிலையின் பணியாக செயலாற்றுபவரே அன்றி பிறப்புக்கு வித்தாகிய செயலை விரும்பார். முதல் இரண்டு அடி சீலமும் நோன்பும். சரியை கிரியை அடுத்த இரண்டும் செறிவும் (யோகம்) அறிவு (ஞானம்) குறிப்பனவாகும். 'வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல' (திருக்குறள்)

அறிவு அரு ஞானத்து எவரும் அறியார்
பொறி வழி தேடி புலம்புகின்றார்கள்
நெறி மனை உள்ளே நிலைபெற நோக்கில்
எறி மணி உள்ளே இருக்கலுமாமே. 985

(எறிமணி - ஓசையும் ஒலியும் கலந்த 10 நாதம்)

அறிவை அடைய அறிவுக் கண்ணால் தான் முடியும். அதை முதல் கண்ணாகக் கொள்ளாமல் மூன்றாவது கண்ணாகவே கொள்கிறோம். அதுவே தலைகீழ் பாடம் என்பது. ஆதி அறிவை மூலாதாரமாகக் கொள்ளாமல் மண்ணையே மூல ஆதாரமாக கொள்வதே தலைகீழ்பாடம். அறிவு என்பது அருவமே. அந்த மெய்யுணர்வு இல்லார் சிவனை அறிய வரும் ஞான வழியும் உணரார். "அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால் கல்லும்

பிளந்து கடு வெளியாகுமே''. ஐம்பொறிகளின் வழியே சிவனைக் காணலாமென்ற நினைப்பு ஏற்றத்துக்குப் பதில் ஏமாற்றத்தையே கொடுக்கும். ஏறு நிலைக்கு மாறானதையே காட்டும். அந்த மனம் மாற்றத்தையே மாற்ற மனம் கழிய மறையோனே என்றார். எட்டாவது அறிவே முதல் அறிவுமாகும். அந்த முதல்வனை பற்றியவருக்கு ஏழுநிலை அவசியம் இல்லை. நாதத்தின் முடிவு மவுனம். புகையின் முடிவு ஒளி. அதுவே எறிமணி – கண்மணி.

இருளும் வெளியும் போல் இரண்டாம் இருதயம்
மருளறியாமையும் மன்னும் அறிவு
மருளிவை விட்ட றியாமை மயங்கும்
அருளும் சிதைத்தோர் அவர்களாம் அன்றே. 986

வெளியும், இருளும் போல் நெஞ்சம் (நம் உள்ளம்) மயக்கம் தழுவியதால் அறியாமை தான உயிராய் ஷெ (மனமா) யிருக்கிறது. அதனை விட்டு ஒழிக்கும் ஆற்றலும் அற்றது. அதனால் மயக்கமுற்றது. ஆதவே நம் கண் ஒளி, உள்நாடி மனதின் மயக்கத்தை (3) நீக்க செயல்படுவதே கண்ணின் நோக்கம். ஆனால் பார்ப்பான் என்று பெயர் கொண்டவன் கண் உட்கண்ணாக மாறினால் தான் உள்ளத்தை திருத்தியவனாவான். அவன் கடமையை செய்தவன் ஆவான். இப்பொழுது இருக்கும் உயிர்நிலை வெளிப்பார்வையோடு சரி. உள் நோக்கே இல்லை. அக நோக்கோடு இல்லாதவர் அறிவை எப்படி அடைய முடியும். ''முகத்தில் உட்கண் கொண்டு காணும் மூடர்கள் அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்''. அகமுக பயிற்சி இல்லாதவர் அறிவாக முடியாது.

தானவனாக அவனே தான் ஆயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாக
போனவன் அன்பு இது நாலாம் அரபுறத்து
ஆனவன் ஆகுமோர் ஆசித்த தேவரே. 987

உயிர்கள் என்பதே கட்டுப்பாட்டுக்குள் உள்ளதே. சிறை வாழ்க்கை. சுதந்திரமில்லாதவை. ஏன் எனில் மிருகக் குணமுடையது. விலங்கு மனமுடையது. அது விமலனைத் தேடாது. அதனால் சிவன் அதனுடனிருந்து அதை அழிக்காமல் வழிப்படுத்தி தன் போல ஆக்க முயற்சிப்பதே அவன் செயல், ஆகவே உயிர் அவன் நோக்கம் தெரிந்து அவன் வழியே நிற்பதே சன்மார்க்கம். அவன் வழி விண் ஞானம், மெய் ஞானம், நாம் இருப்பதோ மண் ஞானம். அஞ்ஞானம் வீட்டு நிலையை நோக்கி ஒட்டி நிற்பது அருள்நிலை. உயிர் சிவமாவதற்கு அவன் மேல் காதலாகி, கசிந்து கண்ணீர் மல்க வேண்டும். அப்படி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம். நமச்சிவாயவே. அக்காதலின் பயனாக எய்துவது "தான்" ஆதல் என்று சொல்லப்பெறும். சாயுச்சியமாகும். நெறி நான்கு. (சிவனாக இருத்தல்) சாலோகம். சிவனுக்கு அண்மையிலுருத்தல் (சாமீபம்) அவன் உருவமே (அணுவில் அணு, பரமான அணு) ஆதல் சாரூபம். கடைசியில் சிவனே ஆதல் சாயுஜ்யம். இதையே வேதியல் - வேதம் என்பது. இதைக் கடைப்பிடிப்பவரே வேதியர், அந்தணர் ஆவார்.

ஓங்காரம் முந்திக் கீழ்உன்னிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீண் கண்டத்து ஆயிடும்
பாங்கார் நகரம் பயில் நெற்றியுற்றிடும்
வீங்காகவும் விந்துவும் நாதமும் மேலயிடுமே. 988

அகமுக பயிற்சி இல்லாதவர்களுக்கு நாதம் (ஓம்) என்ற பிரணவம் தொப்பூழை நோக்கியே செல்லும். அது எமலோகம். கழுத்துக்கு கீழே போய்விட்டாலே நரகல்தாம். அதுவே நரகம் நரன். நரகாசூரன். தின்ன கொழுப்பு. தீபாவளியை அடைக்கும் மப்பு. அகமுக பயிற்சி பெற்றவர் நாதத்தை மேல்நோக்கி நிறுத்துவர். அவர்களுக்கு நாசியில் சுவாசம் வெளி வராது. ஏன் எனில் அது கபாலம் நோக்கிச் செல்லும். கபாலத்தை பிளந்து

வெளியேறிச் செல்லும். இது உள் பிரணாயாமம். உள்ளேயே நிற்கும் ஆற்றல் - நடு நாடி பயிற்சி. வணப்பாற்றல் கழுத்துக்கு மேலேயே நிற்கும். கீழே நின்ற ஓசை நெற்றியில் நிலை பெறும். அதுவே திருநீறு. ஒளியும், ஒலியும் மேல் ஓங்கி நிற்கும்.

நம வது வாசணமான பசுவே
சிவம் அது சித்திச் சிவமாம் பதியே
நம அற ஆதி நாடுவது அன்றாம்
சிவமாகும் மாமோணம் சேர்தல் மெய்வீடே. 989

பருப்பொருளாயிருந்த மண், நீர், நெருப்பால் சூடாக்கப்பட்டு ஆவியாவதே பசு எனப்படுகிறது. பசு என்பது உயிர் அல்லது மணம் அல்லது ஆவி. சிவம் என்பது அந்த ஆவியும் எரிக்கப்பட்டு ஒலியாவதே சத்சித் ஆனந்தம். சித் அம்பரம். அது நெற்றி நடுவாகும். ஆகவே உடலால் ஆன பயன் உத்தமன் ஆவதே. சிவமாவதே. அப்படி ஆன நிலையே மோன பர ஆனந்தம். சேவடி சேரல் செயல் ஆறல் தானே.

தெளி வரு நாளில் சிவ அமுதூறும்
ஒளி வரு நாளில் ஒரெட்டில் உகளும்
ஓளி வரும் அப்பத்தே ஓர் இரண்டாகில்
வெளிதருநாதன் வெளியாயிருந்தே. 990

அகமுக பயிற்சியில் வெற்றிக்கு அறிகுறி அமுதூறல். உடலில் கிடந்த உறுதிக்குடி நீர் உயிர் எனும் ஆவி. அது அறிவொடு சேரும் போது அமுரி ஆகும். அப்பொழுது சுந்தர சோதியும் தோன்றும். வானத்தில் மயிலும் குயிலும் தோன்றும். சூரனை மயிலாகவும், கோழியாகவும் மாற்றினான் வேலன். நகாரம் மகாரம் வகாரம் அகாரமாகும். மாற்றமே ஒழிய அழிவு இல்லை. ஓம் சிவாய நம.

4/4 நவகுண்டம் (30 பாடல்)

பல்லான் குழி பார்த்திருப்பீர்கள். தற்காலத்தில் அது இல்லாமல் போய் விட்டது. கல்யாணங்களில் பெண்ணும், மாப்பிள்ளையும் விளையாடுவது. அது பலகையிலும் இருக்கும். செம்பால் செய்யப்பட்டதாகவும் இருக்கும். அதில் 14 சிறு குழிகளும் (பக்கத்து ஏழு) மத்தியில் இரண்டு சதுரக் குழிகளும் இருக்கும். அதில் விளையாட முப்தைந்து முத்துக்கள் இருக்கும் (7 x 5 = 35) அதை குழியாக மாற்றி அதில் யார் அதிக முத்துக்கள் சேர்க்கிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றவர் என்பர். அதில் விளையாடி பழக்கப்பட்டவர்கள் தந்திரமாக கணக்குப் பார்த்து ஜெயிப்பார்கள். அநேகமாக பெண்களே வெற்றி பெறுவர். இது வாழ்க்கைத் தத்துவத்தையே போதிக்க வல்லது. அது போல் நம் உடம்பில் முகத்தில் ஏழு குழிகள் உண்டு. உடலில் 2 குழிகள் ஒன்பது குழிகள் உண்டு. இதை 18 நிலைகள் என்பர். முகத்தில் சேர்ந்த அத்தத்தை உடலில் தேக்கி வைக்கப்படுவதால் தேகம் என பேர் வந்தது. ஆனாலும் அப்போதைக்கப்போது சரிக்கப்படுவதால் சரீரமாயிற்று. அறிவு உடலில் புகுந்து இழுப்பதால் புருடன் என்பர். வலது கண் நாடி, புருட நாடி. அது கவர்ந்து காந்தம் போல் வேலை செய்வதால் காந்தாரி என்று பெயர். அது நெற்றியில் சூடாகி முனைவதால் சுழு முனை நாடி. சுடும் முனை நெற்றிக்கண். அதனை நெற்றி சுடுகாடு. அங்கே எரிந்து சாம்பல் ஆவதே விபூதி. நீறு மந்திரமாகும் இடம். மந்திரமாவது நீறு. வானவர் மேல் அது நீறு. சுந்தரமாவதும் நீறு. இவை எல்லாம் நடைபெறும் வேள்வியே நவகுண்டம்.

4/4/991 நவகுண்டம்

நவ குண்டம் ஆனவை நான் உரை செய்யின்
நவ குண்டத்து உள் எழும் நல்தீபம் காணும்
நவ குண்டத்து உள் எழும் நன்மைகள் ஏழும்
நவகுண்டம் ஆனவை நான் உரைப்பேனே. 991

அனல் ஓம்பும் குழிகள் (குண்டம்) ஒன்பது. அதை ஒன்பது நவகிரகம், நவராத்திரி, நவநாயகர் என்று ஒன்பது ஒன்பதாக சொல்வர். அதுவே செவ்வாய், ஒன்பதே எண்ணங்களின் முடிவு. அதற்கு மேல் வருபவை எல்லாம் திருப்பி திருப்பி கூறுவதே. திருப்பி திருப்பி நடப்பதே. எல்லாம் சூனியமே. 9 + 1 = 10 1 + 9 = 10. 9 சக்திகள் சேர்ந்தாலும் ஒன்றோடு கூடி ஒன்றேயாகும். ஒன்பதை கூட்டினாலும் பெருக்கினாலும் (9 + 9 = 18 = 9) (9 X 9 = 81 = 9) கூட்டுத் தொகை ஒன்பதே வரும். அதன் தன்மையை சொல்லுமிடத்து அதன் கண் சிவமாகிய பேரொளி பிழம்பு தோன்றி நிற்கும். தோன்றாமல் தோன்றி என்பதை நாம் அறியாமலே அறிவாகி தோன்றும் அது. அவை செய்யும் நன்மைகள் பற்றி ஆராய்வோம்.

உரைத்திடும் குண்டத்தில் உள்ளே முக்காலும்
நகைத்தெழு நான் கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடும் முப்புரம் பாரங்கியோடே
மிகைத்து ஏழு கண்டங்கள் மேல் அறியோமே. 992

வெளி என்பது ஒரு சமமான பலகை போன்றது. அதன் மேல் முக்கோணம் போல் கோடு போட்டது போல் அமைந்தது நம் உடல். அதில் அறிவு, மனம், அக்னி என்று மூன்று பகுதியாயிற்று. அதன் முதல் நிலை முகம் மூன்று வட்டம். புற வட்டம் ஹரஹர (படைத்தல் - அதிபதி பிரம்மா, அவன் ஆற்றல் சரஸ்வதி உடம்பு) அதன் உள் வட்டம் ஹரி ஹரி அதன் ஆற்றல் லட்சுமி. பிரம்மா நிறம் மஞ்சள், சரஸ்வதி நிறம் வெள்ளை அதன் குணம் (தாமஸம்) மனதின் நிறம் கருப்பு அல்லது நீலம். ஆற்றல் நிறம் சிவப்பு - குணம் (இரஜஸ்) மூன்றாவது உருத்திரன் அவன் ஆற்றல் பார்வதி. அதன் குணம் துடைத்தல் (சாத்வீகம்) இதன் நிறம் வெண்மையும் - கருப்பும் இப்படி சக்தியின் குணம் எதிரிடையான குணங்கள். இது இயற்கை நியதி. இவைகளுக்குள் ஏற்பட்ட விளையாட்டே உலக மேடை. இந்த முக்கோணத்தை சூழ்ந்து ஒரு சதுரம். அது நாலு கோணம் இதில் நெருப்பிட்டு

அனல் ஓம்புக. அதனால் விளையும் நன்மைகள் ஐந்து. அவை படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல். யாருக்கு நன்மை? அறியாமையால் இருளில் கிடந்து உழலும் உயிர்களுக்கு. அவ்வனலால் பருமை மாறி மென்மையாகி மென்மை. நுண்மையாவதே. இது முதன்மையில் முடியும். முதலில் இருந்த நிலை பெற்ற நிலை. மும்மை உடல்கள் பூதம், ஐந்து, அறிகருவி ஐந்து, செய்கருவி ஐந்து இப்படி பதினைந்தால் ஆனது பரிய உடம்பு. பூத முதல் (தன் மாத்திரை) ஐந்து உட்கருவி மூன்று – மணம், எழுச்சி, இறுப்பு. இந்த ஐந்தும் மூன்றும் எட்டும் நுண் உடம்பு. புரியட்ட காயம். அவற்றோடு குணம் அல்லது மூலப்பகுதி ஒன்றும் கூடி இருப்பத்தி நாலு மெய்யும் உடல் மெய்யாகும். பூதம் ஒன்று பூத முதல் ஒன்று, அறிகருவி ஒன்று, செய்கருவி ஒன்று, அகக்கலன் ஒன்று, குணம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, கலாதி ஒன்று ஆகிய எண் வகையாலாவது முதன்மை உடல். முதன்மை எனினும், முதல் நிலை எனினும், காரணம் எனினும் ஒன்றே, மூவகை உடல் பற்றுக்கள் அகலும் அகலவே அவற்றை அறியாது. சிவமே அறிந்திருப்பர். முக்கால் என்பது பிறப்பு, இருப்பு, இறப்பு என்பாரும் உண்டு. நனவு, கனவு தூக்கம் என்பாரும் உண்டு. இறந்த காலம், நிகழ்காலம், வரும் காலம் எனலாம். முப்புரம் – தூலம், சூக்குமம், காரண சரீரங்கள்.

மேலறிந்து உள்ளே வெளி செய்த அப்பொருள்
கால் அறிந்து உள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந்து அண்டம் சிறகற நின்றது
நான் அறிந்து உள்ளே நாடிக் கொண்டேனே. 993

மேல் நிலை அறிந்து ஆருயிர்களுக்கு உள் இருந்து அருளிய சிவனை (மேவியின் ஞானம் மிக்கிடில் மெய்ப்பான்) மூச்சுப் பயிற்சியால் உள்ளேயே நாடுக. சுவாசம் பார்வை, கேள்வி மூன்றும் கூட்டாக உட்சுவாசம், உள்பார்வை, உள் கேள்வி என்பதை பயிற்சி பெறுக. அப்பொழுது செஞ்சுடர்

காணலாம். எதையும் தாங்கும் பரவெளி யாதொரு தாங்கலுமின்றி நிற்பதைக் காணலாம். இவ்வுண்மைகளை அறிய அருள் சக்தியே துணை. இதை என் உள்ளேயே கண்டேன்.

கொண்ட இக்குண்டத்தில் உள்ஏழு சோதியாய்
அண்டங்கள் ஈர் ஏழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்று சொல் நூலாய் எடுத்து உரைத்தேனே. 994

இக்குண்டத்தினுள் அனல் ஓம்பும் அந்தணர் அவ்வாற்றலால் உள் ஏழும் ஒளியாய் திகழ்பவர், அந்தம் உணர்ந்தவர் அந்தணர். ''அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலால்'' (குறள்) அவர்கள் நினைத்தால் எதையும் ஆக்கலாம். அழிக்கலாம். ஆனால் அவர்கள் உருவோடு இல்லை. ஜோதியாயிருப்பர். அதனால் எல்லா உயிரிலும் கலந்து நிற்பர். அப்படிப்பட்டவரில் ஒருவர் திருமூலர். அவருக்கு எந்த மறைபொருளுக்கும் பொருள் சொல்லும் ஆற்றல் உண்டு. அவர் ஆக்கிய ஆகமம் திருமந்திரம், இதைப் படித்தவர்கள் வேறு எந்த நூலும் படிக்கத் தேவை இல்லை. ஏனெனில் இதற்கு மேல் சொல்ல ஒன்றுமில்லை.

எடுத்த அக்குண்டத்திடம் பதினாறில்
பதித்த கலைகளும் பாதித்து நிற்கும்
கதித்து அனல் உள் எழக் கண்டு கொள்வார்க்கே
கொதித்தெழும் வல்வினை கூடகிலாவே. 995

முகத்திலே தோன்றுவதே பதினாறு கலைகள். ஆகாயத்தின் கூறு நாதம், காற்றின் கூறு இரண்டு, நெருப்பின் கூறு மூன்று. நீரின் கூறு நாலு, நிலத்தின் கூறு ஐந்து. 1+2+3+4+5=15. 15க்கும் இடம் முகம் - 16 கலைகள். இதை பதினாறு பேறு என்பர். துதிவாணி, வீரம், விஜயம், சந்தானம், துணிவு, தனம், மதி, தான்யம், செலபாக்யம்,வு போகம், அறிவு, அழகு, புதிதாம்

பெருமை, அறம், குலம், நேயகல் பூண் வயது. இவை சோடசம் என்பர். மனித வாழ்க்கைக்கு இத்தனையும் தேவை. நம்மிடம் விசுத்தி எனும் ஐந்தாவது ஆதாரம் வாயு (வனப்பாற்றல்). அது பதினாறு இதழ் கொண்ட தாமரை என்பர். அது நம் கண் ஒளியேயாம்.

கூட முக்கூடத்தின் உள் எழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம் புறமாய் நிற்கும்
பாடிய பன்னீ ராசியும் அங்கு எழ
நாடிக் கொள்வார்க்கு நன்சுடர்தானே. 996

முக்கூடல் (சூர்ய, சந்திரன், அக்னி) மூன்றும் கூடும் இடம் புருவ மத்தி. ஐந்தொழில்களையே ஆட்டம் என்பது படைத்தல் காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல். முகத்தில் உள்ள 12 உயிர் ஸ்தானங்கள். நாலு அறிவுகளுக்கும் மூன்று மூன்றாக 12 ராசி. சரம், ஸ்திரம், உபயம், பார்வை என்று எடுத்துக் கொண்டால் பார்ப்பான் (எழுவாய்) பார்வை (செயல்) பார்க்கப்படும் பொருள் (காணப்படுவது) ஆக மூன்று நிலைகள் உள்ளன. கண், காது, வாய் நாசி, 4 X 3 = 12, தமிழில் உயிர் எழுத்து பனிரெண்டு. இது பெரிதாக நடப்பது புவனம் வெளிநிலை. அது சின்ன அளவில் நடப்பது உடலில். ஆராயப்புகின் எல்லாம் கற்பனையே. நாமாக படைத்ததே. (CREATED TROUBLES)

நற்சுடராகும் சிரமுக வட்டமாம்
கைச் சுடராகும் கருத்துற்ற கைகளில்
பைச் சுடர் மேனி பதைப்புற்ற லிங்கமும்
நற்சுடராய்எழு நல்லது என்றாளே. 997

அகமுக பயிற்சியில், புருவ மத்தியில் அக்னி கலை புதிதாக சுடர் உருவாகும். முதலாவது மின்னல் போல் தோன்றும். பின் பயிற்சி முதிர முதிர, நட்சத்திரம் போல், சந்திரன் போல், கடைசியில் சூரியன் போல் நின்ற இடத்திலேயே நிற்கும். நல்ல

அனல் சுடர் உச்சியும், முகமும் வட்டமாக அமைந்திருக்கும், அச்சுடரே கைமேல் பலன் தருதற்குரிய ஒன்றாகும். அதனை இடையறாது கருதுவோர்க்கு அழகிய உடம்பு அசைவற்று நிற்கும். சிவலிங்கம் போல் ஒளிப்பிழம்பாய் நிற்கும்.

நல்ல தென்றானே நமக்குற்ற நாயகம்
சொல்ல தென்றானே சுடர்முடி பாதமாம்
மெல்ல நின்றானை வினவசில்லாதவர்
கல்லதன் தாளும் கற்றும் இந்நானே. 998

நம் உயிருக்கு உயிராக விளங்கும் திருவருள் அம்மை. புனல் ஓம்பும் முறையை (நீரைச் சூடாக்கி, ஆவியாக மாற்றி மறுபடியும் சுத்த அமிர்தமாக்கும் முறை) நல்லது என்று அருளினாள். (வான் சிறப்பு) அவளே திருவடி மென்மையுற்று நின்றனள். இதை விசாரித்து கொள்ளாதவர் எத்தனை கற்றும் பயனில்லை. கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் நாயகம் – அம்மை.

வின்னா இளம்பிறை மேவிய குண்டத்து
சொன்னால் இரண்டும் சுடர் நாகம் திக்கு எங்கும்
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என் அகத்துள்ளே இடம் கொண்டவாறே 999

ஒளியையே நாவாக உடைய இளம்பிறை போல் அமையப்பெற்ற அனல் குண்டத்து சிறப்பித்து சொல்லப்படும். சிவனும், சிவையும் எல்லாத்திசையும் சுடர்விட்டு விளங்குவர், சுடரும் சூழ் ஒளியும் போல் வானவில் ஒளி ஏழும், ஏழும் ஒலியும் பன்னாலு லோகமாக படர்ந்து என் அகத்துள்ளே நிற்கும். நாகம் – நெற்றி நடு.

இடம் கொண்ட பாதம் எழில் சுடர் ஏக
நடம் கொண்ட பாதங்கள் நண்ணீரதற்குச்
சகம் கொண்ட கை இரண்டும் ஆறு தழைப்ப
முகம் கண்ட செஞ்சுடர் முக்கண்ணணார்க்கே. 1000

கை - கால் இரண்டு x ஆறு - பன்னிரண்டு. செஞ்சுடர் - சூரியன். இடம் என்பது கண். அதில் ஒளி புகுவதால் பாதம். அங்கே எழில் சுடர் சந்திரன் மணமாக மாறுகிறது. நடம் என்பது ஐந்து செயல். அதற்கு இயக்கும் சக்தி ஒன்று. ஆறு ஆற்றலுடன் பன்னிரண்டு. இவை எல்லாம் சூரியன். சந்திரன், அக்னி மூன்றும் முக்கண்கள் ஆயிற்று. இந்த மூன்றுமே மூன்று மூன்றாக ஒன்பது குண்டங்கள்.

முக்கண்ணன் தானே முழுச் சுடராயவன்
அக்கண்ணன் தானே அகிலமும் உண்டவன்
திக்கண்ணனாகி திசை எட்டும் கண்டவன்
எக்கணன் தானுக்கும் எந்தை பிரானே. 1001

கண்ணன் மண்ணை உண்டான் என்று வாயைத் திறக்கச் சொன்ன யசோதை உலகத்தையும் தன்னையும் அவன் வாயில் கண்டாள் என்பது கதை. நம் கண் என்று சொல்லும் வாய் தான் அது. நம் கண்ணுக்கு இரையாவதே கண்ணார் அமுதம். ஆனால் அது ஒளிப்பக்குவமாக இருக்க வேண்டும். அதுவே சம்பந்தர் உண்ட ஞானப்பால். நாமும் அதை சாப்பிட்டுக் கொண்டே தான் இருக்கிறோம். ஆனால் அது நாம் அறியாமலே நம்மிடம் செயல்படும் செயல். சிவனையே முக்கண்ணன் என்பது. நம் தமிழ் மொழியில் 13வது எழுத்து அஃகண்ணா அந்த மூன்று புள்ளிகளும் சூரியன், சந்திரன், அக்னி என்பதை குறிப்பிடுவதே. நாம் காண்பது போல அது மூன்று இடத்தில் இல்லை. ஒரு விளக்கு என்று இருந்தால் ஜோதி, சுடர், சூழ் ஒளி இருந்தே ஆக வேண்டும் என்பதே உண்மை. ஆகவே அதைத்தேடி போக வேண்டியதில்லை. புகை உள்ள இடத்தில் நெருப்பு இருக்கத்தான் செய்யும்.

எந்தை பிரானுக்கு இரு மூன்று வட்டமாய்
தந்தை தன் முன்னே சண்முகம் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்து அங்கு இருத்தலால்
மைந்தன் இவன் என்று மாட்டிக் கொள்ளீரே. 1002

எந்தை ஆகிய தந்தை அரும்பெரும்ஜோதி. அது தானே ஆறு வட்டமாக வரைந்து கொண்டது. அந்த வட்டத்துக்கு தலைவன் நாமமும், ரூபமும் வேறு. ஆனால் அதே தான் இது என்று புரியாதவர் இது வேறு, அது வேறு என்பர். அது தோற்ற அளவில் உண்மை. உண்மையில் எல்லாம் ஒன்றே. அவனை அவன் 'கண்' – தன் கண் என்பர் அறிந்தவர். கந்தம் என்றால் வாசனை. அல்லது காந்த சக்தி – கவர்ச்சி உள்ள அழகு. கெட்டதை அழித்து நல்லதாக மாற்றும் சக்தி. கந்தன் சூரனை மயிலாக கோழியாக மாற்றினான். பத்மாசூரன், சிங்கமுகன், யானை முகன் என்ற மிருக சுபாவத்தை மாற்றி திருந்து சாத்வீகமாக மாற்றினான். அதை ஆறாவது அறிவு செய்தது.

மாட்டிய குண்டத்தில் உள்ஏழு வேதத்துள்
ஆட்டிய காலொன்றும் இரண்டும் அலர்ந்திடும்
வாட்டியகை இரண்டு ஒன்று பதைத்து எழ
நாட்டும் சுரர் இவர் நல்லொளி தானே. 1003

ஓமகுண்டம் என்பது 'ஓம்' என்ரு ஒலிக்கும் இடம். ஒலி என்பது சம நிலையில் ஏற்படாது. அது நீள உருவத்திலோ, குழி போன்ற இடத்திலோ தான் ஏற்படும். அப்படி (கட்டப்பட்ட இடமே உடல் உருவம்) காற்றை பூட்டொத்த மெய்யில் சிறைப்படுத்தும் போது வெளியே சுதந்திரமாக இருந்து பழக்கப் பட்ட காற்று வெளியே வர முயற்சி செய்வதே போராட்டம். அந்த ஒலியே ஓம் என்ற "அஉம்" அது வெளியேற துணை புரிவது மூன்றொளி. இந்த மூன்றும் புறத்தே நிற்குமே ஒழியே உள்புகுந்து தங்காது. "இன்புறு நாடினும் புறத்தே நின்றானே ஒழிய அகத்தில் நில்லானே" எப்படி வண்டு பூவில் உள்ள தேனை

சாப்பிட்டு விட்டு வெளியே பறந்து விடுவது தான் சுபாவம். ஆனால் தேனிலேயே மூழ்கி போதை வசப்பட்டது பூ மூடும் போது உள்ளே அகப்பட்டுக் கொள்ளும். அப்படி வண்டையே மாம்பழத்தில் நாம் பார்க்கிறோம். நம் உயிர்ப்பு சக்தியும் அது தான். அது வெளிவர துடிப்பதே துள்ளல். துடிப்பு. தீவினையை வாட்டும் தன்மை வாய்ந்த ஞாயிறு, திங்கள், தீ ஆகிய முச்சுடரும் தீவினையை பதைத்தெழும்படி நாட்டப்பெறும். வேதம் என்பது வித்தம் என்ற வேர்ச்சொல் (வித்து, வித்தகர், விந்து) சுரர் – ஒளி உருவினால், வித்தம் – வைத்தியம், வைதீகம் என வழங்கலாயிற்று.

நல் ஒளியாக நடந்து உலகு எங்கும்
கல் ஒளியாக கலந்து உள் இழுத்திடும்
சொல் ஒளியாக தொடர்ந்து உயிர்க்கெல்லாம்
கல் ஒளி கண் உளும் ஆதி நின்றானே. 1004

கல் ஒளி – நிலை பெற்ற ஒளி. பரந்த ஒளி உலகம் எங்கும் பரவி நன்மை அருளும் பராசக்தி. உயிருக்கு உயிராய் உணர்வு ஒளியாக கலந்து உள்ளுறைவதே ஆதிசக்தி. அதன் சொல்லே அருள் வாக்கு. குருமொழி. அதுவே திருவருள் சக்தி. அதன் சொல் கேட்டு ஒழுகுவார் நிலை பெற்ற ஒளியாகி கண் உள்ளும் நிற்கும்.

நின்ற இக்குண்டம் நிலை ஆறு கோணமாய்
பண்டையில் வட்டம் பதைத்தெழும் ஆறாறும்
கொண்ட இத்தத்துவம் உள்ளே கலந்து எழ
விண்ணுளும் என்ன எடுக்கலுமாமே. 1005

ஓமகுண்டம் என்பது நமது முகக்குழிதான். அது ஆறு கோணமாய் அமைக்கப்பட்டது. ஒரே முகத்தில் ஆறு பகுதி காது – 2, கண் – 2, நாசி, வாய் – 2. ஒவ்வொன்றும் வேறு வேறு திசை. நாசியில் ஏறும் காற்று வடக்கு முகம், கண் பார்வை கிழக்கு முகம், காது இடப்பக்கம், வலப்பக்கம், வாய் கீழ்நோக்கி

தென்புலம். எமலோகம், நரகம். இவை உடலில் எதிரிடையாக இருக்கும். ஒலி உலகம் முன்முதலாய (பார் முதல் பூதம்) கண் வட்டமே 'ஓ' மொழி என்க. அதைத் தொடர்ந்து தோன்றுவன முப்பத்தாறு (6 x 6 = 36) என்பர். அதுவே வெளி நிலையிலும். உடலில் சின்ன அளவு, வெளியில் பெரிய அளவு.

எடுக்கின்ற பாதங்கள் மூன்று அது எழுத்தைக்
கடுத்த முகம் இரண்டு ஆறு கண்ணாக
படித்து எண்ணும் நா எழு கொம்பு ஒரு நாளும்
அடுத்து எழும் கண்ணானது அந்தமிலர்க்கே. 1006

'சிவ' என்னும் மந்திர மொழியில் ஆருயிர்களை தனதாக்கும் வகைகள் மூன்று. அவை எழுவாய், முன்னிலை, படர்க்கை என்பர். தன்மையில் அருளுவது ஒரு மலந்தார்க்கு ஆணவம் முன் நிலையில் அருளுவது இரு மலத்தார்க்கு (ஆணவம், மாயை) மூன்று மலத்தார் அருளுவது (ஆணவம், மாயை, கன்மம்) மூன்றும் உடையவர். அதாவது உடலை நான் என்று கருதி வாழ்பவர். மனதை நான் என்று வாழ்பவர். அறிவை 'நான்' என்று வாழுபவர். 'நான்' என்பதே எழுவாய். ஒவ்வொரு முகங்களிலும் கண்கள் மூன்று. அம்மை அப்பர் திருமுகங்கள் இரண்டு. ஆகக் கண்கள் ஆறு. கடுத்த = ஒத்த. அதாவது ஆதி அணுவில் ஆயிரம் கூறு. அதை ஒத்தது ஜீவன். கோவின் மயிரில் நூறு ஆயிரத்து ஒன்று. அவனை ஒத்து இருந்தால் தான் அவனை அடைய முடியும். ஆழ்ந்து அகன்ற நுண்ணியன். அதுவே மெய்யுணர்வு கண்ணாகும்.

அந்த மிலானுக்கு அகல் இடம் தான் இல்லை
அந்த மிலானை அளப்பவர் தாமில்லை
அந்த மிலானுக்கு அடுத்த சொல் தானில்லை
அந்த மிலான் அறிந்து கொள் பத்தே. 1007

முடிவே இல்லாத சிவனைப் போன்ற சீவனுமாகிய ஆவியும் முடிவு இல்லாததே. அந்த ஆவிக்கு உரிமையாகக் கொள்ளப்படும் இடம் ஒன்றுமில்லை. அவ் ஆவிகள் அளவிறந்தன. அவைகளை

குறிக்கும் சொல் எதுவும் இல்லை. அது எதைச் சார்கிறதோ அந்தப் பெயரால் 'ய' அழைக்கிறோம். 'ய' கரம் என்பது யாப்பு - கூட்டு. இஃது உடலுடன் அருளுடனும் பிணிப்புறும் தன்மை யாகும். பத்து என்பது தமிழ் மொழியில் 'ய' பத்து என கணிப்பர். ஒன்பது சக்திகளுக்கு மேல் கிடையாது. 5+3 எட்டுக்கு இடம் ஒன்று ஆக ஒன்பது.

பத்திட்டு அங்கு எட்டிட்டு ஆறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்த மெய்யாகமம்
பட்டிட்டு நின்றது பாரப்பதி பாலே. 1008

இப்படி ஒரே ஜோதி பரந்த நிலையில் பலவாயிற்று. அதுவே கலந்த நிலை. அப்படி கலைத்ததை மறுபடி ஒன்றாக்குவதே இயற்கையின் நோக்கம். அதை இயக்குபவன் இறைவன் ஒருவனே. அறிவும் ஆற்றலும் இணைந்து செயல்பட்டு பத்தை எட்டாக்கி, ஆறாக்கி, நான்காக்கி, அதன் பின் இரண்டாக்கி, ஒன்றாவதே தன் வயம் என்று பெயர். 'நான்' என்பது அறிவு என்று எழுவாய் ஆகி - மற்றவற்றையும் தன்போல அறிவாக்க ஏற்பட்டதே வாழ்க்கை. அதை மறந்து தன்னைச் சார்ந்த பொருளை நான் என்று வாழ்வதே அறியாமை அப்படி கண் பார்வையே முடிவு என்று கருதி வாழ்வதே மனித வாழ்க்கை. ஆறாவது அறிவு அது ஆறை நாலாக்கி, இரண்டாக்கி ஒன்றாவதே முன் ஏற்றம். அதை மறந்து பார்வதியாக நில்லாமல் உள் இமை (உமை) உள்ப் பார்வையாக மாறி உள் ஒளியுமாகி, வெளியாக வேண்டும். ''பார்க்கின்ற மாதைப் பாராது அகன்று ஓர்க்கின்ற உள்ளத்தை ஆழ முட்டி எரித்து பார்க்கின்ற கண் ஆசை பாழ்பட மூலத்தே சேர்க்கின்ற யோகிகள் சிவயோகிகள்''. '' உருத்தரிக்கும் நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை கருத்தில் நிறுத்தியே கபாலம் ஏற்றுங்கள்''. அண்ணாந்து பாருங்கள் திரு அண்ணாமலையை நினைக்க முத்தி.

பாரப் பதி பாகன் பரந்த கை நாலு ஐந்து
கால் பதி பத்து, முகம் பத்து கண்களும்
பூப் பதி பாதம் இரண்டு சுடர் முடி
நாற்பது சோத்திரம் நல் இருபைத்தைந்தே. 1009

பாரப்பதி - வாயுவும் மனமும் கடந்த மனோன்மணி (ஆகாய உணர்வு - ஆதி சக்தி). பாகன் - சத்தியின் சிவம். சதாசிவம். அம்மை அப்பராய் விளங்கும் சிவபெருமான் (அறிவும் ஆற்றலே - அம்மை அப்பர்) ஐந்து திருமுகங்களோடு விளங்கும் பொழுது அவனை விட்டு விலகாத அம்மையும் ஐந்தி திருமுகங்களோடு விளங்குவாள். ஒன்றையே இரண்டாக, நாலாக, ஆறாக, எட்டாக, பத்தாக பார்ப்பது சக்தியும் சிவமும் சேர்ந்த நிலை. ஒன்றாக, மூன்றாக, ஐந்தாக, ஏழாக ஒன்பதாகப் பார்ப்பது சிவன் தனித்த நிலை. ஆக ஐந்து என்பது மத்திம நிலை. நடுநாடி, அப்பொழுது முகம் பத்து, கண் மூன்று மூன்றாக முப்பது, கை இருபது, திருமுடி இருபது, திருவடி இரண்டு (10+30+20+20+2=82) முகமும் உடலும் 30 : 52

அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்து அங்கு இருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரம் சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே. 1010

அஞ்சிட்ட கோலம் - சதாசிவ உருஅரு. ஐயைந்து ஈச உருவங்கள் - ஜீவன் நிலை. வன்னி - சோதி. ஐந்து முகங்களோடு கூடிய அருஉரு நிலையாகிய சதாசிவத் திருமேனியும், அதன் விரிவாகிய இருபத்தைந்து ஜீவ தத்துவங்களும், அழகு மிக்க ஒன்பது ஓம குண்டங்களும் மலர்ந்து உள்ளன. அதன் கண் எழும் பரஞ்சுடர் செம்பஞ்சு போல மென்மையாக ஒளிமிக்க பேரொளிப் பிழம்பாகும். அத்தகைய அருமையான (நீல நிறமேனியை) ஒளிப்பிழம்பைக் கூடுவதே ஜீவன் முத்தியாகும்.

முத்தி நற்சோதி முழுச்சுடராயவன்
கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்றை நாடிப் பரந்தொளி ஊடுபோய்
செற்றற்று இருந்தவர் சேர்ந்திருந்தாரே. 1011

நாம் ஆசைகளால் தான் பாச பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் இல்லை எனில் நமக்கு வாழ்க்கையே இல்லாதது போல் ஒரு கற்பனையை வளர்த்துக் கொண்டு அந்த கனவு உலகத்திலேயே வாழுகிறோம். அவை உண்மை இல்லை என்று உணரும் போது ஏமாறுகிறோம். எவை நமக்குத் துணை என்று நம்புகிறோமோ அது ஒரு நாள் இல்லாமல் போகிறது அல்லது நாமே இல்லாமல் போகிறோம். ஆனால் அறிவொளி ஒன்றே என்றும் எப்பொழுதும் பேரொளியாய் திகழ்கிறது. உற்ற பற்று அறவழி வகைகள் யாதென்று விசாரித்து, அதன் வழி ஒழுகுதல் வேண்டும். அவ்வழி – எண்ணமெல்லாம் சிவனுடைய எண்ணம், செயல் எல்லாம் சிவன் செயல் என்னும் உண்மையை உணர்தலே. அதன் வழி நடப்பவர் வெளிச்சத்தின் துணையுடன் நடந்தது போலாகும். இறைவனை மறவாது காமம், வெகுளி, மயக்கம் முதலிய குற்றம் கடந்திருந்தவர் அவன் திருவடியில் கலந்து இன்புறுவர். உடலை நான் என்பதை மறந்து பரந்த ஒளி ஊடுபோய் தேட்டற்ற மாநிலம். முத்தன் – முத்தியை பயப்பவன். கற்று அற்று நின்றார் – கலைகள் அனைத்தும் கற்று – சந்தேகம் எல்லாம் தெளிந்த நிலை. அவர்களிடம் ஆணவம் இருக்காது. அடக்கமே இருக்கும்.

சேர்ந்த கலை அஞ்சும் சேரும் இக்குண்டமும்
சூழ்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்த ஐம்பூதமும் பார்க்கின்ற வன்னியை
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே. 1012

நீக்கல் (நிவர்த்தி) நிலைப்பித்தல் (பிரதிஷ்டை) நுகர்வித்தல் (வித்யா) அமைதியாக்கல் (சாந்தி) அப்பாலாக்கல் (சாந்தி அதீதம்) என்ற ஐந்து கலையும் சேர்ந்து ஆகும். 'ஓம்'

என்ற பிரணவம். ஐங்கலை என்பது ஐவகை திருவருளாற்றல்கள். நிறைந்த திசை விளக்கமும் அங்கே காணப்பெறும். பரந்த நிலம் முதல் வான் வரை ஐம்பூத வன்மையும் புலனாகும். இவற்றை நோக்கச் செய்வது சிவச் செயலேயாகும். உலகின் உண்மை நிலை உணர்ந்து பற்று அற்றவர் ஆதி திருவடியில் கலந்து இன்புறுவர். பாய்ந்த - பரந்த, காய்ந்தவர் - உலகியலை வெறுத்தவர்.

மெய்கண்ட மாம் விரி நீர் உலகேழையும்
உய் கண்டம் செய்த ஒருவனைச் சேருமின்
செய் கண்டம் ஞானம் திருந்திய தேவர்கள்
பொய் கண்டம் இல்லாப் பொருள் கலந்தாரே 1013

நம் புறக்கண்களுக்கு புலனாகும் கடலால் சூழப்பட்ட ஏழு உலகமும் உய்யுமாறு வரையறை செய்த ஒப்பில்லா முழு முதலைச் சேருங்கள். வரையறை செய்யப்பட்ட அறிவில் உள்ள தேவர்கள் ஓரளவு உணர்வர். அவர்கள் அசத்தும் கண்டமும் இல்லாத சத்தாய் எங்கும் நிறைந்துள்ள மெய்ப்பொருளாம் சிவத்தை கலந்திருப்பர்.

கலந்திரு பாதம் இரு கரமாகும்
மலர்திரு குண்டம் மகாரத் தோர்மூக்கு
மலர்ந்து எழு செம்முகம் மற்றைக் கண் நெற்றி
உணர்ந்து இரு குஞ்சியர் உத்தமனார்க்கே. 1014

ஓமகுண்டம் என்பது நம் கண் குழி. அங்கு விளங்கும் இறைவன் திருவுரு ஜோதி வருமாறு கருதுதல் வேண்டும். செம்மை பொருந்திய திருமுகமும் குழிந்த குங்கும நிறமாகிய மூக்கும் நெற்றிக் கண்ணோடு கூடிய முக்கண்ணும், நீண்ட தலைமயிரும், இரண்டு திருக்கைகள் என்று உருவகப்படுத்தாமல் மஞ்சள், சிவப்பு, பச்சை, வெளிர் நீலம், கருப்பு வெள்ளையாகக் காணல் வேண்டும்.

உத்தமன் சோதி உளன் ஒரு பாலனாய்
மத்திமன் ஆகி மலர்ந்து அங்கு இருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்தி மாணாகத் தழைத்த கொடியே 1015

சிவம் எனும் போது நம்மைப் போல் உருவமாக நினைக்க வேண்டாம். அப்படிப் பார்த்தால் அகப்படவும் மாட்டார். அவனை பரந்த ஜோதியாக, ஏக ஜோதி மயமாகப் பாருங்கள். பால் கடலாகப் பாருங்கள். பிடரிப் பக்கம் அவன் பிரதி பிம்பம் தோன்றும். கண்ணாடியில் தோன்றுவது போல. பாலன் - ஒளி வடிவம். மத்தியில் காற்று, காளை (ஐந்து காற்று) சத்திமான் - ஆற்றல் சத்தி சிவப்பு நிறம். அறிவு - வெள்ளை காற்று நீலம், கொடி பச்சை.

கொடியாறு சென்று குலாவிய குண்டம்
அடி இரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படி ஏழு உலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதனமாமே 1016

ஆறு அறிவும் அந்தமாகி நடுவுடன் கூடினால், தேறும், மூவாறும் சிக்கென நின்றிடும். எல்லா நிறங்களும் ஒன்றாகும். அதில் மூன்று மேலிருந்து வருபவை. கீழிருந்து வரும் ஐந்து நிறம். இவை இரண்டும் இணையும் போது ஒரு கோடு போலாகும். அப்படி உணர்வில் கண்டவர் பெரும் பேறு பெற்றவர் ஆவார்.

மாதனமாக வளர்கின்ற வன்னியை
சாதனமாக சமைந்த குரு வென்று
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதனமாக பரிந்து பார்த்தே. 1017

இறவா பெரும் செல்வமாகிய ஓமத் தீயினை பயிற்சி முறையாகச் சமைந்த அறிவிப்பு முறை என்று கொள்ள சிவன்

பேரருளோடு ஆழ்ந்து நோக்கி அருள்வன் போதனம் - அறிவிப்பு. வன்னி - நவகுண்ட அக்னி, பாதனமாக - ஆழ்ந்து.

பார்த்திட்ட எங்கும் பரந்த எழும் சோதியை
ஆத்தமதாகவே ஆய்ந்து அறிவார் இல்லை
காத்து உடல் உள்ளே கருதி இருந்தவர்
முத்து உடல் கோடி யுகம் கண்டவாறே. 1018

'எட்டுத்திக்கும் பதினாறு திசையும் முட்டித் திரியும் சோதியை' 'நான்' என்று உரிமை கொள்ளாமல் ஐந்தரை அடி உடலை நான் என்று கருதுவதே தரித்திரிய புத்தி. அதைக் கண்ணில் காத்து அணையா வாழ்பவரும் உண்டு.

உகம் கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகம் கண்ட யோகி உள் நாடி எழுப்பும்
பயம் கண்டு கொண்ட இப்பாய் கரு ஒப்பச்
சகம் கண்டு கொண்டது சாதனமாமே. 1019

தொன்மை தொட்டுப் போற்றி வருகின்ற ஒன்பது திருவருள் ஆற்றலை குறிக்கும் ஒன்பது ஓம குண்டமும் அகத் தவத்தார்கள் அகத்தே வளர்த்தும் பயிலுவர். அணுக்களாக பாவித்து பழகுவதால் உருவமில்லாத அருவ பூசையேயாகும். ஆகவே இந்த பொய்யான உருவக் கவர்ச்சி நீங்கும். அங்ஙனம் நீங்க இவ்வோமப் பயிற்சி துணையாகும்.

சாதனை நாலு கால் மூன்று வில் வயம்
வேதனை வட்டம் வினை ஆறு பூ நிலை
போதனை போதை அஞ்சு பொற் கய்வரான்
நாதனை நாடு நவகோடி தானே. 1020

தழல் மூன்று - கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆறு பூ நிலை - ஆறு ஆதாரங்கள். போதஞ்சு பொற்காயம் - ஐம்பூதங்கள். வாரண நாதன் - விநாயகன்.

சன்மார்க்க நெறியின் முதல் படி சீலம் (சரியை) நோன்பு (கிரியை) செறிவு (யோகம்) ஞானம் (தெளிவு) அதாவது கேட்டல் (விசாரணை) சிந்தித்தல், தெளிவடைதல், தியானப் பயிற்சி. சுழல் மூன்று அந்நெறி சூரியன் (அறிவு) சந்திரன் (மனம்) அக்னி என்று மூன்று சுடர் ஒளி கிட்டும். அடையாளம் வட்டம், பிறை, முக்கோணம். அந்த கண்மணி வட்ட குண்டத்தில் கண் நாற்புறமும் வீசும் ஒளித்தன்மை வாய்ந்தது. அகத்தே காணுவது அறு ஆதார சுருதி சாதனை – பயிற்சி. வேதம் – ருக், யஜுர், சாம, அதர்வணம். அக்னி, ஆகாயம், சமநிலை – கர்மகாண்டம், ஐ = அழகு. நவகுண்டம் முற்றிற்று. இனி சக்தி பேதம்.

4/5, சக்தி பேதம் – திரிபுரை சக்கரம்

சத்தி என்பது ஆற்றல். அதையே எழுச்சி என்பது. அதுவும் தானாக செயல்படாது. அது சிவத்தின் தூண்டுதல் தாம். எல்லாம் சம நிலையில் இருக்கும் போது ஏற்ற தாழ்வு கிடையாது. எந்த வேறுபாடும் கிடையாது. அந்த ஆற்றலைத்தான் ஆசை என்கிறோம். தன்னை ஏனைய் பொருள்களிலிருந்து உயர்ந்ததாக காட்டிக் கொள்ள நினைப்பதே சத்தி. அதை எழுச்சி, எழுத்து என்பர். அது நிலைபெறாதது. அதனால் மாயை என்பர். அது மாய்ந்து போவது. எது ஒன்று சிவத்தை தழுவி நீங்காமல் நிற்கிறதோ அது நிலை பெற்ற சக்தி எனப்படும். இந்த ஆற்றலில் வேறுபாடு தான் பேதம் எனப்படும். அந்த பேதத்தில் முக்கியமான வேறுபாடு மூன்று வகை. அதை திரிபுரா சத்திகள் என்பர். பொதுவாக ஆற்றல் என்றாலே அசைவு தான். அந்த அசைவுகளின் வேகமே வேறுபாடு என்பது. இது முக்குணங்களால் ஏற்படுவது. நம்மைப் பொறுத்தவரை இருப்பு சக்தி இருட்டுதான். அறியாமை. அறியாமையிலிருந்து எழுப்பி நம்மையும் அறிவு ஆக்க ஏற்பட்டதே இயற்கை இயக்கம். ஆகவே இயக்குனர், இயக்கம். இயக்கப்படுபொருள் என்பது அவசியமாகிறது. அப்படி ஆடல், ஆட்டுபவன், ஆடலின் பயன் ஐந்து வகைப்படும். இதை

ஐந்து விதமாக்கினர். ஒன்று இரண்டான போது சிவத்துக்கு சமம். மூன்றான போது வேறுபாடு அதீதம். அதீதம் மேலும் அத்தம், அதீதம் என்று வேறுபட்டு எட்டு நிலை ஆகும். இதை அட்டமா சத்தி. அஷ்டலட்சுமி என்பர். இனி இதை ஆராய்வோம்.

மாமாயை மாயை வயிர் தவம் வைகரி
ஓமாயை உள் ஒளி ஓர் ஆறு கோடியில்
தாம் ஆன மந்திரம் சத்தி தன் மூர்த்திகள்
ஆமாயலவாம் திரிபுரையாங்கே 1021

திருமந்திரம் என்பது மனதின் திறம் கொண்டு அறிவை அறிய முயல்வது. உடலின் சக்தியை பயன்படுத்தி உருவத்தில் பொருள் பண்ணக்கூடாது. மனம் என்பது தான் மாயா சக்தி. அதையே உயிர் என்கிறோம். ஆகையால் மனதை மேல் நோக்க வைப்பதே திருமந்திரம். இந்த கருத்தை அடிப்படையாக வைத்து அருவத்திலேயே பொருள் பண்ண வேண்டும். அதுதான் உண்மையைக் காட்டும்.

மா என்றால் பெரிய மாயை. மாயை என்றால் மயக்கம் தருவது. இல்லாததை இருப்பதைப் போல் காட்டி இருப்பதை மறைக்கும் ஆற்றல். பெரிய என்பது ஆகாய அளவு. சிறிய என்பது உடல் அளவு. அது மாயை நமக்கு மனம்/உயிர். கடவுளின் மனம் மாமாயை. உடல் அளவுக்கு அது சுருங்கும் போது மனித இனம். ஆக இரண்டும் ஒன்று தான். காரிய உலகு, உடல் பொருள்களுக்கு காரணமாகிய மாமாயையும், அக்காரிய மாயையும், ஒளியாகிய வைத்தலமும், (நினைவு ஓசை) செவி ஓசையும், ஓம் மொழியும் அதன உள் ஒளியாகிய எழுச்சிகளும், செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பு இறந்த மானம், மாணாவு வகை என்றும் ஆறு உட்பகைக்கு (எதையும் உருவத்தில் காட்ட முடியாது) உடனாகும். ஆறு கோடி மாயைகளின் ஆற்றலும் தாமே இயங்குபவை அல்ல. திருவருள் ஆற்றல் இதை இயக்குகிறது. ஆதலால் இயக்க இயங்கும் பொருளாகும். அப்படி இயக்கும் ஆற்றலே திரிபுரை என்று

வழங்கப்படும். அவ்வாறு இயைந்து இயக்கினும் பொருள் தன்மையால் வேறு வேறாகும். ஆறு கோடி மந்திரங்கள் என்றாலும் ஒரே சத்தி தான் மூல ஆதாரம். சத்தியும் அதன் எழுச்சியும் ஒன்றே. வயிர்தவம் - விந்து நினைவில் ஓசை, அது ஆறு ஆதாரங்களாக மாறும் போது ஆறு கோடி. (கோடி என்பது எண்ணம் எண்ணிக்கை (நம்பர்) அல்ல. மண்ணின் முடிவு, நீரின் முடிவு என்பது.

திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணியாம் பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபலவாய் நிற்கும் மா மாதுதானே 1022

மூன்று பிரிவாகயுள்ள வட்டத்துக்கு உரியவள் திரிபுரை என்பர். அழகு அருளும் அழகினள், உள் வெளியாயுள்ள அந்தரி செந்நிறமுள்ள அனைத்து உலகும் காக்கும் பரிபுரை ஆருயிரைக் காக்கும் நாரணீ பால் போலும் தூய வெண் நிறத்தவள் இருள் போலும் கரும் நிறத்தவள். ஆருயிரில் மனத்து உள் நின்று அருளும் பெருமை வாய்ந்த மனோன்மணி. இத்தகைய சிறப்புகள் இன்னும் பலவாய் நிற்கும் முழு முதல் தலைவி அம்மையே வெண்மை என்பது ஒளிமிக்க பகல், நனவு - சரஸ்வதி. சிகப்பு என்பது நடுநிலை - மணம். கனவு - இலட்சுமி. கருப்பு என்பது - துக்க நிலை. இரவு - சுழுத்தி (தூக்கம்) - துர்க்கை. இதையே திரிபுரம் என்பது.

தானா அமைந்தவம் முப்புரம் தன்இடை
தானான மூவுரு ஓர் உருத் தன்மையள்
தானான பொன், செம்மை, வெண் நிறத்தால் கல்வி
தானான போகமும் முத்தியும் நல்குமே 1023

முப்புரம் என்பது இரும்பு, பொன், வெள்ளி எனும் மூன்று பொருள்களால் இயல்பாய் அமைந்த கோட்டை என்பர். இவை எல்லாம் கற்பனை. ஒளியின் நிறத்தை குறிப்பிடுவன. வெண்மை நிறமே தலைமையான நிறம், இடைக்குணம் பொன் போன்ற மஞ்சள் நிறம், கடைக்குணம் கருமை - இருட்டு.

இப்பொழுது நிறமே உண்மை. இதை இரும்பு, பொன், வெள்ளி என்று கற்பனை செய்தால் இது எப்படி ஜீரணமாகும். இதைத்தான் மாயை என்பது மூன்றுமலம் என்பது. அவை ஆணவம், மாயை, கன்மம் என்பது. பொன் நிறத்தை, நிஜமான தங்ம் என்று தேடி அலைந்தால் அது காமம். வீண் முயற்சி தானே. ஆகவே ஒரே சத்தியின் மூன்று வேறுபட்ட தோற்றங்களே தவிர உண்மையில் ஒன்று தானே. கல்வியும், வாழ்வும், போகமுமாகி நிற்பவள். போகம் - வாழ்வு, முத்தி - பேறு.

நல்கும் திரிபுரை நாத நாதாந்தாங்க
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரை அபிராமி அகோசரி
புல்கும் அருளும் அப்போதும் தந்து ஆளுமே. 1024

(ஆளும் - காக்கும்)

குறித்த மூன்றையும் அளித்தருளும் அம்மை (நனவு, கனவு, தூக்கம்) நாதம், நாதாந்தமாகிய முப்பதாறு மெய்களும் பரவி நிலைப்பதற்கு நிலைக்களம் மேல் ஒளியாகும் (8, 8 ஆக 3 x 8 = 24 மணி நேரம்) மேலொளி - பரவிந்து. பரந்த ஓசை (ஓம்) நிலை உலக முதலிய எல்லா அண்டங்களையும் படைக்கும் பரை (விளம்பரம்) நாதம், அழகும், விருப்பும் நிறைந்த அபிராமி, புலன் உணர்வுக்கு எட்டாதவள். அபின்னா சக்தி.

தாரணி நூபுரம் செம்பட்டு தான் உடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளி, வில்
ஏரணி அங்குச பாசம் எழில்குடி
காரணி மாமணிக் குண்டல காதிக்கே 1025

நீர் உண்ட கரிய மேகம் போல் அம்மையின் திருவடி (அதுவே நம் கண்மணி) அதில் உண்டாகும் முதல் நாதமே சிலம்பு ஒலி. பரை நாதம். நினை வோசை விந்து. ஒலி எழும் போது கனல் ஏற்படும். அது சிவந்த நிறம். கதிர் ஒளி கண்டதும் கனலாகிறது. கச்சை பூண்ட மார்பினள். அது ஆவியாகி மலருகிறது. ஆனாலும் அதன் விரிவு ஒரு கட்டுக்குள் இருக்கும் நான்கு திருக்கைகள்

என்பது கண், காது, நாசி வாய்களின் போல் செயலாற்றும். அதை கரும்பு வில், பூவாளி (காது), அழகிய தோட்டி, கயிறு (நாசி) அழகிய திருமுடி (சிரசு) இதை கண்மணி காதில் ஒலி , இப்படி உருவகப்படுத்தி நினைக்காமல், ஒளியாக நினைப்பதே தியானம். உருவகத்தை மறத்தலே தியானம். நினைவை எரிப்பதே தியானம். கன்றும் கனலிடைக் கட்டி எரித்து அமுதாக்கி உண்ணில் யோகிக்கு அறிவாகுமே. அங்குசம் - தோட்டி, பாசம் - கயிறு, கன்னல்- கரும்பு.

குண்டலக் காதி கொலை வில் புருவத்தன்
கொண்ட அரத்த நிறமன்று கோவந்தன்
கண்டிகை ஆரம் கதிர் முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கி நின்றாளே 1026

ஆருயிர்கள் எனும் போது உயிரைப் பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டும். சீவனது வடிவு ஒரு பனித்துளி போன்றது. காற்றில் ஒரு அணு, நெருப்பில் ஓர் அணு, நீரில் ஒரு அணு என்ற முக்கூட்டே சிவன். அவைகள் உய்தற்பொருட்டு என்றால் - இந்த உயிரும் அழியக் கூடியதே. உடலால் அழியில் உயிரால் அழியும். இது வந்த காரணம், திடம் பட ஞானம் பெறவே. ஞானம் நான் யார் என்று அறிவதற்கு. ஆகவே அணுத்தன்மையும் மாற்றம் வெட்ட வெளியே. அப்படி முடிவு கண்டவருக்கு இந்த உலகமே போலி. அதன் நடை முறைகளும் போலி. அது தான் மாயை. சண்டிகை.

நின்ற திரிபுரை நீரும் புராதனி
குன்றலில் மோகினி மாதிரிக்கும் சிகை
நன்று அறிகண் திசை நாற் கால் கரீடணி
துன்றிய நற் சுத்த தாமரைச் சுத்தையே. 1027

உயிருய்யக் கலந்து நிற்கும். அம்மை திரிபுரை என்று சொல்லப் பெறுவள். நிலை பெற்றவள். பழமை புதுமை எல்லாம் இல்லாதவள். அவள் அழகு கூடவும் கூடாது. குறையவும் செய்யாது. சிவமணி பூண்டவன் ருத்திர - அக்ஷமே சிவமணி.

நாற்கால் கரீடணி - யானையை வாகனமாகக் கொண்டவள். மோஹினி - அழகினை உடையவள். தாமரையில் வீற்றிருப்பாள். எல்லாம் கண்ணை கொண்டு பாருங்கள்.

சுத்தவம் பாரத் தனதிதி சுகோ தயன்
வத்துவ மாய் ஆளும் மாசக்தி மாபரை
அத்தகை யாவும் அனோரணி தானுமாய்
வைத்தவக் கோல் மத அவளாருமே 1028

இந்த வர்ணனைகளை எல்லாம் பார்த்து உருவத்தை தேடி அலையாதீர்கள். நீங்கள் கற்பனை செய்வது போல் தோன்றவும் செய்யலாம். ஆனால் அது நிலைக்கிறதா என்பது தான் கேள்வி. சரி ஒருவருக்குத் தோன்றுவது மற்றவருக்கு ஏன் தோன்றவில்லை. தூய கச்சினையும் முத்து மாலையினையும் அணிந்த மார்பினை யுடையவள். மாயையை தொழிற்படுத்தும் இயக்கும் சக்தியா யிருப்பவள். உமையவள். ஆற்றல் உள்ளவள் பெரும் பொருட் செல்வி முதலிய சிறப்புப் பெயரினள். அன்பர்கள் என்ன எண்ணுகிறார்களோ அப்படியே அருள் செய்பவள், வத்துவம்- மாயை. வம்பார - கச்சு மாலை அணிந்த; சுக உற்பத்திக்கு காரணம் ஆனவள்.

அவளை அறியா அமரரும் இல்லை
அவளின்றி செய்யும் அருந்தவம் இல்லை
அவளின்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளின்றி ஊர் புகுமாறு அறியேனே. 1029

திரு அருள் ஆற்றலை அறியாத தேவர்களும் இலர். சக்தி இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியாது. ஐந்தொழில் செய்யும் தேவர்களும் சத்தியில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் சத்தி என்றால் பெண் உருவத்தை கற்பனை செய்யாமல் அருவ சக்தியை கொண்டு பொருள் கொள்ளவும்.

அறிவார் பராசக்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அறிஉருவாம் அவள் என்பர்
அறிவார் கர்மம் அவள் இச்சை என்பர்
அறிவார் பரமும் அவளிடந்தானே 1030

திருவடி உணர்வு எல்லோரிடமும் உண்டு. ஆனால் அதை உணர்ந்தவர் சிலர். அவர்கள் அதை பேரின்பம் என்பர். அறிவுரு எனவும் கூறுவர். ஐந்தொழிலும் அவள் ஏவல் தான் என்பர். செயல்களும் (கர்மம்) அவள் தூண்டுதலே என்பர். அதே போல் பரமும் அவளே என்பர். பரம்பரை, சக்தி சிவமின்றி தபரம் வேறு இல்லை.

தான் எங்குளன் அங்குளன் தையல் மாதேவி
ஊன் எங்குளது அங்குளன் உயிர்க்காவலன்
வான் எங்குளது அங்குளன் மந்தமாருதம்
கோன் எங்கும் நின்ற குறிபலபாரே 1031

'நான்' என்று எழும் சிவபெருமான் எங்கெலாம் உளனோ அங்கு எல்லாம் திருஅருள் அம்மையும் அங்கு இருப்பாள். அவன் மண்ணாக இருந்தால் அங்கே கார்யகாரியாக இருப்பாள். அவன் விசுவநாதனாக இருக்கும் போது விசாலாக்ஷியாக இருப்பாள். சொக்கலிங்கத்துக்கு மீனாக்ஷியாக இருப்பார். வான் எங்கு உள்ளதோ அங்கு மந்தமாருதமாக இருப்பர்.

பராசக்தி மாசக்தி பல் வகையாலும்
தரா சக்தியாய் நின்ற தம்மை உணராற்
உரா சக்தி ஊழிகள் தோறும் உடனே
புரா சக்தி புண்ணியமாகிய போகமே. 1032

அவனை விட்டுப் பிரியாது அங்கு எலாம் அவள் ஆற்றலாய் உளள். நிலத்துக்கு நீராயும், நீருக்குள் நெருப்பாயும், நெருப்புக்குள் காற்றாயும், காற்றுக்குள் இடமாகவும், இடத்தில் ஒலியாகவும், ஒலிக்கு ஒளியாகவும், ஒளிக்கு வெளியாகவும் இணை பிரியாது இருப்பதே சக்தி சிவம். மந்தமாருதம் - தென்றல் காற்று. வான் உள்ள இடமெல்லாம் சிவன் வந்து நிறைந்து அதற்கு அப்பாலும் உளன் என்று பொருள் கொள்க. பராசக்தி - எங்கும் வியாபித்துள்ள சத்தி. தராசத்தி, ஆதார சத்தி, உராசத்தி - பொருந்தும் சத்தி : புராசத்தி - திரிபுரை :

போகம் செய் சத்தி புரி குழலோடும்
பாகம் செய்து ஆங்கே பராசக்தியாய் நிற்கும்
ஆகம் செய்து ஆங்கே அடியவர் நாள்தோறும்
பாகம் செய் ஞானம் படர்கின்ற கொம்பே. 1033

ஆகம் செய்து - மனதில் இருத்தி. பாகம் செய் - பக்குவம் செய்து ஆருயிர்க்கு வினைக்கீடாக விரும்பின வாழ்வை அருளி 'ந' கரம் பொருளாகிய நடப்பாற்றலாக உயிருடன் இணைந்து கன்ம ஒப்பு வரச் செய்து வனப்பாற்றலாக நிற்பார். பூரகமாக வந்து கும்பகமாக நிற்பாள். மோகம் செய் சக்தி. 'ந' பூரகம். பராசக்தி கும்பகம். அதுவே கொழுக்கொம்பு.

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பி என் உள்ளே வைத்தேனே. 1034

கொம்பு என்ற சொல் எழுச்சியை குறிக்கும் மென்மையான கொடி படர கொம்பு தேவை. அது காற்று நெருப்பு நீரோடு சேர்ந்து நடுநாடியைக் குறிக்கும். முலை என்பதை புனிதமாகக் கருத வேண்டும். முக்கோண வடிவாக உள்ள இடம் மூலை என்கிறோம். படுக்கை கோடு மேல் சாய்ந்து இரண்டு சேரும் இடம் மூன்றாவது கோணம். இது மண், நீர் என்பது கீழே தான் படரமுடியும். அவை இரண்டும் மேல் ஏற உதவுவது காற்றும் நெருப்பும். அதைக் கொம்பு என்பர். அப்படி குவிதல் ஏற்படுவது நம்முக்கண்கள். அதில் நெற்றிக்கண் முலைக்காம்பு. அவள் நெருப்பு. அக்னி சிவப்பாக இருக்கும். அது வானவர் நாடி. வானில் எழுச்சி.

வைத்த பொருளும் மருஉயிர்ப்பன்மையும்
பத்து முகமும் பறையும் பராபரைச்
சித்த கரணச் செயல்களும் செய்திடும்
சக்தியும் வித்தைத் தலை அவளாமே 1035

தோற்றமே இல்லாத நிலையே பரம். வெட்டவெளி. தோற்றத்தில் முதல் கட்டம் அருவமே. அதில் நாலுநிலை ஒலி, ஒளி, ஆற்றல், அறிவு, மந்தி நிலை அருஉரு அது ஆகாயம். உருவநிலைக்கு ஆதி. அருவ நிலைக்கு அந்தம். அதற்கு கீழ் காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற நாலு நிலை ஆக அருவம் 4, அருஉரு நடு - 1, உருவம் - 4, ஒன்பது இந்த ஒன்பது நிலைகளுக்கு இடம் பரம். ஆக இந்த பத்து நிலையிலும் பரந்து நிற்கும் ஆற்றல் பராசக்தி. நடப்பாற்றல் பரை, வணப்பாற்றல் பராபரை, அகத்தில் எண்ணம், மணம், எழுச்சி, இறுப்பு நான்கையும் செயல்படுத்துவபவளும் அவளே. இதை உணரும் நிலை வித்தை. அது மெய்யுணர்வு, பதிஞானம், பிரமவித்தை, வேதங்கள் ஆகமங்கள் கற்ற கன்னி.

தலைவி தட முலை மேல் நின்ற தையல்
தொலைவில் தவம் செய்யும் தூய நெறித் தோகை
கலை பல வென்றிடும் கன்னி என் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்து நின்றாளே. 1036

கன்னி என்பது ஒரு நிலை. எல்லாவற்றையும் சாட்சியாக பார்ப்பது. செயல்களில் ஈடுபடாமல் காட்சியாக பார்ப்பது. தடமுலை - என்பது தொகு அறிவு - ஸ்பரிச சுகம் எதையும் தொடாமல் கண்ணால் மட்டும் பார்ப்பது. அதுவே மேல் நிலை. மூலத் துவாரம். உடலும், மனமும் நான் அல்ல என்று தனி ஒளியாய் நின்று பார்ப்பது தூய்நெறி. ஒளி எதிலும் ஒட்டாது. அந்த ஒளி என்னிடம் கண் ஒளியாக நிலைபெற உலவாப் பிராணனாக நின்றது.

நின்றவன் நேரிழை நின்கலையோடுற
என்றன் அகம் படித்து உலகும் தொழ
மன்றது ஒன்றி மனோன்மணி மங்கலி
ஒன்றனோடு ஒன்றி நின்று ஒத்து அடைந்தாளே. 1037

எங்கும் நிறைந்த ஆற்றல் (ஆறு விதம்) பல அணி கலன்களை உடையவள் அது உபாங்கம். அவை இல்லாமல் இருப்பவனே, மூலப் பொருள். ஆறுபத்து நாலு கலைகளுடன்

என்னிடம் வீற்றிருந்தாள். அவளையே மனதின் - உள் - மணி (கண்மணி) மனோன்மணி. வாயுவும், மனமும் கடந்த நிலை. அவளே ஆதிசக்தி சிவத்துடன் சேர்ந்து நிற்பவள்.

ஒத்து அடங்கும் அமலத்திடையாய் இறை
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்தடைகின்ற மனோன்மணி மங்கலி
சித்தடைக்கும் வழி தேர்ந்து உணரார்களே. 1038

சிவத்துடன் யாண்டும் பொருந்தி இருப்பவள். அர்த்த நாரீஸ்வரி - சதாசிவம். ஆதிபகவன் எல்லாம் பொருள் ஒன்றே. அதுவே ஆகாய நிலை அதுவே பெரும் துறை. நான்கு உருவத் தோற்றத்துக்கும் காரணீ. மரம் காழ்ப்பும் போல் உடனிருந்து அடங்கி நிற்கும். தாமரை இருக்கையினுடைய செல்வி - பெண் உருவில் பாதி. சித்துக்களை அடையும் மார்க்கமே அவள் தாம் - பெரும் பதி.

உணர்ந்து உடனே நிற்கும் உள்ளொளியாகி
மணம் கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்து உடனே நிற்கும் போதரும் காணல்
கணிந்து எழுவார்க்கு கதி அளிப்பாளே. 1039

ஆருயிர்கள் என்பது ஒரே ஒளியின் சிதறல்கள் தாம். ஜோதியையும், சுடரையும், சூழ் ஒளியையும் ஒன்றும் பிரிக்க முடியாது. விளக்கு அணையும் போது அத்துடன் சுடரும் சூழ் ஒளியும் மறைகிறது. மறைக்கும் பொருள் சிறியதாகவும் இருக்கலாம். சூரிய ஒளியை ஒரு கையால் மறைத்து விடலாம். அதனால் சூரியனே மறைந்தது ஆகாது. அதுபோல் நம் கண்ணை மூடினால் உலகமே இல்லை. உடலே இல்லை என்று சொல்ல முடியாது. நம்மை பொறுத்தவரை இல்லை. ஆகையால் உடலை நான் என்று கருதுபவர்கள் உடலை நீக்கிப் பார்த்தால் இருந்ததை இருந்தபடி பார்க்கலாம். நீங்க வேண்டியது உடலும் மனமும். அவைகளே திரைகள். அவைகள் திரை நீங்கினாலே போதும். அறிவு தானாக விளங்கும். அது ஆக்கப்பட வேண்டிய பொருள் அல்ல. அதுவே நீயாக இருக்கிறாய்.

முன்னுரை

நாம் இப்பொழுது ஆராய்வது சக்திகளின் பேதம் வேறுபாடு. நம்மிடம் முக்கியமான ஆற்றல் மூன்று. சக்தி ஒன்று தான். ஒன்றின் மூன்று வேறுபாடுகள் உடல், மனம், அறிவு என்பன. உடலுக்கு காரணம் ஐந்து பூத அணுக்கள். மனம் அல்லது உயிருக்கு முக்கியமானது காற்று, நீர், நெருப்பால் ஆன ஆவி. முதல் ஐந்து பூதங்களால் ஆன உடம்பு அன்னமயகோசம். அடுத்து பிராணமய கோசம். அதை அடுத்து மனோமய கோசம். இதுவரை தான் மனிதர்கள் அளவு. இந்த மூன்று நிலையையும் நனவு, கனவு, தூக்கம் என்றனர். அதை திரிபுரம் என்பர். இவை எப்படி ஏற்படுகின்றன? ஏன் ஏற்படுகின்றன? எங்கே ஏற்படு கின்றன என்பதைக் காரண காரியத்தோடு அறிவது அறிவு. அதையே 'சித்' என்கிறோம்.

சித்-தம். அதுதான் 'நான்' என்ற எழுவாய் ஆகும். அது இப்பொழுது தெளிவாக இல்லை. குழம்பி நிற்கிறோம். நீ யார் என்று கேட்டால், பதில் சொல்ல முடியாது திகைக்கிறோம். வேறொரு பொருளைச் சார்ந்தே சொல்கிறோம். நாம் சத்தி என்றால் உடனே பெண் போன்று உருவத்தையே கற்பனை செய்கிறோம். நம் உள்ளேயே இருக்கும் சக்தியை நினைப்ப தில்லை. ஒவ்வொருவர் முன்னேற்றத்துக்கும் மனைவியே காரணம் என்று வெட்கமில்லாமல் பெரிய தமிழ் புலவர்கள் என்று கருதப்படுபவர்கள் கூடப் பேசுகிறார்கள். என்னே அறியாமை? மனைவியே இல்லாதவர்கள் முன்னேறவில்லையா கண் இருந்தும் இவர்கள் குருடர்களாகவே இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே இந்த புறக்கண் உண்மையைக் காட்டாது. அது ஐந்தாவது பிரதிபலிப்பு. அதற்கு முன் நான்கு பிரதிபலிப்புக்கள் உண்டு. அதையும் ஆராய்ச்சி செய்து அறிந்த பின் தான் நாம் முழு அறிவையும் பெற்றவர் ஆவோம்.

மூன்று நனவு, கனவு, தூக்கம் இந்த திரிபுரத்தையும் கடந்து இன்னும் இரண்டு நிலை சக்திகளையும் கடந்தால் தான் சிவத்தை உணர முடியும். அப்படி ஒவ்வொரு சக்திக்கும், வர்ணம், உருவம்,

குணம், கடம் எல்லாவற்றிலும் வேறுபட்டுத்தான் இருக்கும். அவை ஆராய்ச்சியில் எட்டாகப் புலப்படும். புரியட்ட காயம் புலப்பட எனக்கு தெரி எட்டு நிலையையும் தரிசனப்படுத்தி என்கிறார்.

இந்த வேறுபட்ட எட்டு சக்திகளை பற்றி ஐந்தாவது தந்திரத்தில் ஆராய இருக்கிறோம். இந்த தலைப்பில் மூன்றே சக்திகள் பற்றி ஆராய்ச்சி.

அதைத்தான் சத்தி பேதம் - திருபுனாச் சக்கரம் என்றார். புறம் என்பது உலகம். புறம் என்பது வெளி உடல். அகம் என்பது உள்ளம். இவைகளின் குறிகளையும், அநுபவங்களையுமே இந்த 30 பாடல்களில் விவரிக்கிறார். அதில் 1040லிருந்து பத்து பாடல் இங்கே ஆராய்வோம். இவை எல்லாம் நம்மைப் பற்றிய தெரியாத இரகசியங்கள். புரிந்தவருக்கு இரகசியமில்லை. புரியாதவரை திரிபுரா இரகசியமில்லை. புரியாதவரை திரிபுரா இரகசியமே. அந்த இரகசியத்தை வெட்ட வெளிச்சம் ஆக்குவதே அறிவு. ஆறாவது அறிவு.

4-5-1040

அளியொத்த பெண் பிள்ளை ஆனந்த சுந்தரி
புளி உறு புன் பழம் போல் உள் நோக்கி
தெளி உறு வித்து சிவ கதி காட்டி
ஒளியுற வைத்து என்னை உய்ய உண்டாரே. 1040

அளி என்பது காற்று. எட்டு சத்திகளுடன் கலந்தது. அனைத்து உயிர்களிடத்தும் சமமான தலைவி. பேரின்பப் பேரழகி. புளியம் பழமும் தோலும் போல் நம் உள்ளிருந்தும் ஒட்டாது இருக்கும் சத்தி. அந்நிலையினை நோக்கி உண்மை யினைத் தெரிவிப்பவள். உயிரின் அழியாத தன்மையையும் சிவனுடன் கூடும் பேரின்ப நிலையையும் காட்டுபவள். அதன் பின் திருவடி உணர்வு (சிவஞானம்) வண்ணமாய் நம்மை ஆக்குவாள். சத்தியாய் சிவமாய் தனிப்பர முத்தியான முதலைத் துதி செய்ய வழி காட்டுவாள். அதுவே சித்தி நிலை.

உண்டு இல்லை என்று உருச்செய்து நின்றது
வண்டு இல்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தன்னொடு
மண்டல மூன்றுற மன்னி நின்றாளே. 1041

ஐம்பொறிகளுக்கு புலனாவது உருவம். அவைகளுக்கு புலனாகாத உருவம் அருவம். இவ்விரண்டினையும் படைத்து அருளி நின்ற என் சக்தி. சித் அம்பலத்தில் அப்பன் திருக்கூத்தை பார்த்து நிற்பவள் அவளே. அனைத்திற்கும் காரணமாய் நிற்பவள் அவளே. உடல் மெய் - 24, உணர்வுமெய் (வித்யாதத்துவம் 7) உணர்த்தும்ல மெய் (சிவதத்துவம்) ஐந்து மண்டலம் மூன்றிலும் நின்று இயக்கும் மாயா சத்தி அவளே.

நின்றாள் அவள் தன் உடலும் உயிருமாய்
சென்றாள் சிவகதி சேரும் பராசக்தி
ஒன்றாக என் உள் புகுந்து உணர்வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கையாளே. 1042

ஆழியாக அலையும் சக்தி - அசைவு இல்லாத சிவத்துக்கு ஆற்றலும், உடலுமாக மாறி நின்றாள். உயிரும் உடலுமாக உள்ள நோக்கம் மெய்யடியார்களை, உண்மை நாடி நிற்கும் அடியார்களை உய்விக்கும் பொருட்டு வனப்பாற்றலாகிய (வாய்வு) அருளம்மை என் நெஞ்சத்தில் ஒன்றாய் கலப்பால் வேறாய், (பால் வெண்மை - ஆனால் வேறு ஒன்றோடு சேரும் போது வேறாவது போல) உயிருக்குள் உயிராக இருந்தாலும், (ஒளி) ஒட்டாது இருந்து உணர்வாகவே உடனாய் நிற்பாள். அவளே பராசக்தி.

ஏடம் கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பணி பாதங்கள்
சூடுமின் சென்னி வாய்த் தோத்திரம் சொல்லுமே. 1043

ஏடு ஏழும் அடுக்கப்பட்டு அடுக்குத் தாமரை போல் ஒரே கையில் கொண்டவள். அறிவு, ஆற்றல் அன்பான சத்தி. வெண்ணிறமே அவள் நிறம். இது மனோன்மணி அல்லது சரஸ்வதி எனலாம். அதீத வெண் தன்மையை ஸ்படிகம் போன்று (தெளிந்த நிலை - கண்ணாடி போன்ற) நிலை. வெள்ளைக் கலை உடுத்தி, வெண் தாமரையில் வீற்றிருப்பாள். பிரம்மாவின் ஆற்றல். அவளே நாத சக்தியாகவும் மாறுபவள். திருமுறை பாடுபவள். பேரருள் வாய்ந்த பார்வை சக்தி. ஓசையும் ஒளியுமானவள். நாதமும் விந்துவும், கலை ஆனவள். கலை அரசி. வேடம் - கோலம் பார்ப்பண் - பார்வை சக்தி. சென்னி - தலை, தோத்திரம் - புகழ் (புகுந்து செயல்படுத்துதல் ஏழையும் அறிவித்தல் எழுத்தறிவு).

தோத்திரம் செய்து தொழுது துணை அடி
வாய்த்திட ஏத்தி வழி படு மாறிடும்
பார்த்திடும் அங்குசபாசம் பசும் கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை ஆகுமாம் ஆதிக்கே. 1044

தோத்திரம் என்ற சொல் 'த' என்பது தங்கும் இடம் உடல்; 'ஓ' என்பது 'அ' என்ற ஒளி உடலோடு சேர்ந்து நாத சத்தியாவது திறம். தோத்திரம். அது அதாவது நினைவு ஓசை நமக்கு என்றும் தோன்றாத் துணையாக நிற்கும் (அறிவு ஒளி). திருவடிக்கு கட்டுப்பட்டு (தொழு என்பது மாட்டை கட்டிப்போகும் இடம்). இதை உணர்ந்து அறிவின் தூண்டுதல் படி (ஆக்ஞா சக்கரம்) அவன் ஆணை. இந்த உயிராகிய பசு, பாசமாகிய உடலை விட்டு அங்கு (ஒளியை நோக்கி) அதற்கு இசைந்து ஆதிசக்தி என்பது (அணுவில் - அணு - பரம, அணு) ஆகாய தத்துவம். அதற்கு ஈடாக சீவனும் மாறி மென்மையான பூப்போன்று நுண்மையான அதன் வாசம் போன்று மாறும். சீவன் சிவனாகும்.

ஆதி விதம் மீகத் தண் அந்த மால் தங்கை
நீதி மலரின் நீரிழை நாதத்தை
பாதியில் வைத்து பல கால் பயில் வீரேல்
சோதி மிகுந்து முக்காலமும் தோன்றுமே. 1045

இதுபோல் திருமூலரைத் தவிர யார் வழி காட்ட முடியும். முன் சொன்னபடி வெளி முகம் உள்முகமாகி (முகம் என்றால் அதில் நாதம், ஒளி, சுவாசம் மூன்றும்) உள்ளேயே அடங்கினால் அது ஆதி சக்தி - ஆகாய தத்துவம் - ஆனந்தமாகும். அது மிகுதியாக அதனுடன் அங்கே தேங்கிக் கிடந்த நீர் சக்தியும் இணைந்து அது போல் ஆகும். மால் ஒன்று பற்றினால் அவன் மாயாவி; அவன் தங்கை பார்வதியை சிவனுக்கு திருமணம் செய்து கொடுத்தான் என்பது இதையே. மால் ஒன்று பற்றி மயங்கி நிற்கும் நாம் திருமந்திரம் போன்ற நூல் ஒன்று பற்றி நுனி ஏறுங்கள். நுண்ணியமாக மாறுங்கள். சோதி சொரூபம் ஆகுங்கள்.

மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியள்
வேதாதி நூலின் விளங்கும் பரம்பரை
ஆதாரமாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல் அருளாலே. 1046

மௌனமே முடிவு என்று அறிந்தாலும் அதை சொல்லால் சொல்ல நாதமே தேவைப்படுகிறது. அதற்கு ஏற்பட்டதே வேதம். நான்காக, ஆனால் மவுனநிலை அறிந்த பின் வேதம் தேவை இல்லை. அதுவே வேதத்தின் அந்தம். வேதாந்தம் அதே போல் நாதமும் மவுனத்தை அடைந்த பின் தேவை இல்லை. அந்த நிலையே நாதாந்தம். நாதத்தின் முடிவில் நல்லான் இருப்பதும், ஆதி சக்தி (நாதம்) அதற்கு மேல் பராசக்தி. அது பரத்துக்கு சமமான நிலை பராபரம். அதையே நல்லான் என்பது. நாதத்தின் முடிவில் நல்யோகம். நாதத்தின் முடிவில் நஞ்சுண்ட கண்டன். வரும் ஆதி ஈரெட்டு. ஆகாய தத்துவம் (நாநா சீர்வாத கட்டளை) பார்க்க. வருமாதி ஈரெட்டுள் பொருவாத புந்தி புலன் போக மேவர் உருவான சத்தி பரத்தை தியானம் பண்ணும். அதன் நோக்கம் குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே.

அருள் பெற்றவர் சொல்ல வாரீர் மனிதர்
பொருள் பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி அருமை
பொருளுற்ற சேவடி போற்று வேன்நானே 1047

இத்தகைய திருவடி உணர்வு பெற்றவர் மனிதருள் தெய்வம். நன்னெறி எய்தாத ஏனைய உயிர் இனங்களுக்கு உண்மை நெறியை புலப்படுத்துபவர் புவனாபதியார். எதை எதையோ. கடவுள் என்று நம்பி ஏமாறுகிறார்கள். சொல்லை பிறர்க்கு எடுத்து உரைக்க. பொருள் (இன்ப விளக்கம்).

ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோர்
ஏனை உழு படை ஏந்திய வெண்ணகை
ஊனம் அற உணர்ந்தோர் உறத்து ஓங்குமே. 1048

வராகம் என்றால் பன்றி. விஷ்ணுவின் அவதாரங்களில் பன்றியும் ஒன்று. அவதாரம் என்பது விஷ்ணுவின் எண்ணம் என்றே பொருள். அதாவது விஷ்ணு விஷ்ணுவாகத் தான் இருப்பார். அவருடைய எண்ணமே அவதாரம் என்பது. நீர் தத்துவமே விஷ்ணு. அது எங்கும் வியாபித்துள்ள நீர் அணு. அது பொது. அந்த நீரே மேகமாக, மழையாக, கடலாக, ஆறாக, கிணறாக மாறலாம். அந்த நீர் எதைச் சாருகிறதோ அதன் பெயரும், ரூபமுமே மாயை என்பது. அது நிலை பெறாதது. ஆனால் நீர் அணுவின் அணு என்றும் நிலை பெற்றதாகும். அதுபோல் பன்றி ரூபத்தில் இருந்த அசுரர் (அசுத்த மாயை) வேதங்களை தூக்கிக் கொண்டு போய் கடலில் மறைத்தார். அதை மீண்டும் கொண்டு வர பன்றிக்கு பன்றியே அதற்கு ஈடு ஆகும். ஆகையால் அந்த ரூபத்தை நினைத்தால், அந்த நினைவு (சுத்த மாயை) பன்றியாகி, அறியாமைப் பன்றியை கொன்று வென்றது. இதை நாம் அறியாமல் விஷ்ணுவை வணங்காமல் பன்றி ரூபத்தை வணங்கக் கூடாது. இதே போல் நிலை பெற்றதை விட்டுவிட்டு அதன் நிழல்களை தெய்வமாகக் கொள்ள கூடாது. மனிதனும் நிழல் தான். அதனால் மனிதர்களை பாராட்ட வேண்டாம். ஆனால் அறிவு பாராட்டப்பட வேண்டும். அது எட்டு நிலையாகும். இயற்கை உழு படை போன்ற (உழவாரப் படை) வெண்பன்றி முகத்தினள். அதற்கு ஒத்த திருவடியினள். வராக முகத்தில் வராகி. ஈனவர் –

இழி குணம் உடையோர். முசலம் இரும்பு உலக்கை. நன்னெறி செல்லாது புன்னெறி செல்லும் புரையோரை நன்னெறிப்படுத்தும் பொருட்டு அவர்தம் உடம்பினை இடித்து ஒறுக்கும் இரும்பு உலக்கையை உடையவள். நன்மைக்கு அடையாளமாக உழுபடையாகிய ஏர் போன்றதை கையில் உடையவள். இவை எல்லாம் கற்பனை உருவகம். உள்ளச் செய்யை உழவு செய்ய வல்லார்கட்கு எண்ண செய்விளைந்தது தானே.

ஒங்காரி என்பாள் அவள் ஒரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரியாகியே ஐவரை பெற்றிட்டு
இரீங்காரத்துள்ளே இனிது இருந்தாளே. 1049

''ஓம்'' என்ற பிரணவ ஒலியே ஒங்காரம். எது ஒன்று வெளியே தள்ளப்படுகிறதோ அதை நாம் ஒங்கரிக்கிறது என்கிறோம். அதுபோல் சப்தம் என்பது ஆகாயத்தின் வெளிப்பாடு. அதன் நிறம் ஈரப்பசையோடு இருப்பதால் பச்சையாக இருக்கும். அதை பச்பந்தி என்பது. இது நாதத்தின் இரண்டாவது நிலை. பரை, பச்பந்தி, மத்யமா, வைகரி என்பது நாலு நிலை. எழுச்சி உடையவளாய் அருளோன், ஆண்டான் அரன், அரி அயன் என்னும் ஐவர் நிலைகளையும் படைத்து ஐவரையும் தொழில்படுத்தும் ஆற்றல். ஐந்து பேர் அறிவும் கண்களே கொள அளப்பரும். கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக. இரீங்காரம் என்பது முதல் ஒலி. வண்டின் சப்தம் போல் கேட்கும். கவனியுங்கள். அதையே வித்து, விந்து என்பது. ஆங்காரி – எழுச்சியுடையவள். எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். எழுத்தறிவித்தவர் இறைவனாகும்.

தானே தலைவி என்ற தற்பரை
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமும் மனமும் நற்புத்தியும்
தானே சிவகதி தன்மையுமாமே. 1050

தானே தலைவி என வெளிப்பட்டு உலகியலில் நின்று அருளும் திருவருள் தற்பரையாவாள். அதையே ஆதிசக்தி என்கிறோம். இவள் நமவசிவய மந்திரத்தில் நடப்பாற்றலாகிய 'ந'கரத்தின் முதல்வி. ஆருயிர்கள் தம்தம் வினைக்கு ஈடாக பிறந்து உழலும் உலகங்கள் பதிநாலு. ஒலியுடன் கூடியது ஏழு. ஒளியுடன் கூடியது ஏழு. இதை பாதாளம், மேல் தாணம் என்பர். அது உடலும் முகமும் ஆகும். பள்ளச்செய் இரண்டு உண்டு. அதை பாடம் செய்பவனே பராசக்தி. இந்தப் பதினாலு லோகமும் அவள் அருள் ஆணையின் படியே தான் நடைபெறுகின்றன. ஆதால் அத்திரு அருளையே உயிர் வித்தாகக் கொள்வர். வித்தாவது எல்லாம் உள்ளம். உள்ளம் என்பதே அகம். அகத்தின் அழகு முகத்தில். இடம் - கண். சிவ உலகங்களும் மனம் இருப்பாகிய நற்புத்தியும் (நந்தி) அத்திருவருள் ஆணை வழி நின்று திகழ்கின்றன. இரண்டாம் எழுத்து (சிவய) ஆகிய வனப்பாற்றல் வகரத்தில் தான் முதலில் விளங்குகின்றன. வீட்டியலில் ஆருயிர்களை சிவத்துடன் கூட்டி இன்புறுத்தி இன்பம் தரும். சிவத்துக்குப் பின் இரண்டாவது இயக்கம் 'வ' காரம்.

இஃது திரிபுர சக்கரத்தில் கடைசி பாட்டு. அடுத்து வருவது வயிரவி மந்திரம். 50 பாடல் ஓசை, ஒளி, வடிவம் (வரி வடிவம்)

4/6 வயிரவி மந்திரம்

பன்னிரண்டாம் கலை ஆதி பயிரவி
தன்னில் அகாரமும் மகாரமும் கற்பித்து
பன்னிரண்டு ஆதியோடு அந்தம் பதினாலும்
சொன்னிலை சோடச மந்திரம் என்று ஓதிடே. 1051

பன்னிரண்டு கலையான ஆதி வயிரவி இடம் இருந்து அகாரமாகிய ஓசையும் மாயையாகிய ஒளியும் கூட்டி நினைந்து நோக்கக் கலை பதினான்கு ஆகும். அது அருள் அம்மையின் இருப்பிடம். சந்திரன் அல்லது திங்கள், அல்லது மனம் அல்லது உள்ளம். அதனின் கலை பதினாறு. செல்வியின் சிறந்த இருப்பிடம். ஓசை + ஒலி வடிவம். ஒளி - வரி வடிவம். சோடசம் பதினாறு. சோமன் - சந்திரன்.

அந்தம் பதிநாலும் அதுவே வயிரவி
முந்து நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தை கமலத்து எழுகின்ற மா சத்தி
அந்தமும் ஆதியும் ஆகி நின்றாளே. 1052

வயிரவியின் இருப்பிடம் முன் ஓதிய பதினான்கு கலைகளுடன் முதல் நடு இறுதியாகத் திகழ்பவள். காலை, மத்தியானம், இரவு நிலைகள். இந்த மூன்றும் மூன்றாக ஒன்பது நிலை. இளம் காலை, நடு, காலையின் முடிவு. இதுபோல் மற்றைய இரண்டிலும் ஒன்பது. இந்த மூன்று நிலையும் ஏற்படும் இடம் கண்களிலே. விழிப்பு, கனவு, தூக்கம். இந்த அநுபவம் அங்கே தான் ஏற்படுகின்றன. படைப்பு, அழிப்பு, 'ஆதியும் அதைக் கண்ட சிவனும் என் கண் அன்றி இல்லையே'.

ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வழிச் சாரார் கதிர் பெறப்
போகும் திரிபுரை புண்ணியத்தோரே. 1053

வயிரவியாகிய பேராற்றலினிடத்துப் படைப்போர் (பிரமன்) காப்போன் (மால்), துடைப்போன் (ருத்திரர்) ஆகிய முத்தேவரும் அடங்குவர். தோன்றி மறையும் மண் முதல் பூதங்கள் அங்கே ஒடுங்கும். இப்பூத அணுக்களுடன் இசைந்து முன் அநுபவம் பழைய வினை. அதற்கீடாக இப்பொழுது பிறந்து தொடருகிறவர். உண்மை உணர்ந்த உயிர்கள் பழைய நினைவுகளை (சஞ்சிதம்) ஒழித்து கட்டி, முன்னேற்றப் பாதையில் அதாவது நெருப்போடு இணைந்து ஒளியாவதே வயிரவி. அது உள் நின்ற போகம்.

புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்து ஏழ் சூழ்மதி.
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தை தன் தென்னனுமாமே. 1054

அன்பாகிய சிவனின் நோக்கம் எல்லா உயிர்களுக்கும் இன்பம் அளிப்பதே. அதனால் அவன் புண்ணியன். புகுந்து நீயாக இருப்பவன். அதுவே நீயானால் தத்துவம் - அசி என்பதின் பொருள். ஆக்க நிலைக்களம் ஆதலின் நந்தி என்பர். அதுவே புத்தி - இருப்புணர்வு. குறைவிலா நிறை செல்வன். அதனால் திருவாகும். விண்மீனாகிய நக்ஷத்திரம் இருப்பத்தேழும் சந்திரன் சக்திகளாக அவனைச் சூழ்ந்து உள்ளன. எல்லாமே நட்சத்திரம். சந்திரன், சூரியனில் அடங்கி அதுவும் ஆகாயத்தில் அடங்கி, ஆகாயம் வெட்ட வெளியில் அடங்கும். இதுவே தெளிவான நிலை. தென்னன் - அதுவே பேரறிவுப் பொருள். அவனை அடைந்தால் எல்லாம் திரு ஆகும். நாள் - மீன், நட்சத்திரம். தென்னன் - சிவன். தென்னாடு உடைய சிவன்.

தென்னன் திருநந்தி சேவகன் தன்னொடும்
பொன்னங்கிரியில் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி அந்தம் பகவானோடு
உன்னும் திரிபுரை ஓதி நின்றானுக்கே. 1055

'அன்புக்கு அடைக்கும் தாழ் கிடையாது'. 'அன்பிலாதார் எலும்பு தோல் போர்த்த உடம்பு'. 'அன்பும் அறனும் உடைத் தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'. அவனை அழகன் சிவம் என்கிறோம். அவன் திருநந்தியின் காவலன். நம் கண் தான் நமக்கு காவல். தலைக் காவல் முன் வைத்து அது தன் என்ற நீரையும் துணை வைத்தான். அதை பிடி (பெண் யானை என்பர்) அதன் உரு உமைகொள என்றார். நீருடன் சேர்ந்த நெருப்பு கருமையாக இருக்கும். அந்தக் கண்ணின் கருமணியை - மணியாடு பாவை நம் ஈசனை உள் நின்று உணரவல்லார் (உமை) ஒருவர்க்கு விண் நின்று தாரும் அதுவும் வெளி கடந்து எண்ணின் பரிசாகி எண்குணமுமாமே. கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை. 'தலையே நீ வணங்காய். கண் காள் காண்மின்களோ / கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை. நெஞ்சே நீ நினையாய் நிமிர் புஞ்சடை நின்மலனை''.

ஓதிய நந்தி உணரும் திருவருள்
நீதியில் வேதநெறி வந்து உரை செய்யும்
போதம் இருபத்தி ஏழு நாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம் வந்து ஆளுமே. 1056

மறைகளை நிந்தனை செய்யாமல், சைவத்தை நிந்தனை செய்யாமல் (அதாவது நமக்கு அநுபவம் இல்லாததை இல்லை யென்று சொல்வது, அதுபோல் சைவம் என்பது சமநிலை - அதுவும் இல்லை) என்று சொல்லக்கூடாது. மறைபொருள்களை அறிய முயற்சி செய்வதே தவம். முயற்சி உடையவருக்கு திருஅருள் துணை செய்யும். அவன் அருள் செய்ய காத்து நிற்கிறான். அருவமாக இருந்து (மறைபொருள்) அருளினன். அப்படி அருள் இருக்குமிடம் கோயில். உள்ளம் பெரும் கோயில். உள்ளம் என்பது அகம். அகத்தின் அழகு முகம். முகத்தில் கண் - பதி இருக்கும் இடம். கண் அவன் - கணவன். இதை விட விளக்கம் என்ன சொல்ல?

சூலம் கபாலம் கை ஏந்திய சூலிக்கு
நாலு அங்கரமுள நாக பாசாங்குசம்
மால், அயன் அறியாத வடிவுக்கு
மேல் அங்கமாய் நின்ற மெல்லியலாளே. 1057

சூலம் என்றாலே - எழுச்சி பெற்ற மாறுபட்ட தோற்றம் அது மூன்றாக நாதம், விந்து, கலை ஆக இருக்கும். அது க + பால் + ம் = கபாலம் எனப்படும். அதுவே மூன்றும் காற்று. பாலம் போல் மாயை பிரம கபாலம் ஆகிறது. கை என்பது ஐந்து விதமான நிறம் கண்கள். 'சி'காரம் இவை எல்லாம் காற்று. அனல் நீரால் ஆன கபாலி. நாலு அந்தக் கரணம் - மனம், புத்தி, சித்தம், அகம். நாகம் என்பது சுழுமுனா நாடி. சுவாசம் முனைப்புடன் எழுச்சி பெற்று பாம்பு போல் வளைந்து வளைந்து செல்லும் பாசக் கயிறு. பாசா அங்குசம். இது மால் (நீர் சக்தி ஜீவன்) அயன் (மண் சக்தி) என்ற இரண்டுமே அறியாத சிவனால் படைக்கப்பட்டது. இது

ஜீவபோதம். இப்படி அயன், அரிஅரன் மூன்றுக்கும் இச்சை செயல் அறிவை இயற்றலால் இலய போக அதிகாரப் பொருளாகி ஏகத்து உருவும், அருவும். அருவுருவும் ஆனவள் சத்தி - வயிரவி. தன் கையில் திகழும் முத்தலை வேலாகிய சூலத்தால் உலகனைத்தையும் காத்து அருளுவாள் நீதியில் - நெறி முறையில். இதை எல்லாம் அறிபவன் நந்தியாகிய சிவன்.

மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்று சே இழை
கல்லியல் ஒப்பது காணும் திருமேனி
பல்லியல் ஆடையும் பன்மணிதானே. 1058

இயற்கையில் மென்மையான குணம் உள்ளவள். சாத்வீகமே உருவானவள். அதுவே அருள் வடிவம். ஆனால் ஆருயிர்களை அதனதன் வினைக்கீடாக இஷ்டம் போல் ஆடவும் விட்டு ஆனால் அது நிறைவு பெறாமல் வஞ்சித்து, தண்டித்து, ஒடுக்கும் கல் இயல்பும் ஆனவள். தண்டிப்பதில் பாரபக்ஷம் கிடையாது. அப்பொழுது நவகாளி. அதே சமயம் திருவடி உணர்வு பெற்ற கலைஞானிகள் ஓதுவது போல் (ஓதுதல் என்பது விரிவு, விசாலம்) முள்முருக்கம்பூ நிறம் போன்ற நிலைத்த செம்மை நிறம் உடையவள். இது இரஜஸ் குணம். வெண்மை சாத்வீகம். மாணிக்க மணியொத்த செம்மை. பல மணிகள் சேர் பொன்னாடை உடையவள். பொன் என்பது அறிவைக் குறிக்கும். அது பல பல ஆபரணங்களாக மாறி அணி செய்கின்றன. அதே நேரத்தில் தண்டிப்பவளும் கூட. அப்பொழுது கல் போன்ற மனமுடையவள். தன் சொந்த மகனான நரகாசூரனை அழித்தவள் - பாமா. வேலனுக்கு வேல் கொடுத்தாள். பத்மா சூரனை மோகினியாக வந்து அழித்தாள். மகிஷாசூரனை அழிக்க தானே மகிஷமானாள். தண்டிக்கும் போது துர்க்கை கருப்பு நிறம். விடம் - நியமத்தை கடைபிடிப்பவள்.

பன் மண் சந்திர கோடி திருவடி
சொல் மணி குண்டலக்காதி உழைக் கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தாள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின்றாளே. 1059

சூரிய ஒளியின் வெப்பக்காற்றே சந்திரன் - நம்மிடம் மனம். மனதின் ஆட்டம் எல்லாம் கபாலத்தின் மேல் உரோமத்தோடு சரி. அது உள் இருக்கும் வரை தான் உயிர், உணர்வாக இருக்கும். அது வெளியாகி விட்டால் உணர்வும் கிடையாது. உயிரும் கிடையாது. நகம், மூடி, தோல் இவைகள் எல்லாம் வெட்டப் பட்டாலும் வலிப்பதில்லை. சத்துப் போனால் செத்துப் போனவை. அதனாலேயே குழந்தை பிறந்ததை பிரசவம் என்கிறோம். அதனாலேயே தோற்றம் எல்லாம் பொய் என்பது. ஆனால் சொல் என்பது சூட்சும ஓசை. சொல் என்றால் அதில் பொருள் இருக்கும். அது உடலை விட மென்மை. அவள் நம்மிடம் காதில் கேள்வி ஞானமாக இருக்கிறாள். அதையே குண்டலினி - குண்டலக்காதி உழைக்கண்ணி. முதல் நிலை ஒளி அதன் பிரதிபலிப்பு காது. பார்வை முதல் பூதம். வலது கண் அறிவு சூரியன். இடக்கண் சந்திரன். இவை இரண்டும் கலந்து நெற்றிக் கண் அக்னி. அது மறைபொருள். அந்த வெப்பக் காற்று உடல் எல்லாம் பூரிக்க வைக்கிறது. (தனஞ்செயன்). கோடி - முடிவு. உழை - மான் மாயை. நயனம் - கண் பூ உலக வெளிப்பார்வை. வன்னி - தீக்காற்று. பூரித்தல் - களிப்புறுதல்.

பூரித்த பூ இதழ் எட்டினுக்குள்ளே ஓர்
ஆரியத் தாள் உண்டு அங்கு எண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சத்தியைத் தாங்கள் கண்டாரே. 1060

எப்படி ஆராய்ச்சிப் பண்ணினாலும் எட்டு அறிவுகளே உண்டு. அவை, இடம், பொருள், ஏவல் என்று மூன்று கொண்ட சத்திகள். எட்டும் மூன்றும் பெருகினால் இருபத்தி நாலாகும். இதையே ஜீவதத்துவம் என்கிறோம். அது உண்மையான நிலை அல்ல.

இந்த எட்டும் அறு ஆகி, அறு நாளில் மடங்கும். ஆனால் எட்டின் விரிவு எட்டு எட்டே அறுபத்தி நாலாக பெருகுவது உலகியியல் அறு பத்து நாலு. அது நாலாகி, இரண்டாகி, ஒன்றாகி ஒன்றும் இல்லாமல் போவது விடுதலை. எது தேவை என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

கண்ட சிலம்பு வளை சங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசக்தி
அண்டமொடு எண்டிசை தாங்கும் அருட்செல்வி
புண்டரிகத்தினுள் பூசனையாளே. 1061

கண்ட என்று தான் இருக்கிறது. சிலம்பு என்பது ஒலிப்பது சிலம்பொலி. முதல் சப்தம் கண்ணில்தான் வரும். அது காணத்தான் முடியும் பேசாது. இதைத் தான் கண்டவர் விண்டதில்லை என்பது. சிலம்பு மட்டும் அல்ல. வளை (வட்டம்) சங்கு, சக்கரம், ஆக ஐந்து பேர் அறிவும் கண் கொள்கிறது. ஆனால் பராசக்தி எட்டுத் திசையும் பரந்து பொது நிலையில் உள்ளது. அது மட்டுமல்ல பல்வேறு அண்டங்களையும் பலவேறு திசைகளையும் படைத்து தான் தோன்றியான ஆருயிர்களை அளித்து, காத்து வரும் திருஅருள்செல்வி. வளை - வலம்புரி. யோகி - நிறைந்திருப்பவன். புண்டரீகம் - தாமரை. கண்ட - பொறுக்கி எடுத்த.

பூசனை, கந்தம் புனை மலர்மா கோடி
யோசனை பஞ்சத்து ஒலி வந்து உரை செய்யும்
வாசமிலாத மணி மந்திர யோகம்
தேசம் திகழும் திரிபுரை தானே. 1062

யோசனை - காத தூரம் - எட்டு மைல், பஞ்சத்தொலி - எட்டுத் திசையும் கேட்கும் ஓம் என்ற ஒலி. கடல் யானை, வளை, சங்கு ஆகிய ஐந்து ஒலிகள். வாசமில்லாத - சொல்லற்கரிய. தேசம்

- தேஜஸ் ஒளி, யோகம் - கூட்டம், கோடி - புத்தாடை வழி பாட்டிற்குரிய மணப் பொருள்கள். எதை நோக்கி யாத்திரையோ அதற்குரிய சாதனங்கள். சன்மார்க்க நெறி - சுத்தத்தை நோக்கி, சுதந்திரத்தை நோக்கி, சுகத்தை நோக்கி அமைவதே வாழ்க்கைப் பாதை. தேவை மணமுள்ள பூக்கள் என்றால் நல்ல எண்ணங்கள், புத்தாடை என்பது அந்த எண்ணம் ஊடும் பாவுமாகி ஒரு பரந்த நிலை. அது நூல் போல் நீண்ட தூரம் நீளக் கூடியதாக இருந்தால் தூரப்பார்வை, வான் ஒலி கேட்கலாம். மண்ணிலிருந்து விண் வரை ஒரே கோடு மேல் அம்பு இருந்தால் எல்லாம் இருந்த இடத்திலிருந்தே கேட்கலாம். இப்படி ஆனவள் திரிபுரை. உலகாணி ஒண் சுடர் உத்தம சித்தன் நிலை - வாணி ஐந்தில் உள் நேருற நிற்கும் நேர் இழையாள். அன்பினது இழை போலே.

காணும் பல பல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பல பல பொன் போலத் தோற்றிடும்
பேணும் சிவனும் பிரமனும் மாயனும்
காணும் தலைவி நற் காரணி தானே 1063

உலகம் பலவிதமாக தோன்றலாம். உருவத்தில், குணத்தில், தரத்தில், செயலில், மணத்தில், படைத்தல், காத்தல், துடைத்தல் இவைகளுக்குத் தனித்தனி தலைவர்கள் பிரமன், மாயன், அரண் என்பது எல்லாம் தோற்ற அளவில் இருக்கலாம். ஆனால் எல்லாம் பராசக்தியின் எண்ணமே. முதல் காரமீ அம்மையாகும். அம்மை அப்பன். பரத்தின் - பரை. மூலப்பொருள் அம்மையும் அப்பனுமே. இதை அறியாத வரை வேறுபாடுகள் துன்பத்தையே தரும்.

காரணி மந்திரம் ஓதும் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திட
நாரணி நந்தி நடு அங்கு உரைசெய்த
ஆரண வேத நூல் அந்தமுமாமே. 1064

இந்த உலகம், உலகியல், உயிரியர் இதற்கெல்லாம் என்ன காரணம்? ஆற்றலே தான் காரணம். அதாவது அவளே தான் காரணம். அதை முடிப்பவளும் அவளே. பூரணி நடுவின் 'நான்' யார்? ஆகவே ஆக்கப்பட்ட ஆரவாரங்கள் ஏன்? ஆதிமந்திரம் அஞ்செழுத்து. அதன் காரணத்தை அறிந்து இடையறாது ஓதும் மெய்யடியார்கள் நெஞ்சத்தாமரையின் கண், உட்கொள்தல் (பூரகம்), நிறுத்தல் (கும்பகம்) விடுதல் (விரேசகம்) இது பிராணமய கோசம். இந்த பயிற்சிக்கு உதவுபவன் திரு அருளம்மை. அங்கணம் எழுச்சி பெறும் போது நாரணீ என்ற பெயர். சிவன் அருளிச் செய்த வேதத்தை (நால்வருக்கு போதித்தது - சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர்) எல்லோருக்கும் பயன்படச் செய்ய உதவுபவள் அவளே. பூரண, ரேசகம், கும்பகம் காற்றுக்கு மட்டும் அல்ல. ஒளி, ஒலி, நெருப்பு, நீர், மண் எல்லாவற்றிற்கும் மூலம் அவளே.

அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி உரை செயும்
செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நலம் உரைத் தானே. 1065

நம் தோற்றத்திலிருக்கும் கை விரல்களை சுட்டிக் காட்டும். இது அதன் குறி என்று சொல்லும் பாட்டு. ஐந்து விரல்களில் நடுவிரல் நீளமாக உள்ளது. அது சனி விரல் என்று அழைப்பர். அது எதற்குமே பயன்படாது. அதை நோக்கித் தான் ஆயுள் ரேகை அமைந்திருக்கும். இது அறியாமையை குறிக்கும். நம்மில் பெருவிரல் இருக்கிறதே அது சுக்கிரவிரல் என்பர். அதாவது சுக்கிலத்திலிருந்தே எல்லா உயிரும் பிறவி எடுக்கிறது. அதில் நீர் அதிகமாகவும் நெருப்பும் காற்றும் குறைவாக உள்ள ஒரு சக்தி. அது அசுத்தமானது. நீருடன் சேர்ந்து கழிவு பொருளாக வெளியத் தள்ளும் அங்கத்திலிருந்து வருவது. நம் வீடுகளில் (நெல்லை மாவட்டத்தில்) அங்கனாக்குழி என்பர். அதாவது பாத்திரங்கள் கழுவப்பட்டு அதை வெளியேற்றும் அங்கம். அதுபோல் உடலில்

உள்ள அழுக்குகள் கழுவப்பட்டு வெளியேற்றப்படும் பாதை ஆண்குறி பெண்குறி. அந்தச் சாக்கடையில் பிறந்தவரே நாம். அதைப் பேய் மூலாதாரம் என்று சொல்லுகிறார்களே! வந்த வழி முறை மாறி உரை செய்யும். அதை மறுத்து, செந்தமிழ் ஆதி எழுத்து - 'அ'. அறிவே மூல ஆதாரம் என்று கொள் என்கிறார். ஆதலே சுக்கிர விரலாகிய பெருவிரலை, நாலாவது விரலாகிய குரு விரல் (தேவ குரு) அதற்கு கீழ் பெருவிரலை ஒன்றாக்கினால் நடுவில் ஒரு வட்டம் ஏற்படும். இவை இரண்டும் ஒன்றானால் மற்றைய சனி, சூரியன், புத்தி தானாகவே அடங்கிவிடும். ஐந்தும் அடங்கினால் கை முஷ்டி ஆகும். அது பலம் பெறும் ஐந்தும் ஒற்றுமையானால் எதையும் எதிர்க்கும் சக்தி கிடைக்கும். ஐந்து பேர் அறிவும் கண்களே கொள என்பதின் பொருள் இது தான். நான்கு பசுக்கள் சிங்கத்தை எதிர்த்த கதை இது தான். பொறி வாயில் ஐந்துவித்தான் பொய் தீர் ஒழுக்கம் நெறி நின்றார் நீடு வாழ்வர். உடல், மனம், அறிவின் ஒற்றுமை தியானம்.

உரைத்த நவசக்தி ஒன்று முடிய
நிரைத்த விராசி நெடுமுறை எண்ணி
பிரைச்சதம் எட்டு முன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமம் செய்தானே. 1066

உடலுக்கு ஆதாரம் ஆகாரம். அது அறு சுவையில் முடியும். அறு ஆதாரம். மனதுக்கு ஆதாரம் ஐந்தும் அத்துடன் அந்தக்கரணம் நான்கும் சேர ஒன்பது. ஒன்பதும் பெருகினால் எண்பத்து ஒண்ணு, இது உலகியல். அந்தக் கரணம் நாலும் ஒலியானால் மூன்றாகும். 'ஓம்'. அது இரண்டானால் ஒலி, ஒளி. அது வெளியானால் ஒன்று. ஆதலே இச்சை, செயல் அறிவாவது உள்முக பயிற்சி. அதுவே இலய போகம் அதிகாரப் பொருள் ஆகும். எட்டு என்பது நின்ற நிலை மனித நிலை. அதன் நெறிமுறை எட்டு, பனிரெண்டு பதினாறு - சோடசன்மார்க்கம்.

தாமக் குழலி தயைக் கண்ணி உள் நின்ற
வேமத் திருள் அற வீசும் இளம் கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள்எழு நுண் புகை
மேவி அமுதொடு மீண்டது தானே. 1067

தாமதமாக (வேகம் குறைந்து) குழலி என்றால் குழல் போன்ற துவாரத்தில் செல்லும் காற்று (பூரகம்) உள் நின்ற கும்பகம் அது வேமம் (நெருப்போடு) சேர்ந்து ஆவி ரூபமாகும் அதை இளம்கொடி என்றார். அதுமேல் எழு புகை போல படரும். ஆவியின் மேல் நீர் தெளித்தால் மறுபடி சுத்தமான நீராகும். அதுதான் நமக்கு ஜீவசக்தி. சுத்தமாயை மழை நீர் போல உள் எழு நுண்புகை - பிராணன். உள் நின்ற ஏமத்து இருள் - அஞ்ஞானம். ஓமப் பெரும் சுடர் - கண்ணில் உள்ள நெருப்பு.

காணும் இருதய மந்திரமும் கண்டு
பேணும் நமவென்று பேசும் தலை மேலே
வேலை நடுவு மிக நின்ற ஆகுதி
பூணு நடு என்ற அந்தம் சிகையே. 1068

இரு உதயம் - வலக்கண் சூரியன், இடக்கண் - சந்திரன் மந்திரம் என்பது சுருக்கெழுத்து. நிறைமொழி மாந்தர் சொல். மனதின் திறம். உடல் வேகத்தை விட அதிகம். அந்த ஆவி ரூபமே நம்மை நான் என்ற எண்ணத்தை (ஆணவம்) உண்டு பண்ணும் ஆணி வேர் ஆகிறது. சூரியனும் சந்திரனும் சேர ஆகுதி - அக்னி கலை உண்டாகிறது. அது ஆண் - பெண் குறியிலிருந்து சிரசு வரை தோன்றும் நடுநாடியாகும். உள்ளத்தை பெரும் கோவிலாகக் கண்டு மணமணி இலிங்கத்தை நமசிவய என்று வழிபட்டு நடுநாடி வழியாக உயிர்ப்பு அடக்குதலை ஆவியாக்கி முடிவில் கொண்டை போல் கருதுக - அதை சிகை (நெருப்பின் கை) வேணு - நடுநாடி தலை - முடிவு.

சிகை நின்ற அந்தக் கவசம் கொண்டு ஆதிம்
பகை நின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகை நின்ற நேத்திர முத்திரை சூலம்
வகை நின்ற யோனி வருத்தலுமாமே. 1069

முத்திரை என்பது விரல்களால் காட்டும் அறிகுறியாகும். அறிவுதான் மூலாதாரம் என்பதை விளங்கும் கவசம் என்பதை ஓதி உடம்பினை காத்தருளென்று வேண்டுக. அறிவுப் பொறிகளாகிய ஞானேந்திரியங்களை குறிப்பிட்டு பேசுங்கள். அறிவுப் பொறி. சின்முத்திரை இதைப் பெருவிரலை கடவுளாகவும் ஆள்காட்டி விரலையும் ஒன்றாய் பிரிப்பின்றி புணர்ந்து அமைந்து நிற்க மற்றைய மூன்று விரல்களும் அகன்று நிற்பது. பெருவிரல் ஆண்டவனாகவும், ஆள்காட்டி விரல் அடிமையாகவும் கொள்வர். ஆகையால் உடலின் கழிவுப் பகுதியான ஆண்குறி / பெண் குறியை மூலாதாரம் என்று சொல்ல வேண்டாம் என்கிறார் திருமூலர். இருதாயய நம, சிரசே நம, சிகாய நம, கவசாய நம, நேத்திராயய நம, பகை நின்ற அங்கம் - அத்திராயய நம என்று ஆறு இடத்தை குறிப்பிடும் திருமந்திரம் இது.

வருத்த மிரண்டும் சிறு விரல் மாறில்
பொருத்தி அணி விரல் சுட்டிப் பிடித்து
நெரித் தொன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரல் இரண்டுள் புக்குப் பேசே. 1070

சூலம் யோனி என்னும் முத்திரைகள் பற்றி முன்பே கை முஷ்டி போன்ற அமைப்பு என்று சிந்தித்திருக்கிறோம். இது ஞானேந்திரியங்களில் நம் கண்களையே குறிப்பிடும். கண் விழித்தல் என்பது விரிவு நிலை, கண் மூடினால் அது குவிந்த நிலை. இந்த விரிதலும் குவிதலும் இல்லாத நடுநிலை ஒன்று உண்டு. ஐந்து பேர் அறிவு மிருக நிலை. விலங்கு மனத்தை அடக்கி மனித மணமாக மாற்றுவதே ஆறு அறிவு பெற்ற மனித நிலை. பகிர்முகம் அகமுகமாவதே மனித நிலை. அடக்கம்

அமரருள் உய்க்கும். இமை ஆடாதவர் தேவர்கள். உள் இமை கட்டுமின், காண்மின், விடியாமை காக்கும் விளக்கதுவாமே. நம் பெருவிரல் சுக்கிரவிரல். அது அசுர குருவை குறிப்பிடும். ஆகவே அதை அடக்க ஏற்பட்டதே ஏனைய நான்கு விரல்களும்.

பேசிய மந்திரம் 'இ' காரம் பிரித்து உரை
கூசமிலாத சகாரத்தை முன் கொண்டு
வாசிப் பிராணன் உபதேச மாகைக்கு
கூசிய விந்துவுடன் கொண்டு கூவே. 1071

'இ' கரம் என்பது இச்சா சக்தி. ஆசையைத் தூண்டும் சக்தி. அது இரண்டு வகையாகும். உலகியலை நோக்கத் தூண்டுவது துன்மார்க்கம். அது பிரவிர்த்தி மார்க்கம். அதிலிருந்து நீக்கத்தை தூண்டுவது நிவர்த்திமார்க்கம் அது சன்மார்க்கம். இதை 'ச' கரம் என்பது சத்தி. ஆற்றல். அது கீழேயும் (உருவக்கவர்ச்சி) நோங்கும் மேலே (அருவக் கவர்ச்சி)யும் நோங்கும் ஆவி. விந்து என்பது விண்ணை நோக்கிய எழுச்சி. நினைவு ஓசை. அந்த சகரத்தின் மேல் இகரத்தை (இச்சை) கூசிய விந்துவுடன் மகரத்தையும் கூட்டினால் (ச்+இ+ம்) சிம் என்று ஆகும். இஃது உயிர்ப்பு சக்தியின் பழக்கமாக வேண்டும். பேசிய மந்திரம் 'சி' நெருப்பு. இது உட்பிராணாயாமம் சித்திக்கும் முறை.

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணும் யகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்ந்து நின்றாளே 1072

கூவிய - சொன்ன, உருப்போட்ட, சம்-சவ்வுடன் மகரம். அகமுக பயிற்சிக்கு சிம் என்ற மந்திரம் பரந்து செல்லும் ஓசையுடன் சேர ச + ம். சம்மென்று ஆகும். இதனை சங்கு நாதம் என்பர். இந்தக் குறி அருள் (அருவசத்தி) அம்மை இருப்பிடமாகும். அம் அம் - ஓம் ஆகும் போது நாதாந்தம்.

நின்ற வயிரவி நீலி நிசா சரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்து
சென்று அருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்று அருள் ஞாலத்து நாடிடும் சாற்றியே. 1073

நிசா + சரி = நிசி சரி. இரவில் சஞ்சரிப்பவள். பேர் ஊழிக்காலத்து சந்திரர், சூரியர், கெட்டு இருக்கும் நிலை பெற்ற இருளில் உள்ளவள். இருட்டுள் இருந்த குமரி. வயிரவியின் நிறம் நீல நிறம். அன்பு அறிவு ஆற்றல் மூன்றும் இறைவியின் திருவடியில் முறையே ஒடுங்கப் பெற்ற மெய்யடியார்கள் தம் உள்ளத்து விரைந்து சென்று அருளும் முதல்வி. பேரொடுக்கத்தின் பின்னும் நிலைத்து இருப்பவள்.

சாற்றிய வேதம் சராசரம் ஐம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி
தோற்றும் உயிர் பன்மை சோதி பராபரை
ஆற்றல் ஓடு ஆய் நிற்கும் ஆதி முதல்வியே. 1074

உலகின் கண் உள்ள சரம் அசரம் முதலிய பொருள்களும் வேதங்களும் ஆகமங்களும் உலகங்களும் உயிர்களும் எல்லாம் சத்தி சொரூபம். சத்திதான் என்றும் சமைந்து உருவாகும்.

ஆதி வயிரவி கன்னித்துறை மன்னி
ஓதி உணரில் உடல் உயிர் ஈசனாம்
பேதை உலகிற் பிறவிகள் நாசமாம்
ஓத உலவாது கோலம் ஒன்றாகுமே. 1075

ஆதி சக்தி என்று சொல்லப்படும் முதல் ஆற்றல் என்றுமே கன்னி தான். உண்ணாமுலையள் அபிராமி. பின்னம் இல்லாத சுத்த மாயை, அதனால் தான் பார்வதி என்றும் வயிற்றில் கருவுற்று பிள்ளைகளை பெற்றதாக புராணங்கள் கிடையாது. ஆனால் கருவின்றி, உருவின்றி உருவத்தை நினைத்த

மாத்திரத்தில் உண்டாக்கும் வல்லமை உள்ளவள். ஆராய்ச்சியில் உணர்வாக இருப்பவளே ஆதிசக்தி. அது அருவம். உணர்வை யாராலும் காட்ட முடியாது. அது அறிவைச் சார்ந்தே இருக்கும் ஆகவே உருவம் அருவத்துக்கு நேர் எதிர் ஆகும். சமநிலையை கெடுப்பது உருவத் தோற்றங்களே. ஆகையால் உருவங்களை நம்பி ஏமாறாதீர்கள். உணர்வே சக்தி, அழிவற்றது.

கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக்குவளை மலரனை கண்ணினாள்
ஆவிக்கும் இன் அமுதானந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத்தாளே 1076

அவளுடைய உருவம் குழலில் உள்ள இடம் போன்றது. அந்த வெற்று இடமே ஆகாசம். எலும்பு குழல் போன்றது. நரம்பு, ரோமம் எல்லாம் குழல் போன்றதே. ஒவ்வொரு பாத்திரத்தின் உள் இடமாக இருப்பவளே ஆதி. குலாய புருவத்தன். அவள் நிறம் நீலமாகவோ கருப்பாகவோ தான் இருக்க முடியும். ஆவியாகி இருந்து மகிழ்ச்சியை கொடுப்பவள். அதையும் கடந்தவர் சிவன். அசையாத நிலை. ஆவிக்கும் நம்மை தொட்டு மகிழ்ச்சி யூட்டுபவன். சிவத்தை பனிமூட்டம் போல் மறைப்பவள்.

வெளிப்படு வித்து விளைவு அறிவித்து
தெளிப்படு வித்து என சிந்தையின் உள்ளே
களிப்படு வித்துக்கு எதிர்படும் சோதி
ஒளிப்படு வித்து என்னை உய்யக் கொண்டாளே 1077

வித்து என்பது எண்ணங்களின் பிறவி. அது நீரோடு சேர்ந்தால் அது மண்ணை நோக்கியே இருக்கும். அது மண்ணில் கலந்தவர் போல் மனிதர்கள். அத்தகையோர் காண்பது நீரில் எழுத்து. மங்கியே இருக்கும். அது பண்பாட்டைக் கெடுக்கும். விலங்கு மனமே ஆகும். பன்றி ஒரே சமயத்தில் பனிரெண்டு குட்டி போடும். அது தேவையா? பசு ஒரே கன்று ஈனும். ஆகவே விண்ணை

நோக்கிய எண்ணமே ஞானம். 'ஆ' எண்ணங்கள் ஞான நெறி நிற்றல் அருச்சனை. அதுமேலே வந்து (மேவயின் - வயிரவி) ஞானம் மிக்கிடில் மெய்ப்பாணாகும். 'ஓ' அற - ஓசை இல்லாமல் உட்பூசனை உத்தமம். அந்த எண்ணம் வந்தால் சோதி தோன்றும்.

கொண்டனள் கோலம் கோடி அநேகங்கள்
கண்டனள் எண்ணெண் கலையின் கண் மாலைகள்
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையும்
தண்டலை மேல் நின்ற தையல் நல்லாளே. 1078

தையல் என்றால் துண்டு துண்டாகக் கிடந்த அறிவை ஒன்றாக்கியவள். அவள் இருக்குமிடம் தனி தலை மேல். உலகு உய்தற் பொருட்டு அருவ ரூபத்தில் அவள் இருக்குமிடம் தனி தலை மேல். உலகு உய்தற்பொருட்டு அருவ ரூபத்தில் அவள் கொண்டு அருளிய கோலங்கள் எண்ணற்றவை. அறுபத்து நாலு கலைகளையும் தோற்றுவிப்பவள் அதுபோல் படைக்கப்பட்டதே சூரியன், சந்திரன், அக்னி. வயிரவி என்கிற மனோன்மணி (கருமணி) சத்தியானவள் வேண்டும் கோலம் பூண்டு பார்வை சக்தியால் பார் உலகத்தை படைத்தாள். ஆறு பத்து நாலு என்று 64 கலைகளை படைத்தாள். ஆனால் அவைகளுக்கு காலமும் நிர்ணயித்தாள். அதற்கு காரணமாக சூரியன், சந்திரன், அக்னி இவற்றையும் படைத்தாள். அவைகளை அடக்க சகசிர அறையில் குளிரையும் படைத்தாள்.

தையல் நல்லாளை தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையை
பைய நின்று ஏத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகிலாவே. 1079

தவத்தின் தலைவி - சக சிர அறைத்தலைவி. எல்லா வற்றையும் ஒன்றாக்கும் இடம் ஆகாயம். மனத்தின் உள் மணி - மனோன்மணி. கண்ணின் கருமணியை, கற்பகத்தை, பெண்

உருவில் பாதியளை பேசரிய முப்பொருளை, விண்ணின் விழுப்பொருளை வெண்கதிரோனை, உள் நின்று உணர வல்லார்க்கு விண்ணின்று தாரும். அதுவும் வெளிகடந்து எண்ணில் பரிசோடு எண்குணமுமாமே. அவளை வணங்குவோம். வாயுவும் மனமும் கடந்த மனோன்மணி.

வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏயகுழலி இளம்பிறை ஏந்திழை
தூயசடைமுடிச் சூலினி சுந்தரி
ஏய் எனது உள்ளத்து இனிது இருந்தாளே. 1080

வேய் என்பது மூங்கிலைக் குறிக்கும். மூங்கில் என்பது குழல் போல் இருக்கும். குழலுக்குள் இருக்கும் இடமே ஆகாயம் என்பது. அதனுள் புகுந்த காற்றே ஒலியாகிறது. புல்லாங்குழல் நாதம் என்பது. நரம்புகளில் புகும்போது வீணை. எலும்பினுள் புகுந்த காற்று மஜ்ஜை. மயக்கம் தருவது. நரம்பில் புகுந்த காற்று நாடி. கண்ணில் புகுந்த காற்று கண் நாடி. இளம்பிறை ஏந்திழை. மூங்கில் போல் தோள். மணமுள்ள பூ, ஒளி பிறை போல் தோன்றும் நெற்றி, தூய்மையான சடை முடி. சூலம் போன்ற மூன்று ரேகை. அழகினள். அடியேன் உள்ளத்து பொருந்தி எனக்கு இன்பம் தந்து கொண்டிருப்பவள்.

இனிய தென் மூலை இருக்கும் குமரி
தனி ஒரு நாயகி தானே தலைவி
தனி படு வித்தனள் சார்வுபடுத்து
நனி படு வித்து உள்ளம் நாடி நின்றாளே. 1081

"இருட்டில் இருந்த குருட்டுக் குமரி குருட்டு கிழவனை கூடல் குறித்து குருட்டினை நீக்கி குணம் பல காட்டி மருட்டி அவனை மணம் புரிந்தாளே". (என்பது மற்றும் ஒரு திருமந்திரம்) (1488) "கண்டு கண்டு உள்ளே கருத்துற வாங்கிடில் கொண்டு கொண்டு உள்ளே குணம் பல காணலாம். பங்கு உகந்து

எங்கும் பழைமறை தேடியை இன்று கண்டு இங்கு இருக்கலுமாமே. (559) (இந்த இரண்டும் - 1081க்கு விளக்கமாகும்) (தி.ம. 1488 + 559 பார்க்க).

நாடிகள் மூன்று நடு எழு ஞாலத்து
கூடி இருந்த குமரி குலக் கன்னி
பாடகச் சீறடி பைம் பொன் சிலம்பொலி
ஊடக மேவி உறங்கு கின்றாளே. 1082

ஞானம் என்பது சூரிய ஒளி தோன்றும் இடம். ஞானம் ஞாதுரு ஞேயம் என்பர். இவை நம்மூன்று கண்களை குறிக்கும். கண்கள் என்றால் ஒளிபுகும் துவாரம். அதனால் தான் கண்களை துவார பாலர்கள் என்பது. தலைக்கு காவல் தெய்வங்கள். சூரியன் (வலது கண்) சந்திரன் (இடது கண்) சேர அக்னி கலை தோன்றும் இடம் புருவ நடு அதுவே ஞானம். அந்த ஒளியோடு கூடி இருந்தது கண்மணி. பாடகம் அணிந்த சிறிய திருவடி. மாற்றுயர்ந்த பொன்னாலான (மஞ்சள் நிறம்) சிலம்பை அணிந்தவள். 'சி' என்பது நெருப்பு. கதிர் கண்ட காந்தம் கனலாகும். கனகசபாபதி என்பது பொன் அம்பலம். சித் அம்பலம் அது நாதத்தை உண்டு பண்ணும் இடம். பரை - நாதம். அச்சிலம்பொலியுடன் அடியேன் அகத்து பொருந்தி தங்கி அருளுகின்றாள். "அம்மையே அப்பா ஒப்பில்லா மணி அன்பில் விளைந்த ஆரமுது" (திருவாசகம்).

உறங்கும் அளவில் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்தாரப் புல்லி
பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு
உறம் கலையா என்று உபாயம் செய்தாளே 1083

தம் பலம் என்பது தன்னுடைய சத்தியை நமக்கு கண் என்ற வாய் மூலம் தருகிறாள். அதை உமிழ்ந்தாள் என்றார் 'உ' என்ற நாத சொரூபமாக பரை நாதமாக. ஓம் என்று ஓங்காரியாக,

ஆங்காரியாக தோற்றப் பெறுகிறாள். இது நடப்பது தெரியாமல் தூங்குகிறோம். ஆகையால் தூங்காமல் விழிப்புடன் இரு என்கிறார். உண்மை தானே? ஒலியும், ஒளியும் நம்மிடம் உள்போவதை உணர இயலவில்லையே.

உபாயம் அளிக்கும் ஒருத்தி என் உள்ளத்து
அபாயம் அற கெடுத்து அன்பு விளைவித்து
அவாவை விளக்கும் சுழி அகத்துள்ளே.
அவாவை அடக்கி வைத்து அஞ்சல் என்றாளே. 1084

ஆருயிர் அனைத்திற்கும் உய்யும் வழி வகைகளை அருளிச் செய்யும் ஒப்பில்லாத முழு முதல்வி. எளியேனுடைய ஈரமில்லாத நெஞ்சத்து இடம் அனைத்தும் இல்லாமல் ஆக்கி, அருளின் வித்து ஆகிய ஆண்டவன் அன்பினை விளைவித்து நயனைய மனத்தை (சுவாசமாய்) விளக்குவதாகிய சுழியகம் எனப்படும் புருவ நடுவாகிய நனவு நிலைக் களத்து நிறத்தி, நிலையிலா பொருள்களிலும், பிறருடைய பொருள்கள் மேல் ஏற்படும் ஆசையை அடக்கி அஞ்சாதே என்று அருளினவள்.

அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண் பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடை சேய் இழை
தஞ்சம் என்று எண்ணி தன் சேவடி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவி என்றாரே. 1085

அஞ்சொல் மொழி என்பது ஒரு செய்தியைப் பரப்பும் சாதனம் போன்றது. பரமேஸ்வரன் பார்வதிக்குச் சொல்ல பார்வதி முருகனிடம் சொல்ல, முருகன் அகஸ்தியருக்குச் சொல்ல அகஸ்தியர் நாரதருக்குச் சொல்ல, நாரதர் ஊர் எல்லாம் சொல்ல என்பது விளம்பித சூத்திரம் போல் இந்த முகம். ஒளி, நம் பார்வை, அகம், வாய் இதையே குறிப்பிடும். நமசிவய என்னும் குருமொழி அருள்பவர் திருவருளம்மை. இது இரண்டாவது நிலை. புகுந்து மொழியானவள். புகழ்மொழி தரும் பொற்பினள். எல்லாம்

இந்த ஐந்தினுள் அடங்கும் என்ற செய்தியைச் சொல்ல வந்தவள் பார்வை சத்தி - பார்வதி. செஞ்சொல் - செம்மையான மொழி. செம்பொருள் காண்பது அறிவு. அங்கேயே அறிந்து நிற்பவர் உடலுக்குள் வரவேண்டியதில்லை. உடலுக்குள் வந்துவிட்டால் அகஸ்தியராகி, நாரதர் ஆக வேண்டியது தான். விளம்பர வாத்தியம் அகஸ்தியருக்கு வீணை, நாரதருக்கு தம்புரா. கண்ணனுக்கு புல்லாங்குழல். கண் ஒளியே தஞ்சம் என்று நிற்பவர் சீக்கிரம் முக்தி பெறுவர். அதையே நினைத்து பழகியவர் மேல் நோக்கம் பெற்று பிறவிப் பெருங்கடலை நீந்துவர். அதுவே திருவடி உணர்வு என்பது. (அளி = கருணை இறைவி = தலைவி).

ஆருயிராயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரியல் கோதையள் காரணீ நாரணி
ஊரும், உயிரும் உலகும் ஒடுக்கிடும்
கோரி என் உள்ளம் குலாவி நின்றாளே. 1096

கோரி : ஒடுக்கும் காலத்து எடுக்கும் நாதமும், 'கோ' கோர உருவத்தையும் குறிக்கும் (துர்க்கை). அறுவிதமான உயிர்களை இடையறாது நோக்கிக் கொண்டிருக்கும் தவத்தைச் செய்யும் தாய் திருவருளம்மை. மழை போன்ற நீண்ட (கம்பி போல்) கூந்தல் உடையவள். உலகம் அனைத்திற்கும் (உயிர் என்பதே நீர் தாம்) வான் சிறப்பானவள். அழிக்கும் காலத்து பெரு வெள்ளமாக பெருக்கெடுத்து ஒடுக்குபவள். அவள் என் உள்ளம் புகுந்து கண் ஒளியாக வீற்றிருக்கிறாள். கோரம் - அச்சம் - உட்டு. உள் இருள். அதே சமயம் நாரணி - அன்புடையவள். காரணி - அச்சப் படுத்தியே காரியம் சாதிப்பவள்.

குலாவிய கோலக்குமரி என் உள்ளம்
நிலாவி இருந்து நெடுநாள் அணைந்தும்
உலாவி இருந்து உணர்ந்து உச்சியின் உள்ளே
கலாவி இருந்த கலைத் தலையாளே. 1087

கலாவி - கலந்து எளியேனுடன் ஆவியாக அளவளாவி அருளும் அழகிய கன்னியை அறியாதிருந்தேன். இது இன்று நேற்று ஏற்பட்ட தொடர்பு அல்ல. தொன்றுதொட்டு - அதாவது தோற்றம் என்று தோன்றிற்றோ அன்று முதல் கலந்து, என்னுடன் வீற்றிருந்து உச்சியில் என்னை கலக்கச் செய்து சந்திரகலை ஆக்கி, ஆறு பத்து நாலு கலைகளைக் காட்டி, அருளிய தாய் அல்லவா? மனோன்மணி தாயல்லவா.

கலைத்தலை நெற்றி ஓர் கண்ணுடைக் கண்ணுள்
முலைத் தலை மங்கை முயங்கி இருக்கும்
சிலைத் தலை ஆய தெரிவினை நோக்கி
அலைத்த பூங்கொம்பினாள் அங்கிருந்தாளே. 1088

முலைக்காம்பு என்பது பால் சுரக்கும் பாதை. பால் என்பது அறிவு. மிருகங்களுக்கு அது கீழ்நோக்கி இருக்கும். மனிதர்களுக்கு (450) கொஞ்சம் மேல் ஏறி நிற்கும். அறிவு ஒளி உச்சியை நோக்கி இருக்கும். பார்வை சத்தி நெற்றி வழியாக உச்சிக்குப் போவதே ஞானம் எனும் பால் பெறும் வழி. முக்கோணமே முலை எனப்படும். கீழ் முக்கோணம், பக்க முக்கோணம், மேல் முக்கோணம். காற்று அறுகோணம். அது வட்டம் ஆனால் ஆகாயம். நீட்டமானால் ஒரே கோடு. ஒரே கோடு தான் இப்படி பல கோணங்களாக மாறி சிக்கிக் கொள்கிறது. அந்த சிக்கல்களை நீக்கி ஒரே நூல் போல் ஆக்க வேண்டும்.

இருந்தனள் ஏந்திழை என் உள்ளம் மேவி
பொருந்திய நால் விரல் புக்கனின் புல்லி
திருந்திய தாணுவிற் சேர்ந்து உடன் ஒன்றி
அருந்தவம் எய்தினாள் ஆதியினாளே 1089

பொருந்தினள் நால்விரல் என்பது கண், காது, நாசி, வாய் என்று நாலு பாதை, நாலு விரல் நீளம் இருக்கும். அதன் வழி செல்வது பிராணவாயு அது நீர், நெருப்பு, காற்று மூன்றும்

சேர்ந்தது. அது ஒலி, ஒளி, வெளியாவதே முன்னேற்றம். அப்படி ஆவதே ஆதி நிலை. இதை நாம் நினைவில் கொண்டால் ஆதிக்குச் சமம் ஆவோம்.

ஆதி அனாதி அகாரணி காரணி
சோதிய சோதி சுக பர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதி என் உள்ளத்து உடன் இயைந்தகனே 1090

தொடக்க நடப்பாற்றல் ஆதி. அதற்கு முன்னாள் அனாதி. தனக்கு ஒரு காரணம் இல்லாத்நிலை. எந்த வேறுபாடும் இல்லாத நிர்மலம், நிர்க்குணம், நிராமயம், இரவு பகல், இன்பம், துன்பம், கால வேறுபாடு நினைப்பு, மறப்பு இப்படி எல்லாம் இரண்டற்ற நிலை. அதிலிருந்து பிரிந்து ஆதி என்று ஆனதே ஆகாயம். அது நாலாக பிரிந்ததே. காற்று, நெருப்பு, நீர், நிலம் இப்படி வேறுபடும் போது உருவம், நிறம், குணம் எல்லாம் மாறுபடுவது இயற்கை நியதி. அகார காரணி தனக்கு என்று ஓர் காரணமில்லாதவள், ஆனாலும் பிறருக்காக தன்னை மாற்றிக் கொள்பவள். நீ தாயாக நினைத்தால் தாயும் ஆவாள், தாரமாக நினைத்தால் தாரமும் ஆவாள். மகளாக நினைத்தால் மகளும் ஆவாள்.

இயைந்தனள் ஏந்திழை என் உள்ளம் மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்றும்
அயந்தனை யோடும் பதமது பற்றும்
பெயர்ந்தனர் மற்றும் பிதற்றலர்தானே 1091

முதல்வி என்பது நம்மிடம் முதலாவதாக புகுந்த அது? எது இல்லாமல் நம்மாள் இருக்க முடியாதோ அதுவே முதல். சுவாசம் இல்லாமல் நம்மால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. அதைத் தான் முதல்வி என்பது. மண் மணம் எங்கு உண்டு. அங்கு வாய்வு உண்டு. அதையே என் உள்ளம் மேவி என்றார். உள் சென்று

நமசிவ என்று நயனத்தில் நின்று ஓதினாள். அதனால் நயனம் இரண்டும் நாசி மேல் வை என்றார் திருமூலர். அங்கே உயர் எழும் வாய்வு. அதை உள்ளே அடக்கி துயரற தூங்க வல்லார்க்கு பயனிது காயமே பயம் இல்லை தானே என்றார். காற்று இல்லாமல் வாழ இயலாது என்று அதை முக்கியம் என்று கருதுபவர் ஏனைய பொருட்களை ஒதுக்கி நிற்பர். இந்த நிலை அருஉரு நிலை. நமசிவ என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாலு நிலையை குறிப்பிடும். நமசிவய என்றிருப்பின் அறம், பொருள், இன்பம், வீடு, பேறு என்று இருக்கும். அயன் என்பது ஆகு பெயரான மறையினை குறிக்கும். நான்முகன் அந்த படைப்பு தேவை இல்லை என்றாகும்.

பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி அருளும் முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணும் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமும் முன் உள்ளதாமே. 1092

முயற்றி - முயற்சி (திருவிளையாக்கும்). மூன்றின் முயற்சி. கம்பலை - ஒலி, (மூன்றின் ஒலி), ஓம் என்ற பிரணவம். உண்மை அறிவு இல்லாத மாந்தர் பயனில்லாத சொற்களை பிதற்றி வாழ் நாளை வீண் அடிப்பர். நன்னெறியில் விடாது. (அகமுக முயற்சி) முயல்பவருக்கு வீடு பேறு என்பது விடுதலை அருள்விக்கும் முதல்வி. அப்படி அருள்செய்வது முக்கண் வாயிலாகவேயாகும். உருவக் கவர்ச்சியை நீக்கி அருவத்தில் ஈடுபட வைத்தல். அதுவே அகமுக பயிற்சி; அட்டாங்க யோகம். ஆனால் அது புதிதல்ல. இயல்பாகவே உள்ள இருப்புணர்வு.

உள்ளத்து இதயத்து நெஞ்சத்து ஒரு மூன்றுள்
பிள்ளைத் தடம் உள்ளே பேசப்பிறந்தது
வள்ளல் திருவின் வயிற்றினுள் மா மாயை
கள்ள ஒளியின் கருத்தாகும் கன்னியே. 1093

எண்ணந்தான் முதல் பிறவி. அது மனமாகி (எண்ணங்களின் தொகுப்பு) அது இருப்பு ஆகும் போது புத்தி பின் சித்தம் இம் மூன்றும் முதல்வி இயக்குவன. அதனால் அங்கு உறைகின்றவள் என்பர். இடப்பக்கம், வலப்பக்கம், நடு என்ற மூன்றனுள் பின்னைத் தடம் என்பது நடுநாடி. அகவொலி (புத்தி) தொன்ற அருளியவருளும் அவளே. சிவன் திருவடி உணர்வாகிய அகத்தின் உள் காரண மாயையின் கண் மறைந்து நின்று அதைக் கொண்டு ஒளி அருளும் அம்மை என்னும் கன்னியாகும்.

கன்னியும் கன்னி அழிந்திலள் காதலி
துன்னி யங்கைவரைப் பெற்றனள் தூய மொழி
பன்னிய நன்னூல் பகைவரும் அங்குள
என்னே இம்மாயை இருளது தானே 1094

தன் ஆணையை நிறைவேற்ற தெய்வங்களைப் படைத்தாலும் அருளம்மை கன்னி மாறாதவள். நினைவாலேயே படைக்க வல்லவள். கருவின்றி, உருவின்றி நினைவு ஆற்றலாலேயே படைப்பவள். ஆறு வகை உயிர்களுக்கு துன்பம் துடைக்கும் காதலால் அம்மை ஆருயிர்களுடன் ஒன்றாய் கலந்து அயன் (பிரம்மா) அரி (விஷ்ணு) அரன் (ருத்திரன்) ஆண்டான் (மகேசன்) அருளோன் (சதாசிவம்) என்னும் ஐவரை ஈன்று அருளினாள். தமிழ் வேத ஆகமங்களை சட்டப் புத்தகங்கள் போல் இயற்றி அருளினாள். இத்தகைய இடத்தே விளக்கடியில் இருள் இருப்பதுபோல் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாஉவகை என்னும் அறுவகை மாயை ஆற்றலும் அறியாமை ஆகிய இருள் உள்ளமும் அங்கு உள்ளது.

இருளது சக்தி வெளியது எம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்
தெருளது சிந்தையை தெய்வம் என்று எண்ணி
அருளது செய்யும் எம் ஆதிப்பிரானே. 1095

விலங்குகளை வேட்டையாட மறைந்து நின்று தான் வெல்ல முடியும். வாலி வதம் அப்படித்தான் நடந்தது. என்னதான் இறைவி என்றாலும் தான் தன்னை மறைத்து கொள்வது தான் இருள் சக்தி. இருளுக்குள் இருந்து ஒளியாயிருந்து உதவுபவன் சிவன். புகுந்து நீயாக இருப்பது அவனே தான். தத்துவம் அசி. அதுவாகவே நீ இருக்கிறாய். காயத்துள் மெய்காடு உள்ளத்துள் உணர்வாகவும் சித்தம் சிவனே ஆகும்.

ஆதி அனாதியும் ஆய பராசக்தி
பாதி பராபரை மேல் உறை பைந்தொடீ
மாது சமாதி மனோன் மணி மங்கலி
ஒது என் உள்ளத்து உடன் முகிழ்த்தாளே. 1096

ஆதி சக்தி என்பது ஆகாய அளவு. அதற்கு மேல் உள்ள முதல் சக்தி பராசக்தி. அது பரனொடு பாதி கொண்டு பராபரை ஆனாள். தொடக்கமும் தொன்மையும் ஆகிய திருவருள் செம்பொருளாம். சிவனுடன் செம்பாதி உடம்பினள் ஆவள். பாதி பராபரை. சிவ உலகில் வீற்றிருப்பவள். அழகும் அமைதியும் மனதை இயைந்து இயக்கமும நன்மைப்பாடும் உடைய அம்மை. முகிழ்த்தல் - தோன்றி உறைதல்

ஓதிய வண்ணம் கலையின் உயர்கலை
ஆதியில் வேதமே யாம் என்று அறிகிலர்
சாதியும் பேதமும் தத்துவமாய் நிற்பள்
ஆதி என்று ஓதினாள் ஆவின் கிழத்தியே 1097

'ஆ' என்பது ஆசை உள்ள உயிர் நல்லாள் உள்ளத்திலிருந்து ஓதி அருளிய முறைப்படியான நூல்களில் எல்லாம் சிறந்த நூல் அறநூலாகும். இவ்வுண்மைகளை அறியாதவர் அச்சில் வந்ததை எல்லாம் நூல் எனக்கொள்வர். அது வேறுபாட்டு உணர்ச்சியையும், வேறு வேறு கடவுள்களையும் வேறு வேறு ஜாதி, மதம் என்ற கற்பனையை வளர்ப்பன ஆகும். எல்லாம் ஒன்று அறிவிப்பதே அறிவு நூல். ஏக ஜோதி.

ஆவின் கிழத்தி நல் ஆவடு தண்டு உறை
நாவின் கிழத்தி நலம் புகழ்ந்து எத்திடும்
தேவின் கிழத்தி திருவாம் சிவமங்கை
மேவும் கிழத்தி வினைகடிந்தாளே. 1098

ஆவின் கிழத்தி-உயிர்களின் தலைவி. வாணி-நாவின் கிழத்தி தேவின் - கிழத்தி - மனோன்மணி - சதாசிவப்பத்தினி. ஆருயிர் அனைத்தையும் அடக்கி ஆள்பவள் நாவுக்கரசி. ஆவடுதுறையில் எழுந்தருளி இருப்பவள். அதையே வாணி சரஸ்வதி, கலை அரசி என்கிறோம். 'தே' என்றாலே நெருப்பில் தோன்றும் தேஜஸ். அந்த சக்தி சிவமங்கை எங்கும் பொருத்தி உரிமை பூண்டு அருளும் ஒளிவடிவமே. வினைகளை அகற்றுபவள்.

வினை கடிந்தார் உள்ளத்து உள்ளொளி மேவித்
தனை அடைந்தோர்க் கெல்லாம் தத்துவமாய் நிற்பாள்
எனை அடிமை கொண்ட ஏந்திழை ஈசன்
கணவனைக் காண அனாதியுமாமே. 1099

இருள் சேர் இருவினையும் சேராத நல்லாள். உள்ளத்து உணர்வொளியாய் திகழ்பவள் திருவருளம்மை. அவளே தன் திருவடியை தலை சூடினார்க் கெல்லாம் தத்துவமாக நிற்பாள். என்னை அடிமை கொண்டவள். அவள் ஐவரை ஈன்றவளான அநாதி.

ஆதி அனாதி அகாரணி காரணி
வேதம் அதாய் ஆய்ந்தனள் வேதியர்க்காய் நின்ற
சோதி தனிச் சுடர் சொரூபமாய் நிற்கும்
பாதி பராபரை, பன்னிரெண்டு ஆதியே. 1100

அம்மை தொடக்கமும் தொன்மையும் பழமைக்கும் பழமையாய் காரணமில்லாதவளும் ஆனால் எல்லாவற்றிற்கும் காரணமானவளும் ஆவாள். அறவோர் பொருட்டு அறநூலை

ஆழ்ந்தருளினாள். நிலை பெற்று நிற்கும் ஒப்பிலா பேரொளிச் சுடராய் நிற்பவள். பன்னிரு கலையான போது சிவனுக்கு பாதியாய் நின்றவள். ஆதாரம் ஆறு. நிராதாரம் ஆறு. ஆக 12. அவளே நடப்பாற்றலாகிய ஆதியாவாள். வேதம்-அறநூல். வேதியர்-அறவோர்

அளந்தேன் அகலிடத்து அந்தமும் ஆதியும்
அளந்தேன் அகலிடத்து ஆதிப் பிரானை
அளந்தேன் அகலிடத்து ஆளொரு பெண்ணும்
அளந்தேன் அவன் அருள் ஆழ்ந்து உணர்ந்தேனே. 1101

நான் யார்? என்று அறிய விரும்பி விசாரணையில் ஆரம்பித்தேன். அது வெட்ட வெளியில் கொண்டுவிட்டது. அதுவே அந்தமும் ஆதியும். அதிலிருந்து பிரிந்து வந்ததே ஆதி என்ற ஆகாயம். அதை வேகாத்தலை என்பர். மண், நீர் பெண் பகுதி நெருப்பும் காற்றும் ஆண் என்று ஆயிற்று என் அறிவிற்கு எட்டிய வரை இந்த எட்டு நிலைகளையும் 8 X 3 = 24, தத்துவங்களுமே உலகம் எனக்கண்டேன் என்கிறார் திருமூலர்.

உணர்ந்திலர் ஈசனை ஊழி செய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழி கொண்டு கும்பகமாமே. 1102

ஆண்டவனைத் தோற்றுவிக்கும் அருளாற்றலாகிய சக்தியின் மெய்மையை உணர்கிலர். அவ் ஆண்டவனை அம்மை கூட அவர் எங்கும் நிறைந்தருளினர். சிவ(அன்பின்) வழிபாட்டு முறை சிவ புண்ணியப் பேறுடையார் திருக்கூட்டங்களை தன் திருவருள் பேற்றில் ஆழ்த்தி அருளிய கன்னி. கும்பகம்-ஒடுக்கம், குணர்ந்த-கொணர்ந்த

கும்பக் களிறைந்தும் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி யண்ணலும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பில் கலவியுணர ஒழிந்தாரே 1103

மத்தகம் பொருந்திய யானையை ஒத்த புலன்கள் ஐந்தும் (களிறு ஐந்தும்) அப்புலன்களை அடுத்துச் செலுத்தும் பாகன்-மனம், அவற்றைக் கருவியாகக் கொண்டு ஒற்றித்துக் காணும் ஆவியும், திருவடி அன்பினால் கலந்து அடங்கின (கும்பகம்) கும்பக்களிறு - இந்திரியம் கோல் - மனம், பாகன்-ஆன்மா, மணிமுடி வண்ணன் - பரமசிவன், இனி துறைதையல் - பூரணசக்தி புதுமையாக் மணி திகழ்கின்ற திருமுடியினை உடைய சிவபெருமானும் அவனுடன் ஆருயிர் இன்புறுதல் பொருட்டு கலந்து இன்புற்றுரையும் திரு அருள் அம்மையும் உயிர்களுடன் வேறற கலந்து நின்றனர்.

இன்பக் கலவியில் இட்டு எழுகின்ற தோர்
அன்பில் புகவல்லணாம் எங்கள் அப்பனும்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பில் பராசக்தி என்னம்மை தானே. 1104

கருவாய் கிடந்து கருக்குழியில் துன்புறும் காலத்து நடு நாடியின் கண் நடப்பாற்றலாகிய அம்மை காத்தருள்கின்றாள். பின்பு திருவடியின் கண் கலத்தல் பொருட்டு ஆவிகளின் அன்பினை எழச்செய்து அவ்வன்பு வாயிலாக நம் ஆருயிர்த் தந்தை சிவனும் எழுந்து அருள்வார்.

என் அம்மை என் அப்பன் என்னும் செருக்கற்று
உன் அம்மை ஊழித் தலைவனும் அங்குணர்
மன் அம்மையாகி மருவி உரை செய்யும்
பின் அம்மையாய் நின்ற பேர் நந்தி தானே. 1105

ஆய்ந்தருளினாள். நிலை பெற்று நிற்கும் ஒப்பிலா பேரொளிச் சுடராய் நிற்பவள். பன்னிரு கலையான போது சிவனுக்கு பாதியாய் நின்றவள். ஆதாரம் ஆறு. நிராதாரம் ஆறு. ஆக 12. அவளே நடப்பாற்றலாகிய ஆதியாவாள். வேதம்-அறநூல். வேதியர்-அறவோர்

அளந்தேன் அகலிடத்து அந்தமும் ஆதியும்
அளந்தேன் அகலிடத்து ஆதிப் பிரானை
அளந்தேன் அகலிடத்து ஆணொரு பெண்ணும்
அளந்தேன் அவன் அருள் ஆய்ந்து உணர்ந்தேனே. 1101

நான் யார்? என்று அறிய விரும்பி விசாரணையில் ஆரம்பித்தேன். அது வெட்ட வெளியில் கொண்டுவிட்டது. அதுவே அந்தமும் ஆதியும். அதிலிருந்து பிரிந்து வந்ததே ஆதி என்ற ஆகாயம். அதை வேகாத்தலை என்பர். மண், நீர் பெண் பகுதி நெருப்பும் காற்றும் ஆண் என்று ஆயிற்று என் அறிவிற்கு எட்டிய வரை இந்த எட்டு நிலைகளையும் 8 X 3 = 24, தத்துவங்களுமே உலகம் எனக்கண்டேன் என்கிறார் திருமூலர்.

உணர்ந்திலர் ஈசனை ஊழி செய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழி கொண்டு கும்பகமாமே. 1102

ஆண்டவனைத் தோற்றுவிக்கும் அருளாற்றலாகிய சக்தியின் மெய்மையை உணர்கிலர். அவ் ஆண்டவனை அம்மை கூட அவர் எங்கும் நிறைந்தருளினார். சிவ(அன்பின்) வழிபாட்டு முறை சிவ புண்ணியப் பேறுடையார் திருக்கூட்டங்களை தன் திருவருள் பேற்றில் ஆழ்த்தி அருளிய கன்னி. கும்பகம்-ஒடுக்கம், குணர்ந்த-கொணர்ந்த

கும்பக் களிறைந்தும் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி யண்ணலும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பில் கலவியுணர ஒழிந்தாரே 1103

மத்தகம் பொருந்திய யானையை ஒத்த புலன்கள் ஐந்தும் (களிறு ஐந்தும்) அப்புலன்களை அடுத்துச் செலுத்தும் பாகன்-மனம், அவற்றைக் கருவியாகக் கொண்டு ஒற்றித்துக் காணும் ஆவியும், திருவடி அன்பினால் கலந்து அடங்கின (கும்பகம்) கும்பக்களிறு - இந்திரியம் கோல் - மனம், பாகன்-ஆன்மா, மணிமுடி வண்ணன் - பரமசிவன், இனி துறைதையல் - பூரணசக்தி புதுமையாக் மணி திகழ்கின்ற திருமுடியினை உடைய சிவபெருமானும் அவனுடன் ஆருயிர் இன்புறுதல் பொருட்டு கலந்து இன்புற்றுறையும் திரு அருள் அம்மையும் உயிர்களுடன் வேறற கலந்து நின்றனர்.

இன்பக் கலவியில் இட்டு எழுகின்ற தோர்
அன்பில் புகவல்லனாம் எங்கள் அப்பனும்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பில் பராசக்தி என்னம்மை தானே.
1104

கருவாய் கிடந்து கருக்குழியில் துன்புறும் காலத்து நடு நாடியின் கண் நடப்பாற்றலாகிய அம்மை காத்தருள்கின்றாள். பின்பு திருவடியின் கண் கலத்தல் பொருட்டு ஆவிகளின் அன்பினை எழச்செய்து அவ்வன்பு வாயிலாக நம் ஆருயிர்த் தந்தை சிவனும் எழுந்து அருள்வார்.

என் அம்மை என் அப்பன் என்னும் செருக்கற்று
உன் அம்மை ஊழித் தலைவனும் அங்குளர்
மன் அம்மையாகி மருவி உரை செய்யும்
பின் அம்மையாய் நின்ற பேர் நந்தி தானே.
1105

நிலையாத உடலின் தொடர்பாக என் அம்மை, என் அப்பன் என்று கூறப்படும் சொல் பொய் உரை ஆகும். அது பிறப்புக்கு வித்தாகும். ஆதலால் உருவத்தால் ஆன தந்தை தாய் மற்றெல்லாமும் பொய்யே. அந்த எண்ணத்தை அறுத்தல் வேண்டும். அம்மையும் அப்பனும் நம் போன்ற உயிரினங்களே. உண்மையான அம்மை மனம் என்ற மாயா சத்தியே. அனைத்து உயிர்க்கும் நிலைபெற்ற உயிர் தொடர்பாம். அம்மையும் அப்பனும் அங்கு உளர். அவ்விருவரும் உன்னித்து (தியானித்து) அறியலாம். முக்கண்ணன் = சிவன்.

தார் மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்
பார் மேல் இருப்பது ஒரு நூறு தானுள
பூ மேல் உறைகின்ற போதகம் வந்தனள்
நா மேல் உறைகின்ற நாயகி ஆணையே. 1106

உலகினை படைத்ததற் பொருட்டு நீர் அணுவிலிருந்து (விஷ்ணு) முளைத்தெழுந்தார் மண் துகள் பிரம்மா. அத்தாமரை நம் கண்மலரே. அதில் தோன்றிய நான்கு அறிவுகளே நான்முகன். அதற்கு நூறு இதழ்கள் உண்டு அதிலிருந்து உணர்வு தோன்றிற்று நாக்குணர்வு-ருஜி, மூக்கு உணர்வு-வாசனை, கண் உணர்வு - பார்வை, (உருவம்), காது உணர்வு - கேள்வி, போதகம் - ஞானம், உணர்வு, நாவாசி - வாகீஸ்வரி.

ஆணையமாய் வரும் தாதுள் இருந்தவர்
மாணையமான மனத்தை ஒடுக்கிப்பின்
பாணைய மாய பரத்தை அறிந்தபின்
தாணைய மாய தனாதனன் தானே. 1107

ஆணையம் - உண்மை. தாதுள் - ஆதாரத்தாமரையுள். மாணையமான-ஐயம், விபரீதம் முதலிய குற்றங்கள் பொருந்திய பாணையமான-இனிய நாதவடிவாகி வந்த; தாணையமாய தன் ஆதனம்-திருவடி இன்பம். மெய்மையை உணர்ந்தவர் தான்

(அருட்பெருஞ்ஜோதி) ஏனைய தோற்றமெல்லாம் என் எண்ணத்தின் நிழல்களே என்று உணர்வர். நினைவை விட்டு ஒழிப்பர். நினைவுகள் இல்லையாயின் உலகமும் இல்லை. உடலும் இல்லை.

தானே எழுந்த இத்தத்துவ நாயகி
வானோர் எழுந்து மதியை விளக்கினள்
தேனோர் எழுகின்ற தீபத்து ஒளியுடன்
மானே நடமுடை மன்று அறியீரே. 1108

தன் இடமுள்ள பேரருளால் மாயா காரியத் தொகுதிகளாகிய தத்துவங்களை நடத்தும் தலைவி திரு அருள் வெளியில் எழுச்சி பெற்று அறிவை விளக்கி அருளினாள். பேரின்பத் தேனை தருதல் பொருட்டு திருவடி உணர்வுடன் தோன்றும். பேரொளியை தாங்கி உயிர் உணர்வை மன்றமாக (மேடை) கொண்டு ஆடும் கூத்தின் உண்மையை உணருங்கள்.

அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டமும்
அறிவான மங்கை அருளது சேரில்
பிறியா அறிவு அறிவார் உள்ளம் பேணும்
நெறியாய சித்த நினைத்திருந்தாளே. 1109

ஒன்று இரண்டான போது எல்லாமே இரண்டு படுகிறது. அதுபோல் அறிவு பர அறிவு, அபர அறிவு என்று இரண்டுபடும். அபார அறிவுதான் மாயை என்பது. ஒன்றை பலவாகப் பார்ப்பது. ஒரே நீர்ப்பகுதியை நீர் அணுவாக, மேகமாக, மழைநீராக, ஊற்று நீர், ஆற்றுநீர், கிணற்றுநீர், கடல் நீர். அது காப்பியை சேர்ந்தால் காப்பித் தண்ணி, சர்க்கரைத்தண்ணி, இப்படி ஒரே நீர் பலவானது மாயை. ஆனால் நீர் என்றும் நீர்தான். பர அறிவு என்பது என்றும் ஒன்றாகவே இருக்கும். கண்டதோடு கலக்காது. அது பார்வையாகவே இருக்கும். பார்க்கப்படும் பொருளாக மாறாது. அது பத்தினி எனப்படும் பார்த்தீபன் காண்தீபன். விளக்கின் ஒளி

விளக்கை விட்டு நீங்காது. ஆனால் சூழ் ஒளி பரந்து நிற்கும். உணர்வு மெய்யென அறிவாய மெய்ஏழும். (ஏழு நிறம்) ஐம்புலக் கூட்டமாக உடல் மெய் இருபத்து நான்கும் ஆவி. பேரறிவே உருவான பெருமாட்டியைச் சேர்ந்த போது, திருவருளின் திரு உள்ளப்படி நன்னெறிப்பட்டுச் செல்லும். அப்படிச் சேர்ந்தவர். பிரிவு அறியார். அறிவான மாயை(மனம்) அசுத்த தத்துவம். ஐம்புலக் கூட்டம். பிருகிருதி மாயை அறிவான மங்கை - அருள் - திரு அருள்சத்தி.

இரவும் பகலும் இல்லாத இடத்தே
குரவம் செய்கின்ற குழவியை நாடி
அரவம் செய்யாமல் அருளுடன் தூங்கப்
பருவம் செய்யாத தோர் பாலனுமாமே. 1110

நாம் கண்களை விழித்தால் பகல். மூடினால் இரவு அப்படி இரண்டும் இல்லாத நிலை, நடுநிலை. அதை அந்தி சந்து முந்தீகழுக்கல் என்பர். கண் மூடியும், மூடாமலும் இருக்கும். நாசி நுனியைப் பார்த்தால் இந்த நிலை தானாக அமையும். இதையே தம் அரைக்கண் (தாமரை கண்) என்பது. குரவம் என்பது விளையாட்டு. இது செய்கின்ற கண்மணியை நாடி, அசையாத இமைகளால் (அரவம் செய்யாமல் - உதடு அசையாமல்) அருவமாக தங்கி நிற்கும். உயிர் என்றும் பல பருவங்களாகாமல் இளமையாகவே இருக்கும். பாலனும் ஆகலாம். பரம்பிரமமும் ஆகலாம்.

பாலனுமாகும் பராசத்தி தன்னொடு
மேல் அணுகா விந்து நாதங்கள் விட்டிட
மூலம் அதாம் எனும் முத்திக்கு நேர்படச்
சாலவுமாய் நின்ற தற்பரத்தாளே. 1111

பாலகிருஷ்ணன், பால சுப்ரமண்யம் என்பவை பருவ மடையாத என்றும் இளமையாயிருப்பது. பால் என்பது அறிவு-ஒளிநிலை. அதைவிட்டு கீழே இறங்கினால் பிணி, மூப்பு,

சாக்காடு என்ற பருவ நிலை. ஆகையால் கண் ஒளியோடு நின்றால் அதுவும் மேல் நோக்கும் ஒளியோடு பேரொளியாகும். அதைவிட்டு கழுத்துக்கு கீழே இறங்கினால் அது மலமாகும். ஆருயிர் நீங்கா இளமை பெற்றது. நாத, விந்துக்கள் என்று பேசப்படும் ஓசையும் ஒளியும் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களாக மாறாமல் ஒலி, ஒளிதான் பிறந்த இடத்தைச் சாருமானால் அது முத்தி நிலை. அதற்கு உதவுபவள் அருள் சக்தி – (தற்பரை).

நின்ற பராசத்தி நீள்பரன் தன்னொடு
நின்று அறிஞானமும் இச்சையுமாய் நிற்கும்
நின்று அறியும் கிரியா சத்தி நண்ணவே
மன்றன வற்றுள் மருவிடும் தானே. 1112

ஈசனை நன்கு புலப்படுத்தும் அஷ்டாங்க யோகம் எனும் உள்முகப் பயிற்சி. மன்றன் – கூத்தப்பெருமான் சிவனை விளக்கமுறச் செய்யும் தொழிலாற்றல் சுருதி கண்ணாக பழுதறியாத பரமகுருவை வழி அறிவார் நல்அறிவாளர். அறிவாற்றல் – ஞானசத்தி, விழைவாற்றல் – கிரியாசக்தி, இச்சா சத்தி – அறிவை அடையும் இச்சை.

மருவொத்த மங்கையும் தானும் உடனே
உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்
கருவொத்து நின்று கலக்கின் போது
திருவொத்த சிந்தை வைத்து எந்திந்தை நின்றானே. 1113

மரு–வாசனை, உருஒத்து–உருவ வேறுபாடு இல்லாமல் கரு ஒத்த – கருவிலேயே உட்புகுந்து, திருஒத்த – முத்தி அடைய வேண்டும் என்ற எண்ணம் கருவிலேயே திரு. மரு 'ம' நீர் 'ரு' நெருப்பு. நீரில் நெருப்பு–கருப்பு நிறமாகிய கரு ஆயிற்று. அதுவே கண்மணி. அது வளரவும் செய்யாது. தேயவும் செய்யாது. பிறக்கும் போது எந்த அளவோ இறக்கும் வரை அதுவே. உயிர் நிலை. அதுவே அதனாலேயே மனிதன், செத்த பின்னும்

கருவிழியை மற்றவர்க்கு மாற்ற முடிகிறது. அதை கொடுத்து கெடுப்பதும் கொடுக்காமல் கெடுப்பதும் செய்யலாம். செய்வது சூரியனும் சந்திரனும். ஆனால் இந்த இரண்டையும் லட்சியம் செய்யாமல் வாழ்வது ஆதி சக்தி. வேண்டுதலும் கிடையாது. வேண்டாமையும் கிடையாது. வந்தாயா வா / போகிறாயா? போ என்கிற நிலை. வந்ததால் மகிழ்ச்சியும் போவதால் வருத்தமும் கிடையாது அத்தகையோரே நடு நின்றவர் என்றும் ஒன்று போல் இருப்பவர்.

சிந்தையின் உள்ளே திரியும் சிவசத்தி
விந்துவும் நாதமுமாய் விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொடு ஆதி அதாம் வண்ணத்தாளே. 1114

சடாதரி - ஜடமாகிய உடலை நான் என்று கருதும் நினைவு. சாத்தவி-சாத்வீக குணமுடைய அறிவு ஒளி, இவை ஒலியும் (நாதம்) ஒளி (விந்து) யுமாக உடலில் ஏழும் பதிநாலு சத்திகளாக உலவி வருகிறது. இவைகளை தொழில்படுத்தி தான் தனியாக நின்றவள் அம்மை. அவள் வீற்றிருப்பது சந்திரமண்டலம். தலைமைப் பண்பாம் அறிவாகவே அமைந்தவள். முடிவும் முதலுமாக உலகம் விளங்க நிலை களமாக நிற்பவள் சூழ்ஒளி.

ஆறி இருந்த அமுத பயோதரி
மாறி இருந்த வழி அறிவார் இல்லை
தேறி இருந்து நல்தீபத்து ஒளியுடன்
ஊறி இருந்தனள் உள் உடையார்க்கே 1115

திருவடி உணர்வு நிறைந்து அடங்கி இருந்த திருமுலையை உடையவள். சிவனும் சிவையும் பொருளால் ஒன்றாய். தோற்றத்தால் இரண்டாகி விளங்கும் நிலைஅறிபவர் இல்லை. திருவடியே நிலை பேறான புகழ் என்று தெளிந்து இருந்து மெய்

உணர்வு விளக்கமாய் திகழும் ஆருயிர்கட்கு பேரின்பமாம் இன் அமிழ்தாய் அதுவும் வற்றாத ஊற்றாய் அருளம்மை வீற்றிருப்பாள் ஆறிஇருந்த - சிவத்துள் அடங்கி இருந்த. அமிதபயோதரி- அமிழ்தக் கடலை உடையவள்.

உடையவன் அங்கி உருத்திர சோதி
விடையவன் ஏறி விளங்கி இருக்கும்
கடையவர் போயிடும் கண்டவர் நெஞ்சத்து
அடையது ஆதிய சாதகர்தாமே. 1116

அங்கி உருத்திரன் = தேயு தத்துவ அதிபதி உருத்திரன் உருதரிக்கும் நாடி. விடையவன் = ரிஷப லக்கினத்துக்கு உரியவன் (சுக்கிரன்), கடையவர் - இதை அறிந்து கொள்ளாதவர் தவறி விடுவர். இதை சாதனை செய்பவர் ஹடயோகர். இவர்கள் அசுரத்தன மிக்கவராவர். (சுக்கிரன்-அசுரகுரு) சாத்வீகர்களுக்கு ஹடயோகம் ஆகாது. உலகியல் பொருள்களை உடைமையாகவும் ஆறுவிதமான ஆவிகளை (உயிர்) அடிமையாகவும் என்றும் உடையவன் சிவன். இதை வைப்பு சத்தி என்பர். அவனே தீயினுக்கு ஒளி கொடுப்பவன் மேல் நிலத்து விளங்கும் மெய்ப் பொருள். அறிவாற்றல் அன்பு இவைகளை அறியாதவர் கடையவர் கயவர் அது அல்லாதவர் திரு அருள் துணை கொண்டு அருவக் கண்ணே கண்ணாகக் கொண்டு உலகியலை நீக்கி காணும் கண்ணுடையாருக்கு காட்சியாக அமைவன். நல்லார் - ஞானக்கண் உடையார். சாதகர் - ஹடயோகப் பயிற்சியினர்.

தாமேல் உறைவிடம் ஆறுஇதழ் ஆனது
பார்மேல் இதழ் பதினெட்டு இருநூறு உள
பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மேல் உறைகின்ற பைங் கொடியாளே. 1117

திரு அருளாற்றல் திங்கள் மண்டலத்தும் ஞாயிற்று மண்டிலத்தும் உறையும் நிலையினை மேல் இடத்து உறை என்பர். திங்கள் (சந்திரன்-மனம்) அதன் இதழ் கீழ் நோக்கியும்,

ஞாயிறு மண்டலத்து இதழ் மேல் நோக்கியும் நிற்பன. இதையே மாறுபாடு என்பது. முகத்தில் இடப்பாகம் உடலில் வலப் பாகமாகவும், முகத்தில் வலப்பாகம் உடலில் இடப்பாகமாகவும் இருக்கும். நிலத்தில் தங்குவதற்கு பதினெட்டு இதழும், இருநூற்றிதழ் தாமரைகளும் உள. உயிர் எழுத்து 12ம் மெய்யெழுத்து 18ம், 18 x 12 = 216. பூமேல் உறைதற்கு புண்ணியமாக எழுந்தருளினாள். அருளம்மை. பார் - முன்னது நிலம். பின்னது முறை.

பைந் தொடி ஆளும் பரமன் இருந்திடம்
திண் கொடியாகந் திகழ் தரு சோதியாம்
விண் கொடியாகி விளங்கி வருதலால்
பெண் கொடியாக நடந்தது உலகே. 1118

பை போன்றது இந்த உடல், காயப்பை என்றே சொல்வர். அதில் சரக்கு பல உள. மாயைப்பை ஒன்று உண்டு. மற்றொரு பையும் உண்டு. சோதிப்பை ஒன்று உண்டு அதைச் சொல்ல ஒண்ணாதே என்பர் மற்றொரு மந்திரத்தில். அது போல் சோதியாக திகழ்பவள் கண் ஒளி. அது "விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்க்கொண்டு தண் என்ற காலை தலைக்காவல் முன் வைத்து உள் நின்று உருக்கி ஒப்பில்லா ஆனந்தம் கண்ணில் நின்று காட்டினாளே". "பெண்ணில் நல்லாளொடும் எண்ணில் பெரும்தகை இருந்ததை மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஐயுற வில்லை" (தேவாரம்).

நடந்தது அம்மலர் நாலுடன் அஞ்சாய்
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றாய்
படர்ந்தது தன் வழி பங்கயத் துள்ளே
தொடர்ந்தது உள் வழிச் சோதி அடுத்தே 1119

இந்த உலகியல் நடக்க ஒன்பது கேந்திர தானங்கள் உண்டு. அதன்மேல் வீற்றிருப்பர் ஒன்பது தலைவர் இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், நடுவில்

சூரியன். இவர்களின் ஆற்றலை நவசத்தி என்பது. ஒன்பதில் இரண்டு ஞாயிறும் திங்களும் அகத் தாமரை ஆகிய நிலைக் களங்களில் நிகழும் நிகழ்ச்சிகள் திருஅருள் ஆணையின் படி நிகழ்வன. உச்சித் தொளைவழி உள் ஒளியை தொடர்வதுமாகும். சோதியின் உள்வழி கண் - எனக் கொண்டு சிவன் இருக்கும் இடமும் ஆம்.

அடுக்கும் தாமரை ஆதி இருப்பிடம்
எடுக்கும் தாமரை இல்லகத்துள்ளது
மடுக்கும் தாமரை மத்தத்தே செல
முடுக்கும் தாமரை முச் சதுரத்தே. 1120

'அறு' என்றால் கொல்லுதல் அல்ல. 'கொல்' என்றால் அழிப்பதல்ல ஒன்றை மற்றொன்றாக மாற்றுதல். அது நம்மிடம் கண்கள். அதுதான் ஆதி இருப்பிடம். ஆகாயத்தத்துவம் சிதாகாசம். அதை நினைவாக்குவது. எடுக்கும் தாமரை மனம். அதுவே அகம். அதை மடக்கி கீழே தள்ளுவது பிடரிப் பக்கம். இதை எல்லாம் முடுக்கும் - செயல்படுத்தும் தாமரை மூளையாக கபாலத்தில் உள்ளது. முன், மத்தி, பின் என்று மூன்று பகுதிகளாக மூளை அடுக்கும் தாமரை ஆக சக்கரம் - கண்மணிகள் இரண்டும் எடுக்கும் தாமரை விசுத்தி. மடுக்கும் தாமரை அனாகதம். முடுக்கும் தாமரை - மணி - பூரகம் ஆக எல்லாம் ஒரே இடத்திலேயே செயப்படுகின்றது. அந்த இடத்தின் பெயரே கண்கள். நனவு, கனவு, தூக்கம், துரியம், துரியா தீதம் ஐந்து பேர் அறிவும் கண்களே கொள.

முச் சதுரத்தே எழுந்த முனைச் சுடர்
எச் சதுரத்தும் இடம் பெற ஓடிடக்
கைச் சதுரத்து கடந்து உள் ஒளி பெற
எச் சதுரத்தும் இருந்தனள் தானே. 1121

முக்கண்களில் எழுந்த சுடர் எங்கும் இடம் பெற்று விளங்கும்படி சொல்லவும் - விளம்பரப்படுத்த பல நிலைகளை ஏற்படுத்தியவள் - திருஅருள் அம்மை. அஞ்சலி செய்ய அஞ்சு

நிலையங்கள். கண் - மணியிலிருந்தே எவ்விடத்தும் சத்தி பரவுதலால் முனைச்சுடர் எனப்பட்டது. எச்சதுரம் - எல்லா இடத்திலும்; கைச்சதுரம் - பிரமரந்திரம்.

இருந்தனள் தன்முகம் ஆறொடு நாலாய்ப்
பரந்தன வாயு திசை திசை தோறும்
குவிந்தன முத்தின் முகவொளி நோக்கின்
நடந்தது தேறல் அதோமுகம் அம்பே 1122

புலம் பத்தானதால் (ஞானேந்திரியம் ஐந்து + கர்மேந்திரியம் ஐந்து) சத்தியும் பத்துமுகங்கள் என்பர். அம்மையின் உயிர்ப்பே ஆருயிர்களுக்கு காற்றாக விரவி எங்கும் இருந்தனள். அருளொளி திருமுகத்தின் கண் ஒருங்கு திரண்டு பொலிந்து விளங்குகிறது. புலம் என்றால் திசை. அதோமுகம் கீழ்நோக்கு.

அம்பன்ன கண்ணி அரிவை மனோன்மணி
கொம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய
செம் பொன் செய்யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின்றாளே. 1123

கனை ஒத்த கண்ணையும், கொம்பொத்த இடை வெளியையும், பிற அழகுகளை உடைய திருஅருள் அம்மை நறுமணம் கமழ்கின்ற செம்பொன் திருமேனியுடன் சிவபெருமானை நோக்கி ஆருயிர்க்காக இன்பமொழி நயமுற நாள் தொறும் நவில்கின்றனள்.

நவிலும் பெரும் தெய்வம் நான்மறைச் சத்தி
துகிலுமை ஆடை நிலம் பொதி பாதம்
அகிலமும் அண்ட முழுதும் செம்மாந்து
புகலும் முச்சோதி புனைய நிற்பாளே. 1124

எல்லாராலும் புகழ்ந்து பேசப் பெறும் பொருள் கடவுள் - ஆசைகளை எல்லாம் கடந்த உள்ளம். ஆசை என்பது என்ன?. தன்னை ஏனைய பொருள்களிலிருந்து வேறுபடுத்தி உயர்வாக காட்டிக் கொள்ளும் எண்ணம். அதையே எழுச்சி என்பது சமநிலையிலிருந்து மேல்எழுந்து மறுபடியும் அடங்குவதே வாழ்க்கை. உள் உறை ஆற்றல். அவன் திசைகளையே மெல்லுடை ஆடைகள் என்பது எல்லாம் சொல் ஜாலங்கள் தாம். இரு நிலனே திருவடி; அண்டங்கள் என்று சொல்லப்படுகின்ற எல்லாம் இடங்களிலும் ஓங்கி நிமிர்ந்து சிறப்பித்து சொல்லப் படும். ஞாயிறு திங்கள் தீ என்ற மூன்றினுக்கும் ஒளி அருளும் பேரொளிப் பிழம்பாய் திகழ்வாள்.

புனைய வல்லாள் புவனத்திறை எங்கள்
வனைய வல்லாள் அண்ட கோடிகள் உள்ளே
புனைய வல்லாள் மண்டலத்து ஒளி தன்னைப்
புனைய வல்லாளையும் போற்றி என்பேனே. 1125

திருவருள் ஆற்றல் இருபத்து நான்கு என இயம்பப் பெறும் புவனங்களுக்கு முழு முதல்வனாகிய சிவபெருமானை தன் ஒரு கூற்றிலே பொருத்த வல்லாள். அவளே அளவிளந்த அண்ட கோடிகளை திரு உள்ளத்தால் படைக்க வல்லவள். அவ்வவ் மண்டலத்துக்கு ஒளி கொடுக்கும் பொருள்களுக்கும் ஒளி அருள வல்லாளும் அவளே. அவள் திருவடிகளை போற்றி வணங்குவேன். நம்மைப் போன்ற உயிரினங்கள் (உருவம்) யாவும் சத்தியின் ஆட்சியில் தான் இருக்கிறோம். எல்லா சத்திகளையும் ஒன்றாக இணைந்து ஒரே சத்தியாவதே சத்தியம். பூரண சத்தியையே சிவம் ஏற்றுக் கொள்ளும். மூன்று கோணத்தில் வாழும் நாம் இன்னும் அடைய வேண்டிய சத்தி-மகா, ஜனோ, தபோ, சத்ய லோகம். அதன் பின் திரும்பிப் பார்த்தால் சிவம் தோன்றும். சிவத்தைப் பார்த்ததும் மீனாக்ஷி அடங்கியது போல் அடங்கி விடுவோம். சத்தி தான் சிவத்தைக் காட்ட வேண்டும். அதனால் சத்தியை வணங்குவோம்.

போற்றி என்பேன் புவனாபதி அம்மை என்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றம் கடிந்த திருநுதல் சேயிழை
கூற்றம் துரக்கின்ற கோள் பைந்தொடியே. 1126

போற்றி என்ற சொல் போதம் என்ற வேர்ச்சொல், போதம் என்றால் அநுபவ முடிவு. அப்படி போதாந்த நிலை புவனேஸ்வரி. பூர் என்பது நனவு நிலை - பூமாதேவி. புவர் என்பது கனவுநிலை புவனேஸ்வரி; சுவ என்பது தூக்கநிலை, அறிவு (ஆற்றல்) அவள் ஆருயிர்களின் அன்பு அறிவாற்றல்களுல் அவற்றை இயைந்து இயக்கி இடையறாது நிற்கின்றாள். ஆகையால் கனவுகளை அலட்சியப்படுத்தாமல் கவனியுங்கள். அநேக உண்மைகள் புலனாகும். அதுவே ஆவி உலகத் தொடர்பு கூத்தை மாற்றக் கூடியவள்.

தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரையாம் மங்கை கங்கைச்
செடியார் வினை கெடச் சேர்வரை என்றென்று
அடியார் வினை கெடுத்து ஆதியுமாமே. 1127

உருவங்களை மறந்து அருவத்தில் பொருள் பண்ணவும். அழகிய வளையல் அணிந்த திருக்கையை உடையவள் என்று எழுதுகிறார்கள். இதை எங்கேயாவது காட்ட முடியுமா? இது நம் உருவத்தை சூழ்ந்துள்ள ஆவி வட்டத்தை குறிப்பிடும். நீருக்குள் மீன் போல் ஆவி மத்தியில்தான் நாம் வாழ்கிறோம். மண், நீரை விட்டு வெளியேறி விட்டோம். அதை நினைக்க வேண்டாம். அது பழைய வாசனை. பிறந்த வீடு, புகுந்தவீடு, ஆவி உலகம். இதற்கு மேல் ஒளி உலகம் அடைய வேண்டும். அழகிய திரிபுரை மங்கை சலமகள் அவளே திருவடி சேர்வார். துன்ப வினைகளை எல்லாம் அகற்றி அருள்பவள். ஞாயிற்றுக்கும் ஒளி கொடுப்பவளும் அவளே. நடப்பாற்றலாகிய ஆதியாவாள். ஆகாயம் செடி - துன்பம் சூரியன் வெட்ட வெளி என்பது தான் **VACUAM** - காலியிடம் அதை ஒன்றும் செய்ய இயலாது.

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன் தரு பைங்கொடி
புல்லிசை பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப்பாவை மணம் புகுந்தாளே. 1128

இயல்பாகவே மென்மையும் இனிமையும் வாய்ந்த திரு மொழியினை உடையவள். அருள் வெளியில் விளங்கும் மெல்லிய பூங்கொடி. பல உயிர்களோடு இயல்பாகவே இயைந்து இயக்கும் எழிலினள். நற்பயன் தரும் நல்லாள். வியோமம் - ஆகாயம் (ஓம் ஒலியுடன் வியாபித்திருப்பது).

தாவித் தவப்பொருள் தானவன் எம் இறை
பாவித்து உலகம் படைக்கின்ற காலத்து
மேவி பராசத்தி மேலொடு கீழ் தொடர்ந்து
ஆவிக்கும் அப்பொருள் தானதுதானே. 1129

தாவித்த - நிச்சயித்த; பாவித்து - நினைத்துப் பார்த்து எம் இறைவனாகிய சிவபெருமான் உலகு, உடல், உயிர்களை படைத்தருள உறுதி செய்த போது பாவித்தலாகிய திரு உள்ளம் கொண்டனள். உடனே திரு அருள் அவனுடன் பொருந்தி முளைத்து நின்றனள். மேலொடு கீழாக இறைவனுடன் தொடர்ந்து வந்தது போல், ஆவியிலும், பொறிபுலன் கரணங் களிலும் தொடர்ந்து நின்றனள். பாவித்து திரு உள்ளம் கொண்டு பராசத்தி வனப்பாற்றலாகிய திருவருள் ஆவிக்கு உயிர்களுக்கு; அப்பொருள் - கருவிகள்

அதுவிது என்பார் அவனை அறியார்
அதிவர நின்றதோர் காரணங் காணார்
மதுவிரி பூங்குழழ் மாமங்கை நங்கை
திதமீது உன்னார்கள் தேர்ந்து அறியாரே 1130

முழுமுதல் சிவனை அது இது என சுட்டி எதையும் சொல்ல இயலாது. ஏனெனில் அவன் இல்லாத இடமே இல்லை. அவன் பரமா அணிவிலும் அணு பெரும்பெயர் நமசிவய. திருவடிப் பேரின்பம் துய்ப்பதற்குரிய மெய்யுணர்வு கைவரப்பெறார், பேரின்பப் பெருவாழ்வை கைவரச் செய்யும் திரு அருளினிடத்து தம்மை அடைக்கலமாக ஒப்புவித்தலே ஒரே வழி. இன்பத்தேன். நிறைந்த மணம் கமழும் பூச்சூடிய கூந்தலினை உடைய அம்மையின் செம்மை தெரிந்தவர் ஆவர். ஆதலால் அவரனைய நிலமைகளை ஒரு சிறிதும் கருதார் காரணம் - மெய்யுணர்வு; கதி-முக்தி, கிதம்-தனிமை. இத்துடன் பூரண சத்தி முடிகிறது. அடுத்து ஆதாரமும், அதனால் கிடைத்த ஆதேயமும் - (லாபம்) என்ன என்று பார்ப்போம். லாபம் என்பதை லலாடஸ்தானம் நெற்றி-ஸ்தானம் என்பது சிரசுப்பகுதி. லாபம் சேரும் இடம். அதாவது அறிவு அடையப்பட்ட வேண்டிய ஒன்றா ? நானே அறிவு என்று அறிந்தபின் இந்த பிறவியே வேண்டாமே. உடலும் தேவை இல்லை. உயிரும் தேவை இல்லை, உணர்வு தேவை இல்லை (100 பாட்டும் அந்தாதியாக அமைந்துள்ளது).

நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தான் இதழ் ஆனவை நாற்பத்து நாலுள
பால் இதழ் ஆனவள் பங்கய மூலமாய்த்
தான் இதழ் ஆகி தரிந்திருந்தாளே. 1131

ஒன்று ஆறு பிரிவுகளானது (இதழ்) அவற்றின் பீச எழுத்துக்களை (முதல் எழுத்து) பற்றி இப்பாட்டு குறிப்பிடுகிறது. ஒன்று நாலான போது முகம் ஆயிற்று. அதற்கு இடம் கண், காது, நாசி, வாய், மனம், புத்தி, சித்தம், அகம் என ஆதிகரணங்கள் அந்தமும் அதுவே. ஆயிற்று. அது நாலு பத்தாகி நாற்பத்தி நாலே. எழும்வாய், செயல், செயல்படுபொருள் என்று. மூன்று நிலை நாலுக்கும் உண்டு அது பத்தும் இரண்டும் பன்னிரண்டு 44 + 2 = 46. இது இயக்குனர் இயக்கம் இயக்கத்தின் பலன் எனலாம். 23 + 23 = 46 நாலு இதழ் ஒன்றாக இருந்த

பொதிகை விரிந்தது. நாலாயிற்று-நாலு பதினாறு ஆயிற்று. பதினாறு-ஆறு பிரிவாக தொண்ணூற்றாறு ஆயிற்று 6 x 16 = 96. ஆனாலும் நாலு நாலாகவே இருந்தது. அப்படி அவிழ்த்து விட்டது. வயிறு வரை கீழ் நோக்கிப் பரவி தொன்னூற்றறும் தொப்புழ் ஆயிற்று-துவம் தீ-தொந்தி. அதை ஆறு இதழ் என்பர். அதற்கு மேல் நாற்பது இதழ் கொண்டது நெஞ்சு. பதினாறு இதழ் கொண்டது கழுத்து. மிடறு விசுத்தி. பத்து இதழ்கள் கொண்டது புருவநடு. இவை அனைத்தும் தாமரைப் பூவாக உருவகிக்கப் படுகிறது. அது கற்பனையே. மனதின் கணக்கு அறிவின் கணக்கல்ல. அறிவு எல்லாவற்றையும் ஒன்றாகவே பார்க்கும். இந்த வேற்றுமைகளை மனமே காட்டுகிறது.

தரித்து இருந்தாள் அவள் தன் ஒளிநோக்கி
விரித்து இருந்தாள் அவள் வேதப் பொருளைக்
குறித்து இருந்தாள் அவள் கூறிய ஐந்து
மறித்து இருந்தாள் அவள் மாது நல்லாளே 1132

தன் ஒளி-சத்தியுடன் தங்கிய சிவஒளி விரிந்திருந்தாள் அதை வெளிப்படுத்தினாள். மறித்திருந்தாள். அதை ஒடுக்கி இருந்தாள். திரு அருள் அம்மை தம் உயிர்க்கு உயிராய் ஒளியாய் விளங்கும் செம்பொருளாம் சிவனையே நோக்கி நின்றாள். அவன் திரு உள்ளப்படி மறையும் (வேதமும்) முறையும் (ஆகமம்) பொருள்களை விரிவுரை செய்தாள். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் உள்ளக் குறிப்பால் செயல்படுத்தினாள், தோற்றுவித்ததுபோல ஒடுக்கும் காலத்து அவற்றை முறையே ஒடுக்கி அருளினாள்.

மாது நல்லாளும் மணாளன் இருந்திடப்
பாதி நல்லாளும் பகவனு மானது
சோதி நல்லாளை துணைப் பெய்ய வல்லீரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடையாமே. 1133

பெய்ய-கொள்ள வேதனை - பிறவித்துன்பம் வெள்ளடை - தெளிவு. பரம் ஆகாயம். அருவவெளியில் உறைபவன் சிவன் பரந்தசோதி. அவன் மிக்க கருமையும் தேனும், மணமும், நிறைந்த பூவும், பூலோகம். அது ஒளியை அள்ளிக் கொள்ளும் தனிமையள் அல்லவா. இருளை அவிப்பவன் இரவி. இருளில் அகப்படான். மாது நல்லாள் (சந்திரன்) திரு அருள் தன் மணாளன். ஆதிய சிவன் தன் மெய்யினில் செம்பாதி கொள்ள இடம் கொடுத்து பாதி நல்லாள் ஆயினள் ஆதி பகவன் ஆயினள். அல்லியாக இருந்தவள் அர்ஜுனனிடம் அடங்கியது போல அத்தகைய அறிவும் பேரொளி நல்லாளை தம் ஆருயிர் துணையாகக் கொள்ள வல்லாரின் பிறவித் துன்பம் தீரும். அவ்வம்மை அருவப் பெரு வெளியாகும். ஆகாயசத்தி.

வெள்ளடையான் இரு மா மிகு மாமலர்
கள்ளடையாரக் கமழ் குழலார் மன
மள்ளடையானும் வகைத் திறமாய் நின்ற
பெண் ஒருபாகம் பிறவிப் பெண்ணாமே. 1134

மாதரால் கவரப் படாதவன் சிவன். பிறவி என்பது பெண் இடத்திலேயே உண்டு. திருவருள் வெளியில் உறைபவள் சிவஒளி. ஆனால் அருள்மாதர் சிவனை படைக்கிறார்கள். பெண்ணில் ஆண் - அதுவே சிவன். அருள் நாட்டமுடைய மாதர். சீவனைக் காட்டியே (புத்தி) சிவனை அடைவர். மருள் நாட்டமுடைய மாதர் சிவனை அடையாது பிறப்புறுவர்.

பெண் ஒரு பெண்ணை புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணுடை ஆடின் பிறப்பு அறிந்து ஈர்க்கின்ற
பெண்ணுடை ஆணிமைப் பேச்சற்றவாறே. 1135

பேணுதல் - பெண் கடமை ஆளுமை செய்வது ஆண் பேணுதல் - ஏற்பித்தல். ஆளுதல் - இன்புறுத்தல். உடல் ஒரு சத்தி. அதாவது ஆக்கப்பட்டது சத்தி. இயற்கையில் இல்லாதது.

உண்ணும் உணவால் ஆக்கப்பட்டது உடல் - அன்னமயம். அதன் ஆவி அதிலிருந்து வந்த சத்தி உயிர். உடல் உயிரை விரும்பினாலும் உயிர் உடலை விரும்பினாலும் அது - பெண்ணே பெண்ணை விரும்புவது போல. ஆவியை அறிவோடு சேர்த்தால் திருமணம். உயிர் உடம்பை விரும்பினால் மகளே தாயை விரும்புவது போலாகும். ஆதாம் ஏவாள் கதை அது தான். இருவருக்கும் ஒரு ஆண் பிறந்தது அவனுக்கு பெண் தேவை என்ன செய்வது ? தாயே இடம் கொடுத்தாள். அங்கே முறை கெட்டது. அந்த அம்சத்தில் வந்தவரே மனித இனம். இது திருத்தப்பட வேண்டாமா? மனதை அறிவின் பக்கம் திருத்தப்பபட வேண்டாமா? மனதை அறிவின் பக்கம் திருப்ப வேண்டும். அறிவு அறிவோடு கலக்கும் குறிப்பு. செம்மை அறிந்து தன் திருவடிக்கு ஆக்குகின்ற அருளே திருமேனியாக உடைய சிவன் உண்மையை உணர்ந்தால் பெண் ஆண் எனும் பேச்சு அற்று விடும். ஈர்க்கின்ற - சேர்க்கின்ற.

பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மனோன்மணி மங்கையாம்
காச்சற்ற சோதி கடவுளுடன் புணர்ந்து
ஆச்சற்று என் உட்புகுந்து ஆலிக்கும் தானே. 1136

மாற்ற மனம் கழிய நின்றவள் - சிவன் மவுனத்தால் உணர வல்லவன். மாசகன்ற பேரொளி மாச்சற்ற - மாசு அற்ற, (மயக்கம் - மயக்கம் இல்லாத) காச்சற்ற - பகைமையற்ற. அவனை அடைய மனோன்மணி சத்தியால் மட்டுமே முடியும். வாயுவும் மனமும் கடந்தவள் மனோன்மணி சத்தியால் மட்டுமே முடியும். 'வாயுவும் மனமும் கடந்தவள் மனோன்மணி', ஆயும் அறிவு கடந்த அரனுக்கு தாயும் மகளும் தாரமும் ஆவாள். ஆலித்தல் - களிப்புறுதல்.

ஆலிக்கும் கன்னி அரிவை மனோன்மணி
பாவித்து உலகில் பரந்து பெண்ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஆலித்து ஒருவன் உகந்து நின்றானே. 1137

ஆருயிர்களின் அன்பிற்கு ஈடாக களிப்பிக்கச் செய்யும் கன்னி அரிய மனோன்மணி. அவள் உலகில் பெரும் பயன் அருளி நீக்கமற நிறைந்து நிற்கும் வைஷ்ணவி - நீர் அனு அவாள். வாணி - அவளே ஐந்தொழில் புரியும் அரும் தலைவி. அவளே வேதங்களின் தலைவி சரஸ்வதி. அவளை இடமாகக் கொண்டு சிவன் உயர்ந்து நின்றான். வேலைத்தலைவி - ஐந்தொழிலை இயக்கும் இறைவி.

உகந்து நின்றான் நம்பி ஒண்ணுதற் கண்ணொடு
உகந்து நின்றான் நம் முழை புக நோக்கி
உகந்து நின்றான் இவ்வுலகங்கள் எல்லாம்
உகந்து நின்றான் அவள் தன் தோள் தொடுத்தே. 1138

நம்பியாகிய சிவன் அழகிய நெற்றிக் கண்ணுடன் உயர்ந்து நின்றான். நெற்றிக் கண் தான் சிவனுக்கும் இடம். ஆருயிர்கள் தன் போல் ஆக வேண்டும் எனும் அருள் நோக்கும் கொண்டவன். அவன் எஞ்சாத பூரணன். சர்வவியாபி. இவை அனைத்தும் அருளம்மையின் புணர்ச்சியால் ஏற்பட்டவை. அம்மையை அனைத்து உயர்ந்து நின்றான் என்பர். சத்தி இல்லையேல் சிவம் இல்லை. அவள் தன் தோள் தொடுத்து - புணர்ந்து.

குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை புணர்வினை
ஒத்த கருத்தது சொல்லகிலேனே. 1141

முலை என்பது முக்கோணம். குத்து விளக்கு என்றால் என்ன பொருள். ஓரே இடத்தில் நிலைத்திருக்கும் விளக்கு. அது போல் சூரியன் சந்திரன் அக்னி மூன்றும் முக்கோணமாகும். ஆருயிர்கட்கு அறிவு - அமிழ்தம் (ஒளியாகிய பால்) அதைத்தாங்க குழைவான இடைவெளி நெற்றி. துத்தி-பொறி புலன்கள். காற்றுக்கு துருத்தி நாசி நெருப்புக்கு கண் சுணங்கினள்

-தேமலை உடையவள். புதுமையான குகை போன்ற உள்வீடு கண்குழி. அவனே மெய்யுணர்வு கைவரச் செய்யும் சிறிய திருவடி உடையவள். அவளே உயிர் ஓவியத்தாள் அவள் மறவா நினைவுடன் ஆருயிரோடு ஒன்றாய் வேறாய் (ஒளி ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும்) நிற்கும் ஆற்றலை எப்படிக் கூறுவேன். தொத்த பழமையான ஆனால் என்றும் புதுமையானது.

சொல்ல வொண்ணாத அழற் பொதி மண்டலம்
சொல்ல வொண்ணாது திகைத்து அங்கிருப்பார்கள்
வெல்ல ஒண்ணாத வினைத்தனி நாயகி
மல்ல ஒண்ணாத மனோன்மணி தானே. 1140

திருவடி உணர்வை யாராலும் சொல்லிக்காட்ட முடியாது. அவரவர் அநுபவித்து பார்க்க வேண்டிய ஒன்று வேறு பொருளை உவமை சொல்லவும் முடியாது. மல்லல்வெற்றி கொள்ள வினை மறைத்தல்.

தானே இரு நிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழை பொழி தையலுமாய் நிற்கும்
தானே வடவரைத் தண் கடல் கண்ணே. 1141

எல்லாமே அவள் எனும் போது நமக்கு பேச என்ன இருக்கிறது? நடப்பதை எல்லாம் காட்சியாக பார்ப்பதைத் தவற விமர்சனம் பண்ண நம்மால் முடியாது. ஏன் எப்படி என்று யாரை கேட்பது? இதையே மந்திரம் 722ம் குறிப்பிடுகிறது. அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியும் கொண்ட சராசரம் முற்றும் குணங்களும் பண்டை மறையும் படைப்பளிப்பு ஆதியும் கண்ட சிவனும் என் கண் அன்றி இல்லையே எல்லாம் கண் என்ற வெட்ட வெளியையே குறிப்பிடுகின்றன. ஆகையால் பேசாமல் இருங்கள்.

கண் உடையாளை கலந்து அங்கிருந்தவர்
மண் உடையாரை மனித்தனிற் கூட்டொணாப்
பண் உடையார்கள் பதைப்பற்றிருந்தவர்
விண் உடையார்களை மேலுறக் கண்டே 1142

நெற்றிக்கண் உணர்வுடையோர் செந்நெறி மாண்புடையோர். ஒரு நிலைப்பட்டு உயர்ந்திருப்பது கண்ட உண்மையாளர். நடுக்கற்றிருப்பவர். கண்ணுடையாள் மனோன்மணி. மணி, கடல், கடல், புல்லாங்குழல், யானை, பேரிகை, வீணை முதலிய பத்து வித நாதங்கள் கேட்டவர் விண்ணுடையார் - முத்தியுலகை உடையவர்.

கண்டு எண் திசையும் கலந்து வரும் கன்னி
பண் எண் திசையும் பராசத்தியாய் நிற்கும்
விண் எண் திசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண் எண் திசையும் தொழ நின்ற கன்னியே 1143

கன்னி-நினைத்த மாத்திரத்தில் எல்லா உலகங்களையும் உடம்புகளையும் கருவிகளையும், போகங்களையும் ஆக்குவதால் கன்னி என்பர். எட்டுத்திசை என்பது ஒவ்வொரு மையத்துக்கும் உண்டு. மண், நீர், நெருப்பு, காற்று, விண், ஒலி, ஒளி, வெளி என்ற எட்டுக்கும் 8 x 8 = 64 திசைகளாகும். இவை எல்லா வற்றிலும் கலந்து இருந்தாலும் கன்னி அவன் உலகத் தோற்றத்துக்கு முன் கருவுற்ற தாய் போல் சூலியாக நிற்பாள். அப்பொழுது வனப்பாற்றல் என்பர். அவளை என்புலத்துள்ளாரும் தொண்டு செய்து தொழுவர். அவர்களுக்கு துணை புரிய கன்னியாக நின்றான். கன்னி என்றால் பெண் உருவை கற்பனை செய்ய வேண்டாம். காற்றும் அனலும் சேர்ந்த வெப்பக் காற்றே கன்னி.

கன்னி ஒளியென நின்ற இச்சந்திரன்
மன்னி இருக்கின்ற மாளிகை செந்நிறம்
சென்னி இருப்பிடம் சேர் பதினாறுடன்
பன்னி இருப்ப பராசத்தியாமே 1144

திங்கள் போன்ற நெற்றியுடன் பேரொளிசேர் திரு அருள் அம்மை நிலை பெற்றிருக்கும் வள மனை ஆருயிர்களின் நெற்றியாகும். நிறம் செந்நிறம் ஆகும். கலை பதினாறாகும். யாவரும் பாராட்டிப் புகழ எழுந்தருளி இருப்பவன் திரு அருள் அம்மையே.

பராசத்தி என்றென்று பல்வகையாலும்
தரா சத்தியான தலைப் பிரமாணி
இரா சத்தியாமள வாகமத் தாணாகும்
குராசத்தி கோலம் பல உணர்ந்தேனே. 1145

தராசத்தி-தாங்கும்சத்தி தலைப்பிரமாணு - எண்சாண் உடம்புக்கும் சிரசே பிரதானம். முக்கியமான வேத ஆகமங்களை உடைய மூளைப்பகுதி. நான் மறை வேதங்கள் - மனம் (நினைவுகளின் தொகுப்பு) புத்தி - அதை ஒளிப்படுத்துவது. சித்தம் அதற்கு உயிர் அளிப்பது அகம் - எல்லாவற்றிற்கும் இடமாயிருப்பது. இராசத்திதான் சிந்தை வியாமள ஆகமம். முதல் குரு தம் முதல் குருவுமாய் எழுந்தருளும் திரு அருள் அம்மை. குராசத்தி - குருவாக நின்றவள் குரு + ஆசத்தி = குராசத்தி

உணர்ந்து உலகு ஏழையும் யோகினி சத்தி
உணர்ந்து உயிராய் நிற்கும் உன்னதன் ஈசன்
புணர்ந்தொரு காலத்து போகமது ஆதி
இணைந்து பரமென்று இசைந்தது தானே. 1146

சிவனும் அருளுடன் ஒரு காலத்து இணைந்து ஆருயிர் வாழ்வுற போக நிலையாகிய பரம் என்றிருந்தனன். பரத்துடன் இசைந்த பராசக்தி தன் ஈசன் ஆகிய சிவம் திருவுள்ளப்படி யோகினி சத்தியாகி நடப்பாற்றலால் ஏழு உலகங்களையும் உணர்ச்சியால் தோன்றுவித்தாள். தோற்றுவித்த ஏழு உலகங்களில் ஏழுவகை பிறப்புயிர்கட்கும் உயிர்க்கு உயிராய் நின்றதும் அவ்வாற்றலாகிய அம்மையேதான்.

இது அப்பெரும்தகை எம் பெருமானும்
பொது அக் கல்வியும் போகமுமாகி
மது அக்குழலி மனோன்மணி மங்கை
அது அக் கல்வியுள் ஆயுழி யோகமே. 1147

இஃது என்று சுட்டப்பெறும் அம்மையும் பெரும் தகுதியுடைய சிவனும் (அதாவது ஆற்றலும் அன்பும்) கல்வியும் அதன் பயனும் போன்று பொருந்தி இருந்தனர். கல்வியிலிருந்து விண் வரை உணர்வுகளை உணர்வது கல்வி. அது, பகுத்து அறிவு அதன் பயன் எது நல்லது, எது கெடுதல் என்று வேறுபாடு காட்டி நல்லதொடு சேர்க்கை உண்டாக்கும். தேன் நிறைந்த (தே என்பது நெருப்பு. அதோடு சேர்ந்த காற்றும் நீரும் தேன் எனப்படும்) மலர் சூடிய மங்கை மனோன்மணி - மனதின் உன்மணி என்னும் அம்மை ஆருயிர்கள் கற்கும் கல்வியும் அதன் பயனுமாய் நிற்பன். ஆயுழி - ஆராயுமிடத்து. யோகம்-கூடி இருக்கும் பயன். சத்தியும் சிவமும் சேர்ந்த காட்சி.

யோக நற் சத்தி ஒளி பீடந்தானாகும்
யோக நற் சத்தி ஒளி முகம் தெற்கு ஆகும்
யோக நற் சத்தி உதர நடுவாகும்
யோக நற் சத்தி தாள் உத்தரம் தேரே 1148

நாம் (ஜீவன்) சிவனாக விரும்பினால் ஒளி இருக்கும் இடம் கண்கள் - அதை நாட வேண்டும் ஒளியான பின் தன்னுடன் இதுவரை சேர்ந்திருந்த அசுத்த சத்திகளையும் தன்போல் ஆக்க

வேண்டும். கீழ்நோக்கம் தெற்கு ஆகும். அவைகளையும் சேர்த்து ஒன்றாகி சிவத்தை சேரும். அது தான் அன்பின் ஆற்றல். திருவெம்பாவை அதையே பாடுகிறது. உத்தரம் - உயர்வு.

தேர்ந்தெழு மேலாம் சிவன் அங்கி யோடுறே
வார்ந்தெழு மாயையும் மந்தமதாய் நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிட
கூர்ந்தெழு கின்றனள் கோல் வளைதானே. 1149

திருஅருள் (அரூப) அம்மை பேரொளி பிழம்பு. அது சிவத்தினுள் ஒடுங்கும். ஆற்றல் - அன்பாகும். அதுவே பேரொடுக்கநிலை. அன்பிற்கு அடைக்கும் தாழ் கிடையாது / அந்நிலையில் மாயா காரியங்களும் தம் முதல் காரணமான மாமாயையில் ஒடுங்கும். அம்மாமாயை திருவருள் ஆற்றலில் ஒடுங்கும். அது வெளிப்பட்டதும் மாயேயங்கள் சொல் உறுப்பாகத் தோன்றும். ஓசையும் ஒளியுமாகிய நாத விந்துக்கள் அம்மையின் நினைவாற்றலால் தோன்றும். அவை தொழில் படுமாறு அப்பனை இடமாகக் கொண்டு எழுந்தருளுகின்றார்.

தானான வாறுஎட்டதாம் பரை குண மிசை
தானான ஆறும் ஈர்ஏழும் சமகலை
தானான விந்து சகமே பரமெனும்
தானே பர வாதனை எனத் தக்கதே.

1150

பரையாகிய திருவருள் மூல முதலாகிய ஆறு நிலைக் களங்களும், அகத்தவமாகிய எட்டு யோக நிலைகளும் தனக்கு இடம் என்று கொண்டு அருள்வாள். அது போல் அறுவகை வழிகளும் பதிநான்கு லோகங்களும் தானாகக் கலந்திருப்பாள். கலை வடிவம் (மிகைப்படுத்தப்பட்டது) கொண்ட இவ்வுலகிற்கு முதல் ஒளியாக நிற்பாள். பரமனாகிய நாதமும் தானாம் இத்திருவடி திருவருள் பேற்றை அப்பொழுது காட்டாது மறைத்தலின் மறைப்பாற்றல் என்பர். பரவாதனை-மேல்தடை

மேல்நிலையை காட்டத் தடை. ஆறு - ஆறு ஆதாரங்கள், எட்டு-எட்டு யோகங்கள் நிராதாரம் ஆறு, ஈரேழு-பதிநாலு லோகங்கள் (விபரங்கள் முன்பே கூறப்பட்டுள்ளன.)

தக்க பராவித்தை தான் இருபான் ஏழில்
தக்க எழும் ஓர் உத்திரம் சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையொடு தொண்டு முத்திரையாளே. 1151

என்று இந்த மூன்றும் கூடுகிறதோ அன்றே நன்னாள். அதாவது ஒலி, ஒளி, வெளி ஒவ்வொன்றிலும் ஒன்பது நிலை. ஆக இருபத்தேழு-சிதறிக் கிடக்கும். நட்சத்திர ஒளி, சந்திர ஒளி, சூரிய ஒளியாகி ஒன்று ஆனால் பெருகும் சோதியாகும். பரணி என்பது இருபத்தேழாம் நாள். பரணியில் பிறந்தோர் தரணி ஆழ்வார். அத்தகையோருக்கு பதில் கூறவே அம்மை வெளிப்படுவர். அவள் எட்டு சத்திகளை உடையவள். வெள்ளை நிறம் முக்கண் உடையவள். உத்திரம்-விடை. சொல்லச் சொல்ல-அழுத்தமாக (அடுக்குச் சொல்). கதை-காரணம். நாள் என்பது நட்சத்திரம். இருபானேழு-இருபத்தேழு வயதிற்குள் உருத்திரம்-உடல் உறுதியை அடையும். அஞ்செழுத்து மந்திரம் கூற (உரு = உடல் திரம் = உறுதி)

முத்திரை மூன்றின் முடிந்த மெய்ஞ் ஞானத்தள்
தத்துவ மாயல்ல ஆய சகலத்தள்
வைத்த பரா பரனாய பராபரை
சத்தியுமானந்த சத்தியும் கொங்கே 1152

கொங்கு-வாசனை, நறுமணம்; அன்பு, அறிவு, ஆற்றல் என்பது தான் முப்பொருள் உண்மை. இவை மூன்றும் ஒன்றாவதே முடிந்த முத்திரை. அதை உடையவள் அருளம்மை. தத்துவமாகிய உலகு, உடல்களுடன் கலந்தும், கலக்காமல் தனியாகவும், பொருள் தன்மையால் வேறாய் உதவுதலால்

உடனாய் எல்லாமாயிருப்பவளும் அவளே. சிவபெருமானுக்கு (உருவமில்லாதவன்) திருமேனியாக இருப்பவளும் அவளே. நடப்பாற்றலாகிய ஆதி சத்தியும், வனப்பாற்றலாகிய இன்ப சத்தியும் சிவனை விட்டு பிரிந்து நில்லாதவள்.

கொங்கு ஈன்ற கொம்பின் குரும்பைக் குலாம்கன்னி
பொங்கிய குங்குமத் தொனி பொருந்தினள்
அங்குச பாச மெனு அகிலம் கனி
தங்கும் அவல் மனை தானறிவாயே. 1153

அருளம்மை மணம் கமழ்கின்ற கொம்பு போல் இடையினை உள்ளவள். குரும்பை போன்று திருமுலையுடையவள். சாயாத கொம்பு இரண்டும் இருந்தாலும் தலை நிமிர்ந்து பாயாத மான் என்பர். அவளே அருள் விளக்கத்துடன் திகழும் கன்னி (வள்ளி - குறத்திமகள்) குங்கும நிறம், சிவப்பு நிறம், தோட்டியும் (அங்குசம்) கயிறு (பாசம்) உடைய கைகள் எல்லா உலகங்களிலும் கலந்து நிற்பவள் - அவள் உணர்த்த உணரும் தன்மையது உயிர்.

வாயு மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண் பிள்ளை
ஆயும் அறிவு கடந்த அரனுக்கு
தாயும் மகளும் நல் தாரமுமாமே. 1154

உருவமாக பிறப்பதற்கு முன் பேயாகவே இருந்தோம் பேய் என்றால் ஆவி ரூபம். அரனுக்கு தாய் - சத்தி தத்துவத்தில் நின்று சதாக்கிய தத்துவம் என்பதே ஆகாயம். அதிலிருந்து ருத்திரன் (நெருப்பு தோன்றுவதால்) தாய் மகள் - சிவதத்துவத்திலிருந்து சத்தி தோன்றுவதால் அங்கே மகள் எனப்படுகிறது. தாரம் - ஆதி சத்தி. சதாசிவமான போது தாரமாக இருந்து உலகமும் உயிர்களும் படைத்தலால் அப்பனும் அம்மையும் 'மாற்ற மனம் கழிய நின்ற மனோன்மணி' திருவடி போற்றும் பேய்களும் பூதக்

கூட்டங்களும் மிகுதியாக உடைய பெண்பிள்ளை. சிவனுக்கு தாயாகவும், மகளாகவும், தாரமாகவும் மாறும் தன்மையவள் 35ம் மெய் அன்னை. இதில் இருந்து முப்பத்து நான்கு அருளோன் மெய்தோன்றும் அது தான் நம் முகப்பகுதி. இந்நிலையில் தாயாவாள். முப்பத்தாறாவது மெய் அத்தன். அதிலிருந்து தோன்றும் 35வது மெய் மகளாவாள். சதாசிவ தத்துவத்தில் மனைவி.

தாரமுமாகுவாள் தத்துவமாய் நிற்பாள்
காரண காரியமாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதித்த புராதனி
பாராளவாம் வாந்திசை பத்துடையாளே 1155

சிவனுக்கு மனைவியாக நிற்கும் அருளம்மை அவனுக்கு அறிவு ஆற்றலாகவும் நிற்பாள். இக்கலப்பு உலகத் தோற்றத்தின் காரண காரிய கலப்பாகும். அவளே சுத்த மாயையுடன் நிறைந்து மறைந்தியக்கும் பொற்பினாள். அவளே தொன்மையானவளும் ஆவாள். பத்து புலன்களையும் உடையவள் அவளே.

பத்து முகம் உடையாள் நம் பராசத்தி
வைத்தனன் ஆறு அங்கம் நாலுடன் தான்வேதம்
ஒத்தனன் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றாள் எம் நேரிழை கூரே 1156

நம்மிடம் காற்று சுவாசம். நெருப்பு, நீர், மண், ஆகாயம் என்ற நான்கோடு சேரும் போது தன்னையும் சேர்த்து ஐந்திலே ஒன்றாகிறது. அது அறிவான நிலையில் முகம் எனப்படுகிறது. அது உடலில் நீரோடு, நிலத்தோடு சேரும் போது பத்து ஆகிறது. அது பகிர்முகம் ஆகும் போது ஒலி, ஒளி. நாசி, வாய் ஞானேந்திரியங்களாகவும் மலவாசல், நீர்வாசல் என ஆறு ஆதாரம் ஆகிறது. ஆனால் ஒவ்வொன்றுக்கும் மூன்று பிரிவுகளாக வேலை செய்வதால் (உள் வாங்குதல், நிறுத்தல், வெளியிடுதல்) 6X3 = 18

நிலைகள் ஆகின்றன. இவை தினமும் எல்லா மனிதர்களிடமும் நடைபெறும் செயல்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மூலாதாரம் அறிவே. "ஆறு அங்கமாக வரும் மாமறை ஒதியை கூறாங்கமாக - குணம் பயில்வார். இல்லை வேறாங்கமாக்கி வெளிப்படுத்தி பேறாங்கமாக பிதற்றுகின்றாரே. எல்லாம் ஐந்து விதமான அணுக்கள் மூன்று - குணங்கள் ஆறு நிலை இடம் ஆறு செயல் ஆறுபலன்.

கூரிய கன்னி குலாய புருவத்தாள்
சீரியளாய் உலகு ஏழும் திகழ்ந்தவள்
ஆரிய நங்கை அமுத பயோ தரி
பேருயிர் ஆளி பிறிவு அறுத்தாளே 1157

ஆரிய மங்கை - மகிமை பொருந்திய ஆறு அங்கமாக வரும் நீரில் நெருப்பு. பயோதரம்-பை போன்று இடம் அமைத்து அதில் ஞானப்பால் கொண்ட முலைத்தடம். பேர் உயிராளி - எண்ணிந்த உயிர் வர்க்கங்களை படைத்து ஆட்டுவிப்பவள். திருவருளம்மை என்றும் - கன்னி என்றும் கூறப்படுபவள். அவள் விளங்கும் புருவத்தள், எல்லோரும் அறியும்படி புருவ மத்தியிலிருக்கும் கண்ணே அவள். நடப்பாற்றலாக ஏழு வர்ணமாக இயைந்து இயக்கும் கால் சீறிய (முன் சினம்) குணம் நெருப்பு பொருந்தியவளும் அவளே. வனப்பாற்றலாக ஆருயிர்களின் செம்மை உணர்ந்து அரணடியில் சேர்த்தலால் நிறைந்த பேரருள் கங்கையும் (கண் + கை) ஆகின்றாள். அருளாக இருந்து காக்கின்றாள். மல, மாயை, கன்மம் மூன்றையும் அறுத்து உதவினாள். ஆரிய - நிறைந்த

பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறி ஒன்றி நின்றிடும் கோமளக் கொம்பு
பொறி ஒன்றி நின்று புணர்ச்சி செய்து ஆங்கே
அறிவொன்றி நின்றனள் ஆருயிர் உள்ளே 1158

ஆருயிர்களைவிட்டு பிரியாது நிற்கும் பெருந்தகை அம்மை. பேதை - இரக்கமுள்ள தாய். அக வழிபாடு செய்யும் அன்பர்களுக்கு பொருந்தி நிற்பள். இளமையும், அழகும், மென்மையும் வாய்ந்த கோமளக்கொம்பு. அறி கருவியுடன் (ஞானேந்திரியங்களோடு) ஒத்து நின்று அவைகளை செயல் படுத்தி ஆருயிர்கட்கு, உயிருக்குள் உயிராய் இருந்து அறிவுக்கு அறிவாய் இருப்பவளும் அவளே.

உள்ளத்தின் உள்ளே உடனிருந்து ஐவர்தம்
கள்ளத்தை நீக்கில் கலந்து உடனே புக்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளல் தலைவி மருட்டிப் புரிந்தே. 1159

வள்ளல் தலைவி - உயிர் வருக்கங்களுக்கு கைமாறு கருதாது நல் அறிவினை ஊட்டும் வள்ளல் தன்மை வாய்ந்த திரு அருள் சத்தி. உயிர்க்கு உயிராய் உள் நின்று ஐம்புல வேடரின் கள்ளத்தை, குருவாய் வந்து உண்மை உணர்த்தி நீக்கினள். அவளே பிரிப்பின்றி ஒன்றாய் கலந்து பொருத்தி சீலம், நோன்பு, செறிவு, அறிவு எனும் நற்றவம் நான்கினையும் பின்பற்றச் செய்து அதனால் பெற்ற சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ஜியம் அடையச் செய்து வள்ளி நாச்சியார் ஆனார். மருட்சி - வியப்பு எல்லாம் வியப்புடைய செயலே.

புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்
பொருந்தி இருந்த புதல்வி பூவண்ணத்திது
இருந்த விலக்கில் இனிதிருந்தாளே. 1160

ஆருயிர்களுக்கு அகம் இருந்து வாழ்வாகிய (வழக்கம்) போகத்தை (அநுபவத்தை) அருளும்(அருவமாக) பேரறிவு ஆற்றல் அம்மையாகும். வாள் தடம் - கண், உணர்வில் தங்கி ஒப்பிலா இன்பம் ஊட்டும் - உண்மையை சிலர் என்ன பலர்

அறியார். உணர்வு என்பது, நாக்கு உணர்வு-சுவை, மூக்கு உணர்வு - வாசனை, கண் உணர்வு - உருவம், ஒளி - காது உணர்வு - கேள்வி - ஒலி இதை யாராலும் காட்ட முடியுமா? அப்படியானால் அந்த உணர்வை உணரும் சக்தியை யாரால் அறிய முடியும் அவரவர்கள் தாம் உணர முடியும். அதுதான் எழுவாய், நான் என்ற கடவுள். அது செந்தாமரை வர்ணம்.

இருந்தனள் ஏந்திழை என்னுள் மேவித்து
இருந்து புணர்ச்சியில் தேர்ந்து உணர்ந்து உன்னி
நிரந்தரமாகிய நிரதிசயமொடு
பொருந்த விலகிற் புணர்ச்சி அதுவே. 1161

அடியேன் உள்ளத்தை பொருந்தி அம்மை இருந்தனள். நாம் எல்லாம் ஆண்டவன் திருவடி பேரின்பமாகிய எல்லை இல்லாத வியத்தகு இன்பத்தை பெற்று என்றும் ஒன்று போல் வாழ சிவ பெருமானுடன் பொருந்தியே இருப்பாள். அதனால் ஆருயிர்க்கும் பிரிவில்லா பேரின்பம் உண்டு. எல்லை இல்லாத வியத்தகு ஆனந்தம் - நிரதிசய ஆனந்தம்.

அது இது என்னும் அவாவினை நீக்கி
துதி அது செய்து சுழியுற நோக்கில்
விதி அது தன்னையும் வென்றிடலாகும்
மதி மலராள் சொன்ன மண்டலம் மூன்றே. 1162

உறுதி இல்லாது - அதாவது உடல் தான் உலகம் - ஏன் எனில் உடல் இல்லை எனில் உலகோடு தொடர்பு கொள்ள வேறு கருவி கிடையாது. அண்டத்தில் உள்ளது. எல்லாம் பிண்டத்தில் உண்டு என்ற நம்பிக்கையே உறுதி. அது இல்லாது அதுவோ இதுவோ எனத் தடுமாறும் ஆசையை நீக்கி "உள்ளம் பெரும் கோயில், ஊன் உடம்பு ஆலயம், வள்ளல் பிரானுக்கு கண் வாய் கோபுரவாசல் தெளிந்தவர்க்கு சீவன் சிவலிங்கம்". சப்தத்தினுள்ளே சதாசிவம். சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் என்பதை நம்பி

அணுவுக்குள் அணுவாய் அப்பாலுக் கப்பாலாய் காற்று அணுமுற்றி நின்ற கருமணியில் உள்ள கரும்புள்ளே பாருங்கள். அருள் அம்மையை அகத்துள் - கண் அகத்தே நின்று காணுங்கள் ஊழையும் உள்பக்கம் கண்டு வெல்லலாம். மதிமலராள் - அமுதம் சொரிகின்ற சந்திர மண்டலத்தை இருக்கையாகக் கொண்டவள்.

மூன்றுள மண்டலம் மோகினி சேருமிடம்
என்னுள் ஈராறு எழுகலை உச்சியில்
தோன்று மிலக்குற ஆகுதல் மாமாயை
ஏன்றனள் வழிரண்டு இந்துவோடு ஈறே 1163

மோகினியாகிய உணர்வு மெய்-அசுத்த மாயை. காலம் நியதி, கலை என்ற மூன்று பிரிவை உடையது. அவை பனிரெண்டாகக் காணப்பெறும். கலை முடிவில் காணப்படும். இதற்கு குறிக்கோளாக இருப்பது. மாமாயை என்றும் சுத்தமாயை இவற்றை பதிநாலு கலையாகவும் ஏற்றனள் அம்மை.

இந்துவில் நின்று எழும் நாதம் இரவிபோல்
வந்துபின் நாக்கின் மதித்தெழும் கண்ட அத்தில்
உந்திய சோதி இதயத்து எழும் ஒலி
இந்துவின் மேலுள்ள ஈறது தானே. 1164

இந்து என்றால் சந்திரன். பானு என்றால் சூரியன் சுத்தமாயையினின்று எழும் நாதம் முப்பத்தாறாவது மெய்யாகி ஒலி, நாதம் (ஓம்) நிறை உயிர் அகத்து பகலவன் போல் கதிரொளியாகத் தோன்றி செவியில் (வைகரி) பொருந்துமாறு நாதம் எழும் வாய் ஓசை. அதற்குமுன் (பைசந்தி-பச்பந்தி) அது என்பர். அது கண்ணில் வரும் போது பரைநாதம், காதில் பச்பந்தி, கழுத்தில் மத்யமா, வைகரி - வாயால் பேதுவது, நினைவோசை தான் விந்து என்பது. நினைவு தோன்றும் இடம் கண்.

ஈறதுதான் முதல் எண்ணி இரண்டாயிரம்
மாறுதல் இன்றி மனோ வசமாய் ஏழில்
தூறது செய்யும் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்து இருந்தாளே. 1165

முடிந்த முடிவாகிய திருவருளம்மையே முதல்வியுமாவாள். அவள் இருக்கை பதினாறாயிரம் இதழ்களை உடையதாய் நம் சுவாசம் நாள் ஒன்றுக்கு 21600. அதில் 7200 வெளியே போவதால் 14400 தங்கும். இதில் முதல் சுவாசம் அறுநூறு மூலம் ஆகும். ஆக 15000. இதையே நாம் 15 கலை என்பது. அவை தங்கும் இடம் முகம் ஒன்று 16,000 என்பர். நினைவுகளின் தொகுப்பே மனம் என்பது (MEMORY BANK) சஞ்சிதம் – மொத்த இருப்பு பிராப்தம் – அநுபவத்துக்கு வருவது. ஆகாமியம் புதிதாக சேர்ப்பது.

இருந்தனள் ஏந்திழை ஈறதிலாக
திருந்திய ஆனந்தம் செந்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றி செய்து ஏத்தி
வருந்த இருந்தனள் மங்கை நல்லாளே. 1166

இயற்கையின் ஏற்பாடுகளை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அறிந்து தெளிவு பெறவேண்டும். இதை ஏணிபோல் படிப்படியாக புரிந்து ஏறினால் ஏற்றம் காணலாம். இதை அடுக்கு போதம் என்பார். போதம் என்றால் அநுபவ அறிவு, அப்படி படி நிலைகள் பதினெட்டு என்று அநுபவப்பட்ட சான்றோர் வகுத்துள்ளார்கள். அவை நம் தமிழில் உள்ளது போல வேறு எந்த மொழியிலும் கிடையாது. எல்லா உலகங்களிலும் அவரவர், வினைக்கீடாகப் பிறந்து வாழும், உயிர்கள் இயற்கையை முற்றிலும் உணர்ந்து நாம் எந்தப் படியில் நிற்கிறோம், அதற்கு மேல் ஏற வேண்டிய படி எது, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று வழி காட்டும் நூல் நன்னூல். சொல்லால் விளக்குபவர் சத்குரு. அவர் காட்டும் வழியில் செல்வது சீடன் கடமை.

மங்கையும் மாரனும் தம் மொடு கூடிநின்று
அங்குலி கட்டி அகம் புறம் பார்த்தனர்
கொங்கை நல்லாரும் குமாரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்கு செய்தாரே 1167

மங்கை என்பது பதினாறு வயது பருவத்தை குறிப்பிடும் பருவம் என்பது. பரு = உருவம்; மாரன் என்பது சிவம். எல்லா கெட்டவற்றையும் அழிப்பவன். மன்மதனை வென்றவன், மன்மதன் என்பது மனதின் வெறி. நான் என்ற அகம் நான் என்று சொல்ல என்ன உரிமை இருக்கிறது? 'பிச்சை எடுத்தானாம் பெருமாள் அதை பிடுங்கி தின்னாராம் ஹனுமான்' என்பர். அதாவது இவர்களெல்லாம் மூலப் பொருள்கள் அல்ல நாமே பிற ஒன்றால் படைக்கப்பட்டவர். கடன் கொண்டார் நெஞ்சம் போன்றல்லவா நாம் இருக்க வேண்டும். என்னதான் உயர்வு வந்தாலும் அவன் அளித்த பிச்சை என்று உணர்ந்து வாழ வேண்டும். என் கடன் பணி செய்து கிடப்பதே. மங்கையும் மாரனும் தம்மில் கூடி சதாசிவத்துவம் ஆயிற்று. அதனால் அருளோன் ஆண்டான் அரன்; அரி, அயன் என்பவர்கள் தோற்றுவிக்கப்பட்டனர், இவ்ஐவகை அருளல், மறைத்தல், துடைத்தல், காத்தல், படைத்தல் ஐந்தொழில்களை அருள் ஆணையால் புரிவாராயினர். சத்தியும் சிவனும் அங்குலியாகிய மூலப்பகுதி, தத்துவத்தை கண்கள் வாயிலாகக் கொண்டு தொழில்படுத்துவர். ஸ்ரீ கண்ட முனைவன் சுழிமுனை நாடி அப்பொழுது கொள்ளும் கையாக (கொங்கை) தாமரைப்பூ போல் விரித்து வைப்பது. 'தாம்பூ' குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டுவோம். அதில் குத்தச்சொல்வோம். அதில் பிடிபட்டோர் தோற்றவர். உயிரினங்கள் அப்படி அகப்பட்டவையே. பின்னால் அந்தக் கைகளில் கீரை கடைந்து எல்லோருக்கும் பங்கு வைத்து உண்பது போல் பாவிப்போம். அதில் ஆன்மீகக் கருத்து முற்றிலும் உண்டு.

சடங்கது செய்து தவம் புரிவார்கள்
கடந்தனில் உள்ளே கருதுவர்கள் ஆயின்
தொடர்ந்து எழுசோதி துணை வழி ஏறி
அடங்கிடும் அன்பினது தயிழை போல 1168

தயிழை என்பது தான் சுழிமுனை நாடி. இது கண்களில் ஆரம்பித்து அடி வயிறு வரை நூல்போல் தோன்றும். இதனை வெள்ளிக்கம்பி என்பர் (SILVER CHORD) கீழே சுக்கில நாடி மேலே தேவகுரு. உலகாணி ஒண் சுடர் உத்தமசித்தன் நிலவாணி ஐந்தினுள் நேருற நிற்கும். மூன்றெழு மண்டலத்தில் முட்டிய தூண் "'நான்' என்ற பாம்பின் நாவில் உணர்த்தி குண்டலி அதனில் கூடிய அசபை விண்ணில் எழுந்து வெளிப்பட உரைத்து" என்பார் அவ்வைப்பாட்டி. ஆகவே வெளியே செய்யும் சடங்குகள், செத்த சவத்தை அலங்கரிப்பது போலத்தான். உடலே ஒரு கருவாடு. உலகமும் காய்ந்த காடுதான்.

பாலித்திருக்கும் பனிமலர் ஆறினும்
ஆலித்திருக்கும் அவற்றின் அகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திரம்
மூலத்து மேலது முத்து அதுவாமே. 1169

ஆறு ஆதாரங்களும் நீர்ப்பசையால் ஆனது. ஒட்டகம் சேர்த்துப் பசையை ஒட்டுவதற்கு பயன்படுத்துவது போல. ஆறு ஆதாரமும் ஒட்டுப்போட்ட படம் போலத் தான். ஈரப்பசை தான் உயிராய் உள்ளது. ஆறு ஆதாரங்களும் தாமரை மலர்கள் போல. சேற்றில் விளைந்த செந்தாமரை. நீரின் உயரத்தைப் பொருத்து மலர்நீட்டம். மாந்தர் தம் உள்ளத்தளவே உயர்வு. அந்நிலை திருவளம்மையை சேர விரும்புபவர் நீக்க வேண்டும். அந்நிலையினை நீக்கு மேல் நோக்கு வர வேண்டும். மேல் ஓங்குவதற்கு மந்திரம் ஓம் நமசிவய. இது கடலில் (உப்பு) உண்டாகும், சிப்பியுள் முத்துப்போல நம்கண் என்ற சிப்பியில் உருவாக வேண்டும். முத்துக்குளிக்க வாரீயளா. மூச்சடக்க வாரீகளா?

முத்து வதனத்தில் முகம் தொறு முக்கண்ணி
சத்தி, சத்ரி, சகனி, சடாதரி
பத்து கரத்தில் பராபரன் பைந்தொடி
வித்தகி எந்தன் உள்ளம் மேவி நின்றாளே. 1170

முத்துப்போல் அருளொளி வீசும் திருமுகத்தினை உடையவள். ஒவ்வொரு திருமுகத்துக்கும் மூன்று கண்கள் உடையவள். அறிவாற்றலள், திறமை மிக்கவள், உயிர்கள் உய்யும் பொருட்டு அருளால் திருமேனி கொண்டவள். விரிந்த திருச்சடை (ஜடம்) உடையவள். பத்துக் கரத்தினை உடையவள். எல்லாம் காற்று. கரம் – திருக்கை.

மேவிய மண்டலம் மூன்றுடன் கீழ எரி
தாவிய நற்பதத் தண்மதி அங்கதிர்
மூவரும் கூடி முதல்வியாய் முன்நிற்பர்
ஓவினும் மேலிடும் உன் ஒளியாமே. 1171

ஓவினும் – விலக்கினும். கண்களை மூடினாலும். மண்டலங்கள் மூன்றும் சூரியன் (அறிவு) சந்திரன் (மனம்) அக்னி (உடல்) இந்த மூன்றுமே வெண் ஒளியாகத் தெரிந்தாலும் உள்ளே பல களங்கங்கள் உண்டு. சூரியனில் ஏழு வேறுபாடு. சந்திரனில் 16 வேறுபாடு. அக்னியின் எட்டு ஆக 31. 31க்கும் இடம் ஐந்து ஆக 36 தத்துவம் என்பர். இவை எல்லாம் ஒன்று பட்டால் உள்ளொளியாகும்.

உள்ளொளி மூவிரண்டு ஓங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடும்
கண் அவிழ் கோனைக் கடந்து உடனே நிற்கும்
கொள்ள விசுத்திக் கொடி அமுதாமே. 1172

ஒளியை நாம் வெளி பார்க்கத்தான் பயன்படுத்துகிறோமே தவிர உள்ளே விளக்குக்கு அடியில் இருட்டாகவே உள்ளது. இதற்கு விளக்கை மேலே கொண்டு போனால் உடல் உள்ளே இருள் ஒளியும். அதை பயிற்சி செய்தே கொண்டு வர முடியும். ஏனெனில் விளக்குக்கும் அறிவு கிடையாது. அதை கையாளும் நாம் தான் அறியும், அறிவாக மாறி அதை செயல்படுத்த வேண்டும். கண்ணார் அமுதனைக் காணவேண்டும். உலகம் என்பது விளக்கின் ஒளியில் தெரியும் பொருள்கள் போன்றவை. அதைக் காட்டும் விளக்கை, பார்க்கவில்லை. கண் எல்லா வற்றையும் பார்க்கும். ஆனால் கண்ணை பார்த்தவர் யார்? அதனால் நம்மையே நமக்கு அறிமுகம் இல்லை. வெட்கப்பட வேண்டிய சமாச்சாரம்.

கொடி அதிரேகை குருவுள் இருப்ப
படி அது வாருணைப் பைங்கழல் ஈசன்
வடி வது ஆனந்தம் வந்து முறையே
இடு முதல் ஆறு அங்கம் ஏந்திழையாளே. 1173

ஒழுங்காயிருந்த சிறந்த ரேகைகளில் குருரேகை நன்றாக இருக்க வேண்டும். குருமேட்டை நோக்கி எல்லாம் செல்லும் அன்னார்கள் ஆனந்தமாக இருப்பார்கள். எல்லாம் அம்மை துணையே.

ஏந்திழையாளும் இறைவர்கள் மூவரும்
காந்தாரம் ஆறும் கலைமுதல் ஈரெட்டு
மாந்த குளத்தியும் மந்திரர் ஆய்வும்
சார்ந்தனர் ஒத்த இருந்தனள் சத்தியே. 1174

திரு என்றால் திருப்பத்தை உண்டு பண்ணும் சத்தி அருளம்மை அரூபமான ஆவி சத்தி. அவள் ஆணை வழி இயங்கும் படைத்தல் (அயன்) காத்தல் (அரி) துடைத்தல் (அரன்) என்னும் கடவுள் மூவரும், அறுவகை ஓசையும்,

பதினாறு கலைகளும், தீநெறி நன்னெறி செலுத்தும் புருவநடு ஆணையும், மறைமொழி ஆராய்வும் கொண்டவனாய் சார்ந்தவர் வழிபட்டு ஏற்றும் தன்மையாய் வீற்றிருந்தாள்.

சத்தி என்பாள் ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்த அப்பாவிகள்
கத்திய நாய் போல் கதறுகின்றாரே. 1175

சத்தியென்று ஓதப்பெறும் பெண்பிள்ளை (என்பது நமது கற்பனை) தோன்றத் துணையாவள். அம்பாளை யாராவது பார்த்தது உண்டா? அவள் தோன்றாத் துணை. உருவமாகத் தோன்றமாட்டாள். அவள் ஆருயிர்களெல்லாம் நன்னெறி நன்மை பயின்று நாயகன் அடித் தலைக் கூடுவதற்கு துணை புரிபவள். அவள் வீடுபேறு அளிக்கும் மேல் நிலையில் உள்ளவள். அவளை பத்தி செய்து வணங்காமல் நம்மைப் போல் பெண் உருவம் செய்து காமத்தை வளர்க்கிறார்கள் பாவிகள் பேயர்கள்.

ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
நேரே நின்று ஓதி நினைய வல்லார்க்குக்
காரேய் குழலி கமல மலரன்ன
சீரேயும் சேவடி சிந்தை வைத்தாளே. 1176

ஆகவே அவள் திருவடி காண விரும்புபவர்கள் அவளை பெண் உருவாக கற்பனை செய்யாமல், அணுவின் அணுவாய், ஆழியாக, ஒலியாக. ஒளியாகக் காணவேண்டும். அப்படி அல்லும் பகலும் அருளுடன் தாங்கினால் கல்லும் பிளந்ததுகடு வெளியாகும். அவள் தாமரை பூ போல மென்மையானவள். மணம் போல் பரவி நிற்பவள். குழல்களில் உள்ள இடம் போல் இருப்பவள். அப்படி நுண்மையான மென்மையானதை சிந்தியுங்கள். உருவங்களாக பார்த்து ஏமாறாதீர்கள்.

சிந்தையில் வைத்து சிராதியில் வைத்து
முந்தையிலே வைத்துத் தம்மூலத்திலே வைத்து
நிந்தையில் வையா நினைவதிலே வைத்து
சந்தையில் வைத்து சமாதி செய்வீரே 1177

சிந்தை என்பது புருவநடு. சிராதி அறிவு இருக்கும் இடம். சிரம் நம் முன்னால் தெரியும் ஒளியை உள்ளத்தில் வைத்து (கண்முன் நிறுத்தல்) மூலம் என்பது ஒளிக்கு மூலாதாரம்-கண்களே, ஓதி என்றால் ஊதி ஊதி பந்துக்கு காற்றடிப்பது போல் உள்ளொளி பெருக்கி, அமைதி வடிவாய் இன்புற்று வாழ்வாய். சிராதி-முகத்தில் உள்ள ஞானேந்திரியங்கள் நிந்தை-மறதி. சந்தை-ஐந்தையும் ஒரே இடத்தில் சந்திக்க வைப்பது.

சமாதி செய்வார்கட் தான் முதலாகிச்
சிவாதியில் ஆகும். சிலை நுதலாளை
நவாதியில் ஆக நயந்தது ஓதில்
உவாதி அவருக்கு குறைவிலதாமே 1178

(சிவாதி-சிவத்தில். நவாதி-ஒன்பது முகூர்த்தங்கள், உவாதி-விகாகம்) ஐந்தும் சமநிலை அடைவது சமாதி. அதுதான் இயல்பாகவே இருந்த நிலை. அப்படி ஒழுக்கத்தை பயில் வாருக்கு திரு அருள் அம்மை முன்நின்று உதவுவாள். அவள் வில்போல் நெறியுடையவள். இது நம் நெற்றிதான் கண்நுதல் நந்தி. அவளே சிவத்தை பொருந்தி இருப்பவள். மனோன்மணி. ஒன்பது திரு உருவங்கள், ஒலி, ஒளி, சத்தி, சிவம் (அருவம்) நாலு, ஆகாயம்-அருஉரு அதற்கு கீழே உருவம் ஆண்டாள். அயன், அரி, அரன் (நாலு) ஆக ஒன்பது கோலம் கொண்டு அருள் செய்யும் அம்மையும் அவளே. அவ்வுருவில் எண்ணியதை எண்ணியதாங்கு பெறலாம். நினைவு ஒன்றே போதும்.

உறை பதி தோறும் முறை முறை மேவி
நறை கமழ் கோதையை நாள் தோறும் நண்ணி
மறையுடனே நிற்கும் மற்றுள்ள நான்கும்
இறை திணைப் போதில் எய்திடலாமே 1179

உருவக் கவர்ச்சியிலே உள்ள நாம் அருவத்தை சிந்திப்பதே இல்லை. அவை ஊனக்கண்ணுக்கு புலப்படாதவை. ஆகவே ஞானக்கண் திறக்க வேண்டும். அதுதான் கடைக்கண் பார்வை இரண்டாங்கண். மனக்கண். ஆகவே எல்லோரிடமும் மூன்று கண்கள் உண்டு. சிந்தியாதவருக்கு அது அடைபட்டுப் போகிறது. அதற்குத்தான் உள்முகப்பயிற்சி வேண்டும். அதைத் திணைப் போதில் பெறலாமே என்கிறார்.

எய்திடலாகும் இரு வினையின் பயன்
செய்தளிர் மேனிக்குமரி குலாங்கன்னி
மைதவழ் கன்னி நன் மாதுரி கையொடு
கைதவம் இன்றி கருத்துறும் வாறே. 1180

இரு வினை - உடலுக்குள் நடக்கும் செயல், வெளியே உலகில் செயல்படுவது. இதை நல்லது கெட்டது என்பர். நல்லது கெட்டது என்பதே கற்பனையே. எல்லாம் நன்மைக்கே என்று நினைப்பதுதான் போது. கெட்டது போல் தோன்றும் ஆனால் பின்னால் அது நல்லதாகவே முடிந்திருக்கும். இதையே ஒவ்வொருவர் அநுபவத்திலும் உணரலாம். பாட்டில் வர்ணனை களாய் பார்த்தால் உருவத்தை குறிப்பிடுவது போல் தோன்றும். ஆனால் அது நம் உல் உடம்பையே குறிப்பிடும். நம்மிடமே மாந்தளிர் போன்று உன் உடம்பு (பூந்துகிழ் ஆடை) குமரிப் பருவமும் நம்மிடம் உண்டு. அதுதான் அறியாமை எனும் இருட்டு. அருள் பொழியும் கண்ணும் நம்மிடம் உண்டு. கண்களை மூடினால் உருவம் கிடையாது.

கருத்துறும் காலம் கருது மனமும்
திருத்தி இருந்தவை சேரு நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மண்மேல்
இருத்திடும் எண்குணம் எய்தலுமாமே. 1181

வழிபடும் காலமுறையினைக் கருதுக. எண்ணங்கள் வந்து நம்மிடம் கருவாகின்றன. அதைத்தான் வித்து என்கிறோம். அதை செயல்படுத்தும் போது கருமம் ஆகிறது. அந்த எண்ணம் கருவிடும் போது இது யாருக்கு என்று கேட்டுப்பாருங்கள். எனக்கு என்று பதில் வரும். நான் யார் என்று அடுத்த கேள்வி கேளுங்கள். பதில் இராது. எண்ணமும் ஓடிவிடும். ஆகவே எந்த எண்ணத்தையும் செயல்படுத்தும் முன் யோஜிப்பவருக்கு அநேக காரியம் செயல்பட வேண்டி இருக்காது. எல்லாம் கற்பனையே.

ஆமை ஒன்று ஏறி அகம் படியான் என
ஓம் என்று ஓதி உள் ஒளியாய் நிற்கும்
தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்
சேம நறுமலர் சூடி நின்றாளே. 1182

ஆமை என்றால் உருவத்தை நினைக்க வேண்டாம். 'ஆ' என்றால் எண்ணம் அல்லது ஆசை. அதை மையமாகக் கொண்டு நம் உள்ளே - அகம் படியாக அதைக் கொண்டு முன்னேறலாம் என்று கற்பனை பண்ண வேண்டாம். அதை விட்டு ஓம் என்ற ஒலியைக் கேளுங்கள். அது ஓர் எழுத்து உண்மை. இதுவே புலனடக்கம். நான் திருவருளுக்கு அடிமை என உறுதியாக எண்ணுக. அப்பொழுது திருவருள் அம்மை உள் ஒளியாக நின்று அருள்வாள்.

சூடிடும் அங்குச பாசத் துணை வழி
கூடும் இருவளைக் கோலக்கை குண்டிகை
நாடும் இருபதம் நன்னெடு ருத்திரம்
ஆடிடும் சீர்புனை ஆகமமே. 1183

அங்குசம் என்பது எட்டு அறியாமை. பாசம் என்பது அதனால் ஏற்படும் பயன். கயிறு என்பது நம் சுவாசம். தோட்டி என்பது நம் கண்கள். தொளை வழி ஏறி இரண்டும் கூடுமிடம் நெற்றி. அதற்குமுன் இரண்டு கண்களில் உள்ள கண்மணியே வளைக்கை. குண்டு மாதிரி இருப்பது குண்டலினி. வெற்றிடம். உருத்திரம் என்பது திருவைந்தெழுத்து. "சிவாயநம வென்று சிந்தித்து இருப்பார்க்கு அபாயம் ஒன்றுமில்லை! இமை ஆட்டமே திரு அருள் அம்மை ஆட்டம். இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்.

ஆம் அயன் மால் அரன் ஈசன் சதாசிவன்
தாமடி சூடி நின்று எய்தினர் தம்பதம்
காமனும் காமன் இரவி கனலுடன்
கோமனும் வந்து அடிசூட நின்றாளே 1185

சாமன்-புதன் (காமன் தம்பி) திரு அருள் அம்மையின் திருவடி சூடி, அயன், அரி, அரன், ஈசன், சதாசிவம் எனும் சுத்தமாயையிலிருக்கும் ஐவரும் தங்கள் தங்கள் நிலையை எய்தினர். இவர்கள் ஆருயிர். இனத்தில் தவப்பேறு உடையார். இவர்களை அணு பக்கத் தாரென்பர். மனிதருள் தெய்வம். அவதார புருடர்கள். இது போல் காமனும் - மன்மதன் அவன் தம்பி சாமனும்-புத்தி; பகலவனும், தீக்கடவுளும், திங்களும் அம்மையின் அருள்பெற்று தங்கள் தங்கள் நிலை எய்தினர்.

சூடும் இளம் பிறை சூலி கபாலினி
நீடும் இளம் கொடி நின்மலி நேரிழை
நாடும் நடுவிடை ஞானம் உருவ நின்று
ஆடு மதன் வழி அண்ட முதல்வியே 1185

கபாலினி-கபாலத்தை (காற்றுப் பாலம்) இடமாகக் கொண்டவள். அதில் சந்திரன் மூன்றாம் பிறையாக உள்ளான். என்றும் மாறாத இளம்கொடி. இயல்பாகவே மலமில்லாதவள்.

சிறந்த அணிகலன் அணிந்தவள். எட்டு அறிவே அணிகலன். நடு நாடியாக உள்ளவள். உருவத்துக்கும் அருவத்துக்கும் மத்தி. மெய் உணர்வே, திருமேனியாகக் கொண்டவள். அவள் ஆட்டத்தின் வழி, அண்டம் அனைத்தும் நின்று ஆடும்.

அண்டம் முதலாய் அவனி பரியந்தம்
கண்டது ஒன்றில்லை கணம் குழை அல்லது
கண்டனும் கண்டியும் ாகிய காரணம்
குண்டிகை கோளிகை கண்டதில்லை 1186

அண்டம் + தீ தோற்றத்திலிருந்து அழிவு வரை அனைத்தும் அன்னையின் கலப்பின்றி இயங்குவதில்லை. ஓட்டுனர் இல்லாமல் எந்த வாகனமும் ஓடாது. ஆண் பெண் என்று சொல்லும் வண்ணம் தோற்றம் அளிப்பது காரிய உலக உருவாய் வேறுபாடு காணப்பெறும். உயிர்களின் உடம்பை பொறுத்ததே. இது இயற்கையாகிய மரம், நாற்காலி, மேஜை என்னும் செயற்கையாகிய இரு வேறு நிலை ஏற்படுகிறது. இது வல்லாமல் உயிர் நிலை ஏற்படுகிறது. இது வல்லாமல் உயிர் நிலையில் உயிருக்கு உயிராகிய இறை நிலையில் வேறுபாடு கிடையாது. அத்தகைய பொதுநிலை வரை சிந்திப்பவர் சிவதரிசணம் காணலாம்.

ஆலம் உண்டான் அமுதாம் அங்கவர் தம்பதம்
சாலவந்து எய்தும் தவத்தின் இன்பம் தான் வரும்
கோலி வந்து எய்தும் குவிந்த பதவையோ
ஏலம் வந்து தீண்டி இருந்தனன் மேலே. 1187

நாடிகள் ஒருங்கு கூடி வந்து பொருந்தும் நடுநாடியுடன் அமைய வந்து சேர்ந்து (கண்-காலில் முள் குத்தினால் கண் அழுகிறது. பொதுவாக இன்பதுன்ப உணர்வுகளை கண் மூலமே அறிகிறோம்.) உச்சித் தொளைமேல் திருவருள் அம்மை தங்கி இருகின்றனள். ஆலம் என்றால் சிவன் அதை சாப்பிட்ட பின்பு சிவன் இருக்கிறான். அதெல்லாமல் விஷத்தை மாற்றி அமுத மாகவும் தருகிறாள். குவிந்தபதவை-சிறுவழி-நடு நாடியாகிய சுழுமுனையாகும்.

மேலாம் அருந்தவும் மென் மேலும் வந்து எய்த
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலா நனின நின்று எத்தி நட்டுச் சிதன்
மேலாம் எழுத்தினளாம் அத்தினாளே 1188

கடவுளைத்தேடி காடும், மலையும், நாடும், நகரமும், ஆறும் கடலும், குளமும், கூவலும், குகையுள்ளும் பண் திசைகளும் கால் நோக நடந்து வீணாகக் கழிவர். அவன் ஜோதி சொரூபம் என்று திட்டவட்டமாக அறிந்த பின்னும் நான் அலையத்தான் செய்வேன் என்றால் யார் என்ன செய்ய முடியும்? அவ்வாறின்றி கண் இமைப் பொழுதில் அருந்தவம் கைகூடும். அவன் ஒளிரூபமாக உட்புகும் பாதை கண்களே. அதுவே அஞ்ஞாசக்கரம் அடி வயிற்றை காட்டாதீர்கள். அவளை மூலமாக (ஆதி அறிவே மூலாதாரம்) நாலு இதழ் தாமரையில் நாடி (மனம், புத்தி, சித்தம், அகம்) வழிபட்டு உச்சிக்கு மேல் உடன் கூடி உறைந்து நின்று 'ஓம்' மொழியை உன்னுதலே நன்னெறி.

ஆமத்து இனிதிருந்து அன்ன மயத்தினள்
ஓமத்திலேயும் ஒருத்தி பொருந்தினள்
நாம நமசிவ என்று இருப்பார்க்கு
நேமத் துணைவி நிலாவி நின்றாளே. 1189

ஒரே ஒளி சத்தி. இச்சை, கிரியை, யோகம், ஞானம், மாயை, மாயையில் இரண்டு சுத்தமாயை அசுத்தமாயை என எட்டு சத்திகளாக மாறியதுபோல் தோன்றுகிறது. எல்லாம் நமசிவ என்ற இருப்பார் சாக்ஷியாக இருந்து வாழ்க்கையை விளையாட்டாகவே பார்ப்பர்.

நிலா மயமாகிய நீள் படிகத்தின்
சிவா மயமாகும் செழும் தரளத்தின்
சுலா மயமாகும் சுரி குழல் கோதை
கலா மயமாக கலந்து நின்றாளே 1190

நிலா என்பது அருட்பெரும் ஜோதியின் சூழ் ஒளி. அது நிலை இல்லாதது. விளக்கு அணைந்தால் சூழ் ஒளியும் மறையும், அல்லது விளக்கு இடம் மாறும் போது அத்துடன் சூழ் ஒளியும் போய் விடும். அது வெண் நிறமாகவே இருக்கும். அந்த ஒளியில் சில திரண்டு தனி உருவமாகிறது. அவை தான் நக்ஷத்திரம். சிலை. சுலா என்றால் வட்டம். சுற்றிக் கொண்டே இருப்பதால் வட்ட வடிவமாகும். வால் போன்று நீளமாக ஒன்று உண்டு. அது தான் வால் நக்ஷத்திரம். நம் உயிர் அணுக்கள் அது போலவே இருக்கும். ஐங்கலை வண்ணமாக இருப்பாள். 1. நிக்கல் (நிவர்த்தி) 2. பிரதிஷ்டை நிலைப்பித்தல், 3. நுகர்வித்தல் (வித்யா) 4. அமைதியாக்கல் (சாந்தி) 5. அப்பாலாக்கல் (சாந்தி அதீதம்)

கலந்து நின்றாள் கன்னி காதலனோடும்
கலந்து நின்றாள் உயிர் கற்பனை எல்லாம்
கலந்து நின்றாள் கலை ஞானங்கள் எல்லாம்
கலந்து நின்றாள் கன்னி காலமும் ஆயே. 1191

காற்றால் ஆனவன் சிவன். அவன் நெருப்பு அவனோடு கலந்து நின்றவள் நீர். இந்த மூன்றும் கானல் நீர். உயிர் அணுக்களாயின. வியர்வை, வித்து, அவை 64 கலை ஆயிற்று. ஆனால் எல்லாம் காலத்துக்கு உட்பட்டன. தோற்றமும் ஒழுக்கமும்.

காலவி எங்கும் கருத்தும் அருத்தியும்
கூலவி ஒன்றாகும் கூட இழைத்தனன்
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாக மதாமே. 1192

காலவி-காலதத்துவ முதல்வி,கூலவி-அநுகூலமானவள், குலி - மனைவி, கால் மெய்யாக நிற்கும் அம்மை (பிராண சத்தி) ஊன் ஆகவும் உண்பிப்பதாகவும் எங்கும் கலந்து நின்றாள்.

அவளே எல்லாச் செயலுக்கும் தூண்டுதல் ஆவாள். ஆருயிர்கள் உலகு, உடல்களுடன் கூடும் - தன்மையை அமைத்தவள். அவளே பேரன்பினள். பெருமைச்சேர் குலத்தினள். மந்திர உருவினள், சண்டிகை பெயரினள். எண் திசையும் ஓம்பும் எழிலினள், சிவனுடன் பாலில் நீர் போல் கலந்து நிற்பவளும் அவளே.

பாகம் பராசத்தி பைம் பொன் சடைமுடி
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புயம்
மோகம் முகமைந்து முக்கண் முகம் தொறும்
நாக முரித்து நடம் செய்யும் நாதர்க்கே 1193

பாராத சத்திதான் பராசத்தி. அதாவது இருட்டு. அவளுக்கு பொன்சடை என்பது ஒளி வட்டம். அது ஒன்றாக இருந்தாலும் ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்துமாக பத்தாயிற்று. முகத்தில் ஞானேந்திரியம் ஐந்தும் அதை செயல்படுத்தும் முக்கண்ணும் அமைந்து உள்ளன. 'நாகமுரித்து' என்பது சுவாசம் உள்சென்று தூய்மைப்படுத்துவது. அவளே பேரறிவு, பேராற்றல் பராசத்தி.

நாதனும் நாலு ஒன்பதின்மரும் கூடி நின்று
ஓதிடும் கூட்டங்கள் ஓரைந்து உள அவை
வேதனும் ஈரொன்பதின்மரும் மேவி நின்று
ஆதியும் அந்தமுமாகி நின்றாளே. 1194

நம்மை பொறுத்தவரை நமக்கு ஆதியும் அந்தமும் கண்கள் தாம். உலகத்துக்கு சூரியன் எப்படி ஆதி அந்தனாக உள்ளானோ அது போல் இந்தச் சின்ன உலகத்திற்கு வலதுகண் சூரியன். இடது கண் சூழ்ஒளி, நெற்றிக்கண் அக்னி. நாதன் என்பது ஓசைக்கு அதிபதி. அது நாலாக பிரிந்தபோது மனம், புத்தி, சித்தம், அகம் ஆயிற்று. இது சூட்சுமம், உள் உடம்பு உள்ளம் அது மூன்றாகி 'ஓம்' என்ற பிரணவம் ஆயிற்று. மூன்றும்

மூன்றாக ஒன்பது வாசல் ஆயிற்று. சிவனும் நாலொன்பதிமர் முப்பத்தாறு மெய் (தத்வம்) களும் மெய்யடியார்கள் ஓர் ஐந்து பிரம்மன், ஈசனார், தற்புருடர், அகோரர், வாமதேவர், சத்தியோ சாதர் ஐயனும், பதினெட்டு தெய்வங்களும் ஆகிய யாவருடனும் பொருந்தி இருந்தனள். திரு அருள் அம்மை ஆதியும் அந்தமுமாகி நின்றாள்.

ஆகின்ற நாள் கலை ஐம்பத் தொருவர்கள்
ஆகி நின்றார்களில் ஆருயிராம் அவள்
ஆகி நின்றாள் உடனாகிய சக்கரத்து
ஆகி நின்றானவள் ஆயிழை யோடே 1195

மாயாகாரிய உலகம் தோன்றும் போது முதற்கண் 51 எழுச்சிகள் தோன்றும். இவற்றுள் அகர உயிராக நிற்பவள் அம்மை ஆகும். அவளுக்கு உபகரணங்களாக சக்கரமாக அமைந்து நிற்பன் சிவன். அஃது ஆயிழைபக்கம் கலை-அக்கரம், பாடு - பக்கம், மாயா உலகம் மாறிக்கொண்டே இருப்பது. நிலை பெறாத உலகம். சக்கரம் என்பது மேலும் கீழுமாக சுழன்று சுழன்று வருவது. அப்படி சுற்றும் போது ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொரு விளைவு ஏற்படும். அப்படி செய்ததையே திருப்பி திருப்பிச் செய்வதே போதம் எனப்படும். மண் = நீராகி, நெருப்பாகி, காற்றாகி, வானாகி, விண்ணாகி ஏற்றம் மறுபடி விண், வான், வளி, தீ, நீர், மண்ணாகியது இறக்க நிலை. இப்படி ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை. உயிர் என்பது ஆவி, ஆவி என்பது காற்று, அனல், நீர் இவை எல்லாம் என்னவோ ஏதோ என்று கருதி அம்மாவைத் தேடினால் எங்கே கிடைப்பாள். கனல் - அக்கரம்.

ஆயிழையாளோடு ஆதிப் பரமிடம்
ஆயதோர் இரண்டவை ஆறும் இரண்டுள
ஆயமனம் தோறும் ஆறுமுகம் அவைதனில்
ஏயவார் குழலி இனிது நின்றாளே

1196

சத்தி எனும் போது அதை பெண் உருவமாக கற்பனை செய்யாமல் ஆவியாகப் பாருங்கள். ஆதியாகிய பரம் சர்வ வியாபி, அது எங்கும் எதையும் தேடி போக வேண்டியது இல்லை. அதனுடைய வெப்பத்தில் தோன்றியது ஆவி. ஆவியின் ஆட்டத்துக்கு இடமளிப்பது சிவம். அதையே சத்தி+கரம் என்பது சக்கரமாயிற்று. அச்சக்கரம் எட்டு இதழ் கொண்டது. முகம்-இதழ். அந்த எட்டில் மனதிற்கு வாய்ந்தது ஆறு. அதில் மணமாக அமர்ந்திருக்கிறாள்.

நின்றனள் நேரிழை யோருடன் நேர்பட
இன்று என் அகம்படி ஏழும் உயிர்ப்பெய்தும்
துன்றிய ஓர் ஒன்பதின் மரும் சுழலுள்
ஒன்று உயர் ஓதி உணர்ந்து நின்றாளே 1197

நேர் இழை என்பது செங்குத்தாக நிற்பது. ஊடு (குறுக்குக்கோடு) இல்லாதது. அதனால் பத்து காற்று உயிர்ப்பினுள்-உயிர்க்காற்று(பிராணவாயு), மலக்காற்று (அபானன்), வீங்கல்காற்று(வியானன்) மூன்றும் ஒழித்து ஒழிந்த தொழில் காற்று, (சமானன்) ஒலிக்காற்று, நிரவுக்காற்று, தும்மல்காற்று, விழிக்காற்று, கொட்டாவிக்காற்று ஆகிய ஒன்பதும் இயங்கும். அம்மையுடன் நெருங்கிய ஒன்பது ஆற்றல் ஒன்றல்களும் சூழ்ந்து விளங்கும் உயர்வை உயர்ந்த ஒன்றாகிய சிவஜோதியை ஆருயிர்கட்கு உணர்த்த ஓதி நின்றனள். அவை தமிழ் மறையும் முறையுமாகும்.

உணர்ந்து எழுமந்திரம் ஓம் எனும் உள்ளே
மணந்து எழும் ஆம் கதியாகிய தாகும்
குணர்ந்தெழு சூதனும், சூதியும் கூடிக்
கணந்து எழும் காணும் அக்காமுகையாமே 1198

மணந்தெழும் -பொருந்து எழும் சூதனும் சூதியும்-சூழ் ஒளியாகவும் ஒலியாகவும், கணந்து-கலந்து அகத்தே உணர்ந்து எழும் மந்திரம் ஓம் என்ற ஒலி. அதில் பொருள் விளக்கமாகத்

தோன்றும். ஆகும் நிலையும் கைகூடும். மேன்மை பண்புகள் அனைத்தும் இயல்பாகவே உடையன. மறைபொருளான சிவனும் சிவையும் பிரிவறக்கூடி எழுந்தருள்வர், காமுகை- விருப்பம் உள்ளவள்.

ஆம் அது அங்கியும் ஆதியும் ஈசனும்
மாமது மண்டலம் மாருதம் ஆதியும்
ஏமது சீவன் சிகை பங்கு இருண்டிட
கோமலர்க் கோதையும் கோதண்டம் ஆகுமே. 1199

ஒளிக்கும் ஒளி அருளும் பேரொளிப் பிழம்பாகிய சுடரும், நடப்பாற்றலாகிய ஆதியும், அவ்வாதியை உடலாகக் கொண்ட ஆண்டானும், திங்கள் மண்டலமும், காற்று முதலாயதும், காவலாகிய உயிர் எழுத்தும், உயிர் எழுத்துக்கு ஒலி தரும் சிகையும், நடு நாடியாகிய கோதண்டமும் இருண்ட கூந்தலின் கண் சிறந்த மலர்சூடிய திருவருள் அம்மையால் இயங்கும்.

ஆகிய கோதண்டத்தாகும் மனோன்மணி
ஆகிய ஐம்பதோடு உடனே அடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரையவள்
ஆகும் அவள் ஐங்கருமத்தள் தானே 1200

ஆகிய ஐம்பதுடன் 50 அக்ஷரங்கள், அக்கரங்கள் அதாவது எழுச்சிகள் அல்லது எழுத்துக்கள். நடு நாடியில் விளக்கமுறும் மனோன்மணியானவள் ஐம்பதோரு எழுத்துக்களுக்குள் அடங்குவாள். அவளே பேரறிவு, பேராற்றல், பெரும் பொருளாவாள். அவள் படைத்தல் முதல் ஐந்தொழில்களுக்கும் உரியவள் ஆவாள். பராபரை, பேரின்பம், பேராற்றல் பரைபரந்த ஐந்து நாதத்துடன் கூடிய சத்தி - பிரபஞ்சம்

தான் இகழ் மோகினி சார்வான யோகினி
போன மயமுடையார் அடி போற்றுவர்
ஆனவர் ஆவியினாகிய அச்சிவம்
தாணம் பரசிவ மேலது தானே 1201

திரு அருள் என்பது பருப்பொருள்களை நீரில் கரைத்து, நெருப்பால் அதை சூடாக்கி ஆவியாக்கும் நிலை. அப்படி போன மயம் உடையார் பிறப்பற்றவர் ஆவியினால் உயிர்தொறும் நிறைந்து காளி எனும் பேர் கொண்டு - அவளிடம் ஏவல் செய்பவர் யோகினி என்பர். பிறப்பிலிருந்து நீங்க விரும்பும். பெரியோர் அம்மையின் ஆவி வடிவத்தை போற்றுவர், எழுவகைப் பிறப்பினுள் மனிதப்பிறப்பே உயர்வு ஆனது. அதிலே தான் சிவம் தோன்றும் தெளிவு நிலை.

தாணந்த மேலே தரும் சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி அம் பொன் திருவொடு
மோனையில் வைத்து மொழி தரு கூறது.
வான வையோமெனும் அவ்வுயிர் மார்க்கமே. 1202

முதலும் முடிவும் மோனநிலைதான், மற்றைய நினைவுகள் எல்லாம் தோற்றங்கள் தாம். எல்லாம் காலத்துக்கு உட்பட்டது. அதில் கொஞ்சம் அதீதம் குறை இருக்கலாம். நீண்ட நாள் இருப்பது ஒரு வெற்றி அல்ல. உயிராகிய அம்மை உயிர் எழுத்துக்கு உயிர்ப்பு நல்கும். சிகையாகிய நாதத்துடன் பேரின்பம் தரும் அன்பியல், அன்பு-மோஹினி. அழியாத திருவடி செல்வத்துடன் (ஒளி) முதற்கண் வைத்த செல்வி ஆவாள். அவளே ஓம் என எழுத்து. அவ்வெழுத்தின் வழி பயில்வோர் சன்மார்க்கம் செல்பவராம்.

மார்க்கங்கள் ஈன்ற மனோன்மணி மங்கலி
யார்க்கும் அறிய அரியா அவளாகும்
வாக்கும் மனமும் மருவி ஒன்றாய் விட்ட
நோக்கம் பெருமைக்கு நுண்ணறிவாமே 1203

மார்க்கங்கள் தாசமார்க்கம் (நட்பு) புத்திரமார்க்கம் (தந்தை, புதல்வன்), சகமார்க்கம் (காதலன் காதலியாக) சன்மார்க்கம் (ஏகம்) இவை எல்லாமே ஒன்றில் தான் போய் முடியும். அவள்

யார்க்கும் தங்கள் அறிவு முனைப்பால் அறிதற்கு ஒண்ணாதவள், மொழியும் நினைப்பும் ஒன்றாய் அடங்கி கண்ணால் பார்க்கும் தன்மையும் நீங்கிய பெருமையுடையவர்களுக்கு உணர்வில் தோன்றுவாள். நுண் அறிவாய், அறிவையும் அறியும் அறிவாய் இருப்பாள்.

நுண் அறிவாகும் நுழை புலன் மாந்தர்க்குப்
பின் அறிவாகும் பிரான் அறி அத்தடம்
சென் னெறியாகும் சிவகதி சேர்வார்க்குத்
தன் நெறியாவது சன் மார்க்கமாமே. 1204

நுழைபுலன் மாந்தராகிய மெய்யடியார்க்கு திருஅருளம்மை அறிவுக்கு அறிவாகிய நுண் அறிவாய் இருப்பாள். அவர்களறிவு பிரான் அறிவுக்கு பின்னாக நிற்கும். அதுவே பெருவழியாகும். அதுவே செல்லும் நெறியுமாகும். சிவநிலையை எய்துவார்க்கு தலையாய நெறி அதுவே. அறிவு நெறியாகிய சன்மார்க்கமாகும். உயிர் உடலை விடும் போது சிரசு வழியாகப் போனால் பிறவி கிடையாது. அது சாகப் போகும் போது வராது. பயிற்சி வேண்டும். (தியானம்)

சன்மார்க்கமாகச் சமைதரு மார்க்கமும்
துன்மார்க்க மானவை எல்லாம் துரந்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி ஆவதும்
சன் மார்க்கத் தேவியும் சத்தி என்பாளே 1205

அறிவு நெறியாக அமைந்த முறை தீநெறியான எல்லா வற்றையும் ஓட்டிவிடும். அம்முறையே நல் ஒழுக்கத்தால் நன்னெறி வந்து கைகூடும். மார்க்கம் - முறைமை, ஒழுங்கு.

சத்தியும் நானும் சயம்புவும் அல்லது
முத்தியை யாரும் முதல் அறிவாரில்லை
அத்திமேல் வித்திழல் அத்தி பழுத்துக்கால்
மத்தியிலேற வழி அதுவாமே 1206

அத்தி என்பது எட்டு சத்திகளினால் ஆன சரீரம். நானும் என்பது சீவன். அணுவை ஆயிரமாக பகுத்து அதில் நூறாயிரத்து ஒன்று சீவன். சிவன் உருவமும் அதுவே. அதுவே நீ ஆனாய், தன்னை அறியும் அறிவை விட்டு மற்ற எல்லா அறிவையும் அறிந்து என்ன பயன்? சத்தியாகிய பேரறிவு, பேராற்றலும், ஆவியும், ஆண்டானும் இவை அல்லாது முத்திக்கு உதவ வேறு எவராலும் இயலாது. உடம்புக்குள் உயிரினை (ஆவியை) இணைத்து வைக்கில் உடம்பு முதிர்ந்தால் நடுநாடி வழியாக உயிர்ப்பு உயரும். உயிர்ப்பு என்பது பிராணவாயு. அத்தி-அகரம்-உடல், வித்து-மகரம் (நீர்அணு) அத்தி பழுத்தால் - சரீரம் பண்பட்டால் - மத்தி - புருவ நடு வழியாக உயரும்.

அது இது என்று அவமே கழியாத
மது விரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதி அது மேவிப் பணிய வல்லாருக்கு
விதி வழி தன்னையும் வென்றிடலாமே 1207

ஒரு நெறிப்படாது அது வழி இது வழி என்று மயங்கி வீண் காலம் போக்காது. தேன் வழி அதாவது 'தே' நெருப்புவழி. நோக்கம் - அதுவே சரியான வழி என்று உறுதிக் கொண்டு, பூச்சூடி கூந்தலை உடைய (கபாலம்) மங்கை நல்லாளை திரு அருள் அம்மையை திங்கள் (சந்திரன்) வழி மண்டில அமிழ்த வழியே சென்று (கண் வழியே பிரணனை-கால்-சுவாசம்) வணங்க வல்லார்க்கு பிறப்பு இறப்புக்கு உட்படுத்தும் விதி வழியை வென்றிடலாம். அதாவது நீருடன் சேர்ந்து வரும் சுவாசக் காற்றை நெருப்புடன் சேர்த்தால் (நெருப்பு இருக்குமிடம் கண்கள்) அது சுத்த ஆவியாகி மேல் நோக்கும். அதைக் கவனியாமல் அதன் போக்கில் விட்டால் நீர் பெருக்கம் அதிகமாகி வெள்ளத்தால் விளையும் பயிரும் கெடும்.

வென்றிடலாகும் விதிவழி தன்னையும்
வென்றிடலாகும் வினைப் பெரும் பாசத்தை
வென்றிடலாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடுமங்கை தன் மெய் உணர்வோர்க்கே 1208

விதிவழியை வெல்வதும், இருவினைப் பாசத்தை வெல்வதும் நிலையாப் பொருள்களை விரும்பும் ஐம்புலனை வெல்வதும் இயல்பாகவே பொறிவாயில் ஐந்தவித்த திரு அருள் அம்மை வழிபட்டு திருவடி உணர்வாகிய மெய்யுணர்வை உணரப் பழகுங்கள் வென்றிடும் - மேல்நிலைவழி.

ஓர் ஐம்பதில் மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரம் இது
மாரம் குழலாளும் அப்பதி தானும் முன்
சாரும் பதமிது சத்தியமாமே. 1209

ஐம்பத்தொரு எழுச்சிகள் பற்றி முன்பே ஆராய்ந்து இருக்கிறோம். முதல் பார்வையில் நாம் ஒரு ஆளைப் பார்த்தால் நமக்கு தோற்றம் தருவது முகம். முகத்தில் உள்ள மூக்கு, கண், காது, வாய், உடல் என்ற ஐந்து உறுப்புக்கள் தாம். பின் ஆராயப்புகின் (நம்மையே) ஒவ்வொன்றிலும். ஐந்து ஐந்து பகுதி இருப்பது புரியும். அது 24 + 1. இது முகப்பகுதி. இதை ஐம்புல அறிவு என்பர். இந்த அறிவின் அடிப்படை ஒரே ஒளிதான். அது எப்போதும் எங்கேயும் கிடைப்பது. அது என்னவோ கிடைக்காத பொருள் மாதிரி கற்பனை செய்து அதை தேக்கி வைக்க ஒரு பை ஏற்பாடு செய்தது தான் காலப்பை. அது ஐந்து அறைகள் ஏற்பாடு செய்து அது ஒவ்வொன்றிலும் தனித்தனியே ஒலி, ஒளி காற்று, நெருப்பு, நீர், மண் என்று வைத்து காத்து வந்தது. இது ஒரு மயக்கமே இல்லாமல் வேறு என்ன? இதையே கன்மம் என்பது. இதை அறிவுறுத்தி இது அநாவசியமான வேலை என்று அறிந்தால் விதி வழியை வென்றவராவோம்.

சத்தியினோடு சயம்புவும் நேர்படில்
வித்தது இன்றியே எல்லாம் விளைந்தன
அத்தகையாகிய ஐம்பத்தொருவரும்
சித்தது மேவி திருந்திடுவாரே 1210

(சயம்பு-சிவன்)

மூலாதாரம் -4, சுவாதிஷ்டாணம்-6, மணிபூரகம்-10, அணாகதம்-12, விசுத்தி-16, ஆக்ஞா-2, இதை அறியும் அறிவு-1. ஆக 51.

ஒன்று ஐம்பது ஆக்கப்பட்டு பழக்கப்பட்டது. மணம் அதையே திருப்பி திருப்பி செய்து வருகிறது. அதன் பலனை அறியும் சத்தியை இழந்து விட்டது. அதே போல் நாமும் வாழ்க்கை என்றால் என்ன? இந்த வாழ்வால் அடையும் பயன் என்ன என்று அறிந்தோமா? அறிய விரும்பாத அளவுக்கு மந்தம் ஆகிவிட்டோம். ஒரு கருவி மாதிரி செய்ததையே செய்து கொண்டு சொன்னதையே சொல்லிக்கொண்டு ஏன், எதற்கு என்ற கேள்வி முறை இல்லாமல் வாழ்வது வாழ்க்கை ஆகுமா? பழகிய பழக்கப்படி வாழாமல் மாற நினைப்பதே மாற்ற மணம் கழிய நின்ற மறை யோர். சத்தியாகிய முப்பத்து ஐந்து அன்னை மெய், முப்பத்தாறு அத்தன் மெய்-நேர் படுதலாகிய நோக்கம் (நோக்கரிய நோக்கு) கொண்டதினால்-அது பழக்கப்பட்ட பழமையான ஐம்பதும் விழிப்படைந்தன. அவை சிவனுடன் சேர்ந்து தன் பழக்கத்தை மாற்றி-(அடிமையாயிருந்த பழக்கம்) எழுச்சி பெற்று விடுதலை அடைந்தன.

திருந்து சிவனும் சிலை நுதலாளும்
பொருந்து வானவர் போற்றி செய்து ஏத்த
அருந்திட அவ்விடம் ஆரமுதாக
இருந்தனன் தானம் இளம்பிறை என்றே 1211

இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதலே திருத்தலாகும். அங்கனம் திருந்திய சிவனே சீவனை திருத்த முடியும் அவன் பேசாது வெள்ளிமலை மேல் வீற்றிருந்தால் காரியம் ஆகாது.

ஆதலால் திருஅருள் அம்மை அவளை கீழ் அவளை கீழ்நோக்கம் செய்யத் தூண்டி அவள் கடைக்கண் பார்வையை அதோ முகமாக்கியது அம்மையின் செயலேயாம். அதனால் விஷத்தை உண்டு அமுதமாக்கினார். அதை தேவர்கள் அருந்தி என்றும் இளமையாயிருக்கிறார்கள்.

என்றும் எழுகின்ற வேரினை எய்தினார்
அன்று அது ஆகுவர் தார் குழலாளொடு
மன்று அருகங்கை மதியோடு மாதவர்
துன்றிய தாரகை சோதி நின்றாளே. 1212

என்றும் எழுச்சியை விரும்புவர், எது இயற்கையாக எழுச்சி பெற்று நிலை பெற்றிருக்கிறதோ, அதை கவனத்தில் கொண்டு அதையே விரும்பினால், அதாகவே மாறலாம். அதல்லாமல் எண்ணம் ஏற்றத்திலும், செயல் கீழ்நோக்கத்திலும் இருந்தால் எப்படி வெற்றி கிடைக்கும். ஆகவே எண்ணம் சொல் செயல் மூன்றும் ஒன்றாக வேண்டும் என்றும் வளர்ந்து ஓங்கும் அருவ ஒளியுடன் அழகினை எய்தினாள். அப்பொழுதே அவ்வழகின் வண்ணமாவார், நடப்பாற்றலாகிய தார் குழலாளொடும் (எலும்பு, நரம்பு, ரோமம் எல்லாம் குழல் வடிவம்) அவ்வாற்றலின் வெளிப்பாடாம். நிலை பெற்ற கண் கையாகவும், சூழ் ஒளி மதியோடும், வணங்கும் மாதவருடன், தொடர்ந்து காணப்படும் பேரொளிப் பிழம்பாக அம்மை நின்றனள். ஏர் - அழகு.

நின்றனள் நேரிழையாளொடு நேர்பட
ஒன்றிய உள்ளொளியாலே உணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடு ஞானங்கள் தோன்றிடும் தானே. 1213

நடப்பாற்றலுடன் நேர்படநின்றனள் அருள் அம்மை அது புலப்படாத உள்ளொளியாலே உணரப்படுவது அவ்வடியின் கீழ்ச்சென்ற ஆருயிர்கள் வேண்டியவை வந்து எளிதாகப் பொருந்தும். திருவடிகள் உணர்வில் தோன்றும்.

தோன்றிடும் வேண்டுருவாகிய தூய்நெறி
ஈன்றிடும் ஆங்கவள் எய்திய பல்கலை
மான்றுஅரு கண்ணியும் மாரனும் வந்து எதிர்
சான்று அது ஆகுவர் தாம் அவனாயுமே 1214

திரு அருள் அம்மை நன்னெறிச் செய்வார். அன்பு கூர்ந்து விரும்பும் திருவுருவாய் தோன்றி அருளுவாள். அவள் பலவேறு கலைகளை உணர்வித்து படைத்து அருளுவாள். மான் போன்ற கண்ணை உடைய அம்மையும் மாரனாகிய சிவபெருமானும் மெய் அடியார் முன் தோன்றி அருள்வர், பொருளில் ஒருமை.

ஆயும் அறிவும் கடந்த அணுவாரணி
மாயமதாகி அதோமதி ஆயிடும்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயமதாய் நெறியாகி நின்றாளே 1215

திருப்பம் உண்டு பண்ணும் அரூப அருள் அம்மை ஆராயவும், அறிவும் கடந்த நுண் இயல்பானவள். அவள் கச்சு பூட்டப்பட்ட கொங்கையினை உடையவள் என்றால் நம் வழக்கம் போல் பெண்ணின் முலை தான் ஞாபகமே வரும். ஆன்மீக அறிவு என்பது அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாற்பட்டது. அங்கே ஆண் பெண் என்ற பாலுணர்வு கிடையாது. கட்டுப்பட்ட வாயு - அதன் முழு வலிமையை காட்டாமல், வேண்டும் அளவு அவளே மருட்சியோடு மதோன் மத்தியாவாள். அவள் நிறம் செந்நிறம். அவள் அன்பு நெறியில் அகப்படுபவள். அன்பே சிவமானவரின் ஆனந்தி.

நெறி அதுவாய் நின்ற நேரிழையாளை
பிறிவது செய்யாது பிஞ்ஞகனோடும்
குறியாது கூடிக் குறிக் கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிடலாமே 1216

திருநெறியாகி நின்ற திரு அருள் அம்மையை அதாவது உருவத்தை மாற்றி அருவநிலைக்கு மாற்றி அமைப்பது திருவருள் சத்தி - அதற்கு துணையாக நிற்கும் சிவத்தை வேறு என்று கருதலாகாது. பிஞ்ஞகன் - இங்கே அவன் பாலகன், பிஞ்சுமனத்தினன். அப்படி நோக்குவார் மெய்யடியார். ஆண் பெண் என்ற உருவக் கவர்ச்சியில் காணும் கண்களுக்கு புலப்பட மாட்டார். அடங்கல் என்பது ஆருயிர் தன் செயலற்று அருட் செயலாகவே இயங்குதல். சத்தியையும் சிவனையும் பிரித்தல் கூடாது.

ஆ அயன், மால், அரண், ஈசன், மாலங்கதி
ஓ மயமாகி ஒன்பதும் ஒன்றிடத்
தேமயன் ஆளும் தெனாதென என்றிடும்
மாமயமானது வந்து எய்தலாமே 1217

திரு அருள் ஆணை பெற்று செயல்புரியும் அயன், அரி, அரன், ஆண்டான் எனும் ஆருயிர் இணமாம். இவர்கள் விரும்பும் நிலையினை அருளவும் ஒன்பது ஆற்றல்கள் ஒன்று கூடவும், சிவன் நோக்கம் கொண்டனன். கொள்ளவே தென்னாதென என தேன் உண்ண வந்த வண்டு ஒலி மெய் வடிவம் எய்திற்று. இன்புறு வண்டு இங்கு இன மலர் மேல் போய் உண்பது வாசம் அது போல் உயிர் நிலை மால் - விருப்பம். அயன், மால், அரன் மூவரும் சுத்த வித்தையில் உறை போல் தேடயம் - இன்ப வடிவம்.

வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து முதலாக எண் திசை யோர்களும்
கொந்தணியும் குழலா ளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழி நவில்வீரே 1218

கொத்தாக எல்லாம் இணைந்த இடம். கொத்து - அது ஒரு குழல் போன்ற இடம் ஆகாயமெனப்படும். அந்தக் குழலில் உள்புகுந்து நிற்பவன் நாதன் இப்படி ஒவ்வொருவரயும் தேடி

ஒவ்வொரு இடமாக அலையாமல் எல்லாமாக சேர்ந்திருக்கும், ஒரே இடத்தைத் தேடி போற்றுவர் வானவர், தானவர் (பொருள் நோக்கமுடையவர் - ஒரு மாயை) திங்கள் சொல்லப்படுகின்ற எண்புலக் காவலர்கள் இந்திரன், அக்னி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானர் பயன் வேண்டி வந்து திருவடி போற்றுவர், போற்றி வழிபடும் மந்திரம் நமசிவய. "ஒன்று கண்டேன் உலகில் ஒரு நற்கனி. நன்று கண்டேன். அது நமசிவயக் கனி, தின்று கண்டேன் தித்திப்பாய் இருந்தது. மென்று கண்டேன் மெத்தென இருந்தது".

நவிற்று நன் மந்திரம் நன்மலர் தூபம்
கவற்றிய கந்தம் கவர்ந்தெரி தீபம்
பயிற்றும் உலகினில் பாரப்பதி ஆசை
அவிக் கொண்ட சோதிக்கு ஓர் அர்ச்சனை தானே 1219

இதற்காக வெளியே ஓட வேண்டாம். ஜோதி நம் கண்ணில் பாரப்பதியாக உள்ளது. 'ந' என்பது நாசி வழியாக நடப்பாற்றலாக உள்ளது. அது வாசனை ஊட்டும் கந்தம். பூ , கண்மலர் அங்கே தீர்த்தம் உண்டு (கண்ணீர்) அதையே நினைத்து சிவசிவ என்றிட சிவலோகம் கிட்டும். அகமுக பூஜையே அர்ச்சனை. அருவ பூஜை, பூஜை என்றால் நினைத்தல்

தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத்து ஒருவன் உலப்பிலி
பூங்கிளி தங்கும் புரி குழலாள் அன்று
பாங்குடன் ஏற்ப பராசத்தி போற்றே 1220

உயிரினங்கள் எல்லாம் சத்தியின் பால் பட்டதே. அசைவு எல்லாம் சத்திதான். அசையாதவன் சிவன். அதைப்பரா - பரம் என்கிறோம். அவன் தான் இந்த உலகைத் தாங்கி நிற்பவன். சந்திரனை சூடுபவன். ஊழிக்காலத்தும் கெடா ஒருவனாய் நின்றனன். ஓங்கிய காலம்-ஓய்வு பெறும் காலம் ஊழிக்காலம், ஊழியம் என்றால் வேலை செய்யும் காலம். உலப்பிலா- அழிவில்லாதவன். அத்தகைய பேராற்றலை வழிபடுவாயாக.

பொற் கொடிமாதர் புனை கழல் ஏத்துவர்
அற் கொடி மாது உமை ஆர்வத் தலைமகள்
நற்கொடி மாதை நயனங் கள் மூன்றுடை
விற் கொடி மாதை விரும்பி விளங்கே 1221

கரிய கொடி போலும் நிறம் வய்ந்த உள் இமை (உமை) ஆறு விதமான உயிர்கள் மாட்டு நீங்கா ஆர்வம் பூண்ட முதல்வியை (பார்முதல்பூதம்) நல்லகொடி போன்ற போலும் இடையினையுடைய எழிலியை (நடுநாடி). நெற்றியிலிருந்து சிரசு வழியாக பிடரி பேய் முதுகெலும்பு நாளம் வழிசென்று ஆண்குறி/பெண்குறி வரை செல்லும் நரம்பு. மூன்று திருக்கண்கள் உடையவள். ஒளி பொன்போல் விளங்கும் பணிப் பெண்கள் திருவடி தொட்டு வழிபடுவர். அற்கொடி - அல்கொடி- கரியகொடி. மாதர்-பரிவார சத்திகள், விற்கொடி-ஒளிபொருந்திய

விளங்கு ஒளியாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்க
களம் கொள் மணியுடன் காம வினோதம்
உளம் கொள் இலம்பியம் ஒன்று தொடரே 1222

அருட்பெரும் ஜோதி எப்போதும் நிலைத்து நிற்பது. அதன் அடுத்த நிலை சுடர் மூன்று. சூரியன் அதன் பிரதிபலிப்பு சந்திரன் இவை இரண்டும் சேர அக்னி இவை மூன்றும் ஒன்றை ஒன்று தழுவிய நிலை. இத்துடன் ஒலியும் கூட பராபரை ஆயிற்று. பரத்தையும் பராபரையும் பிரிக்க இயலாது. இதை ஒளியோடு கூடிய மலர் மாலை என்கிறார். மணிமாலை பராசத்தி மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற இருளைப் போக்க திருநீலமாக விளங்குகிறாள். சிவன் மனத்தே காமம் இல்லாமல், இருப்பது போலக்காட்டும், சத்தி. கொள்கை இல்லாத நீரில் மிதக்கும் தோணி போல் தாமரையில் நீர்போல உள்ளது மனம் என்னும் தோணி. அவளை தொடர்ந்து வழிபடு. அதாவது கண் ஒளியையே நினைத்து வணங்கு. இடைவிடாது நினைத்துப் பழகு, தூங்கிருள்-நிலைபெற்ற அறியாமை. இலம்பியம்-உபதேசம்.

தொடங்கி உலகினில் சோதி மணாளன்
அடங்கி இருப்பதென் அன்பின் பெருமை
விடம் கொள் பெருசடை மேல் வருகங்கை
ஒடுங்கி உமையொரு ஓர் உருவமே. 1223

மலைமகள் - பராசத்தி, சலமகள் - திரோதன சத்தி, சலம் வஞ்சனை மறைப்பு விடம் கொள் - இடம் கொள் பரந்த உலகினில் ஒளியினை படைத்து அதற்கு ஒலி கொடுத்து சிவன் உதவுவது ஏன்? அன்பே காரணம். பரந்து அடர்ந்து இறந்த பெரும் சடைமேல் வருகின்ற கங்கை நடப்பாகிய மறைப்பாற்றல் ஆவாள். அவள் உமையாள் எனும் (உ - என்பது நாதம்) எனும் வனப்பாகிய உறைப்பாற்றலின் கண் ஒடுங்குவாள் ஆக கங்கையும் உமையவளும் ஒருவளே.

உருவம் பலஉயிரா வந்த நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடில்
புரிவளைக் கைச்சி எம் பொன்னணி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே. 1224

தெருவும் புகுந்தமை-வெளியுட்டமை, பல் உயிர்க்கும் வினைக்கு ஈடாக என்பதை விருப்பத்துக்கு ஈடாக என்று கொள்ளவும், ஏன் எனில் நாம் விரும்பி ஏற்றுக் கொண்டதே இப்பிறவி. கடவுள் படைப்பு அல்ல. நாலு ஆறுமாதமாய் குயவனை வேண்டிப் பெற்றது. அதைக் கூத்தாடி கூத்தாடி போட்டு உடைக்கிறோம். மண் பாண்டம் உடைந்தால் ஓடு பயன்படும். மனித உடல் அதற்கும் ஆகாது. ஆனாலும் சிவம் இந்த உயிர்களை மேம்படுத்தக் கருதி உடன் இருந்து தடுத்து ஆட் கொள்வது தான் அவன் கருணை. மீகாமனாக இருந்து தோணியை வழி நடத்திச் செல்வன். அந்நந்தி கலந்தும் வெளிப்பட்டும் தனித்தும் நிற்பள். அந்த உண்மையினை ஆராய்ந்து அறியில் திருவருள் அம்மையின் ஆற்றலே சிவனை அடைய துணையாக இருந்தது புரியும். அதனாலேயே சிவனை பதி, கணவன் என்கிறோம். மாயம்-அறிதற்கு அரியன்.

மாயம் புணர்க்கும் வளர் சடையாணடித்
தாயம் புணர்க்கும் சலநதி அமலனைக்
காயம் புணர்க்கும் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்கும் அவ்வியோனியுமாமே. 1225

மா சத்தி-திருவருள், யோனி-காரணம். உலகு-புவனம், உடல்-தனுசு (வில்) கலன் - கரணம், ஊன் - போகம் அறியாமையில் கிடந்த உயிர்களை, தன்னைப் போல் அறிவு மயமாக்க சிவன் மாயா காரியமாக உலகு, உடல், கலன், ஊன் முதலியவற்றை இயைந்து இயக்கி படைத்தருள்கிறான். மறைப்பாற்றலாகிய சலநதியை தாங்குபவனும் அவனே. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கிய இறைவன் உயிர்கள் விருப்பத்துக்கீடாக உடல் கொடுத்து கட்டுவிப்பவன்.

உணர்ந்து ஒழிந்தேன் அவனாம் எங்கள் ஈசனைப்
புணர்ந்து ஒழிந்தேன் புவனா பதியாரை
அணைந்து ஒழிந்தேன் எங்கள் ஆதி தன் பாதம்
பிணைந்து ஒழிந்தேன் தன் அருள் பெற்றவாறே 1226

எங்களை ஆண்டவனை அவன் அருளால் உறுதியாக உணர்ந்தேன். அவனே புவனமாகிய உலகம். அவனைப் புணர்ந்தேன் உணர்ந்தேன். எங்கள் ஆதியை உடைய முழு முதல்வனை பின்னிக்கிடந்தேன். இவை அனைத்தும் திருவருளால் தரப் பெற்றதும் என்க.

பெற்றாள் பெருமை பெரிய மனோன்மணி
நற்றாள் இறைவனே நற்பயனே என்பர்
கற்றான் அறியும் கருத்தறிவார் கட்குப்
பொற்றாள் உலகம் புகல் தனியாமே 1227

ஒன்பது சத்திகளுள் முழு ஆற்றல் பெற்றவள் மனோன்மணி. அவளே அனைத்து பெருமையும் பெற்றவள். அவள் துணையாக இறைவன் நல்ல திருவடியே, நற்பயன்; கற்ற கல்வியின் பயனாகிய கருத்தை அறிவார்க்கு அவன் திருவடியாகிய விழுப்பேற்றினை எய்துதல் எளிதாகும்.

தனி நாயகன் தானோடு என் நெஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழு உலகு என்பர்
பனியான் மலர்ந்தடைப்போது கை ஏந்திக்
கனியாய் நினைவது என் காரணம் அம்மையே 1228

குளிரால் மலர்ந்த அழகிய பூக்களை (எண்ணங்கள் எழுச்சி பெற்ற கண் மலர்கள்) கை ஏந்தி கனிந்த உள்ளத்துடன் அம்மையின் திருவடியை நினைத்து தொழும் காரணத்தால் ஒப்பில்லாத முழு முதல்வனை (பூரண அறிவை - எல்லாம் அறியும் அறிவு நான் எனில் எல்லாம் அறியும் இறை எனலாமே) என் நெஞ்சம் நாடலாயிற்று. அதன் பயனாக சிவனை இனியார் என்பர். அவர் ஏழு உலகமும் கலந்து நிற்பர். (பூர், புவ, சுவ, மகர், ஜனோ, தபோ, சுவர்க்கலோகம்) அதற்கு அப்பாலும் தனித்து நிற்பர்.

அம்மனை அம்மை அரிவை மனோன்மணி
செம்மனை செய்து திருமங்கையாய் நிற்கும்
இம்மனை செய்யும் இருநிலமங்கையும்
அம்மனை யாகி அமர்ந்து நின்றாளே 1229

மனையை காப்பவள் மனைவி. அகமுடையாள், உள் நின்ற சத்தி, நல்ல மனைவி என்பவள் உலகோரால் இவள் நல்லவள், இவள் கெட்டவள் என்று சொல்லப்படாதவள் என்பர். அடங்கி நடப்பவள். உச்சி வீட்டுக்குரிய அம்மை மனோன்மணி என்பர். அவளே செம்பொருள் திருவடியை உணரச் செய்பவள். இம்மனையாகிய உடலைத் தந்து நிலமடந்தையாக நிற்பவள்,

மடந்தை எனப் பெயர் பெற்றவள். தன்னைக் காட்டிக் கொள்ளா தவள் மடந்தை. அவளே அழகிய அன்னையாய், ஆதியாய் யாண்டும் பொருந்தி நிற்பவள். அவ்வம்மை தந்த ஒரு உடம்பிலேயே பிறப்பு அற முயலுதல் வேண்டும். வேறு பிறப்பு எடுக்கும் நோக்கம் கொண்டார் பிறர் மனை நோக்கும் பேதையர் ஆவார்.

அம்மையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அம்மையும் அத்தனும் யார் அறிவார் என்னை
அம்மையொடு அத்தனும் யானும் உடனிருந்து
அம்மையொடு அத்தனை யான் புரிந்தேனே 1230

தந்தையும் தவறு செய்தான். தாயும் இடம் கொடுத்தாள் வந்து பிறந்து விட்டோம். உண்மையான தந்தை காமத்தில் ஈடுபடமாட்டான். சிவன் மன்மதனை எரித்தவன். காமத்தில் ஈடுபடமாட்டான். பொதுவாக உலகியலில் கூட அறிவானவர் களுக்கு குழந்தைகளே இருக்காது. அல்லது ஒன்று இரண்டு இருக்கும். அறிவு குறைந்தவர்களே பன்றி போல பெற்றுத் தள்ளுவர். ஒரு குழந்தை பெற்றாலும் உலகுக்கு பயன்தரும் வண்ணம் இருக்க வேண்டும். ஞானசம்பந்தர், மார்க்கண்டேயன் பிரகலாதன், துருவன் போன்று பெறல் வேண்டும். சிவ புராணங்களில் விநாயகர், சுப்பிரமணியர், பைரவர் எல்லாம் கருவில் பிறந்தவர்கள் அல்ல, நினைவிலேயே பிறந்தவர்கள், கருவின்றி நின்ற கரு. உருவின்றி நின்ற உரு, திரிகரணம் இச்சை செயல் அறிவு இயற்றலால் இலயப் போக அதிகாரப் பொருளாக அமைத்தனர். ஜீவாத்மாக்களின் பிறவிக்கு அவரவர்களே காரணம்.

ஏரொளி உள் எழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவினால் எழு நாதமாம்
ஏரொளி அக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கரம் அந்நடு வன்னியே 4/9 1231

ஒளி என்றாலே அது மேல் நோக்கித்தான் எரியும் நம் அகல் விளக்குகளில் (குத்து விளக்கு) நாலு பக்கமும் திரி போட்டு எரிக்க வசதி இருக்கும். மத்தியில் எண்ணை விடுவோம். அது விளக்கெண்ணை (ஆமணக்கு எண்ணை) கொழுகொழு என்று இருப்பதால் நின்று எரியும், இது போல் நம் முகமே அகல் போன்றது. கண், காது, நாசி, வாய் இவைதாம், எரியும் இடம் எண்ணங்கள் தாம் எண்ணை. ஐந்து பூத அணுக்களை திரித்து (சுவாசக்காற்றால்) (பஞ்சு - திரி ஆவது போல) ஏரொளியாகும். ஆனால் அதை பற்ற வைக்க ஆள் வேண்டும். திரியில் எரிய எரிய கரித்துண்டை தட்டி விட்டு, தூண்டி விட ஆள் வேண்டும். அது சூரியனால் செய்யப்படுகிறது. ஆகவே மனம், புத்தி, சித்தமே அகலாகிறது. பஞ்சபூத அணுக்களே திரியாகிறது. சூரியனே ஏற்றி வைப்பவன்.

வன்னி எழுத்தவை மாபலம் உள்ளன
வன்னி எழுத்தவை வானுற ஓங்கின
வன்னி எழுந்த்தவை மாபெரும் சக்கரம்
வன்னி எழுத்திடுவாறது சொல்லுமே 1232

சுடர் சக்கர எழுத்துக்கள் மிக்க வலுவைத் தருவன அவ்வெழுத்தே வானுற ஓங்கும் - வழியும் வகுத்தன. அவ்வெழுச்சிகளே சக்கரங்களாக அமைக்கின்றன. அவைகளுக்கு வரைமுறை உண்டு. வன்னிஎழுத்து - ஏரொளிச் சக்கர எழுத்து.

சொல்லிய விந்துவும் ஈராறு நாதமும்
சொல்லிடும் அப்பதி அவ்வெழுத்து ஆவன
சொல்லிடு நூறொரு நாஸ்பத்தி நாலுரு
சொல்லிடு சக்கரமாய் வரும் மேலதே 1233

விந்து என்பது நினைவு ஓசை. விந்து அது தான் முதல் பிறவி. அது பனிரெண்டு உயிர் எழுச்சிகளாக மாறின. ஈராறு என்பது ஆண் எழுத்து ஆறு. பெண் எழுத்து ஆறு. இவை ௦ீ

அக்கண்ணா என்று முடிவடைகிறது. அ, இ, உ, எ, ஒ - ஆண் எழுத்து. (ஐ) அலி எழுத்து - நடு, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ - பெண் எழுத்து (ஔ) அலி எழுத்து நடு இவை பெருகும் போது 12 X 12 = 144 எழுச்சிகள் ஆகிறது.

மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்தாய் ஆய்விடும்
மேல் வருநாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரு அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல்வரு சக்கரமாய் வரும் ஞாலமே 1234

1233 முதல் 1238 வரை ஐம்பூதங்களின் உற்பத்தி கூறப்படுகிறது. நூற்று நாற்பத்தி நான்கு அறைகளோடு கூடிய சக்கரமே உலகமாக விரிந்தது. உலகை முதலாக நிற்பது நாத விந்துக்களே, ஓசையும் ஒளியும். ஞாலமும் யோசனையாகிய நீட்டல் அளவையைக் கொண்டது. இது 1235ன் விளக்கம். 1234 உச்சி அளவு சென்ற விந்து (நினைவு ஓசை) ஓசையால் வெளிப்படும். அதனால் அதை அகரம் என்பர். எட்டெழுத்து அதுவே உலகம்.

ஞாலமதாக விரிந்தது சக்கரம்
ஞாலமதாயிடும் விந்துவும் நாதமும்
ஞாலமதாயிடும் அப்பதி யோசனை
ஞாலமதாக விரிந்த எழுந்தே 1235

(யோசனை என்பது எட்டநிலை அகரம் அதுவே சிகரமாயிற்று)

விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கரமாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே. 1236

அப்படி ஓசை விரிவு அதைச்சுற்றி ஒளி வட்டம், அதைச் சுற்றி நில வட்டம், அதைச்சுற்றி நீர் வட்டம் என விரிந்தது.

அப்பு அதுவாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ்வனல் ஆயிடும்
அப்பினில் அப்புறம் மாருதமாய் வாழ
அப்பினில் அப்புறம் ஆகாச முமாமே. 1237

236ல் சொன்னது சூட்சமமான ஒளி, ஓசை, நிலம், நீர் (அருஉரு) 1237ல் சொல்லப்படும் அப்பு, அனல், மாருதம், ஆகாயம் (உரு) என்பது நம் புலனறிவுக்கு புலப்படுவது. நீராக இருந்த சக்கரத்தின் மேல் அனலாய் விரிந்து விடும். அனலின் மேல் காற்று, காற்று வெளியாகி ஆகாசமாக விரிந்திடும். இவை எல்லாம் நாம் அல்ல. இதை அறியும் அறிவே நான்.

ஆகாச அக்கரமாவது சொல்லிடில்
ஆகாச அக்கரத்துள்ளே எழுத்தவை
ஆகாச அவ்வெழுத்தாகிச் சிவானந்தம்
ஆகாச அக்கரமாவது அறிமினே 1238

ஆகாச எழுத்தே சிவம் எனப்படும். இதுவரை சொல்லிய ஐம்பூத எழுத்துக்கள் 'ஸ்வரயஅ' என்பர். இதுவே நமசிவய ஆயிற்று. பின் சிவயநம. கடைசி சிவசிவ என ஆகும். 'ல' அலை 'வ' காற்று 'ர' நெருப்பு 'ய' ஆகாயம் எல்லாம் அகரமாயிற்று.

அறிந்திடும் சக்கரம் ஐயைந்து விந்து
அறிந்திடு சக்கரம் நாதமுதலா
அறிந்திடும் அவ்வெழுத்துப் அப் பதியோர்க்கும்
அறிந்திடும் அப்பகலோன் நிலையாமே 1239

அறியப்படும் சக்கரம் முகத்தில் ஐந்தும் உடலில் ஐந்தும் கூடிய பத்தாகும். அவை ஒவ்வொன்றும் ஐந்து ஐந்து பகுதியாக வட்டத்துக்குள் வட்டமாக இருப்பத்தைந்து அவை முறையே மூலாதாரம், சுவாதிஷ்டாணம், மணிபூரம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா என்று பெயர். இது முகத்தில் மேலிருந்து கீழ் உடலில் கீழ் இருந்து மேல் நோக்கியும் எதிர் எதிராக இருக்கும். மண்டையில் இடப்பக்கம், உடலில் வலப்பக்கமாகவும், வலப்பக்கம் இடப்பக்கமாகவும் இருக்கும். இவை இரண்டும் சந்திக்கும் இடம் கழுத்துப் பகுதி விசுத்தி இதை ஞாயிறு (அறிவு) திங்கள் (மனம்) உடல் (அக்னி) மூன்று மண்டலமாகவும் கூறுவர். மண்டலத்துக்கு ஆறாக பதினெட்டு நிலைகள் என்பர். அவையே கலைகள். விந்துவும் (ஒளியும்) நாதமும் (ஒலியும்) சக்கர முதலாகும். அந்த அந்த சக்கரத்துக்கு தனித்தனி முதன்மையோர் உளர். இவர்களுக்கெல்லாம் தெய்வம் பகலோன் சிவனாகும். அவனே அனைத்திற்கும் நிலைக்களம் ஆவான்.

அம்முதல் ஆறும் அவ்வாதி எழுத்தாகும்
அம்முதல் ஆறும் அவ் அம்மை எழுத்தாகும்
இம்முதல் நாலும் இருந்திடு வன்னியே
இம்முதலாகும் எழுத்தவை எல்லாம். 1240

ஆதி எழுத்து சூரியனாகும். அவை அம்மை எழுத்தாகும் நம்மிடம் அருள்தரிக்கும் அம்மை அப்பர் பாதம் கண்களே. அதீதம் முதலான நான்கும் அந்தக் கரணம் இருநடு என்பர். இரண்டுக்கும் நடு நெற்றிக்கண். நடு வன்னி - அக்னிகலை. இங்கிருந்து எல்லா எழுச்சிகளும் தோன்றும். தொப்பூழில் தோன்றும் - அதுவே மூலாதாரம் என்று குறிப்பிடுவது - அறியாமை. ஆதி அறிவே மூலாதாரம்.

எழுத்தவை நூறொரு நாற்பத்து நாலும்
எழுத்தவை ஆறது அந்நடுவன்னி
எழுத்தவை அந்நடு அச்சுடராகி
எழுத்தவை தான் முதல் அந்தமுமாமே. 1241

முன்பே பார்த்தபடி பனிரெண்டு உயிர் எழுத்து பெருகி 12 X 12 = 144 கூடினால் 12+12=24 இவை நடுவில் இருப்பது வன்னி-அக்னி காற்று. அது ஆறு நிலையாகும். அதுவே நடு நாடி நெற்றி புருவ நடுவிலிருந்து சிரசு சென்று, பிடரி மார்க்கம் முதுகெலும்பில் இறங்கி தொப்பூழ் அதன் கீழ் ஆண் பெண் குறிவரை, மலவாசல் நீர்வாசல் வரை ஓடும். கீழ்ப்பகுதி கழிவுப்பகுதி, (KIDNEYS) நடுநாடி சரி இல்லையெனில் கழிவு பாதையும் பாதிக்கப்படும்.

அந்தமும் ஈறும் முதலானவை அற
அந்தமும் அப் பதினெட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்தபின்
அந்தமும் இந்துகை ஆருடமானதே 1242

ஆருடம்-அறிதல், பதினெட்டு 6 x 3 = 18 ஆக்ஞை, 2 கண் விசுத்தி-கழுத்துப்பகுதி 16 (THYROID) பதி-மூன்று என்பது சூரியன், சந்திரன், அக்னி-மூன்றும் நின்ற இடம் அக்கன்னா (ஃ) அஃது துவாத சாந்த நிலை. இந்து கை-சந்திரமண்டலம், மேற்கூறிய அந்தமும் ஈறும் முதலானவை நீங்க நெஞ்சம் மிடறு என்னும் கீழும் மேலும் சந்திக்கும் இடம் பதினெட்டாகும். 12ம் நிலை என்பது அனாகதம். அனால் அதன் முடிவு துவாதசாந்தம். அதன் அதீதம் பதிமூன்றாம் நிலை. அதன் மேல் திங்கள் மண்டலம் அதன்மேல் அறியும் நிலை.

ஆவினமானவை முன்னூற்று அறுபது
மாவினம் அப்பதினைந்தின் மாயுறு
மாவினம் அப்பதி னெட்டுடன் ஆயுனு
மாவினம் அக்கதிரோன் வர வந்தே. 1243

ஆவினம்-அவ்வினம், அதன்வகை, பகலவன் வகையாகத் தோன்றுவது முந்நூற்றி அறுபது நாட்கள் கொண்ட வரும் 24 மணி (60 நாழிகையாக) நேரமாக பார்த்தால் 360 நாள் 7 நாட்கள்

(ஒரு வாரமாகப் பார்த்தால்) 52 வாரம் 30 நாட்களாக கணக்குப் பார்த்தால் (4 வாரம்) ஒரு மாதம் 12 மாதம் 15 நாட்களாக பார்த்தால் இரண்டு பக்ஷம் 24. எப்படி பகுத்தாலும் சூரியன் ஒன்றுதான். சிவம்

வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் முப்பதி ராசியும்
வந்திடும் நாளது முந்நூற்று அறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை அவ்வியே 1244

வான் வழியாக கணக்கிடுவது முப்பது நாழிகை. பன்னிரு மனைகள் எனும் இராசியும், இவற்றால் வரும் நாட்கள் முந்நூற்றி அறுபது விதியின்படி கணக்கிடப்படும். அவ்வியே என்பது

அவ்விணம் மூன்றும் அவ்வாடது வாய்வரும்
எவ்விணம் மூன்றும் கிளர்தரு வேரதாம்
சவ்விணம் மூன்றும் தழைந்திடும் தண்டதாம்
இவ்விணம் மூன்றும் இராசிகளெல்லாம் 1245

அவ்விணம்-ஜோதிடத்தில் இராசிக்கட்டங்கள் 12. அதில் முதல் மூன்று-மேஷம் (ஆடு) ரிஷபம்(காளை) மிதுனம் (ஒரு கன்னி) இதை சரம், ஸ்திரம், உபயம் என மூன்றாக்குவர், இது இருசுடர் இயங்கும் நெறி. சந்திரனுடன் முன்று சூரியனுடன். அதே முன்றும், அங்கே செவ்வாய், சுக்கிரன் - புதன் - மூன்றும் சேர சந்திரன், இங்கே சூரியன் முதல் தோற்றம் அதன்பின் வருவது புதன், சுக்கிரன். செவ்வாய், மூன்றாவது மூன்று கன்னி. துலாம், விருச்சிகம், ஆக எட்டு வீடுகள். இந்த வீட்டுக்கு அதிகாரி செவ்வாய், சுக்கிரன், புதன், என்பர் அடுத்த மூன்று கடகம், சிம்மம், கன்னி அதிபதிகள் சந்திரன் சூரின், புதன் (உபயம்).

இராசி உட் சக்கரம் எங்கும் நிறைந்த பின்
இராசி உட் சக்கரம் என்று அறிவிந்து வாம்
இராசி உட் சக்கரம் நாதமும் ஒத்தபின்
இராசி உட் சக்கரம் நின்றிடும் ஆறே 1246

மூலாதாரம் முதல் சக்கரங்கள் எங்கும் நிறைந்தபின் இச்சக்கரம் விந்து என்னும் ஒளியால் நிலைபெறும். அது கண் ஒளியேயாகும். வேறு எதையோ சொல்லி குழப்பாதீர்கள். வலது கண் சிம்மம். இடது கண் கடகம். இந்த ஓசையும் ஒளியும் அகவோசை புறவோசைகளால் ஒத்த இடத்து இராசி உட்சக்கரம் செவ்வனே இயங்கும்.

நின்றிடு விந்து என்று உள்ள எழுத்தெல்லாம்
நின்றிடும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடும் அப்பதி அவ்வெழுத்தே வரில்
நின்றிடும் அப்புறம் தாரகை ஆனதே. 1247

விந்து-நினைவு ஓசை முதலாகக் கூறப்படும் எழுச்சிகள் எல்லாம் நாதம் உள்ளிருந்து ஒலிப்பிக்க ஒலிக்கும். அவ்வவ் மனைக்குறிய எழுத்துக்கள் வரின் ஆங்கு நிற்கும். அதன்பின் அதைத் தொடர்ந்து ஒலிப்பது தாரகை என்னும் காள்கள் நிற்கும். மூலமுதல் மனைகள் ஆறுக்கும் இரண்டாகும். கண், இரண்டு, காது, இரண்டு, செயல் இரண்டே, ஒரே பார்வை, ஒரே கேள்வி, நாசி ஒன்றாகத் தெரிந்தாலும் துவாரம் இரண்டு செயல் மூன்று பூரகம், ரேசகம், கும்பகம் வாய் ஒன்றானால் செயல் சுவையும் பேச்சும் இராசி 12க்கும் தாரகை 2¼ வீதம் இருபத்தேழு ஆகும்.

தாரகையாக சமைந்தது சக்கரம்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திரன் நற்பகலோன் வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே 1248

பேரொளி சிவசூரியன். அவன் இல்லாத போது சந்திரன் ஆட்சி. சந்திரன் இல்லாத போது நட்சத்திர ஆட்சி. அலுவலகம் மூடியபோது ஒரேயொரு காவல்காரன் அவன் தான் சகலமும். ஆனால் பகலில் அலுவலகம் செயல்படும் போது அவன் இருக்குமிடம் தெரியாது. ஆனால் மூன்றும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளது. ஆனால் அறிவுப்பிரகாசத்தில் மாற்றம் உண்டு.

கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாம்
கண்டிடு நாதமும் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்து என ஒத்தபின்
கண்டிடு மப்புறம் காரொளியாணதே 1249

காணப்படும் இருபத்தேழு நம் சேத்திர வட்டங்கள் விந்துவினால் உண்டானவைதே. அவ்விந்து வின்மேல் நாதமும் தோன்றும். தோற்றம் ஒளி (VISUAL) கேட்பது ஒலி (AUDIO) இவை இரண்டுமே தாயும் தந்தையும். அந்நாதத்தின் மேல் அக்னிகலை (சிவஒளி) அழல் வண்ணம் தோன்றும். சிகப்பு நிறம். இவை அனைத்தும் ஒத்தபின் தூய வெண்மை, சிகப்பு, அம்மையின் கருப்பு ஒளி (காரொளி) தோன்றும். இதையே முக்குணம் என்பது. சாத்வீகம் இர்ஜஸ், தாமதம் என்பர், அறிவு, மனம், உடல் என்க.

காரொளி அண்டம் பொதிந்து உலகெங்கும்
பாரொளி, நீரொளி, சாரொளி, காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்தபின்
நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே. 1250

சாரொளி – தீஒளி; கார் – தீ; காலொளி – வாயுஒளி, ஏரொளி – ஐம்பூதங்களிலும் நிறைந்த ஒளி, கரிய ஒளியானது அண்டத்தை உள்ளிட்டு உலகு எங்கும் நிறைந்து நிற்கும். பாரொளியும் நீர் ஒளியும் அடங்குவதற்குரிய சாரொளியாகிய தீயொளியும் அதனையும் அடக்கி கொண்டிருக்கும். சாரொளி, காற்றொளி

அதனையும் உள்ளடக்கி கொண்டிருக்கும் மேலொளியாகிய வான்ஒளி ஆகிய இவை எல்லாம் நிறைந்து நிற்கும்.

நின்றது அண்டமும் நீரும் புவி எலாம்
நின்ற இவ்வண்ட நிலை பெறக் கண்டிட
நின்ற இவ் அண்டமும் மூலமலம் ஒக்கும்
நின்ற இவ் வண்டம் பலமது விந்துவே. 1251

இந்த உலகத் தோற்றத்துக்கே அடிப்படைக் காரணமே நினைவு ஓசை தாம். நினைவுகள் இல்லையாயின் இந்த உலகமே இல்லை. இதுவே மாயை மலமேயாம். விந்து என்பது முப்பத்தைந்தாவது மெய்.

விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்கவிரையதாம்
விந்திற் குறைந்திடில் நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே. 1252

விந்து நாதம் சமமாக கலந்தால் அவை அண்டத்துக்கு வித்து என்பர். ஒளி குறைந்து ஒலி கூடித் தோன்றுமானால் அது மந்திரவித்து என்பர். கூடும் முறையில் விந்துவைவிட நாதம் எட்டு மடங்கு அதிகமென்பர்.

வீசம் இரண்டுள நாதத்து எழுவன
வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்தபின்
வீசமும் விந்து விரிந்த காணுமே. 1253

நாதத்தில் நின்று தோற்றுவன மந்திரவித்துக்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று மேலோங்கும்படி விரைந்து செல்லும். வித்தும் நாதமும் மேலோங்கி எழுந்து ஒத்துடன் நின்றபின் அவை பரந்து விளங்கும்.

விரிந்தது விந்துவும் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத்து அளவினில்
விரிந்தது உட்கட்டம் எட்டெட்டுமாகில்
விரிந்தது விந்து விரை அதுவாமே 1254

ஒளி விரிந்த காலத்து வித்து மறையும். அவ்விந்துவும் நாதத்தளவில் விரியும். உள்ளே அடங்கும் உயிர்ப்பு அறுபத்தி நான்கு மாத்திரையாகும். மாத்திரையென்பது நிழல், நீரால் மறைக்கப்பட்டது. அவ்வாறு விரிந்த விந்து அனைத்துலகிற்கும் வித்தும் ஆகும்.

விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்தவன் தானே. 1255

தோன்றிய உலகங்கள் அனைத்தும் ஒளி எனும் காரணத்தில் உண்டாவன. விந்துவால் விளைந்த உடலகத்து உயிரையும் சிவன் சேர்த்து வைப்பன். ஒளிகாரணமாக மேலான அறிவும் உண்டாகும். மேலான அறிவு மெய்யுணர்வு. மெய் உணர்வு என்பது எல்லாம் ஒன்று என்ற அறிவு. எல்லா வேறுபாடுகளையும் அறிந்து நீங்கி தனித்து நிற்கும், அறியும் அறிவு.

விளைந்த எழுந்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுந்தது சக்கரமாக
விளைந்த எழுத்தவை மெய்யினுள் நிற்கும்
விழைந்த எழுத்தவை மந்திரமாமே 1256

எல்லாத் தோற்றத்துக்கும் முதலாக விளைந்தது ஓசையும் ஒளியுமே. அப்படி எழுச்சி பெற்ற விந்துவும் நாதமும் சக்கர வடிவமாகவே நிற்கும். அவ்வெழுத்துக்களே நம் உடம்பில் வட்ட வட்டமாக இருக்கும். அல்லது உருண்டை உருண்டையாக

(CELLS) குண்டலினி என்கிறோம். அதையே மந்திரம் என்கிறோம். ஒரு CELL, 2 CELL ஆறு குண்டலினி சேர்ந்தது மனித உரு. மனிதனுக்கு ஆறு விதமான உடல் உண்டு. அதற்கு ஆறு நிலைக்களங்கள் ஆறு ஆதாரம்.

மந்திரம் சக்கரமானவை சொல்லிடில்
தந்திரத்து உள் எழுத்து ஒன்று எரி
கந்தரத்து உள்ளும் இரேகையில் ஒன்றில்லை
பந்தமதாகும் பிரணவம் உன்னிடே 1257

தன் திறமை (அறிவு வழி) வழி வகையால் அகத்தே எழுந்து தோன்றி வட்ட வடிவமான எரி ஒன்று உண்டு. இதுவே மந்திர சக்கரமெனப்படும். மனதின் திறம், வரிவடிவின்றி ஓம் என்ற என்ற ஒலிவடிவமே அது. இவற்றிற்கெல்லாம் முன்னாக ஓம் மொழி பினிப்புள்ளது. அதனை முன்னிலைப்படுத்தி அக வழிபாடாகிய தியானத்தை புரிவாயாக. கண்ட அத்தைக் கொண்டு என்பதை கழுத்து என்று பொருள் பண்ணி எழுதுகிறார்கள். கண்டது எது? ஒளி. பெரிய புலவர் என்று சொல்லிக் கொள் பவர்களே இப்படி எழுதி மக்களுக்கு தகாத வழி காட்டுகிறார்கள்.

உள்ளிட்ட வட்டத்தில் ஒத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட்டு எழுந்த தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலுமாமே. 1258

அகவழி பாடாகப் புரியப்படும் ஓம் மொழி வட்டத்தில் பொருந்தித் தோன்றும் மந்திரம் கலந்துள்ள சக்கரத்தின் கண் வரையப்படுதல் தவறுதலில்லை.

பார்க்கலுமாகும் பகை அறு சக்கரம்
காக்கலுமாகும் கருத்தில் தடமெங்கும்
நோக்கலுமாகும் நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலுமாகும் அறிந்து கொள்வார்க்கே 1259

பிறப்பு இறப்புக்களாகிய பயம் பகையை அகற்றும் தன்மை வாய்ந்த சக்கரத்தை அன்புடன் நோக்குதலுமாகும். விரிந்த கருத்தின் கண் அமைத்துக் காத்தலுமாகும். சோர்வின்றி அதன்பாலே நோக்கற நோக்கமாகிய தியானத்தை புரிதலுமாகும். அவ்வுணர்வில் காணும் நுண் பொருளை ஆக்கலமாகிய அழுந்தி அறிதலை புரிதலுமாகும்.

அழிந்திடு சக்கரம் ஆகி எழுத்து
விரிந்திடு சக்கரம் மேல் எழுத்து அம்மை
பரிந்திடும் சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடும் சக்கரம் கூறலுமாமே (4வது வரி) 1260

மேற்கூறிய வரிவடிமில்லாத ஓம் ஒலிமந்திரம் ஆதியை உடையது. அணுவின் அணுவினை, ஆதிப்பிரானை சிவனை எழுப்பும் சிகரமாகும். அதன் (மேல்) எழுத்து 'வ' கரமாகிய அம்மை எழுத்தாகும். மற்றைய இடங்களில் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்களின் எழுத்து ல, வ, ர, ய ஆகும்.

கூறிய சக்கரத்து உள் எழு மந்திரம்
ஆறு இயல்பாக அமைந்து விரிந்திடும்
தேறிய அஞ்சுடன் சேர்ந்து எழு மாரண
மாறியல்பாக மதித்துக் கொள்வார்க்கே 1261

ஆறு இயல்பு-ஸ்தம்பணம், மோகனம், வசியம், மாரணம், உச்சாடணம், வித்து வேடணம், மேல் குறித்த சக்கரத்தில் இந்த ஆறு இயக்கங்களும் தோன்றும். ஆறில் விரிவு ஏற்படும். இவ்வாறிவர் மாரணம் தவிர ஐந்தும் பகைமையை வெல்லுதற்கு பயன்படுத்தப்படும்.

மதித்திடும் அம்மையும் மாமாதுமாகும்
மதித்திடும் அம்மையும் அங்கனல் ஒக்கும்
மதித்து அங்கு எழுந்தவை காரணமாகில்
கொதித்து அங்கு எழுந்தவை கூட கிலாவே. 1262

அனைத்து உயிர்க்கும் நீங்கா அருள புரிபவள் என மதிக்கப்படும். அம்மையும் குறித்த சக்கரத்தின் முதல்வியுமாகும். அவ்வம்மை வழி பயில்வார்க்கு பகையை வெல்ல துணை செய்யும். அழகிய அனலை ஒத்து காணப்படுவாள். அம்மை காரணமாக உடல் எழும் ஐம்பூதங்களும் தொழில் செய்யும்.

கூடிய தம்பளம் மாரண் வசியம்
ஆடியல்பாக அமைந்து செறிதிடும்
பாடியுள்ளாகப் பகைவரும் வந்துறார்
தேடி உள்ளாகத் தெளிந்து கொள்வார்க்கே 1263

பகையை வெல்லுதற்கு கையாளப் படும் தம்பணம், மாரணம், வசியம் முதலியவை விளையாட்டாக எளிதாக வந்து பொருந்தி விடும். பாடி வீடு ஒத்த உடம்பின் கண் பகைவரும் வந்து அணுகுறார். இவ்வுண்மையை அம்மையின் திருவருளால் தெளிந்து கொள்வாருக்கு பகையே உண்டாகாது.

தெளிந்திடும் சக்கர மூலத்தின் உள்ளே
அளிந்த அகாரத்தை அந்நடு வாக்கி
குளிர்ந்த வரவினை கூடி உள்வைத்து
அளிந்தவை அங்கு எழு நாடிய காலே 1264

மூலாதாரத்தில் (கண்களில்) தெளிவாகக் காணப்படும் சக்கரத்தின் உள்ளே எல்லா எழுச்சிக்கும், துணை செய்யும் அனியுடைய அகரம் நடுவாக எழுதப்படும் வட்ட வடிவான குண்டலினி ஆற்றல் அரவு வட்டமிட்டது போன்று காணப்படும். அதனை ஒரு மனதாக அங்ஙனம் அமைத்து வழிபடுவாராயின் நாடியது எளிதாக கைகூடும்.

கால் அரை முக்கால் முழுதெனு மந்திரம்
ஆலித்து எழுத்து அமைந்து ஊறி எழுந்து அதாய்
பாலித்து எழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திரம் மாறிக் கொள்வார்க்கே 1265

கால், அரை, முக்கால், முழுமை என்னும் மாத்திரை களையுடைய மந்திரங்களை முறையாக ஒலிக்க அவ்வோசை எழுந்தன. பின் சக்கரத்துக்கு பொருந்த அமைந்தது. மேலும் ஊறித் திகழ்ந்து முழங்கும். கருதிய பயனை கைகூடச் செய்தபின் அம்மந்திரத்தை முறைப்படி மாற்றி ஒலிக்க உணர்ந்தவர்களுக்கு கருதிய பயனும் கைகூடும்.

கொண்ட இம்மந்திரம் கூத்தன் எழுத்தாய்
பண்டையுள் நாவில் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணி விளக்காயிடும்
இன்னும் இதயத்து எழுந்து நமவென. 1266

மேற்குறித்த மந்திரம் ஒலித்து வேண்டுவன பெற்று அமைந்தபின் அதன் செயல் அறுதியாகக் கூத்தன் எழுத்தாம் 'சிவ' என்பதை உதடு அசையாமல் உண்ணாவில் பண்டைப் பகையாகிய ஆணவம் அறும் பொருட்டு ஒலித்தபின், பொன்னம்பலத்தில் கண் விளங்கும் மணிவிளக்காய் உள்ளம் பொலிவுறும். அத்தகைய உள்ளத்தில் 'நம' எனக்கூட்டி 'சிவயநம' என ஒலிப்பயாக கூத்தன் எழுத்து-ஆதி எழுத்து. சிவன் எழுத்து உண்ணாவில் - உள்நாக்கால் (உதடு அசையாமல்) சாதாரணமாக நாம் பேசும் சொற்களில் பொருள் தெரியாமல் நல்லதை கெட்டாதகவும், கெட்டதை நல்ல பொருளிலும் புரிந்து கொள்கிறோம். பிழைக்கத் தெரிந்தவன் என்றால் பொதுவாக திறமைசாலி என்ற பொருளிலோ த்தான் பார்க்கிறோம். பிழை என்றால் தப்பு. தப்பு செய்யத் தெரிந்தவன் பிழைக்கத் தெரிந்தவன்.

வயிரவச் சக்கரம்

அறிந்த பிரதமையோடு ஆறும் அறிஞ்சு
அறிந்த சப்தமி மேல் இவை குற்றம்
அறிந்தவை ஒன்றிவிட்டு ஒன்று பத்தாக
அறிந்து வலமதுவாக நடவே 1267

பௌர்ணமி என்பது சந்திரனின் (மனதின்) முழு வளர்ச்சி அது அப்படியே நிற்பதில்லை. மறுபடியும், தேய்வு நோக்கி திரும்பும். அதில் முதல்நாள் பிரதமை எனப்படும். அதிலிருந்து ஆறுவரை ஆறு ஆதாரங்களில் காணப்படும் திதிகள் என்பர். இதை ஐப்பசி மாதம் தீபாவளி அம்மாவாசையிலிருந்து சஷ்டி என்கிறோம். ஆறாவது நாள் சூரசம்ஹாரம் நடக்கும். ஆணவம், மாயை, கன்மம் என்ற அறியாமையை போக்கும் நாள் ஆறிலிருந்து மீதம் வரும் நாட்களை ஏழு சப்தபதி ஒன்று விட்டு ஒன்றாக அதாவது. ஏழை விட்டு எட்டும், ஒன்பதை விட்டு பத்தும், பதினொன்றை விட்டு பனிரெண்டு பதின்மூன்றை விட்டு பதிநான்கு, 8, 10, 12, 14 ஆகிய நான்கும் முன் உள்ள ஆறும் கூட்டப் பத்தாகும். இப்பத்தும் பகையை வெல்லப் புறப்பட்டு செல்லும் புலத்தை தம் வலப்பால் அமையும்படி செல்வாராக சஷ்டியை விட்டு அட்டமி எட்டாவது நாள் வலப்பக்கம் வளர்பிறை.

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கி
தொடர்ந்த உயிர் அது உண்ணும் போது
படர்ந்த உடல் கொண்டு பந்தாடலாமே. 1268

(சூலகபாலி - சூலத்தையும், கபாலத்தையும் கடந்த நிலை) (ஸ்தூலம்)

பொதுவாக மனம், வாக்கு, காயம் கடந்த நிலை. இந்தத் தூய உடலையும், உள் உடம்பாகிய மனமும் ஆறும் நாலும், பத்தும் நமக்கு பகை என்று, என்று கருதுகின்றோமோ அன்றுதான் நாம் வெற்றியை நோக்கலாம். அறிவு தான் வெற்றிவேல், உடலும் மனமுமே திரையாக உள்ளன. அதற்கு வயிரவக் கடவுள் முதல் துணை. அவர் சூலத்தை உடையவர். கபாலத்தில் இருப்பவர் என்றும் எண்ணம் கொண்டு உடலை மறந்து 'அறிவுதான் நான்' என்ற எண்ணம் வலுப்பெற வேண்டும்.

அங்ஙனம் மேல் நோக்கம் பலப்பட பகைவன். கண்ணையும் கருத்தையும் போக்கி அவன்தன் உயிரினை தொட்டு உண்ணும் போது அவன் உடலை மிக எளிதாக பந்து மாதிரி ஆடலாம். பைரவி ராகம் இதுதான். ஆனந்த பைரவி.

ஆமேவப் பூண்டு அருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக்கொண்டு அங்கு
ஆமே தமருக பாசமும் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே 1269

ஆ மேவ-உயிர்கள் விரும்ப, தமருகம்-உடுக்கை, நடுக்கம் இதில் வயிரவருடைய ஆறு ஆயுதங்கள் கூறப்படுகிறது. மண்டை ஓடு, சூலம், உடுக்கை, கயிறு, தலை, வாள் என்பர். மண்டை - பிரமகபாலம், அதில் வரும் நாதம், நாதத்தால் வரும் துடிப்பு, அதன் நீளமே (சுருதி) கயிறு சுவாசம், இவை எல்லாம் அடங்கிய தலை. சிறுத்தொண்ட நாயனார் கதையில் சிவன் மூளையை விரும்பிக் கேட்டார் என்பது இதுதான். நமக்கு கொடுமையாகத் தெரியும். உண்மைக்குப் போனால் கதையின் நீதி புரியும்.

கையது ஆறும் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யர் உளத்தில் துளங்கு மெய் உற்றதாய்ப்
பொய்வகை விட்டு நீ பூசனை செய்யே. 1270

வயிரவர்க்கு ஆறு கைகள். நிறம் சிகப்பு. அவ்வாறு கைகளிலும் ஆறு பொருள்களைக் காணலாம். கபாலம் உடுக்கை, கயிறு, சூலம், தலை, வாள். சிவநினைவு - மாறாத தூய்மை யானவர் உள்ளத்தில் தோன்றுவர். அகம் புறம் வாய்மை பெற்றமையோடு பொய்யினை அறவே விட்டு நெஞ்சே நீ பூசை செய்வாயாக.

பூசனை செய்யப் பொருந்தி ஓர் ஆயிரம்
பூசனை செய்யும் அதுவுடன் ஆடுமால்
பூசனை சாந்து சவாது புழுகு நெய்
பூசனை செய்து நீர் பூசலை வேண்டுமே. 1271

இவர் குறிப்பிடும் நாலும் அரைக்கப்படுவது சாந்து, சவாது, புனுகு, நெய் உருக்கப்படுவது. நம் உள்ளம் காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி ஓதுவதை குறிப்பில் அதுவே உண்மையான பூசை.

வேண்டியவாறு கலகமுமாயிடும்
வேண்டிய ஆறில் உள் மெய்யது பெற்றபின்
வேண்டியவாறு வரும் வழி நீ நட
வேண்டிய வாறு அது ஆகும் கருத்தே 1272

(கலகமும் - பகைவர்க்குள் கலகம் மூளும் உண்மையை அறிந்தே பின் - இவர்கள் தயவு நமக்கு வேண்டாமே)

நெஞ்சே நீ விரும்பியவாறு நின் பகைவருக்குள் போர் மூண்டு அவர்களே தம்மை அழித்துக் கொள்வார்கள். அநேகமாக நாம் கதைகளில் ஏன் நேரிலேயே இதைப் பார்க்கலாம் - அயோக்கியர்கள், அவர்களுக்குள்ளே அடித்துக் கொண்டு நாசமாவதை அனுவகைச் செயல்களுக்குரிய உண்மையை அறிந்த பின் அதன் வழி சென்றிடு. (சன்மார்க்கம்) உள் கருத்து கை கூடுமாறு பார்.

4/11 சாம்பவி மண்டலச் சக்கரம் (9 பாடல்)

சாம்பவி மண்டலச் சக்கரம் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாத விட்டிடின் மேலதாம்
காண் பதம் நால் உள் நயனமும்
நாம் பதம் கண்டபின் நாடறிந்தோமே 1273

சமமாக பாவித்தல் சாம்பவி. அது உயர்வு இது தாழ்வு என்ற மனப்பான்மை இல்லாமல் எல்லாம் ஒன்று என்ற பக்குவநிலை. தற்சமயம் நாம் எதையும் எட்டு தலைப்புகளில் பார்க்கிறோம். ஐம்பூதங்கள் அவைகளை இயக்கும் - சத்திகள் மூன்று ஆக எட்டு விதமாக அதில் சூட்சுமமாக இருப்பது நாலு விந்து (ஒளி) நாதம் (ஓசை) சத்தி (ஆற்றல்) சிவம் - அன்பு. இவை நாலும் கூடும் இடம் நயனம். கண் ஒளி இந்நிலையினை திருவருள் துணையால் உணர்ந்து, அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால், நாம் நாட்டவர்களால் நன்கறியப்படுவோம். தூக்கம் என்றால் நம்செயல் அல்ல என்று அறிந்து நடப்பதை சாக்ஷி ரூபமாகப் பார்ப்பது, நம்மை அதனுடன் சம்பந்தப்படுத்தாமல் தனித்து இருத்தல்.

நாடறி மண்டலம் நல் அவிக் குண்டத்து
கோடற வீதியும் தொடர்ந்து உன் இரண்டு அழி
பாடறி பத்துடன் ஆறு நடுவீதி
ஏடற நாலு ஐந்து இடவகையாமே 1274

இந்த வேள்வி குண்டம் நம் கண் குழிகளே. அதில் நினைவுகளை (நவதானியம்) புகுத்தி கன்றும் கனலிடை கட்டி எரித்து அமுதாக்கி உண்ணில் யோகிக்கு அறிவாகும். வேறுபாடுகள் அகல இரண்டு பக்கங்களிலும் ஆறு வீதிகள் அமைத்து - ஆறு அறிவு பத்து விதமான காற்றுடன் சேர்த்து பதினாறு கலைகள் ஆக்கப்பட்டது. நான்கு மூலைகள், கண், காது, நாசி, வாய் அவற்றின் இடையே இடம் - இடை இடம் நாலு.

நாலு ஐந்து இடவகை உள்ளதோர் மண்டலம்
நாலு நல் வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலு நற்கோணமும் நந்நாலி இலிங்கமாய்
நாலு நற்பூநடு நண்ணல் அவ்வாறே 1275

நம் உடல் என்னும் கூடு ஒன்பது வாசல் உள்ளது. நாலுக்கும் நடுவீதியாக காணப்படும் வெற்றிடம் அருட்குறி லிங்கம் வடிவம் எனப்படும். பன்னிரெண்டு ஜோதிர்லிங்கம் என்பர்.

மேலும் நான்கு நாலு திசைகளில் அமைக்கப்பட்டு, ''எட்டுத் திசையும் பதினாறு கோணமும் முட்டித் திரியும் ஜோதியை கருத்தில் வையாது கடகத்தில் வைத்தாரே'' என்பர். நற்பூ - அனாகதம் 12 இதழ், விசுத்தி - பதினாறு இதழ். நெருப்பும், காற்றும், இவை எட்டு இடத்தில் கூடி நிற்கும். 16+12+18=36 தத்துவம்

அறுஇருபத்து நாலு அஞ்செழுத்து அஞ்சையும்
வேறு உருவாக விளைந்து கிடந்தது
தேறி நிருமல சிவாய நமவென்று
கூறுமின் கூறில் குறைகளும் இல்லையே 1276

அறு என்பது அறு அறிவின் ஆதாரம். இருபத்து பூதம்-5, புலன்-5, பொறி-5, தன்மாத்திரை-5, ஆக 20, அந்தக்கரணம், மனம் புத்தி சித்தம் அகம் நாலு. கர்மேந்திரியம்-5, கை-2, கால்-2, முகம்-1, அல்லது உடல் ஆக 36 தத்துவங்களால் ஆனது உடல். இவை மூலப்பொருள்களிலிருந்து மாறுபட்ட தோற்றங்கள், இவைகளை மாற்றி மறுபடியும் மூலப்பொருள்களுடன் சேர்த்து அந்த எட்டையும் ஒன்றாக்குவதே இயக்கம். அதை நினையுங்கள். அதனால் நிறைவே ஒழிய குறைவில்லை.

குறைவதும் இல்லை குரை கழல்கூடும்
அறைவதும் ஆரணம் அவ்வெழுத்தாகி
திறமதுவாகத் தெளிய வல்லார்க்கு
இறவில்லை என்றென்று இயம்பினர் காணே 1277

சிமயநம என்று கூறுவார்க்கு (பொருள் தெரிந்து) எவ்வகைக் குறையும் தோன்றாது, ஏனெனில் அது எங்கும் என்றும் நிறைந்தது. ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடியைக் கூடுதலாகும். இவ்வுண்மையினை அறைவது - விளம்பரப் படுத்துவது - மறை நூலாகும். மறைநூல் முறைநூல் எல்லாம் ஐந்து எழுத்தால் ஆனவையே. இவ்வுண்மையினை தெளிய வல்லார்க்கு இறப்பில்லை. மரணம் என்பது மாறுதலே என்பதே புலனாகும்.

காணும் பொருளும் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமும் தாணகக்
காணும் கனகமும் காரிகையாமே 1278

உலகிற் காணப்படும் உலகியற் பொருள்களும் (எப்பொருள் எத்தன்மையாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு) வழிபடு கடவுளும், விரும்பும் நிலைகளும், நீர் நிரம்பிய தீர்த்தமும், உண்ணும் உணவும், உறவும், உணர்வும், உறங்கும் உறக்கமும், கருதப்படும் பொன் முதலிய செல்வங்களும் திருவருள் ஆற்றலால் ஆக்கப்பட்டவை. அதனால் அவைகளை அம்மை என்றே அன்பால் கூறுவர்.

ஆமே எழுத்தஞ்சுமாம் வழியேயாகப்
போமே அது தானும் போம் வழியே போனால்
நாமே நினைத்தன செய்யலுமாகும்
பார்மேல் ஒருவர் பகை இல்லைதானே 1279

எதையும் வேண்டும் என்றால்தான் பகை ஏற்படும். எதுவும் வேண்டாம் என்ற துறவு மனப்பான்மையருக்கு பகை ஏது? ஐந்தெழுத்து தோன்றுவதற்கு இடமாகிய நாதமாகிய ஓசை வழியே வழியாகப் போகும் மேவிடமாகிய உச்சித் தொளை வழி சென்றால் நாம் நினைத்ததை அடையலாம். ''ஒளியை ஒளி செய்து 'ஓம்' என்று எழுப்பி வழியை வழி செய்து வாய்த்திட வாங்கி, வெளியை வெளி செய்து மேல் நின்று எழுப்ப, தெளியத் தெளிய சிவபதம் தொடர்ந்தெழு சோதி துளை வழி ஏறி அடங்கிடும். அன்பினது தயிழை போல.

பகை இல்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகை இல்லை நாளும் நன்மைகளாகும்
வினை இல்லை என்றும் விருத்தமும் இல்லை
தகை இல்லை தானும் சலம் அதுவாமே 1280

பணிவோடு இருப்போர்க்கு பகை இருக்க முடியாதது தானே யாண்டும் பிறரால் எண்ணப்படும் தன்மையும் நேராது. எந்நாளும் பெரும் நன்மைகள் பெருகும். எக்காலத்தும் தீவினைகள் அண்டாது. நறுமணம் போன்று மேனிலை உறுவர். சலம்-மணம். சாம்பவிமந்திரம்-சிவயநம

ஆரும் உரை செய்யலாம் அஞ்செழுத்தாலே
யாரும் அரியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலும் மதியதி
ஊனும் உயிரும் உணர்வதுமாமே. 1281

சாம்பவி மந்திரம் அஞ்செழுத்து உண்மையை உணர்த்தவர் எந்த நூலுக்கும் உரை செய்யலாம். யாரும் தம் அறிவால் அறிய ஒண்ணாத பேரின்ப உருவமாகும். அதுவே மண்ணும், விண்ணும், ஞாயிறும், திங்களும், உடலும், உயிரும், உணர்வும், விரவி நிற்கும். யாரும் ஓதலாம். எப்பொழுதும் ஓதலாம். ஆண், பெண் ஜாதி சமய வேறுபாடு எதுவும் கிடையாது. எல்லாமே பொதுப் பொருளையே குறிக்கும். இவள், அவள், அவன் அது என்றும் எதையும் சுட்டிக்காட்டாது. யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்பதுதான் சாரம்சம், வாழ்க அந்தணர், வானவர் ஆ இனம்''.

ககராதி ஓர் ஐந்தும் காணிய பொன்மை
அகராதி ஓர் ஆறு சத்தமே
சகராதி ஓர் நான்கும் தான் சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே 1282

மொழியின் எழுத்துக்களை கருதியே சிலர் பொருள் பண்ணுகிறார்கள். மொழி எழுத்து மனிதர்கள் ஏற்பாடு. இயற்கையின் எழுச்சிகளையே சான்றோர்கள் குறிப்பிடுகிறார்கள். 'க' என்பது கனல் என்ற சொல்லின் சுருக்கம். கதிர் கண்ட காந்தம் கனலாயிற்று. காற்றோடு சேர்ந்த சூடுகனல், அதற்கு ஆதி சூரியன். அது ஐந்து விதமாக பிரிந்து பொன் நிறத்தில் - மஞ்சள்

வெயில் ஆயிற்று என்கிறார். சூரியன், சந்திரன், அக்னி என்று மூன்று நிலையாகி மண், நீர், நெருப்பு, காற்றோடு சேரும்போது, மஞ்சள், வெள்ளை, சிகப்பு, கருப்பு என்று நிறம் பெறும் அதை ஆறு இரத்தமே போலும் என்கிறார். 'அ' என்பது எட்டு. அது நான்கு அந்தக்கரணங்கள் மனம் புத்தி சித்தம் அகம் ஆயிற்று. அந்த சத்தி முக்குணமாயிற்று. அது உலகியல்-காமியம், ஆசைகளை பரப்பிற்று. புவனம் என்றால் உலகியல், சூரிய ஒளி வணமாக மாறிற்று. ஒரு காடு-அங்கே மண் வாழ்வன, நீர் வாழ்வன, நெருப்பில் வாழ்வன, காற்றில் வாழ்வன, எல்லாம் தாவரம். பல மிருகங்கள், பறவைகள், பாம்பு, மீன் முதலிய ஆறு அறிவு இனங்கள் எல்லாம் வாழும். இதற்கு எல்லாம் காரணம் ஆதி என்ற சத்தியும் பகவன் ஒளியுமே அகரமாயிற்று. அகரம் என்றால் எட்டு நிலைகள், புவனம் என்றால் 18 x 12 = 216 கூட்டினால் 18 + 12 = 30. இதை மணிவாசகம் 'தாவர சங்கமம்' என்பார். 18 நிலைகளில் நான்கு யாராலும் சொல்லவோ எழுதவோ முடியாத நுண்ணிய நிலை ஓசையும் ஒளியும் அதில் ஓசை நாதசத்தி, ஒளி சிவம் என்றும் மீதம் 14 நிலைகளை, புல், பூண்டு, புழு, மரம், பல் - விருகம், பாம்பு, பறவைகள், மனிதர், பேய், கணங்கள் சுரர், முனிவர், தேவர் என்று இனவாரி காட்டியது. இது பெருகும் போது 24 மணி நேரத்திலும் 21600 ஆகும்.

ஓரில் இதுவே உரையும் இத்தெய்வத்தை
தேரில் பிறிதில்லை யான் ஒன்று செப்பக்கேள்
வாரித் திரகோண மணமின்ப முத்தியும்
தேரில் அறியும் சிவ காயந்தானே 1283

ஆராய்ச்சிக்கண் கொண்டு பார்த்தால் எல்லாம் ஒன்றே அவன் ஆனான், அந்த ஒன்று சிவன் அவனுக்கு உடலாக அமைந்தது இரண்டுக்கு அவன் இன்னருள், அருவசத்தி. மூன்றில் நின்றனன். அது சூரியன், சந்திரன், நட்சத்திரம் (அக்னி) என்ற சுடர் ஒளி ஆயிற்று, நான்கு உணர்ந்தனன். அவை மனம், புத்தி, சித்தம், அகம் என்ற நான்கு - காரண சரீரம் ஆயிற்று. அது ஐந்து

பூதங்களுடன் சேர நவராத்திரி ஆயிற்று. பின் ஆறில் விரிந்தனன், குவிந்த இருள் விரிந்து மலர்ந்தது. ஏழாவது நிலை ஆறு அறிவாளபின் ஏழில் ஒடுங்கிற்று. உணர்ந்து அமர்ந்தனள் எட்டே. இதையே தமிழ் மொழியில் எட்டு வேற்றுமை உருபுகளாக எழுதினார்கள். அதில் ஒன்றும், எட்டும் உருபு கிடையாது. 2) ஐ 3) ஆல், ஒடு, உடன், 4) கு, 5) இருந்து , நின்று 6) அது, உடைய, 7) இல், கண்ட மேல், கீழ், வெளி, உள், பக்கம் பார்வைகள்.

ஏக பராசத்தி ஈசற்கு ஆம் அங்கமே
ஆகப் பராவித்தை ஆம் முத்தி சித்தியே
ஏகம் பராசத்தி ஆகச் சிவகுரு
யோகம் பராசத்தி உண்மை எட்டு ஆமே 1284

உண்மை என்பது எட்டுத் தலைப்பில் தான் நாம் நினைப்பது போல பல அல்ல. எல்லாவற்றையும் எட்டுக்குள் பொருள் பண்ண வேண்டும். பின் அதை ஐந்தில் அடக்கி ஐந்தை ஓம் என்ற ஒலியில் அடக்கி, ஒலியை ஒளியில் அடங்கும் போது ஏக பராசத்தி ஆகும். அதுவே ஈசனுக்கு அங்கம் ஆகும். அதன் செயல் முத்தி, மூன்றாக இருந்ததை ஒன்றாக்குதல், உடல் மனம் அறிவு என்று இருந்ததை (முப்புரத்தை), மூன்று நிலைகளை நனவு கனவு தூக்கம் என்ற நிலைகளை நீக்கி எப்பொழுதும் விழிப்புடன் இருக்கச் செய்வதே ஏகநிலை, ஏகபராசத்தி, ஒப்பில்லாது பேரறிவு, பேராற்றல் பராசத்தி சிவனுக்கு காவல் (பாரா) தெய்வமாவாள். சிவன் என்பது அசையாத திருமேனி, மெய் உணர்வு. அதுவே மீளா பேறு அளிக்கும் பெருநிலையாகும். அதுவே வேண்டும் சித்தியாகும். அவனே குருவாகத் தோன்றுவான் சிவனுடன் கூட்டுவிப்பவளும் பின்பு சிவயோகியாவான்.

எட்டாகிய சத்தி எட்டாகும் யோகத்துக்கு
எட்டாகும் நாதாந்தத்து எட்டும் கலப்பித்த
தொட்டாத விந்துவும் தான் அற்று ஒழிந்தது
கிட்டாது ஒழிந்தது கீழான மூடர்க்கே 1285

(நினைவு ஓசைதான் விந்து - அதை கட்டினால் எல்லாம் சித்தியாகும்)

திரு அருளாற்றல் என்றால் உருவமில்லாத சத்தி எட்டு ஆகும். எல்லாம் அணுப்பிரமாணமாக இருக்கும். ஆவை மண் அணு, நீர் அணு, நெருப்பு அணு, காற்று அணு, ஆகாய அணு, இவை ஒன்றைவிட ஒன்று நுண்மையும் மென்மையுமாகும். இதை ஓட ஆட வைப்பது சூரியனில் வெப்பக்காற்று. அது மூன்று வகை சுடர் ஒளி, சூழ் ஒளி, அதனால் ஏற்படும் வெப்பக்காற்று கூடும் போது நாதம் உண்டாகும். சப்தம் ஏழு விதம் அதற்கு இடம் ஒன்று அப்பொழுது நான் என்ற நினைவு ஓசை இல்லாமல் போய்விடுகிறது. பலவற்றில் ஈடுபட ஒன்றான நான் இல்லாமல் - சார்ந்த வண்ணம் ஆகி விடுகிறது. இப்படி அறியும் அறிவு விசாரணை இல்லாத கீழோருக்கு எப்படி கிட்டும்?

ஏதும் பலமாக இயந்திராசன் அடி (இந்துராசன்)
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீ தங்கும் அங்க நியாசம் தனைப் பண்ணி
சாதம் கெடச் செம்பில் சட்கோணம் தானிடே 1286

இந்து என்பது சூழ் ஒளி. சூரியன் சுடர். அதன் சூழ் ஒளி இங்கே தோன்றும் ஒளி. அந்த ஒளியில் குரு என்பது இருட்டிலிருக்கும் ஒளி. அதன் சொல் கேட்டு சுட்டு உணர்வு காற்றைக் கொண்டு மேல் முக்கோணம் ஒன்றும், கீழ் முக்கோணம் ஒன்றும் கீறி ஆறுகோணம் ஆக்கி திரு உருவம் அமைத்து நின்றில் ஆறு முக்கோணங்கள் அமைந்ததே முகம். மத்தியில் இடம். அதைச்சுற்றி கண் காவல், துவாரபாலகர்கள் ஒளி; காது - காத்துக்காவல் (ஒலி) அதற்கு நாசி - காற்று (மணம்); வாய் அதை வெளிப்படுத்த - விளம்பர சூத்ரம். இந்த எட்டுத் துவாரமும் போக்குவரத்துப் பாதைகள்.

சம் கோணம்தனில் சிரீம் ஹிரீம் தானிட்டு
வட் கோணம் ஆறின் தலையில் ரீங்காரமிட்டு
எக் கோணமும் சூழஎழில் வட்டம் இட்டுப்பின்
மீக்கீர் எட்டக்கர மம்முதல் மேவிடே 1287

உடனே ஒரு தாள் எடுத்து எழுதுவதோ, கோடு போடுவதோ அல்ல. நம் உடலில் உள் உடலின் அமைப்பையே இயற்கையால் போடப்பட்ட கோணத்தை குறிப்பிடுகிறது. அதை புரிந்து கொள்வதே நம் செயல், உங்களை ஒன்றும் செய்யச் சொல்ல இல்லை. ஆனால் வான் ஒலியை கவனிக்கவும். கேட்பதே பராவித்தையாகும். அதுவே மீளாப்பேறு அளிக்கும். பெரு நிலையாகும். அதுவே கேசரியோகம். சிரீம், ஹிரீம் என்பது சிரசு உச்சியில் கேட்கும் நாதம் ஆறு அறிவும் அந்தமாகும் போது வண்டின் நாதம்போல் ரீங்காரம் கேட்கும். கடைசியில் மவுன நிலையாவதே சிறந்த நிலை. அதுவே மம் நிலை இம்

இட்ட இதழ்கள் இடை அந்தரத்திலே
அட்ட ஹவ் விட்டு அதன்மேல் உவ்விட்டு
கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம்
இட்டு வாமத்தால் கிரோங் என்று மேவிடே 1288

மேற்கூறிய பதினாறு இதழ்களின் இடை வெளியில் பொருந்திய ஹாவ் விட்டு அதன்மேலே 'உ' கரத்தை (நாதம்) வரைந்து ஒவ்வொரு விளக்குக்கும் அடியில் இருட்டு இருக்கும். அங்கேயும் ஒளி பரப்பி என்பதே பொருள். கிரோம், சிரோம் என்பது பீஜ எழுத்துக்கள். முதல் நாதம் வாம் - இடப்பக்கம், அந்தரம்- வெளி, அட்ட - எட்டும் பொருந்திய 'உ' என்பது சப்தம். இதற்கு கோயிலில் பூஜை காட்டும் ஒளி போது. முதல் தீபம் நல்ல உதாரணமாகும்.

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை அடைவே குரோங் சிரோங் என்றிட்டு
தாவில் ரீங்காரத்தால் சக்கரம் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப் பின் பூசியே 1289

கராத்தே பயிற்சியில் சப்தமே முக்கியம். அது ஏன் மனிதன் சப்தம் வெளியிடவே பிறந்தவன். சமகீதம் என்பது சங்கீதம். எல்லாமே தோல் வாத்தியம், நரம்பு வாத்தியம், வாய்ப்பாட்டு, எலும்பு வாத்தியம் எல்லாம் ஒன்றையே பேச வேண்டும். சுருதி சுத்தம் வேண்டும். இங்கே நம்மிடம் சுருதி வாத்தியம் கண் ஓசைதான். சப்தம் தன்னை வெளியே காட்டிக்கொள்ளும். ஆசை உடலால் காட்டிக் கொள்ளும். திறமை மிருக உணர்வு – ஐந்தறிவு. ஆறாவது அறிவு ஒழுங்கு செய்யப்பட்டு வெளியே பேசுவது, பாடுவது. குரோம் என்பது குருவின் உபதேசம் 'ஓம்' என்ற சொல். அதை சிரம் மேல்க் கோண்டு ஓம் என்று திரும்பச் சொல்பவன் சீடன், 'சிரோம்' என்ற சொல் 'கோ' என்பது நாதம், நாதத்தின் முடிவே அடைவு என்பது. 'ஓம்' என்ற சொல் ரீங்காரத்தில் முடியும், நெருப்புக்காற்று இது புவனம் முழுவதும் கேட்கும் ஓசை புவனாபதி.

பூசிக்கும் போது புவனாபதி தன்னை
ஆசு அற்று அகத்தினில் ஆவாக்களம் பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை அது செய்து
தேசுற்றி டவே தியானமது செய்யே 1290

சிவநாமத்தை சிந்தித்து (புவனாபதி) மனதின் உள் உதடு அசையாமல் சொல்லி, அதை பிராணசத்தியோடு (சுவாசம்) இணைத்து ஒன்று ஆக்கி, ஒளியுடன் சேர்த்து அறிவாக்குதலே தியானப் பயிற்சி. சொல் காற்றில் கரைந்து காற்று ஒளியில் கலப்பதே அது.

செய்ய திருமேனி செம்பட்டு உடைதானும்
கையில் படை அங்குச பாசத்தோட பய
மெய்யில் அணிகலன் இரத்தினமா மேனி
துய்யமுடியும் அவயத்தில் தோற்றமே 1291

அதாவது நாம் சாப்பிடும் ஆகாரம் ஊநீர் – ஆகி இரத்தமாகும் நிலையே இது. நம்முடைய இரத்த அணுக்களே மாணிக்ககற்கள். கல்லெல்லாம் மாணிக்கம் கற்களாகுமா? இன்றைய விஞ்ஞான உலகம் இரத்தம் செய்ய இயலவில்லை. இரத்தமே பின்னால் கொழுப்பு மஜ்ஜை, மூளை, சுக்கில சுரோனிதம் ஆகிறது. அதனால் தான் குழந்தைகளை என் இரத்தம் என்கிறோம். அதுவே அக்னிகலை. முடி கூட கருப்பாகத் தோற்றினாலும் இரத்தத்தின் மாற்றமே.

தோல்ப் போர்வை நீக்கி துதித்து அடைவில் பூசித்து
பால்போல் அகமன் திறத்தால் பயின்று ஏத்தி
நாற்பால நாரதயா சுவாகாய என்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சேவியே 1292

நினைவு ஆற்றலால் உடல் நான் இல்லை என்று கருதி (தூக்கத்தில் இல்லையா – அது போல்) உள் நினைவாக இருந்தால் சுவாசமே மனம், சுவாசம் சிரசுக்குப் போகும், பாற்சோறு என்பது கண், ஒளி, அதை நான்கு பக்கமும் பரப்பி எல்லாம் நினைவால் 'நாராதாயசுவாகா' என்று மனதால் நிவேதனம் செய்திட ஆவியை ஒளியுடன் சேர்த்து விட்டால் நான் என்ற ஆணவம் அர்ப்பணம் ஆகி விடும். தன்னையே அர்ப்பணித்தலே வேதியாணம். நினைவு இல்லாமல் போவதே முத்தி.

சேவிப்பதன் முன்னே தேவியை உத்வாகனத்தால்
பாவித்து இதயக் கமலம் பதிவித்து அங்கு
யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீ வைத்து சேமி நினைத்தது தருமே 1293

சேவடி சேரல் செயல் அறந்தான். அதற்கு முன் தேவியை-(நெருப்பு காற்று) உள்ளே வாக்கு என்னும் வாகனத்தில் ஏற்றி உச்சாடணம் செய்ய வேண்டும். உதடு அசையாமல் அகத்தினுள்ளே அப்படி பயிற்சி செய்தால் - 'ஐந்து அவித்தான் ஆற்றல் அகல் விசும்புள்ளார் கோமான் இந்திரனே சாலும் கரி''. யாருக்கும் கிடைத்தற்கரிய இந்திரபதவியே கிட்டும். அதையும் துச்சமாகக் கருதினார்கள் ஞானிகள். இந்திரலோகமே ஆளும் அச்சுவை தரினும் வேண்டேன் என்றார் ஒரு ஆழ்வார். அப்படி அடியார்களும் இருக்க நம்மைப்போல் சோத்துக்கு அடிமையாக உள்ள மானிடப் பிறவிகளும் இருக்கத்தான் செய்கிறோம். என்ன சுகத்தை கண்டு விட்டோம்! வேதனையே வாழ்க்கையாக உள்ளது. வாழ்ந்தாலும், சுற்றிலும் பொறாமைக் கண்கள். அடக்கமாக இருந்தாலும் ஏசும். வாழத்தெரியாதவன். வாயில்லா பூச்சி என்பர். வாய் பேசினால் வாயாடி. ஆகையால் நடுவில் நின்று பழகுவதே சரியான மார்க்கம். சாத்வீக வழியே சன்மார்க்கம். பிறந்து விட்டோம். பிறந்த வரை வாழ்ந்து காட்டுவோம். ஆனால் வாழ்வே மாயம் என்று உணர்ந்து வாழ்வோம். இது பாடம் படிக்க வந்த பள்ளியே தவிர, குடி இருக்க வந்த இடமல்ல. வந்தது போல செல்லத்தான் வேண்டும். காதறுந்த ஊசியும் வராது. அறிவு ஒன்றே வரும். ஏனெனில் அது தான் 'நான்'.

நவாக்கரி சக்கரம் நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரியாக
நவாக்கரி எண்பத்தொரு வகையாக
நவாக்கரி யக்கிலி சௌமுதலீறே

1294

நவம் என்றால் ஒன்பது, கரி என்றால் (யானை) என்பர். அது உருவத்தால் அல்ல. நிறத்தால். அது ஆகாயமாகிய இருள் சத்தி. அது நீருடன் சேர்ந்த காற்று. இது ஐந்து பூத அணுக்களை சார்ந்தும் அதற்கு முன் அந்தகரண அணுக்கள் மனம், புத்தி, சித்தம், நான்கோடும் சேரும் போது ஒன்பது நிலை

ஆகிறது. இந்த ஒன்பதின் பெருக்கம் 9 x 9 = 81 எண்பத்து ஒன்று. மனதுக்கு வாசல் எண்பது. இது ஓம் என்ற பிரணவத்தில் ஆரம்பித்து கிலீ என்று ஆரம்பித்து சௌரம் சூரிய வட்டத்துள் அடங்கும். ஐயும் கிலீயும் அடைவுடன் சௌவும். உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும், கிலியும் சௌவும் கிளரொளியையும் நிலை பெற்று என்முன் ஒளிரும் சண்முக ஸ்தூலமும் சதுரம் முக ஆக்குமம் என்பதே இதன் விளக்கம். குண்டலியான சிவம் திணம் வருக.

சௌமுதல் அவ்வொடு ஹௌவுடனாம் கிரீம்
கௌவுளும் உமையுளும் கலந்து ரீம் சிரீம் என்று
ஒவ்வில் எழும் கிலீ மந்திர பாதமாய்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே 1295

(சௌ, ஔ, ஹௌ, கிரீம், கௌரி, ஐ, கிரீம், கிலீம் என்பன சொல்களின் சுருக்கெழுத்து மந்திரம். ஒவ்வொரு எழுத்தும் (எழுச்சி) தன்னுடைய சொந்த இடத்திலிருந்து செயல்பட்டால் பிரச்சனைகள் கிடையாது. அவை இடம் மாறுவதாலேயே குழப்பங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக அவரவர் ஜாதகங்களைப் பாருங்கள். ஒன்பது கிரஹங்களும் மாறி மாறிக் கிடக்கும். பிறகு எப்படி நிம்மதி இருக்கும். அப்படி ஒழுங்கு பண்ண, லவரய எழுந்த எழுத்தை நமசிவய ஆக்கி அதை சிவாய - நமவாக்கி அதை சிவயசிவ எனமாற்றி கடைசியில் சிவசிவ ஆக்கப்பட்டது. அதுதான் காசி. (காற்றும், நெருப்பும்) காசியில் இறக்கமுத்தி என்பது. அது பிறக்கும் இடம் திரு ஆரூர் (எண்ணம் பிறக்கும் இடம் கண்) அதில் பிறக்கு முத்தி மேல் நோக்கிய பார்வை அண்ணாந்த பார்வை. எப்பொழுதும் அல்லும் பகலும் அதை நினைக்கவே இந்த பழமொழிகள் மற்றபடி திருவாரூரில் பிறக்கவும் முடியாது. காசியில் போய் இறக்கவும் முடியாது. திருஅண்ணாமலை நினைக்க முத்தி.

நவாக்கரியாவது நானறி வித்தை
நவாக்கரி உள் எழும் நன்மைகளெல்லாம்
நவாக்கரி மந்திர நாவுளே ஓத
நவாக்கரி சத்தி நலம் தரும் தானே 1296

நவாக்கரி என்று சொல்லப்படும் மந்திரமே ஓம் நமசிவய யானறிவும், மெய்யுணர்வு கலையாகும். கல்லிருந்து விண் வரை நினைக்கும். கல்-விண், அதனால் நன்மைகள் அகத்தே நுண் உணர்வாகத் தோன்றும். வாய் திறந்து சொல்லாது உள்மனதில் உள்நாக்கு ஓசையாக ஒலித்து கணிக்க, திரு அருளாற்றல் எல்லா நலமும் தந்து அருளுவாள்.

நலம் தரும் ஞானமும் கல்வியும் எல்லாம்
உரம் தரு வல்வினை உம்மை விட்டு ஓடி
சிரம் தரு தீவினை செய்வது அகற்றி
வரம் தரு சோதியும் வாய்ந்திடும் காணே 1297

நான் அறி நன்மையைத் தரும் திருவடி உணர்வும், ஏனைய இயற்கை அறிவுக் கல்வியுமெல்லாம் திருவருள் ஆற்றலால் உறுதிப்பாட்டினைத் தரும். எஞ்சு வினைகள் நம்மை விட்டு நீங்கி ஒழியும் ஏறுவினை தொடராது. சுந்தரச் சோதி தோன்றிட எல்லா இருளும் நீங்கும்.

கண்டிடும் சக்கரம் வெள்ளி பொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடும் சக்கரம் நினைக்கும் அளவே 1298

சக்கரத்தை வெள்ளியினாலும் பொன்னாலும் செம்பாலும் செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் அசுரர்கள் திரிபுரம் - சிவன் புன்னகையால் அழியும். வெள்ளி என்பது நீர் அணு (போகப்புனல்) பொன் என்பது (சாக்கால் - பிராணசத்தி -

பிண்டம் அழியில் பிராணன் நிலைபெறும்) வேகாத்தலை ஆகாய சத்தி, இதை முறையாக நினைத்துப் பழகவும், நாற்பத்தி ஒன்பது நாள் ஒரு மண்டலம் - அகமுக பயிற்சியில் ஈடுபட்டால் திரு அருள் துணையால் வெற்றி கிட்டும். மேலும் அச்சக்கரத்தை (கண்ணின் மணியை, கற்பகத்தை, காஞ்சனத்தை, மணி ஆடு பாவை எம் ஈசனை) உன்னி நினைப்பார்க்கு எல்லாம் கைகூடும்.

நினைத்திடும் அச்சிரீ அக்கிலி ஈறாம்
நினைத்திடும் சக்கரம் ஆதியும் ஈறு
நினைத்திடு நெல்லோடு புல்லினை உள்ளே
நினைத்திடும் அருச்சனை நேர் தருவாளே 1299

அநுபவம் என்பதை ஒப்புக்கொள்ளாமல் கற்பனைகளை நம்பி வாழ்க்கையை அமைப்பது அறியாமையாகும். அநுபவம் என்பது உருவமில்லாத உணர்வாகவே உள்ளது. உணர்வு என்பது உருவத்தால் காட்ட இயலாத ஒன்று. அப்படி இருக்க உருவத்தை காட்டிப் பேசுவது எப்படி நியாயமாகும்? ஆகவே கண் என்றால் உருவத்தை கருதினால் அது பொய். கண்ணில் உள்ள ஒளியே உண்மை. அதை பெறும் மூலப் பொருள் சூரியன். அப்படி ஒளி என்று நினைக்கும் போது சூரியனும் தோன்ற வேண்டும். அவனே நிலை பெற்ற தந்தை. உருவத்தாலான இயலமாட்டாத சாகும் தந்தை அல்ல என்பது புரியும். அதே போல் நம் உடலைத் தூக்கித் திரிவது காற்று சத்தியே. அதை உறவு கொள்வதே நியாயம். பூமியை அல்ல. இப்படி ஐந்தையும் உண்மையோடு உறவு கொள்ள வைப்பதே அருச்சனை. நெல்லோடு உமியை நினைப்பது அல்ல. உமியை (உருவத்தை) நீக்கி அரிசியுடன் உறவு கொள்ளவும்.

நேர்தரு அத்திரு நாயகி ஆனவன்
யார்தொரு வண்ணம் அறிந்திடும் பொற்பூவை
கார்தழு வண்ணம் கருதின கைவரும்
நார் தரு வண்ணம் நடந்திடு நீயே 1300

நேர் வந்து அருளும் பராசத்தியும், ஆதிசத்தியும் கரிய நிறம் என ஆராய்ந்தவர் அறிவர். இருளை நினைத்து பூஜை செய்வதே அகமுக பூஜை. கோவில்களில் மூல ஸ்தானம் இருளிலேயே இருக்கும். தூக்கத்தில் நிம்மதி காண்கிறோம். எந்த வேறுபாடும் இல்லை. எந்தத் தேவையும் இல்லை.

நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாம்
கடந்திடும் காலனும் எண்ணிய நாளும்
படர்ந்திடும் நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடு வண்ணம் அடைந்திடு நீயே. 1301

அகமுக பயிற்சி செய்து அறிவே தெய்வம், என்று கருதி நீயும் அதுவேயாகினால் பார்வையாலேயே ஒளியால் நீ நினைத்த படி நன்மைகளாகும் நல்லது நடக்கும் போது நமக்கு நேரம் போவதே தெரியாது. நல்லதிற்கு காலம் இல்லை. அப்பொழுது ஒளியான உன் நாமம் - ஒளிக்கு வேகம், ஒரு கணத்தில் 1,86,000 மைல் எங்கும் பரவும் - பாய்கதிர் போல இவை எல்லாம் வண்ணம் - நிறத்தாலேயே அடைய முடியும். மண் - மஞ்சளாகவும், நீர் - வெண்மையாகவும், நெருப்பு - சிகப்பாகவும், காற்று கருப்பாகவும் மாறினால் தான் ஆகாயம் நீலமாகும். அது மாறி சிகப்பு, வெள்ளையாக மாறி பொன்னிறமாகும்.

அடைந்திடும் பொன் வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடும் ஆதி அருளும் திருவும்
அடைந்திடும் அண்டத்து அமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே 1302

பிறர் மூலம் அறிவதை விட நீயே நேரில் அறிந்தால் தான் நம்பிக்கையும், முயற்சியும் ஏற்படும். எதற்கும் பிறரை நாடாதே. தன் காலிலேயே நில். அப்படி முயற்சி திருவினையாக்கும். தங்கம் வெள்ளி, வைரம், எல்லாம் தானே தேடி வரும். ஏனெனில் அருவமான நீ உருவத்தை நாடமாட்டாய். அது அநாவசியமான பாரம். உருவத்தால் அருவத்தை அமைவதே பயன். அருவம் உருவம் ஆகக் கூடாது.

அறிந்திடு வார்கள் அமரர்களாக
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவர்
பரிந்திடும் வானவன் பாய் புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீரே 1303

தேவர்கள், மண்ணையும் நீரையும் கடந்து நெருப்பில் வாழ்பவர். அவர்களுக்கும் அப்பால் பட்டவர் வானோர். தேவர்களுக்கும் தேவர் வானோர் என்பது நீர் அணு. அது வெப்பக் காற்றை அடக்கி ஆளும் ஆற்றல் உள்ளது. அனலில் புகுந்து அடக்கும் புனல் : அது தான் கண் + கை, கங்கை, கண்ணில் வரும் நீர் புனிதமானது. புண்ணியமானது. அதில் மிளகு அளவு சாப்பிட்டாலும் இனிக்கும். அமுதாக்கி உண்ணில் யோகிக்கு அறிவாகும். அதுவே அமுரி.

நீர் பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பாத் அணியும் ஹிரி முன் ஸ்ரீம் ஈராம்
தாரணியும் புகழ் தையல் நல்லாள் தனைக்
காரணியும் பொழில் கண்டு கொள்ளீரே. 1304

அப்படி புனல் நீரால் சூழப்பட்ட சக்கரம் உடையவர் ஹரி. அவனுக்கு ஆற்றல் ஸ்ரீ ஆகிய இலட்சுமி, நீல நிற ஹரிக்கு சிகப்பு நிற லட்சுமி. ஆற்றல். ஹரியின் சக்கரமே நவாக் கரியாகும். அதன் எழுச்சியே சிரியும் கீரியும் (ஸ்ரீ ஹிரி) மாலை அணிந்து விளங்கும் புகழ்மிக்க தையல். எல்லாம் ஒன்றாக்குபவள் (தை மாதம்) அக்கார வடிசல் ஆகும். நாள் பொங்கல் திருநாள் அதற்கு காரணங்கள் சூரியன், மூன்று அடுப்பு, பானை, நெருப்பு, நீர் தானியம் பொங்கல், கரும்பு, எல்லாம் எதைக் கருதி என்று காரணங்களை அறிந்துகொள். அதுவே அறிவு.

கண்டு கொள்ளும் தனி நாயகி தன்னையும்
மொண்டு கொளும் முகம் வசியம தாயிடும்
பண்டு கொள்ளும் பரமாய பரஞ்சுடர்
நின்று கொளும் நிலை பேறுடையாளையே. 1305

ஒளி நம்மைத்தேடி வருகிறது. அதுவும் தனி ஒளியாக அதை உள்கொள்ள கண் படைத்தான். அதைக் கொண்டு கொண்டு உள்ளே மொண்டு கொள்ள வேண்டும். அப்பொழுது குணம் பல காணலாம். பழை மறை தேடியை இன்று இங்கேயே கண்டு கொள்ளலாம்.

பேறுடையாள் தன் பெருமையை எண்ணிடில்
நாடு உடையார்களும் நம் வசமாகுவர்
மாறு உடையார்களும் வாழ்வது தான் இல்லை
கூறு உடையாளையும் கூறுமின் நீரே 1306

நாடுடையர் - அரசர். நம்மிடம் மனமே மன்னர். மாறுடையார் - பகைவர். சூட்சுமமான மனதிற்கு பகை உருவமே, ஆனால் அது வாழ இயலாது. அழியும். அப்படியானால் அழியாதது எது? அறிவே. அறிவு என்பது ஒளி. அறிவுடையார் எல்லாம் உடையார். உடையானை விட்டு அழிவானை நாடுபவன் யார்? தன்னைக் காப்பாற்ற இயலாத உருவம் நம்மை எப்படி காப்பாற்றும். ''தற்காத்து தற்கொண்டான் - பேணி தகை சான்ற சொல் காத்து சோர்விலான் பெண்''. ஆகவே அறிவு தற்காப்பு. அவன் சொல் கேட்பாயாக.

கூறுமின் எட்டு திசைக்கும் தலைவியை
ஆறுமின் அண்டத்து அமரர்கள் வாழ்வு என
மாறுமின் வையம் வரும் வழி தன்னையும்
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே 1307

எட்டுத்திசையும் பரந்து நிற்கும் ஆற்றல் ஒளி ஒன்றுக்குத் தான் உண்டு. அது தெரிந்தும் ஐந்து அரை அடி உடலை 'நான்' என்று கருதும் மனதை என்ன வென்பது? ஒளியை உரிமை கொள்வதை யாரும் தடுப்பவர் இல்லை. இடையறாது. அதையே நினையுங்கள். அவன் மெய்ப்புகழையே கூறுங்கள்.

அதனால் மற்ற ஆசைகளை அடக்குதல் எளிது. எண்ணத்தை 'நான் அறிவு' என்று மாற்றுங்கள். நில உலகத்து பிறக்கும் பிறப்பினை ஒழியுங்கள். ஒளியின் திருவடியே நிலைத்த புகலிடம் என்று தெளிவு பெறுங்கள்.

சேவடி சேரச் செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்று நின்று ஏத்துவர்
பூவடி இட்டு பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகை அறிவாரே 1308

திரு நாயகி தன் திருவடியை சேரும் படியான சீலம் முதலிய பெரும் தவத்தைப் புரிந்தவர்கள் 'சிவயநம' வெனும் மறையினை உள் நா அடியில் ஓதிக் கணித்துப் போற்றுதல் வேண்டும். அப்பொழுது வழிபாடு உறைப்பு ஏற்படும். மலர் தூவி வழிபடுவர். அவர்கள் நன்னெறியினை உணர்வர்.

ஐம் முதலாக வளர்ந்தெழு சக்கரம்
ஐம் முதலாக அமர்ந்து இரீம் ஈறாகும்
அம் முதலாகி அவர்க்கு உடையான் தனை
ஐம் முதலாக வழுத்திடு நீயே - 1309

ஐந்தறிவுகளை பல பிறவிகளாகப் பிறந்து முடிவு கண்டு விட்டோம். அந்த முடிவை அடியாகக் கொண்டு மேல்க் கொண்டு வளர்வதே வளர்ச்சி. அதையே திருந்திய முதல் ஐந்தெழுத்து என்பது வர்ணங்களாக மாறியது திருந்திய ஐந்தெழுத்து. அதை மேலும் வெண்மை ஆக்குவதே வெள் எழுத்து. ஆறாவது அறிவு. சாயங்களை போக்குபவன். வண்ணான் ஐகாரத்தை முதலாகக் கொண்டு வளர்ந்து எழும் நவாக்கிரி 'ஐ' முதலாகவும் இரீம் ஈறாகவும் அமையும். அகர முதலாகிய சிவம், மயக்குந்தலைவி - மாயைக்கு தலைவி. 'ஐ' என்பது ஒரு சந்திப்பு. 'ஔ' என்பது ஒரு சந்திப்பு. 'ஐ' ஐய, ஓ என்பது ஓங்காரி.

வழுத்திடு நாவுக்கரசி இவள் தன்னைப்
பகுத்திடும் தேவ மெய்யாகமம் எல்லாம்
தொகுத்து ஒரு நாவிடை சொல்ல வல்லானை
முகந்துளும் முன் ஏழக் கண்டு கொளீரே 1310

நாவுக்கரசி சரஸ்வதி இவளைப் போற்றும் மெய்யன்பர்கள் நாவில் அவள் விளங்கி மெய்ப்பொருளை உணர்த்தும். ஆறு பத்து நாலும் அறிந்தவள் கலையரசி. அவளை அடைந்தவர் முகம் அருளோடு தோன்றும்.

கண்ட இச்சக்கரம் நாவில் எழுதிடில்
கொண்ட இம்மந்திரம் கூத்தன் குறியதாம்
மன்றினுள் வித்தையும் மானுடர் கையதாய்
வென்றிடும் வையகம் மெல்லியல் மேவியே 1311

அருவத்தில் கண்ட இச்சக்கரம் நாவில் அழுந்திடில் அது கூத்தப் பெருமான் திருவுருவாகும். இதுவே திரு அம்பல சக்கரமாகும். இதனைப் போற்றுவார்க்கு திருஅருளம்மை தோன்றுவாள். உலகியல் நிகழ்ச்சிகளை வென்றவர் ஆவர்.

மெல்லிய லாகிய மெய்ப் பொருளாள் தனைச்
சொல் இயலாலே தொடர்ந்து அங்கு இருந்திடும்
பல் இயலாகப் பரந்து எழுநாள் பல
நம் இயல்பாலே நடந்திடும் தானே.

1312

உண்மை என்பது மென்மையாகவே இருக்கும். அதை சொல் இயக்கமாகும் போது வரி வடிவமாக உருப்பெருகிறது. ஒளிக்கு உருவம் கிடையாது 'கு' என்பது இருட்டு. நெருப்பால் (நெ+ரு) தாண்டப்படும் போது 'ரு'. 'குரு மொழி' எனப்படும். அதைப் போற்றித் தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உலகில் நன்மை தீமைகள் பலவாக எல்லையின்றி மாறிமாறிப் பெருகிவரும் இயல்புகள் ஒழித்து ஒழித்து அளவில்லாதக் காலங்கள் இன்பமே தரும். சொல்லியல் - உபதேசம். பல்லியல் - பலவாக. நல்லியல் - நன்மை.

நடந்திடு நாவினுள் நன்மைகள் எல்லாம்
தொடர்ந்திடும் சொல்லொடு சொற்பொருள் தானும்
கடந்திடும் கல்விக்கு அரசி இவளாகப்
படர்ந்திடும் பாரில் பகை இல்லைதானே 1313

நான் அறிந்த வரையில் சொல்லுக்குப் பொருள் விளங்காமை யாலேயே அநேக வியபகாரம் வருகிறது. சொல்பவர் நல்லதை நினைத்தே பேசி இருப்பார். அதை கேட்பவர் வேறு விதமாகப் பொருள் பண்ணி தப்பாக புரிந்து கொள்வர். உடனடியாகக் கேட்டு சந்தேகம் தெளியவும் மாட்டார். இதையே அஜீரணம் என்பது. இதையே பொருள் உணர்ந்து சொல்பவர் செல்வர் சிவபுரத்துக்கு என்பார் மணி வாசகர்.

பகை இல்லை கௌ முதல் ஐயது ஈறாய்
நகை இல்லை சக்கர நன்று அறிவார்க்கு
மிகை இல்லை சொல்லிய பல் உருவெல்லாம்
வகை இல்லையாக வணங்கிடும் தானே 1314

மடியில் கனமிருந்தால் பயம் வேண்டும். எல்லாவற்றையும் உதறி விட்டால் ஒன்றும் கவலையுமில்லை. 'கௌ' என்பது கௌரி, கௌரவர் என்றும் கொள்ளலாம். நம்மிடம் கவுரவம் எப்பொழுது வருகிறது. எதையாவது பிறரிடம் இல்லாத பொருள் நம்மிடம் இருந்தால் கௌரவர் என்கிறோம். அது உண்மை யிலேயே நமக்கு சொந்தமாக இருந்தால் சரி ஆனால் எல்லாம் வேறு ஒருவர் பொருளாக அல்லவா உள்ளது. அப்படி பிறர் முதலைக்கொண்டு கௌரவம் பேசலாமா? அது எல்லாம் ஐவர் சொத்து. மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐவருக்கு சொந்தமானதை நாம், நான், எனது என்று சொல்லி வாழலாமா? அது அதை அவர்களிடம் ஒப்படைத்து விட்டால் நாம் சுதந்திரமாக வாழலமே.

வணங்கிடும் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடும் நல்லுயிர் ஆனவை எல்லாம்
கலங்கிடும் காம வெகுளி மயக்கம்
துலங்கிடும் சொல்லிய சூழ்வினைதானே 1315

36 மெய்க்கும் முதல்வி அம்மையின் திருவடியுணர்வு கை வந்த நல்லுயிர்க்கெல்லாம் வணங்கி அடங்கி நிற்கும். தன் முனைப்பு அற்று விடும். காமம் வெகுளி மயக்கம் தானே அகலும். செந்நெறிக்கு வாயிலாகிய சீலம், நோன்புகள் துவங்கி கைகூடி விளங்கும். நலம் கிடும் - அடங்கிடும் சூழ்வினை. நிற்றல் சப்தம் முதல் ஐந்தும் தத்தம் வழி ஏகில் சித்துக்கு சித்தின்றி வேறு என்ன?

தானே கழறித் தணியவும் வல்லனாய்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்
தானே தனிநடம் கண்டவள் தன்னையும்
தானே வணங்கித் தலைவனுமாமே 1316

நாம் தற்சமயம் வாழும் வாழ்க்கை சார்பு வாழ்க்கை ஐம்பூதங்களைச் சார்ந்து, சூரியன், சந்திரன், அக்னியைச் சார்ந்த வாழ்க்கை. அதனால் தான் நான் யார் என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. இந்த எட்டைச் சார்ந்ததே சொல்ல வேண்டியது உள்ளது. இவைகளை எல்லாம் கழற்றி எறி. சுதந்திரமாக வெளியே வா. அதன்பின் அடைய வேண்டியது என்ன என்று பார். யான் எனது என்று அற்ற இடமே வல்லானாவன். தானே பேசுவான். திருவள்ளுவர் சொன்னார், கம்பர் சொன்னார் என்று பிறர் சொன்னதாகச் சொல்ல மாட்டான். என் கருத்து இது என்பான். அவையில் முந்தி இருப்பான். தனி நடம் - ஊழிக் காலத்தில் சத்தியும், சிவனும் சிவன் செய்யும் நடம்

ஆமே அனைத்து உயிராகிய அம்மையும்
தாமே சகலமும் ஈன்ற அத்தையலும்
ஆமே அவளடி போற்றி வணங்கிடில்
போமே வினைகளும் புண்ணியனாகுமே

1317

(புண்ணியம் - எல்லாம் இறைவன். என் கடன் பணி செய்து கிடப்பதே) புகுந்து நீயாக இருப்பவன் புண்ணியன். அனைத்து உயிரையும் உடலுடன் சேர்தலாகிய படைப்பினை அருளி அவ்வுயிர்களுடன் கலப்பால் ஒன்றாயிருத்தலின் அனைத்தும் ஆகிய அம்மை. அவ்வுயிர்களுக்கு வேண்டும், உறைவிடம், உழைப்பு, உணவு, உறவு முதலிய உதவிகளை ஈன்றவளும் அவ் அம்மையே. அவன் திரு அடியை போற்றிடில் இருள் சேர் இருவினையும் அகலும், பொருள்சேர் புண்ணியம் பெருகும்.

புண்ணியனாகி பொருந்தி உலகெங்கும்
கண்ணஇயனாகிக் கலந்து அங்கிருந்திடும்
தண்ணியனாகி தரணி முழுதுக்கும்
அண்ணியனாகி அமர்ந்திருந்தானே 1318

கண்ணியின் - நம் கண்ணில் இயல்பானான்
தண்ணியன் - நீருடன் கூடிய தாய்மை உணர்வு
புண்ணியன் - புகுந்து நீயானான்
அண்ணியன் - சாமீபம் ஆனான் அருகில் இருப்பவன்.

தானது "கம் - கிறீம்" கௌவது ஈறாம்
நானது சக்கரம் நன்று அறிவார்கெல்லாம்
கானது கன்னி கலந்த பராசக்தி
கேளது வையம் கிளரொளியானதே 1319

கம் என்பது கர்மம் என்பதின் சுருக்கம். சஞ்சித விளை இருப்பு. கிறீம் என்பது கிரியை. 'கௌ' கௌரி - ஆணவம். இவை மூன்றுமே ஆணவம், மாயை, கன்மம், நவாக்கரி சக்கரம் இதை ஒழிக்க ஏற்பட்டது. அறியாமையை நீக்க அதனது அருமையை (அன்பு, அறிவு, ஆற்றல்) அறிபவட்கெல்லாம் கடம்பவனம் என்பது மதுரமான இடம். வாழும் என்றும் கன்னியாகி யாண்டும் கலந்த பேரறிவு பேராற்றலாம் அம்மை உறவினளாவள். அவள் அருளாள் உலகமெலாம் பேரொளி தோன்றிற்று. பராசத்தி - பேரறிவு பேராற்றல்.

ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரில்
களிக்கும் இச்சிந்தையில் காரணம் காட்டி
தெளிக்கும் மழையுடன் செல்வம் உண்டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்து கொள்வார்க்கே 1320

வன்நெஞ்சர் (வஞ்சகர்க்கு) பராசத்தி மறை பொருளாகவே நிற்கும். அன்பர் உள்ளத்து வெளிப்பட்டு அமர்ந்திருப்பாள். அதனால் உள்ளம் மகிழ்ச்சியுறும். அவ்வுள்ளத்திற்கு அனைத்து வினைகளுக்கும் முதற் காரணமாம் சிவத்தை காட்டும். தெளிய வேண்டிய பொருள்கள் அனைத்தும் தெளிவித்து அருள்வாள். இவளை அறிந்து வழி படுவாயாக.

அறிந்திடும் சக்கரம் அருச்சனை யேடே
எறிந்திடும் வையத்து இடரவை காணில்
மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும்
பொறிந்திடும் சிந்தை புகை இல்லை தானே 1321

அருளால் அறிந்து ஒழுகும் நவாக்கிரி சக்கரத்தை கண்ணின் கருமணியை வழிபடுவாயாக. அஃது உலகத் துன்பங்கள் அனைத்தும் நீக்கும். மன்னனும் வந்து வழிபடுமாறு செய்யும். சிந்தை தெளிவுறும்.

புகை இல்லை சொல்லிய பொன் ஒளி உண்டாம்
குகை இல்லை கொல்வது இலாமையினாலே
வகை இல்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாம்
சிகை இல்லை சக்கரம் சேர்ந்தவர்தாமே 1322

மகாபாரதத்தில் சிசுபாலன் தலையை விஷ்ணு சக்கரம் துண்டாக்கும். புகை என்பது துன்பம். இந்த உடலையே மறக்க வேண்டும். குகை என்பது எண்ணம் கருவாகும் கண் குழி. சிகை என்பது முடிவு. படைப்பே இல்லையெனின், காத்தல், மறைத்தல் இல்லைதானே. நினைவுகளே படைப்பு. அது இல்லையாயின்

உடலும் இல்லை. உலகமும் இல்லை. கொல்லுதல் என்பது மாறுதல். ஒன்று மாறி மற்றொன்று ஆவது. எதற்குமே அழிவு கிடையாது. (NOTHING CAN BE DESTRUCTED) இப்படி மாறு தலையே மாயை என்பது. இந்த ஏற்றி இறக்கி சுழலுவதே நவாக்கிரி சக்கரம். ஒன்பது மாறுதல்கள்.

சேர்ந்தவர் என்றும் திசையொளி ஆனவர்
காய்ந்தெழு மேல்வினை காணகிலாதவர்
பாய்ந்தெழும் உள்ஒளி பாரில் பரந்தது
மாய்ந்தது 'காரிருள்' மாறொளி தானே 1323

நீருடன் சேர்ந்த காற்று காரொளி (கருப்பு வர்ணம்) அதை மாற்ற உள் நாடிக்குள்ளே ஒலி செல்ல வேண்டும். அது கண்ணின் நாடி மூலமாகவே செல்லமுடியும். எங்கும் நிறைந்த ஒளியை செல்ல முடியாதபடி தடுப்பது கண்ணீர். அதை சூட்டால் ஆவியாக்க வேண்டும். அதுவே அகமுகபயிற்சி, தியாணம், நீர் காய்ந்து மேலே எழும் மேவயின் ஞாணம் மிக்கிடின். மெய்ப்பரனாகும். 'ஒ' வற - ஓசை இல்லாமல் உட்பூசனை செய்யின்; உத்தமன் = உருவத்தால் ஆன பயன் உத்தமனைக் காண்பதுவே.

ஒளி அது ஹௌமுன் கிரீமது ஈறாக்
களி அது சக்கரம் கண்டறிவார்க்கு
தெளிவது ஞானமும் சிந்தையும் தேறப்
பணிவது பஞ்சாக் கரம் அதுவாமே 1324

கண்ணில் மணியாடு பாவை எம் ஈசனை உள் நின்று உணரவல்லார் உத்தமர். அதற்கு உதவுவது அஞ்சு எழுத்து உண்மையே. சிவாயநம என்று எழுவார்க்கு அபாயம் ஒன்றும் இல்லை. ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே''.

ஆமே சதாசிவ நாயகி யானவள்
ஆமே அதோ முகத்து உள்ளறிவானவள்
ஆமே சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்
ஆமே அனைத்துயிர் தன்னுளுமாமே 1365

அரசன் முதல் ஆண்டி வரை அடையும் அநுபவ அறிவு இந்த ஐந்திலேயே முடியும். சுவை ஒளி, உணர்வு, ஓசை, நாற்றம் என்பதே அது. அதை யாராலும் காட்ட முடியாது. உணரவே முடியும். அதை உணரும் சத்தியே எழுவாய். அதை உணர்ந்தவரே உண்மை உணர்ந்தவர். அது உணர முடியும் என்பதே சான்றோர் முடிவு. காணும் கண்ணுக்கு காட்டுவது அவனே. ''காட்டித்து கண்டவர் காட்டும் உள்ளம் போல் காண உள்ளத்தை கண்டு காட்டலால் அயரா அன்பின் அரன்கழல் செலுமே''. அந்த ஆராய்ச்சியில் அக்கறை இல்லாதவருக்கு எப்படி கிடைக்கும்? சீலம் இன்றி நோன்பின்றி அதை அடைய முடியாது. நவாக்கரி சக்கரத்தில் 32 தத்துவங்களுக்கு அப்புறம் வரும் இந்த பாட்டு மிக முக்கியமானது. சர்வ வியாபி என்பதை நிரூபிக்கும் பாடல்.

தன்னுளுமாகி தரணி முழுதும் கொண்டு
என் உளுமாகி இடம் பெற நின்றவன்
மண் உள்ளும் நீர் அனல் காலுளும் வானுளும்
கண்உளும் மெய் உளும் காணலுமாமே. 1326

அண்டமும் பிண்டமும் ஆகி நின்றவள். ஐம்பூதங்களிலும், ஞானக்கண்ணிலும், தேகத்துள்ளும் பரந்து நிற்பவள். எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கி தான் தனித்து நிற்பவள். எளியேன் உள்ளும் எளியேன் தங்குவதற்கு இடமுமாகி விசும்பும் சுட்டி ஆகவும் விரிந்து நின்றவள்.

காணலுமாகும் கலந்து உயிர் செய்வன
காணலுமாகும் கருத்து உள் இழுந்திடில்
காணலுமாகும் கலந்து வழி செயக்
காணலுமாகும் கருத்துற நில்லே 1327

திருவருள் வலிமையால் ஏனை உயிர்களுடன் நீ கலந்து அவை செய்வனவற்றை காணலுமாகும். அவ்வுயிர்கள் தம் கருத்தில் மறைவாக வைத்திருக்கும் எண்ணங்களை அறிதல் முடியும். அவற்றை நம் இஷ்டத்துக்கு ஆட்டுவிக்கலாம். (HYPNOTISM) ஆனால் துஷ்பிரயோகம் செய்பவர் துன்பத்துக்கு உள் ஆவர்.

நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றாக
கண்டிடும் உள்ளம் எங்கும் தானாக
கொண்டிடும் வையம் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப் பொருளாகுமே 1328

திருவடி உணர்வு பெற்றவர் ஏழு விதமாக பார்க்கும் இந்த உலகத்தை ஒன்றாகப் பார்க்கும் கண் பெற்றவர் ஆவர். ஆகவே சமநிலை எய்துவர். ஒரு குறிப்பிட்ட பொருளை நான் எனது என்று கருதாமல் எல்லாமுமே நான் என்று எண்ணி எண்ணிப் பழகுவர். சமநிலை, அவ்வளவு எளிதில் வந்து விடாது. தீவிர பயிற்சி வேண்டும். எல்லா உயிர்களின் உள்ளத்திலும் கலந்து எங்கும் தானாகக் காணலாம். மாயா காரிய உலகங்களின் உண்மைப் பண்பை உள்ளவாறு உணரலாம். இருவினைப் பிணைப்பும் நம்மை விட்டு அகலும்.

மெய்ப்பொருள் 'ஔ' முதல் ஹௌ வது ஈறாக
கைப் பொருளாக கலந்தெழு சக்கரம்
தற் பொருளாகச் சமைந்த அமுதே சவரி
நற்பொருளாக நடு இருந்தாளே. 1329

உண்மைப் பொருளாகச் சமைந்த அமுதே சுவரி சக்கரமானது 'ஔ' என்பது முதிர்ச்சி பெற்ற ஆற்றல் 'ஹௌ' என்பது மோன நிலை வரை சிந்திப்பது. மாட்டை ஓட்டத்தி லிருந்து நிறுத்த 'ஹௌ' ஹா என்போம். நடுவக இருப்பது துலாக்கோல், சமநிலை. 'நமசிவய' என்பதே அமுதம் நடுநிலை, அகமும், புறமும் ஒத்துக் காணப்படும். "உடையாளும் உந்தன் நடுவிலிருக்கும் உடையான் நடுவில் நீ இருத்தி அடியேன் நடுவில் இருவீரும் இருப்பீர்" என்பது திருவாசகம்.

தான் அதன் உள்ளே சமைந்த அமுதேஸ்வரி
காலது கொண்டு கலந்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமும் கேடில்லை காணுமே 1330

நம்முள் சமையல் அறையே உள்ளது. அங்கே உருவங்கள் அழிக்கப்படுகின்றன. அது தான் அடுக்களை எனப்பெயர். அடு = என்றால் மாற்றுதல். உருவத்தை அருவமாக்குதல், வெட்டுகிறோம், குத்துகிறோம், அரைக்கிறோம், அவிக்கிறோம், பொறிக்கிறோம், வறுக்கிறோம், எல்லாவற்றையும் மென்மையாக நமக்கு ஏற்றால் போல் இதம் செய்கிறோம். இதற்குப் பெயர் பதப்படுத்துகிறோம். பக்குவம் செய்வது. அதுவே அமுதமாகிறது. கண்ணார் அமுதம். அதற்கு உதவுவது காற்று. காலும் கையும் அதை ஊக்குவிப்பது சூடு. ஆக காற்று அனல், நீர், கானல் நீர் தாம் எல்லாம்.

கேடில்லை காணும் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணும் நான் முதலற்றபின்
மாடிப்பை காணும் வரும் வழிகண்டபின்
காடில்லை காணும் கருத்துற்று இடத்துக்கே 1331

மாயா காரியம் எல்லாம் முழுவதும் ஒழித்து அறிந்த உலகம் இல்லை என்று உறுதிப்படுத்தி வெட்டவெளியே உண்மை என்று அறிதலே ஞானம். சிவத்தொடு கலத்தலால் (அப்பொடு கலந்த

உப்பு) நீரில் கலந்த போது தான் இல்லாமல் போவது போல் ஒளியோடு ஒளிசேர பளுவானது கீழும் எளிதானது மேலுமாக இருக்கும். உலப்பிலா கேடில்லா உவப்பில் பாழ் அடங்கி நிற்கும் நிலை.

உற்றிடமெல்லாம் உலப்பில் பாழாக்கி
கற்றிடமெல்லாம் கடு வெளியானது
மற்றிடமில்லை வழியில்லை தான் இல்லை
சற்றிடமில்லை சலிப்பற நின்றிடே. 1332

எந்த பேதமும் - வேறுபாடும் எதுவும் இல்லை என்றாலே சமநிலைதானே. உயிர்தான் தனி என்ற எண்ணம் திருவருளால் மாறி திருவருளாயிற்று. திருவடி உணர்வு, உலகியல் எல்லாம் மாயா காரியம் நிலை பேறு இல்லாதது என்று உணர்ந்து முனைப்பு, நீங்கி அடங்கி நிற்றலால் அவை உவப்பில் பாழாகத் தோன்றும். உலகியல் பொருள்களைப் பற்றி கற்றறிந்த பயிற்சிகள் எல்லாம் விடுபட்டமையால் வெட்ட வெளியாகும். ஆருயிரும் கலப்பால் ஒன்றாகி நிற்கும்.

நின்றிடும் ஏழ்கடல் ஏழ் புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தான் ஏகிடும்
நின்றிடும் சத்தி நிலைபெறக் கண்டிட
நின்றிடும் மேலை விளக்கொளி தானே 1333

அண்டமாகிய உலகத்தில் காணும் அத்தனையும் பிண்டமாகிய உடம்பிலும் காணும். அருவக்கண் துணையால் உள்ளம் கள்ளமின்றி நிலை பெற்று நிற்கும். நிற்கவே அவ்வுள்ளம் நினைப்பவை அனைத்தும் அருளாய் வலிய வந்து முன்னிற்கும் உள்ளத்து நிலை பெற்று நிற்றலால் பார்க்கும் இடமெல்லாம் ஏக ஜோதிமயமாகவே தோன்றும் புருவ நடுவழி காணலாம். மனம் நிலைபெறும். என்றும் உள்ள சத்தி நிலைக்கும். எங்கும் சத்தி எங்கும் சிவம் என்ற நிலை.

விளக்கொளி 'சௌ' முதல் லௌ வது ஈறா
விளக்கொளி சக்கரம் மெய்ப் பொருளாகும்
விளக்கொளியாகிய மின் கொடியாளை
விளக்கொளியாக விளங்கிடு நீயே 1334

எல்லாவற்றையும் விளக்கும் நவாக்கிரி சக்கரம் 'சௌ'ரம் என்பது சூரியன். 'லௌ' உயிர் ஒளி. ஆகவே நம்மிடம் இருப்பது விளக்கொளி. நாம் பிறருக்கு வழி காட்டியாக அமைவதே நாம் பிறந்ததின் பயன். இராமன் வாழ்ந்து காட்டினான். மஹாத்மா, ஏசு, நபிகள் நாயகம், புத்தர், மஹாவீரர், ரமணர் , ராமகிருஷ்ணர், விவேகானந்தர், வள்ளலார் எல்லாம் சான்றோர்கள். வழிகாட்டிகள். வாழையடி வாழையென வந்தவர். ஓது செயல் பாவுடலாம் உய்க்கு மறை உயிராம் தீதில் நமசிவய செப்பு என்பதனால் விளங்கும். நவாக்கரி சக்கரத்தில் (கண் மணியில்) மின் கொடி போல் தோன்றும். அருளம்மையை காண்பர். கண்ட அப்பேற்றால் கண்ட அம்மெய்யன்பர் உலகினுக்கு ஒளி விளக்காய் திகழ்வர்.

விளங்கிடு மேல்வரும் மெய்ப் பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லியலானது ஆகும்
விளங்கிடும் மெய் நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே. 1335

சிவமெய்யாக என்றும் ஒன்றாய் நிற்கும் மெய்யுணர்வு விளங்கிக் கொண்டவர்கள் உலகத்துக்கு அப்பொருளை விளக்கும் முறையே இறைபணியாகும். ஆசை அற்று, வீடும் வேண்டா விறலினர் ஆவார்.

தானே வெளி என எங்கும் நிறைந்தவள்
தானே பரமது வெளியது வானவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே 1336

இதற்கு விளக்கம் வேண்டுமா என்ன? எல்லாம் அவனே.

அண்டத்தினுள்ளே அளப்பரிதானவள்
பிண்டத்தின் உள்ளே பெரு வெளிகண்டவள்
குண்டத்தின் உள்ளே குணம் பலகாணினும்
கண்டத்தில் நின்ற கலப்பறியார்களே. 1337

அண்டம் என்றால் முட்டை வடிவம், கோழி முட்டையும் முட்டை தான். மனித முட்டையும் உண்டு, உலகமும் முட்டை வடிவமே, அண்டம் ஏழும் முட்டை வடிவமே, பெரிய முட்டையுள் சின்ன சின்ன முட்டைகள். அத்திப்பழத்துக்குள் வித்துப்போல், அதற்கு கணக்குச் சொல்ல முடியுமா? அளப்பரியது. அது போல் நம் உடலின் உள்ளும், பெரு வெளி கண்டவன். கண் சிறியது ஆனால் அது கொண்டுள்ள உடல் பெரிது. ஐந்தரை அடி உயிரமுள்ள நாம் 1500 சதுர அடி கொண்ட வீட்டில் இருப்பது போல. குண்டம் என்பது கண்குழி. அங்கே பல குணம் காணலாம். ''பார்ப்பான் அகத்தில் பால் பசு ஐந்து உண்டு''. ''ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ளும்''. அதன் கலப்பை அறியாமல் வாழுகிறோம்.

கலப்பறியார் கடல் சூழ் உலகெல்லாம்
உலப்பறியாருடன் ஒரு உயிர் தன்னை
சிவப்பு அறியார் சிலதேவரை நாடித்
தலைப்பறியாக சமைந்தவர் தானே. 1338

உலப்பு - அழிதல், சிலப்பு அறியாதார் - சிலம்பொலி - அதாவது முதல் நாதம் பரை ஒலி 'ஓம்'என்று கேளாதவர். தலைப் பொறி என்பது - முதல் எழுச்சி பெற்றவர் ஒளியில் பிறந்தவர் அறிவொடு இருப்பர். பிறக்கும் போது ஆரம்ப திசையை கவனிக்கவும். அன்பாகிய சிவம் ஆற்றலாகிய சத்தியுடன் எங்கும் வியாபித்திருப்பன். அவ்வுண்மையை உணர்ந்தவர் இம்மையும் அறிவோடு கேடின்றி வாழ்வர். இறந்து பிறந்து உழலும் சிறு தெய்வங்களை நாடார்கள். ஓம் என்ற பிரணவ ஒலி கேளாதவர். பனிரெண்டு ராசிகளில் சிம்மம் சூரியன் வீடு, கடகம் சந்திரன் வீடு கடகத்தில் குரு உச்சம்.

தானே எழுந்த அச்சக்கரம் சொல்லிடில்
மானே மதிவரை பந்திட்டு வைத்தபின்
தேனே இரேகை திகைப்பற ஒன்பதில்
தானே கலந்த வரை எண்பத் தொன்றுமே 1339

ஜோதிடத்தில் இராசிக்கட்டம் போடுவர் அதில் 12 கட்டம் கீறுவர். அதில் ஒன்பதாவது வீடு குரு வீடு. நாலாவது வீடு சந்திரன் - மனத்தின் வீடு. சந்திரன் வீட்டில் குரு இருந்தால் அவன் 81 வயது வாழ்வான். இராமன் ஜாதகம் கடகத்தில் குரு, அநேகமாக அரசியல் தலைவர்கள் ஜாதகம் கடக ராசியாகவே இருக்கும்.

ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றி கொள் மேனி மதி வட்டம் பொன் மையாம்
கன்றிய ரேகை கலந்திடும் செம்மையில்
என்றியல் அம்மை எழுந்தவை பச்சையே 1340

மதி வட்டம் என்பது மனதின் இருப்பிடம். அது மஞ்சள் நிறம். பொன் போன்றது. அத்துடன் நீலநிறம் (குரு) சேர்ந்தால் பச்சை நிறமாகும். அது இல்லாமல் சூரியன், பார்வைபட்டால் சிவப்பு நிறமாகும்.

ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய
வாய்ந்த இப்பெண் எண்பத்தி ஒன்றில் நிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமும்
ஆய்ந்த வந்ததாம் உயிராம் ஆகுதி பண்ணுமே 1341

உடல் இல்லையாயின் உலகம் இல்லை என்பதே புரியாமல் வெளி நிலைகளையே குறிப்பிட்டு பொருள் எழுதுகிறார்கள். இது திருமூலருக்குச் செய்யும் துரோகமாகும். மரவுரி என்பது நம்முடைய முதல் அறிவு தொடு உணர்வு. ஸ்பரிசம். அது தாவர அறிவு, நம் உடலே மரவுரி ஆன்மாவுக்கு

அது ஆடை, அதுவே நவாக்கரி சக்கரம். ஒன்பதும் ஒன்பதும் பெருகினால் (9+9=81) கூட்டினால் (9+9=18) அது முடிந்தபின் எல்லா அறிவும் ஒன்று கூடுமிடம் கண். அங்கே உயிரை-ஆவியை ஆகுதி என்றால் ஒளியாக்க வேண்டும். ஒளியை ஒளி செய்து ஓம் என்று எழும்ப வேண்டும். சஷ்டியப்த பூர்த்தி 61 வயதில். 81 வயதில் சதாபிஷேகம் என்பர்.

பண்ணிய பொன்னைப் பரப்பற நீ பிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்தபின்
துண்ணென நேய நற் சேர்க்கலுமாமே. 1343

சக்கர வடிவாக (கண்மணி வட்டம்) செய்யப்பட்ட திரு அருள் அம்மையின் திரு உருவை உள்ளப் பதைப்பு ஒடுங்க இமை ஆடாமல் முறையாக வழிபட்டு உறுதியாகக் கைக் கொள்வாயாக. அத்தனையோர் நான்முகனை ஒத்தவராவர் நான்கினையும் உள்ளவாறு உணர்ந்து கைக்கொண்டு பிறருக்கு உணர்த்த வல்லராய் விளங்குவர். ஆத்மசத்தியின் அருள் பெற்றவர் ஆவார்.

ஆகின்ற சந்தனம் குங்குமம் கஸ்தூரி
போகின்ற சாந்து சவ்வாது புழுகுநெய்
ஆகின்ற கற்பூர மகோசன நீரும்
சேர்கின்ற ஒன்பதும் சேர நீ வைத்திடே 1343

தூய உடம்பினன் ஆதல் பற்றி இம்மந்திரம். இந்த உடல் எனும் உபகரணம் (கருவி) சுத்தம் செய்யக் கொடுக்கப்பட்ட (தோட்டி கையில்) உள்ள பெருக்குமாறு போன்றது. நாம் வாய் வழியாகச் சாப்பிடும். ஆகாரம் அசுத்த மாயை. மண்ணின் மறுமாற்றம். அது மறுபடியும் ஆறு தடவை ஜீரணம் செய்யப்பட்டு ஏழாவது நிலையில்தான் தெளிவடையும். அப்படி ஆகும் ஒன்பது நிலைகளை (COSMETICS) வாசனை பொருள்களை இங்கே

குறிப்பிடுகிறார். முதலாவது கல்லில் கட்டையால் அரைக்கப்பட்ட சந்தனம், குங்குமம் நெருப்பால் மஞ்சள் சுடப்பட்டு செய்யும் இரத்த நிறம் சந்தனம் என.பது நம்மிடம் ஊறீர். அடுத்து இரத்தம் அடுத்து வாசனையனை கஸ்தூரி. சாந்து காற்றுடன் சேர்ந்த கரும்பு நிறம், ஐவ்வாது பொடிசெய்யப்படது. அணுக்கள், புனுகு, நெய் என்பது எண்ணங்கள் எரிக்கப்பட்டு ஆக ஒன்பது நிலை மாற்றங்களை குறிப்பிடுவது. கடைசியில் கற்பூர நிலை ஜீவன் அது சிவனோடு ஐக்கியமானால் மிச்சம் கிடையாது. ஜோதியோடு ஜோதி.

வைத்திடும் பொன்னுடன் மாதவ நோக்கிடில்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியை
தச்சிது வாகச் சமைந்த இம் மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே 1344

51வது மந்திரத்துக்கு முக்கியத்வம் கொடுக்கிறார். கண் வட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பொன் மயமாகிய நவாக்கரி சத்தி. அழகிய வசியப் பொருள். பெரும் தவப் பேற்றால் (முயற்சி திருவினையாக்கும்) பொன் தட்டில் (நம் கண்மணி) வரைந்த சக்கரத்தின் கண் (யாரும் வெட்டாத சக்கரம் யாருக்கும் எட்டாதது) விளங்கும் அழகிய கொங்கையுடன் கன்னியம்மை (எங்கே நீர் சேருகிறதோ அது கொள்ளும் இடம்) அங்கேதான் நீர் சுரக்கும் கொள்கை - கொங்கை. ஆயிரமுறை உரு ஏற்றினால் - அது ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. ஒரு நிமிடத்தில் பதினைந்து தடவை இமை ஆடுகிறது. 60 நிமிடத்தில் 900 (60 x 15) ஒரு நாளைக்கு 24 x 900 = 21600. ஆயிரம் என்றால் ஆராய்ச்சிக்குரிய இடம் ஆயர்குடி கண்ணன் வளரும் இடம். வெண்ணெய் திரளும் இடம். பசுக்கள் மிகுந்த இடம். கண்ணன் குழல் ஊதும் இடம். தச்சு - வசியம் எல்லாம் சேருமிடம்.

சிந்தையினுள்ளே திகழ் தரு சோதியாய்
எந்தை கரங்கள் இரு மூன்றும் உள்ளது
பந்தமாம் சூலம் படை பாசம் வில் அம்பு
முந்தை கிலீம் எழமுன் இருந்தானே. 1345

எந்தை-என் அறிவே தந்தை தாய் அன்பும் ஆற்றலும் பந்தம் - இதுவே நம்மை மழுங்கப் பண்ணுகிறது. கிலீம் - பயத்தை உண்டு பண்ணும் சப்தம் ஹீ-ஹி அன்பர் உள்ளத்தில் இயற்கை பேரொளியாய் விளங்கும். அம்மை அப்பனாகத் தோற்றுவான். நம் ஆறு அறிவிலும், மழு, சூலம், தோட்டி, கயிறு, வில், அம்பு எனும் ஆறு கருவிகள் காணப்படும். இவைகள் கிலீம் என வித்து எழுத்தாகும். பந்தம்-தீப்பந்தம், படை-அனுதிரட்சி தோள். கைகள் ஆறு கண் - 2, காது - 2, நாசி, வாய்.

இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண் வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர் சக்கரத்தே
இருந்த கரமிடு வில்லம்பு கொண்டே 1346

சத்திகள் என்றால் பெண் உருவங்களை கற்பனை செய்ய வேண்டாம். அவைகள் ஆற்றல்கள். அதாவது சமநிலையிலிருந்து மாறுபட்ட எட்டு வேற்றுமை உருபுகள். அவை எட்டு எட்டாக பெருகி 8 x 8 = 64 அறுபத்தி நாலு கலைகள். அது நமக்கு அறுபத்தி நாலு வயது வரை நடக்கிறது. இது உடல், மனம், அறிவு என்ற மூன்று சத்திகள் இடமாகின்றன. அவை எட்டாக இருக்கும். இடம் கண்-2, காது-2, நாசி-2, துவாரம், வாய் ருஜி, பேச்சு-2, எண்வகை என்பர், இதற்கு கண்கள் தாம் வில் அம்பு அதன் திருஷ்டி, இவர்கள் நவாக்கரி சக்கரத்தின் சூழவும் திருமுன்பும் இருக்கும் ஆவி உருவங்கள்.

கொண்ட கனகம் குழை முடி ஆடையாய்
கண்ட இம்முத்தங்கனல் திருமேனியாய்
பண்டமர் சோதிப் படர் இதழானவள்
உண்டு அங்கு ஒருத்தி உணரவல்லார்க்கே 1347

கனகம் குழை-பொன்னாலாகிய ஐந்தும் குழல், பொன் எந்தப் பொருளுடன் போட்டு எரித்தாலும் பொன் பொன்னாகவே இருக்கும். ஒளிதான் பொன். அதனால் ஆன குழல் எப்படி

இருக்கும். அதன் மேனி அக்னி பிழம்பாய் இருக்கும். அதன் இதழ் சோதி சொரூபம். இதை உண்மையை விரும்புகிறவர்கள் உணரலாம். ஐந்து பேர் அறிவும் கண்களே கொள. நீர், நெருப்பு, காற்று, மண், ஆகாயம் (வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள், நீலம் - இந்நிறங்களே சாக்ஷி)

உணர்ந்திருந்து உள்ளே ஒருத்தியை நோக்கில்
கலந்து இருந்து எங்கும் கருணை பொழியும்
மணந்து எழும் ஓசை ஒளியது காணும்
தணந்து எழும் சக்கரம் தான் தருவாளே 1348

மணந்து-ஒன்றோடு ஒன்று கலக்கும் போது தான் மணம் வரும். அந்தக் கலப்பு ஒளி, ஒலி, ஆவி, நீரால் ஏற்படலாம். உருவத்தால் ஏற்பட வாய்ப்பே இல்லை. அதனால் தான் அவித்து அவியல், கூட்டு, பொறியல், குழம்பு, ரசம் என ஆக்குகிறோம். ஆனால் அந்த மணம் குறிப்பிட்ட நேரமே இருக்கும். அதை க்ஷேமித்து வைப்பதே காய், பழம், ஒருத்தி என்பதே. அதை பார்ப்பதாக எண்ணம் கொண்டு உள்ளே நோக்கினால் ஒளி அகப்படும். உள் இமை கட்டுமின், காண்மின் விடியாமை காக்கும் விளக்கதுவாமே, அதைக் கலந்து உள் நில்லுங்கள் உணருங்கள், கலந்து இருந்து கவனியுங்கள், ஓசையும், ஒளியும் காணும். நவாக்கிரி சக்கரம் தருவார்கள்.

தரு வழியாகிய தத்துவ ஞானம்
குரு வழியாகும் குணங்களுள் நின்று
கரு வழியாகும் கணக்கை அறுத்து
பெரு வழியாக்கும் பேரொளிதானே 1349

ஒளி வழி கண்டவருக்கு இருள் ஏது? இருளில்தான் பிறந்தோம். அதற்காக இருளிலேயே இருக்க முடியுமா? பிறந்த இடம் விட்டு புகுந்த இடம் ஒளி வீடு. ஆனால் புகுந்து உருவுடன் இருப்பவன் புருட உத்தமன். அவன் காட்டும்

வழியை பின்பற்றுவோம். அது நன்னெறி, வந்த வழி வேண்டாம். பேரொளி வழியே பெரும் துறை (முத்தி) பிறவி வேரை அறுத்து முத்தியை தரும் பெருவழி.

பேரொளியாய பெருஞ்சுடர்
சீரொளியாகி திகழ் தரு நாயகி
காரொளியாகிய கன்னி கை பொன்னிறம்
பாரொளியாகிய பரந்து நின்றாளே 1340

முச்சுடருக்கும் (சூரியன், சந்திரன், நக்ஷத்திரம்) ஒளி கொடுத்து மூவாப் பேரொளிச் சுடராய் விளங்குவது திருவருள். உருவமில்லாப் பரந்த ஒளி, இயற்கை ஒளியாய் திகழும் முழு முதல்வி நீல நிற மேனியாள். அவள் என்றும் மாறாத கன்னி. பொன் நிறத்தை உடைய (மண் - மஞ்சள்) வாழ்கின்ற ஆருயிர் அனைத்தையும் அறிவொளி ஆக்கி அறிவாக நின்றவள். மஞ்சளே குங்குமம் ஆகும். (விராலி மஞ்சள்) காரொளி - நீல ஒளி பாரொளி - பரந்த ஒளி.

பரந்த கரம் இரு பங்கயம் ஏந்தி
குவிந்த கரம் இருகொய் தளிர்ப் பாணி
பரிந்தருள் கெங்கை கண்முத்தால் பவளம்
இருந்த நல்லாடை மணி பொதிந்து அன்றே 1351

பரந்த கரம்--ஒளியின் கை-அபய கரம், குவிந்த கரம், மூடிய விரல்கள் கொங்கை என்பது ஒளி சேர்ந்த இடம். தண்ணித் தாங்கி போல, க்ஷேமிக்கும் இடம், அவை தாம் நம்மிடம் கிரந்திகள் - (GLANDS) கண், காது, மூக்கு, நாக்கு, உடல் எல்லாம் க்ஷேமிப்பு கிடங்குகள் தாம் (GO DOWN) மேல் நோக்கினால் பரந்தகை. மார்பினிடத்தும் திருவடியைச் சுட்டிக் காட்டும் கைகள் குவிந்த கைகள் இரண்டிலும் பூக்கள் என்பது எண்ணங்கள்.

மணிமுடி பாதம் சிலம்பணி மங்கை
அணியவள் அன்றி அருளில்லை ஆகும்
தணியவர் நெஞ்சில் தன் அருளாகி
பணியவர்க் கன்றோ பரகதியாமே 1352

நான் எனது என்ற வரட்டு கவுரவம் இருக்கும் வரை பரகதி எப்படி கிடைக்கும். நான் யார் எப்படி வந்தேன்? யார் யார் காரணம்? அப்படி படைக்கப்பட்ட என்னால் யாருக்கு என்ன பயன்? நான் இல்லை எனின் எது கெட்டுப்போயிருக்கும். என்னைப் போல் பிறந்து இறந்தவர்கள் கோடி கோடி. அவர்கள் போனதால் எதுவும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே இப்படி அவசியமில்லாத பிறவி அவசியமா? அப்படி பிறக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லாம் சிந்திப்பவர் நன்னெறி நாடுபவர். விசாரணை ஞானத்தில் முடியும். செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம். கேள்வி ஞானம்.

பரந்திருந்து உள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிகள் அப்படி சூழ
மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்
சிறந்தவர் ஏந்தும் ஸ்ரீம் தனமாமே 1353

சக்கரத்தினுள்ளே கண்மணிக்கு உள் – ஒளியாக இருந்து நோக்கினால் உடலில் முகத்தில் முப்பது, உடலில் முப்பது பரந்து கிடப்பது புரியும். ஆற்றல்கள். ஆனால் எல்லாம் சுவை, ஒளி, உணர்வு, ஓசை, நாற்றம் என்பதில் தான் முடியும். ஆரம்பமும் அதுதான் முடிவும் அதுதான். இதற்கு எதற்கு இந்த உழைப்பு, படைப்பே தேவை இல்லை என்பது புரியும்.

தனமதுவாகிய தையலை நோக்கி
மனமது ஓடிமரிக்கிலோர் ஆண்டில்
கனமவை அற்றுக் கருதிய நெஞ்சம்
தினகரனாரிடம் செய்திய தாமே 1354

நம் அநுபவம் எல்லாம் உணர்விலேயே முடிவது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆனால் அது உருவத்தில் இருந்து வந்தது போல் கற்பனை செய்வது தான் மயக்கம். அறிவாகிய நான் அறியாமையை படைத்து அதை வளர்த்து பிறகு அதையே அழித்து உணவாக்குகிறோம். ஆகவே கொல்பவனும், கொலையும் கொலை செய்யப்படுபவனும் ஒருவனே என்று அறிவதே தினகரன். தினகரன் - சூரியன், ஓடி மரிக்கில் - நீர் ஓட்டம், அடங்கினால் கனமிவை அற்று - நீரால் ஏற்படும் பாரம் குறையும் ஆவியாகி ஆதவன் ஆகலாம்.

ஆகின்ற மூலத்து எழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி ஆய மலரதாய்
போகின்ற பூரணமாக நிறைந்த பின்
சேர்கின்ற செந்தழல் மண்டலமானதே 1355

மூலம் (என்பது கண்மலரே) இடத்து தோன்றும் பேரொளி தன்னைக் குறைத்து திருஅருள் ஆற்றலாகிய அம்மை வீற்றிருந்து அருள் வாய்ந்த ஆறு மலர். அம்மலரின் கண் ஆருயிர் புரியும் அன்பிற்கு தக்கவாறு திரு அருள் பெருகும். பெருகியபின் அது அக்னி மண்டலமாகும். செந்தழல் சிகப்பாக மாறும் அந்த சிகப்பு (செம்மை) சிவனிடம் சேர்பிக்கும் திருவடி பரமண்டலம் பரம் ஜோதி மண்டலம்.

ஆகின்ற மண்டலத்து உள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத்து அருவகை ஆனவள்
ஆகின்ற ஐம்பத்து அறுசத்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத்து அறுவகை சுழவே 1356

எழுச்சி பெற்றது ஐம்பது ஐம்பதும் அமர்ந்த இடம். ஆறு ஆறாவது இடம். ஐந்திற்கும் பொது 'ஐ'. மூலாதாரம் 4, சுவாதிஷ்டானம்-6, மணிபூரகம்-10, அனாகதம்-12, விசுத்தி-16, ஆக்ஞா-2 ஆக 50 எழுச்சிகள் சிவஜோதி மண்டலம் விரும்பி

உறைபவள் திரு அருள் அம்மை. உயிரும் (12) மெய்யுமாய் (18) முப்பதுதான் இயல்பு. அது கர்மேந்திரியமாக விரிந்தபோது அறு பத்தாயிற்று. முப்பது முகம் ஒலி ஏழு, ஒளி ஏழு, காற்று 10, ருஜி 6 = 30. (கர்மேந்திரியம்). ஒலி-கழுத்து, ஒளி-இருதயம் வரை, காற்று-நுரை ஈரல் வரை, வாய்-கல்லீரல், மண்ஈரல் வரை ஐம்பத்தாறும் அந்தக்கரணம் நாலும் அறுபதும் அவளே. இயக்கும் ஆணையளும் அவளே. ஐம்பத்தாறு ஆற்றலாய் நிற்பவளும் அவளே. எல்லாம் அவளே.

சூழ்ந்து எழு சோதி சுடர்முடி பாதகமாய்
ஆங்கணி முத்தம் அழகிய மேனியா
தாங்கிய கையவை தார்கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே 1357

திரு அருள் அம்மையை அருட் கண்ணாலேயே பார்க்க முடியும், ஒளி அருவமாகவே உள்ளது. முடிதொட்டு அடிவரை இயற்கை பேரொளிப் பிழம்பாய் தோன்றுவாள். அவள் அழகிய திருமேனி முத்துப் போன்று, வெண் நிறமாக இருக்கும், திருக்கைகள் (ஓசை, ஒளி, காது, கண்) நான்கில் ஒன்றில் மெய்யுணர்வு அடையாளமும் மற்றொன்றில் புகழ்தரு அடையாளமும், ஒன்றில் பளிங்கு மணியும், பிறிது ஒன்றும் பசும் கிளியும் (பேச்சு) காணப்பெறும். மெய்யுணர்வு சின்முத்திரை. ஞானமே சின்முத்திரை. அறிவொளி.

பாசமதாகிய வேரை அறுத்துவிட்டு
நேசமதாக நினைந்திடும் உம்முளே
நாசமது எல்லாம் நடந்திடும் ஐந்து ஆண்டிலே
காசினி மேலமர் கண்ணுதல் ஆகுமே. 1358

நான் எனது என்பது தான் பாசம் (இது என்னவோ என்னிடம் சிறு வயதிலிருந்தே கிடையாது) அது இல்லாமல் போகும் பேது கவலை ஏது? ஆனால் உடல் இருக்கும் வரை

அது அவ்வளவு எளிதில் போகாது. உடலையும் நான் இல்லை என்று ஆக்குவதுதான் மனிதன் செயல். உடல் உயிராவதே-மனம், மனித வாழ்வு உருவ வாழ்வு அற்று விடும். உருவத்துக்கு முன் மனமே இருந்தது. மனம் அறிவாவது முன் ஏற்றம். மறுபடியும் உடலாக மாறுவது பின் இறக்கம். இந்த இரக்க சுபாவம் மாறி கல்லாவதே கல் ஒளி கல்வி. இப்படி நான் அறிவொளி, ஒளி என்று நினைத்து நினைத்துப் பழகினால் என்ன நினைக்கிறாயோ அப்படியே ஆகிறாய். சமநிலை ஏற்படும். அதுவே ஆதி நிலை தற்சமயம். 1¾ பங்கு நீர், 1½ பங்கு நிலம், ஒரு பங்கு நெருப்பு, ¾ பங்கு காற்று, ஆகாயம் ¼ பங்குமாக உள்ளது. இது மாற வேண்டாமா? இப்படி சமமில்லாத நிலையே நாசமம். காற்றும் நெருப்பும் சேர காசினியாகும்.

கண்ணுடை நயகி தன் அருளாம் வழி
பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்
விண் அமர் சோதி விளங்க ஹ்ரீங்கார
மண்ணுடை நயகி மண்டலமாகுமே. 1359

வளப்பாற்றல் பராசக்தி - பரந்த நெருப்புக் காற்று. நடப்பாற்றல் - மண் ஆவிதிரேதான சக்தி - மறைப்பு. ஆதி சக்தி-ஆகாய அணு, அதாவது நிலம், நீர், தீ, காற்று எல்லாம் சேர்ந்த இருட்டே ஆகாயம். ஆனால் மென்மையும் நுண்மையு மானது. அது ஒளியுடன் சேர்ந்து விண் ஆவதே திருமணம். வளப்பாற்றலாகிய கண் ஒளியே ஏழாம் வேற்றுமை உருபு, திரு அருள் ஆற்றல் கண்ணொடு பொருந்திய நாதமாகிய முதல் ஒலி (ஓம்) ஆருயிர் சிறப்புறுதல் பொருட்டு உறவாக நிற்கும் பரை நாதம். அப்பொழுது வெளி ஒளியாய் இருந்த சிவம் விளங்கித் தோன்றுவான்.

மண்டலத்து உள்ளே மலர்ந்து எழு தீபத்தை
கண்டகத்து உள்ளே கருதி இருந்திடும்
விண்டகத்து உள்ளே விளங்கி வருதலால்
தண்டகத்து உள்ளவை தாங்கலுமாமே. 1360

மண்டலத்துள்ளே என்பது மண்டையின் உள்ளே நவாக்கரி சக்கரம். கண்மணியின் ஒளி வட்டத்துள் மிக்கு எழுகின்ற சுத்த ஒளி அம்மையை அருவமாக பரந்த சோதியாகி கண்டு நெஞ்சுள்ளே இடையறாது நினைமின். அவ்வம்மையின் திருவருளால் களங்கம் ஒழியும். நடு நாடியுனுள் அம்மையுடன் ஆருயிரும் விளங்கித் தோன்றும்.

தாங்கிய நாபித்தடமலர் மண்டலத்து
ஓங்கி எழும் கலைக்கு உள் உணர்வு ஆனவர்
ஏங்க வரும் பிறப்பு எண்ணி அறுத்திட
வாங்கிய நாதம் வலியுடனாகுமே 1361

ஓசைக்கு இடம் மண்டை; அதில் காணப்பெறும் மலர் கண். மண்டையில் விளங்கும் கலைகளுக்கு ஓசைதான் முதல் எழுச்சி. அதற்கு ஆற்றலாய் விளங்குபவள் நாவுக்கரசி. ஆருயிர்களை வருந்தும்படி செய்யும். பிறப்பு இறப்பு வட்டத்திலிருந்து (உடல் சக்கரம்) எவ்வாறு அறுப்பதென்று கருதி அறுத்திடத் தோன்றும் நாதம் அருளால் மேலும் மேலும் உரத்தால் ஒலிக்கும் ஓசை. மெய் நாத தத்துவம். மிருகங்களும் பறவைகளும் சந்திக்கின்றன. ஆனால் அவைகளுக்கு பொருள் கிடையாது. மனிதர்கள் பேச்சில் பொருள் உண்டு. அதில் ஒழுங்கு உண்டு. பொருள் இல்லாத சொல் அராகம். பொருள் பொதித்த சொல் இராகம். சுருதியுடன் கூடியது.

நாவுக்கு நாயகி நன்மணி பூண் ஆரம்
பூவுக்கு நாயகி பொன்முடி ஆடையாம்
பாவுக்கு நாயகி பாலஒத்த வண்ணத்தள்
ஆவுக்கு நாயகி அங்கு அமர்ந்தாளே 1362

நாவிற்கு அருங்கலம் நமசிவய. ஆதலின் நடப்பாற்றல் நாவிற்கு முதல்வியாவாள். அவள் அணிவது (நீர்) மணி அணியாகும். அவளே செல்வத்திற்கு முதல்வி ஆவாள். பொன்முடி

என்பது ஒளி, பூந்துகில் ஆடை அவை கண்ணுக்கு அழகு ஊட்டுபவள். கல்விக்கு முதல்வி. பால் போல் வெண் நிறத்தாள். கண் பார்க்கும் பேசாது. பேசுவது வாய் நீரால் ஆனது. (நீர் வெண்மைதான்). ஆனால் அது பாராது. கண்டவர் விண்டது இல்லை. விண்டவர் கண்டதில்லை. கண் இலட்சுமி, நாக்கு சரஸ்வதி. ஆவுக்கு நாயகி மனோன்மணி, அதுவும் கண்மணியே. வாயுவும் மனமும் கடந்தவள். மனோன்மணி, ஆயும் அறிவு கடந்த அரனுக்கு தாயும் மகளும் தாரமும் ஆவாள்.

அன்றிரு கையில் அளந்த பொருள்முறை
இன்றிரு கையில் எடுத்த வெண்குண்டிகை
மன்றது காணும் வழி அதுவாகவே
கண்டு அங்கிருந்தவர் காரணி காணுமே 1363

உலகை சிருஷ்டிக்கும் முன் அவள் கையில் இருந்தது சின்முத்திரையையே. அறிவின் சின்னத்தையே காட்டினாள். இன்னும் அதையே தான் காட்டுகிறாள். அறிவு ஒளிதான் மூலாதாரம் அதன் வழியே மற்றொரு கையில் சுவடி வைத்திருப்பது போல் இருக்கும். உருவச் சிலைகள் அருவ மாகிய அருவ ஒலியை உருவமாக உழலும் உயிர்களுக்கு அவர்கள் போலவே உருவத்தை காட்டி அதற்கேற்ற கதையும் கட்டினார்கள். நாம் அதையே முதலும் முடிவுமாகக் கருதாமல் உள்ளிட்டுக்கு போனால்தான் உண்மை விளங்கும். நான்கு கைகள் காட்டப்பட்டுள்ளன. நாம் அதை வெப்பக்காற்றாக பார்க்கவேண்டும். அதுவே ஆவி வடிவம். உயிர், அறிவு, ஒளி, அது ஐந்து பூதங்களுடன் கலக்கும் போது சின்முத்திரை அதைச்சொன்ன வேதாகம நூல், அதை இயற்றிய நால்வர், ஸ்படிகமாலை இவற்றையே ஐந்து பேர் அறிவும் கண் என்று திருப்பி திருப்பி கூறுகின்றனர் .

காரணி சத்திகள் ஐம்பத்திரெண்டன
காரணி கன்னிகள் ஐம்பத்திருவராய்
காரணி சக்கரத்துள்ளே கரந்தெங்கும்
காரணி தன்னருளாகி நின்றாளே. 1364

இதுபற்றி முன்பே ஆராய்ந்துள்ளோம். அக்கர சக்திகள் 51ம், நவாக்கரி சக்கரம் (உடல்) ஒன்றும் 52.

நின்ற இச்சத்தி நிலைபெற நின்றிடில்
கண்ட இவ்வன்னி கலந்திடும் ஓராண்டில்
கொண்ட விரத நீர் குன்றாமல் நின்றிடின்
மனதினில் ஆகும் மணியது காணுமே 1365

நவாக்கிரி சக்கரத்து நிலை பெறும் திருவருள் ஒளி ஓராண்டுப் பயிற்சி உயிருடன் கலக்கும் அம்மை வழிபாட்டை இடைவிடாது செய்து வந்தால் சத்தியாகி, சிவமாகி, தனிப்பர முத்தியடையலாம். அது மணி ஒளி, மற்றும் பத்து விதமான ஒலி கேட்கலாம். பூதத் தீயினை வெல்வர்.

கண்ட இச்சக்தி இருதய பங்கயம்
கொண்ட இத்தத்துவ நாயகியானவள்
பண்டை இவ்வாயும் பகையை அறுத்திட
இன்றென் மனதில் இனிது இருந்தனளே. 1366

திருவருளம்மை நான்காம் நிலையாகிய (உணர்வு) நிலையில் நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தாள். அவள் அருள் துணையால் நான்காம் பூதமாகிய காற்றினை வெல்லுவர். வாயுவும் மனமும் கடந்த மனோன்மணி

இருந்தவிச் சத்தி இரு நாலு கையில்
பரந்த இப்பூங்கிளி பாச மழுவாள்
கரந்திடும் கேடகம் வில் அம்பு கொண்டு அங்கு
உரந்து அங்கிருந்தவள் கூத்து உகந்தாளே. 1367

எட்டுக்கை - எட்டு அறிவு, பாசம் - அறிவை செயல் படுத்தாமல் கெடுக்கும் தேக்கநிலை. கேடகம்-கேள்வி ஞானம் அம்பு-அபயகரம்-மேல் நோக்கு, கிளி-சொன்னதையே சொல்வது. உரந்து - ஆரவாரம்.

உகந்தனள் பொன்முடி முத்தாரமாக
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக் கச்சணிந்து
தழைத்து அங்கிருந்தவள் தான் பச்சையாமே. 1368

நம் உடம்பையும், அதன் உள்பக்கத்தையும் மேல் நாடுகளில் ஆராய்ச்சி பண்ணி படமெடுத்துள்ளார்கள். அதில் ஏழு நிறமும் உள் உடம்பில் தெரிகிறது. இந்த விஞ்ஞான உலகத்தில் கண்ட உண்மைகளை நம் ஞானிகள் எப்படி அறிந்தார்கள் என்ற கேள்விக்கு பதில் யார் சொல்ல முடியும்? இன்றைய விஞ்ஞானம் தான் பதில். மெய் ஞானமும், விஞ்ஞானமும் நெருங்கி வருகின்றன. நம் கண்களில் ஒளிப்பட்டு கண்களில் உள்ள நீர் முத்து திரண்டு குண்டு குண்டாக திரண்டு ஒன்றன் பின் ஒன்றாக நரம்பு ஆகிறது. இதையே பொன்முடி முத்தாரம் என்கிறார். அது மஞ்சள் நிறம். பரந்த பவளம் என்பது இரத்தத்தின் நிறம். அதை பட்டாடை என்கிறார். மலர்ந்து எழும் (கொள்கை) கொள்கை என்பது நம் கண்மணி, நம் கண்கள் நீரால் கட்டப்பட்டிருக்கிறது. கச்சணிந்த கொங்கை மஞ்சள் மண் நிறம், ஆகாயம் நீல நிறம், இது இரண்டும் சேர்ந்தால் பச்சையாகும் என்பது பெயிண்டருக்கு தெரியும் இப்படிச் சாயங்களால் ஆனது தான் நம் உள் உடம்பு.

பச்சை இவளுக்கு பாங்கிமார் ஆறெட்டு
கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலால்
கச்சணி கொங்கைகள் கை இரு காப்பதாய்
எச்ச இடைச்சி இனி திருந்தாளே 1369

பரிவார சத்திகள் 48, தோழியர் எட்டு, இருகை, கண்ணாகை-2. எச்ச இடைச்சி நடுநாடி. பச்சை திருமேனியுடைய அம்மைக்கு (நீர் அதீதமாகவும் நெருப்பு, காற்று குறைவாக உள்ள நிலை) சூழ இருக்கும் பாங்கிமார் (பங்காளிகள்) ஆறு உடலிலும் எட்டு முகத்திலும் 6 X 8 = 48 பேர் அதில் அணு அளவாக இருப்பது சூட்சுமம் கண் - 2, காது - 2, நாசி துவாரம்-2,

வாய்-பேச்சு, ருஜி-2, ஆக எட்டு இதை தோழியர் நட்பு இருபுறக் காவலர். செவ்வாய், சுக்கிரன், புத்தி, வியாழன், இவைகள் அறிவோடு (சூரியன்) நாலு, மனதோடு (சந்திரன்) நாலு, மீதம் இரண்டு அறியாமை எனும் சனி, இரண்டு வீடு ஆக 12 இடங்களில் இராசியாக உள்ளன. இந்த 12 வீடுகளில் 27 நக்ஷத்திரம் வீட்டுக்கு 2¼ ஆக பங்கு வைத்து உறைகின்றன. இவை எல்லாம் ஏழு தலைப்பு இந்த ஏழையும் தூண்டி செயல்படுத்துவது. இராகு கேது என்னும் நீர்க்காற்று, நெருப்புக்காற்று. இவை தாம் ஒன்பது நவாக்கரி சக்கரம் என்பது இராகு - நீர் கேது உஷ்ணக்காற்று.

தாளதின் உள்ளே தாங்கிய சோதியை
காலதுவாகக் கலந்து கொள் என்று
மாலது வாக வழிபாடு செய்து நீ
பாலது போல பரந்தெழு விண்ணிலே. 1370

உருவமில்லாத பரந்த சோதி நீருடன் சேர அம்மை ஆகிறது. அது கண்களில் தேங்குகிறது. அதை நாசி வழியாக வரும் நீர்க்காற்று (பூரகம்) ஆலையாக எழுச்சி பெறச் செய்கிறது. அது சூட்டினால் ஆவியாகி அங்கும் இங்கும் புகை போல் பரவுகிறது. திரை போல் ஒளியை மறைக்கிறது. நான் ஒளி என்று நினைத்து நினைத்து பழகினால் அது பலம் பெற்று நீர்த்திரையை எரித்து ஒளியோடு சேர விண்ணை நோக்கும். அதுவே அறிவு ஒளி.

விண் அமர் நாபி இருதயமாம் அங்கு இடை
கண் அமர் கூபம் கலந்து வருதலால்
பண் அமர்ந்த ஆதித்தன் மண்டலமானது
தண் அமர் கூபம் தழைத்தது காணுமே 1371

புருவ நடு என்பது இடது பக்கம் (பெண்) வலது பக்கம் ஆண். இவை நெருங்கும் போது இடையில் ஒரு வெளி (வெற்றிடம்) இருக்கும். அது தான் நடு என்பது இரு உதயம்

என்பது நீர் சத்தி (சந்திரன்) நெருப்பு சூரியன், இது இரண்டும் இணையும் போது அக்னி கலை ஏற்படும். இதையே ஞாயிறு (சூரியன்) திங்கள் (சந்திரன்) செவ்வாய் (அக்னி) என்பது புருவ நடுவில் அமிழ்தம் (ஆவி) தங்கி நிற்கிறது. அது மந்திர உருவால் (மனதின் நிறம் - அசைவு) மேலிடமாகிய சிரசை நோக்கிப் போகும். உடலில் வயிற்றிலிருந்து கழுத்துக்கு ஏறும். அதனால் கழுத்துப்பகுதி சுத்தமும் அசுத்தமும் கலக்கும் இடம். அதையே விசுத்தி என்பது அசுத்தம் சுத்தம் செய்யப்பட்டால் மேலே போகும் இல்லையெனில் கீழே தள்ளப்படும். அதுவே மலம். சிறுநீர் கழிவு. கூபம் என்பது கிணறு போன்ற அமைப்பு, உடம்பகத்தில் சூரிய வெப்பம் தணிக்கப்பட்டு தண் அமர் கூபம் ஆகிறது.

கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்து சத்தி தயங்கி வருதலால்
ஆபத்து கைகள் அடைந்தன நாலு ஐந்து
பாசம் அறுக்க பரந்தன சூலமே 1372

தாபத்து சத்தி - ஆதித்த மண்டல சத்தி, ஆ - பத்துக் கைகள் - பத்துவிதமான எண்ணங்கள். தசா அவதாரம், அவைதாம் மனிதன் அவதாரம். விஷ்ணு அவதாரம். விஷ்ணு பத்து அவதாரம் என்பது பத்துக் கோலங்களே, மீன், ஆடு, மாடு; கன்னி, நண்டு, சிம்மம், இரட்டை கன்னி, தராசு, தேள், வில், மகரம், கும்பம், இவையே இராசிகள் என்பது. அவதாரம் என்று நாம் குறிப் பிடுவது மச்சாவதராம். பன்றி, ஆமை, நரசிம்மம், வாமனம், பலராமன், ராமன், கிருஷ்ணன், கல்கி என்ற ஒன்பது தான். ஒன்பதும் நடைபெறப் பொது இடம் ஒன்று பத்து. முத்தலை வேல் என்பது காற்று, நீர், நெருப்பு சேர்ந்த ஆவியே. அமிழ்த கிணற்றினுள் சத்தி தண்ணளி (குளிர்ச்சி) பொருந்திய பத்து திருமுகங்களோடு கூடியவள். அவளால் ஞாயிற்று மண்டலத்து வெப்பம் தணிக்கப்பட்டு, தாங்கக்கூடிய அளவிற்கு அளிக்கப் படுகிறது. ஆருயிர் இடமுள்ள போது நலமுற்றுத்திடமுடன் வாழச் செய்யும் கைகள் இருபது என்பது.

சூலம் தண்டம் ஒளிவான் சுடர் பறை ஞானமாய்
வேல் அம்புதபருகம், கிளி வில் கொண்டு
காலம் பூ பாசம் மழு கத்தி கைக் கொண்டு
கோலம் சேர் சங்கு குவிந்த கை எண்ணதே 1373

இருபது கருவிகள் கூறப்படுகின்றன. அவை முத்தலை வேல், கதை, ஒளி பொருந்திய வாள், சிறந்த பறை, அறிவொளியாய் விளங்கும் வேல், அம்பு, உடுக்கை, கிளி, வில், நீண்ட காம்பும் அழகும் உடைய தாமரைப்பூ, கயிறு, மழு, கத்தி, அழகுமிக்க சங்கு, திருவடி சுட்டிக் காட்டுவிக்கும் திருக்கையாகிய குவிகை இவை எல்லாம் நம்மிடம் எது என்று யோஜியுங்கள். இவை எல்லாம் நாம் தாம். தேடுங்கள். ஓம் சத்தி.

எண் அமர் சத்திகள் நாற்பத்தி நாலுடன்
எண் அமர் சத்திகள் நாற்பத்தி நால்வராம்
எண்ணிய பூவிதஉள்ளே இருந்தவள்
எண்ணிய எண்ணம் கடந்து நின்றாளே. 1374

விரும்பத்தக்க நாற்பத்து நாலு ஆற்றல்கள் தம்மைச் சூழ வீற்றிருக்கும் அருள் ஆற்றலர். நாம் என்னவோ ஒரு ஆள் போல் கற்பனை செய்கிறோம். அது உண்மை அல்லவே. அதனால் தான் நான் யார் என்றுசொல்ல முடியவில்லை. நான் காற்றா? ஒளியா? ஒலியா? இரத்தமா? சதையா? எலும்பா? நரம்பா? ரோமமா? இப்படி எல்லாமும் கடைசியில் நாலு அநுபவத்திலேயே முடிகிறது. அவை சுவை, ஒலி, ஓசை, நாற்றம் நாலையும் உணர்ந்த உணர்வு, இந்த நாலும் ஆக்கப்பட்ட வேண்டிய பொருள்கள் அல்ல. இயல்பாகவே இருக்கின்றன. ஆனால் ஆக்கப்படுவது போல் காட்டுவது போலித்தனம். நாடகம் எதுவும் ஆக்கப்படுவது இல்லை. ஆன பொருளே எண்ணம் நினைவு சங்கற்பம்.

கடந்தவள் பொன்முடி மாணிக்கத்தோடு
தொடர்ந்து அணி முத்து பவளங்கச் சாகப்
படர்ந்த அல்குல் பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்து நின்றாளே 1375

மாற்ற மணம் கழிய நின்ற மறையவளாகிய திரு அருள் அம்மை கருதுவார் கருதும் திருஉரு ஆவள். எவ்வாறு அறிவான் அறிவு தனக்கு எல்லை. நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படி உரு-எடுப்பாள். அதாவது அவ்வளவு மென்மையான நுண்ணிய மான சத்தி. அதைத்தான் பரமா அணு என்பது. அணுவின் அணுவினை ஆயிரம் கூறிட்டு என்பர், வெற்று இடமே அது, அதை பொன் போன்றவள் எனலாம். மாணிக்கம் போன்றவள் எனலாம். முத்து, பவளம் எனலாம். நவமணியால் கட்டப்பட்ட மாலை எனலாம். பெண் குறியை அல்குல் என்பர். அதை ஆபாசமாகப் பாராமல் ஆராய்ச்சி கண்ணோடு பாருங்கள். கன்னி கழியாமல் இருக்கும் போது ஆண்குறி கூட உள்ளே நுழைய முடியாத அளவுக்கு இருக்கிறது. பழகப் பழக சரியாக விடும். அந்த சிறு துவாரம் ஒரு குழந்தை உரு வெளியே வரும் அளவுக்கு இடம் கொடுக்கிறது என்றால் அதன் விரிவு எத்தகைய ஆச்சரியமாயிருக்கிறது. இப்படித் தான் நம் கண் 1½ அங்குலம் கண்களில் கடலே காட்சி ஆகிறது. மலையே போகிறது. இது அற்புதமாக இல்லை. சிந்தியுங்கள். உலகமே கண்களில் அடக்கம்.

நின்ற இச் சத்தி நிரந்தரமாகவே
கண்டிரு மேரு அணிமாதி தாளாகி.
பண்டைய வானின் பகட்டை அறுத்திட்டு
ஒன்றிய தீபம் உணர்ந்தார்க்கு உண்டாமே 1376

என்றும் கன்னியாக நின்று அருளும் பேரறிவு பேராற்றலாகிய அம்மை அகத்தவம் சேர் உயிர்களுடன் எப்பொழுதும் விளங்கித் தோன்றுவாள். அங்ஙனம் தோன்றுதலால் மேரு என்று சொல்லப் படும் புருவ நடுவில் அணிமா என்று சொல்லப்படும் எட்டு

சித்திகள் தாமாகவே வந்து கை கூடும். மலத்தை அறுத்திட துணை புரியும். பகடு - மலம், பிணிப்பு, கட்டு, தீபம்-ஒளியாகிய சத்தி.

உண்டோர் அதோமுகம் உத்தமமானது
கண்ட இச்சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறும் கரங்களும்
ஒன்றி இரண்டாகவே மூன்று நாலானதே 1377

அதோ முகம் என்பது உட்பார்வையில் கீழ்ப்பார்வை. அது கீழே இருந்து உச்சிவரை ஒரே கோடு போல் தோன்றும். அதுவே சதாசிவநாயகி - நடு நாடி சுழுமுனா நாடி. இந்த ஒரு நாடியில் மண்முதல் விண்வரை நிலம் முதல் வான் வரை நேருற நிற்கும். சிலவாணி செய்யும் தேவர் பிரானை தலை வாணி செய்வது தன்னை அறிவதே. ஆகவே ஐந்து முகங்களும் பத்துக் கைகளும் உண்டு.

நன்மணி சூலம் கபாலம் கிளியுடன்
பன் மணி நாகம் மழுகத்தி பந்தாகும்
கண்மணி தாமரை கையில் தமருகம்
பொன்மணி பூண் ஆரம் பூசனை ஆனதே 1378

மேல் ஓதிய சதாசிவ நாயகியின் (குண்டலின் சத்தி) திருக்கைகள் பத்திலும் - அழகிய பளிங்குமாலை (கண் நாடி) முத்தலைவேல் (காற்று, தீ, நீர், அணு) மண்டை ஓடு (ஆவி ஓடும் இடம்) பசும் கிளி-(சொன்னதையே திருப்பிச் சொல்லும் நாக்கு) பல குண்டு மணிகளால் ஆன நாடி நரம்புகள் (பாம்பு) மழுப்படை-உஷ்ணத்தின் வேகத்தை தணிக்க நீர், தங்கத்து பளபளப்பு கொடுக்கும் ஒளி, பூப்பந்து, மெல்லிய உருண்டு உருண்டு ஆன குண்டலினி (CELL) இரத்தம். (தாமரை) உடுக்கு (நாதம்) இவைகளே வழிபாட்டுக்கு உரிய பொருள்கள்.

பூசனை சத்திகள் எண் ஐவர் சூழவே
நேசவள் கன்னிகள் நாற்பது நேரதாய்
காசினிச் சக்கரத்துள்ளே கலந்தவள்
மாசடையாமல் மகிழந்திருந்தாள்களே 1379

பூஜைக்குரிய சத்திகள் (8 X 5 = 40) நாற்பது, நாலு மனம், புத்தி, சித்தம், அகம் - காற்று, நெருப்பு, நீர், இடம் ஒவ்வொன்றிலும் ஐந்தும் கலந்தே இருக்கும். இவற்றின் நடுவே உலகச் சக்கரம் அமைந்திருக்கும். உடல் இல்லையாயின் உலகம் ஏது? ஆதவே காசினிச் சக்கரம் ஏது காற்றும் நெருப்பும் சேர்ந்த ருத்திர கிரந்தியாகிய கண்களே. அங்கே சுத்த சத்தியாக அமர்ந்திருந்தாளே. பரிசுத்த ஆவி, யாருக்கும், எட்டாத சக்கரம், வெட்டாத சக்கரம்.

தாரத்தின் உள்ளே தயங்கிய சோதியை
பாரத்தின் உள்ளே பரந்து உள் எழுந்திட
வேரது ஒன்றி நின்று எண்ணும் மனோமயம்
காரது போல கலந்தது மண்ணிலே 1380

தாரம்-பிரணவ ஒலி (ஓம்) பாரம்-பிராணவாயு. வேர்-மூலாதாரம் - கண் ஒளி, கார்-சுழுத்தி நிலை. ஓம் என்ற பிரணவத்தில் சுடர் ஒளி விளங்கும். அதுவே வலது கண் சூரியன், இடது கண் சந்திரன், நெற்றிக்கண்-அக்னி, அச்சுடரொளியை காற்றுடன் சேர்த்து (துலாபாரம்-தராசுபோல்) சமமாக பங்கீடு பண்ண வேண்டும். அதற்கு ஆணை மனதிலிருந்து பிறக்க வேண்டும். அவ்வடிவம் தூக்கத்திலிருப்பது போலவே இருளாக இருக்கும். உயிர்ப்பு பிராணவாயு (பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், முகத்தில் தேவதத்தன், தனஞ்செயன், நாகன், கூர்மன், கிருகரன் ஆக தச வாயுக்கள்)

மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாயநம வென்று
கண்ணில் எழுந்திது காண்பது அரிதென்று கொல்
கண்ணில் எழுந்தது காட்சி தரவென்றே 1381

மண்ணில் என்பதை மனதில் - மனம் என்பது அகம், அகத்தின் அழகு முகத்தில். முகத்தில் கண்களே இடம். அங்கே தான் அகாரமாகிய ஒளியும் உகாரமாகிய ஒலியும் தோன்றி சிவாயநம என்று நெருப்பு, காற்று, உயிர் (நாதம்) விண்ணை நோக்கி எழுச்சிபெறும். அது கண்களால் செய்ய இயலாது என்று கருதி தானே செயல் செய்து. கண்களுக்கு வேலை கொடுக்காமல் சாட்சியாக பார்க்கும் சத்தியை மாத்திரம் கொடுத்தால் திரு அருள் அம்மை. அதனால்தான் ''சும்மா இரு'' என்று சொல்வது. இயற்கையில் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகிறது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் பார்வையாளனாக பார்ப்பதே. கேள்வி கேட்கும் உரிமையும் கிடையாது. சாட்சியாக பார்ப்பது, கட்சியாகக் கூடாது.

என்று அங்கிருந்த அமுத கலை இடை
சென்று அங்கிருந்த அமுத பயோதரி
கண்டு அங்கு கரம் இரு வெள்ளி பொன் மண் அடை
கொண்டு அங்கு இருந்தது வண்ணம் அமுதே 1382

அமுதபயேதரி - அமுதேஸ்வரி - அன்னபூரணி, சிகரம்- கமண்டலம், அமுதம்-வெண்மை புருவ மத்தியில் காணப்படும் சந்திர மண்டலத்துள் வீற்றிருந்து அருளும் அம்மை அருள் (ஒளி) அமுத முலையினள். அவள் நிறம் வெண்மை, கை - பொன்னிறம் மண்ணாலாகிய சிகரம் இருக்கும்.

அமுதமாகிய அழகிய மேனி
படிகமதாக பரந்து எழும் உள்ளே
குமுதமாக குளிர்ந்து எழு முத்துக்கு
அமுத மதாகிய கேடிலி தானே 1383

படிகம் - பளிங்கு நிறம், TRANSPARENT கண்ணாடி குமுதம்- அல்லி, அமுதம் - பொருந்திய, திருவருளம்மை அமுதம் போல் வெண்மை நிறத்தாள். கண்ணாடி போன்று உள்ளும் புறமும்

விளங்கி நிற்பவள். குமுதம் போன்ற பருத்த முத்து மாலை அணிந்தவள். என்றும் ஒன்று போல் நிலைத்து நிற்பவள். அதனால் கேடு இல்லாதவள். நம் கருமணி பிறக்கும் போது எந்த அளவோ இறக்கும் போதும் அந்த அளவே இருக்கும்.

கேடிலி சத்திகள் முப்பத்து அறுவரும்
நாடிலி கன்னிகள் நாலு ஒன்பதின் மரும்
பூவிலி பூ இதழ் உள்ளே இருந்து இவர்
நாளிலி தன்னை நணுகி நின்றார்கள் 1384

பூவிலி-தோற்றம் இல்லாதவள். நாடிலி-நாடற்கு அரியவள். பூ-பிறப்பு, நணுகல்பொருந்தும் கால வரையறையை கடந்த நாளிலியாகிய அம்மையின் திருவடியை பொருந்தி நின்றவர்க்கு அவ்வம்மை அழிவில்லாதவள் என்றும், முப்பத்தாறு கன்னிப் பெண்கள் (அறிவிலாதன) சூழ வீற்றிருப்பவள் என்றும், பிறப்பு இறப்பு இல்லாதவளென்றும், நெஞ்சத் தாமரையில் வீற்றிருப் பவளென்றும் உணருவர்.

நின்றது புந்தி நிறைந்திடு வன்னியும்
கண்டது சேதி கருத்துள் இருந்திட
கொண்டது ஓராண்டு கூடி வருகைக்கு
விண்டவன் அகாரம் விளங்கின அன்றே 1385

புந்தி-வன்னி, அனாகதத்தில் விளங்கும் உருத்திரன் கூடி வருகை-சித்தியாதல், விண்ட - மேலே சொன்ன நெஞ்சத் தாமரையில் எஞ்சாது விளங்கும் சிவன் மேலே கூறிய திருவருளம்மையை சுடர் உருவாய் அன்பர்கள் உள்ளத்தில் அமைத்திடலால் அவர்களுக்கு ஒரு ஆண்டில் கை கூடி அருளுவாள். அக்காலத்து முதிர்ச்சி பெற்ற 'ஔ' காரம் முதலிய வித்து எழுத்துக்கள் தோன்றும். புந்தி - நெஞ்சம், வன்னி - சிவம், சோதி - திருஅருட்சுடர்.

விளங்கு வானிடை நின்றவை எல்லாம்
வணங்கிடு மண்டலம் மணி உயிராக
நலம் கிளர் நன்மைகள் நாரணன் ஒத்து
சுணங்கிடை நின்றவை சொல்லுமாமே 1386

வானத்தில் உள்ள அண்ட கோடிகளில் வாழும் உயிரினங்கள் அனைத்தையும் நில உலகில் உயிர் இனங்களைப் போன்று கண்டு கூறுதலும் உண்டு. சுத்த மாயையில் உள்ள திருமாலை இயக்கும் அருளாற்றல் மாலாகிய நாரணனை போன்று இடையறாது நெஞ்சத்தாமரையில் சிவனை நினைமின். சுணங்கு - பூந்தாள், மண்டலம் - பூவி, ராமர், பூஜித்த ஈசன் இராமேஸ்வரன்.

ஆமே அதோமுகம் மேலே அமுதமாய்
தாமே உகாரம் தழைத்து எழும் சோமனும்
காமேல் வருகின்ற கற்பகமானது
பூமேல் வருகின்ற பொற் கொடியானதே 1387

கீழ் நோக்கியுள்ள (அதோமுகம்) சந்திர மண்டலத்தின் மேல் அமுதமயமாய் தோன்றும் எழுத்து உகாரமாகும். அதன் கண் திங்களும் செழித்து விளங்கும். கா - சோலை. கடம்பவனம் மதுரமான இடம் கடம்பவனம் கடந்து வந்தவனம் - வானம். காமேல் - வாயுவும் கடந்த இடம் மதுரை. துவாத சாந்தப் பெருவெளி.

பொற் கொடியாளுடைப் பூசனை செய்திட
அக்கனியாகிய ஆங்காரம் போயிடும்
மற்கடமாகிய மண்டலம் தன்னுளே
பிற் கொடியாகிய பேதையைக் காணும் 1388

நமக்கு மேல் உள்ள அளப்பரிய சத்திகளைப் பற்றி அறிய அறிய நாம் எம்மாத்திரம் என்று தோன்றுகிறது. மமதை குறைகிறது. நான் என்ற திமிர் ஒழியும் எல்லாம் அவன் செயல்

என்று சரணாகதி ஏற்படும். மண் குதிரையாகிய இந்த உடலை நம்பி ஆற்றில் இறங்க மாட்டோம். பொய்க்கால் குதிரை.

பேதை இவளுக்கு பெண்மை அழகாகும்
தாதை இவளுக்கு தாணு வுமாய் நிற்கும்.
மாதை இவளுக்கு மண்ணும் திலகமாய்
கோதையர் சூழக் குவிந்திடம் காணுமே 1389

பொதுவாக ஜீவாத்மாக்கள் எல்லாம் பெண்கள் தாம். அதனாலேயே கன்னிகள் எனப்படுவர் பக்குவமாகாதவர்கள். மனித நேயம் என்பது பெண்ணே பெண்ணை விரும்புவது போலத்தான். ஆகவே சிவனை அடையாதவரை பெண்கள் தாம். திருமால் கூட பெண் அம்சமே. பெண்ணில் ஆண் முப்பத்தாறு தத்துவங்களும் குறை அறிவுள்ளவையே. தானாக இயங்கும் - ஆற்றல் இல்லாதது. தாணு-தூண், ஐ-அரசி-மாது-ஐ பெண்ணரசி.

குவிந்தனர் சத்திகள் முப்பத்திருவர்
நடந்தனர் கன்னிகள் நால் எண்மர் சூழப்
பரந்திதழாகிய பங்கயத்துள்ளே
இருந்தனள் காணும் இடம் பல கொண்டே 1390

கூடி இருக்கும் ஆற்றல் செல்விகள் முப்பத்திருவர் முதுகெலும்பு 32 கணுக்கள். பல் 32 முகத்தில் 30 இவர்களுக்கு அகமாகச் சூழ்ந்து வரும் கன்னிப் பெண்கள் 32. இவர்கள் அனைவரும் சூழ்ந்துவர இடப்பால் திகழும் விரிந்த இதழ் களையுடைய நெஞ்சத்தாமரையின் கண் வீற்றிருந்து அருளும் அம்மை மூல முதலாகிய அறு நிலைக் கண்டகளைக் கொண்டு தோன்றி அருள்வள் மனோமய கோசம்

கொண்டு அங்கிருந்தனர் கூத்தன் ஒளியினை
கண்டு அங்கு இருந்தனர் காரணத்து உள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்கும் தேடுமால்
இன்று என் மனத்துளே இல் அடைந்து ஆளுமே 1391

காரணம் இல்லாமல் காரியமில்லை நம் படைப்புக்கும் காரணம். அது சிவனை அடையும் நோக்கமே, காரணம் உருவத்தால் ஆன பயன் உத்தமனை காண்பதே.

இல் அடைந்தானுக்கு இல்லாதது ஒன்றில்லை
இல் அடைந்தானுக்கு இரப்பது தான் இல்லை
இல் அடைந்தானுக்கு இமையவர்தாம் ஒவ்வார்
இல் அடைந்தானுக்கு இல்லாததில்லை ஆனையே 1392

நவாக்கரி சக்கரம் என்பது ஒன்பது வாசல் உள்ள நம் உடம்புதான். சக்கரம் என்ற சொல். நடந்ததே திரும்பத் திரும்ப நடப்பது தான். மேலே போகும் கீழேவரும். இது தான் சக்கரம். சக்கரம் சுற்ற அச்சு ஒன்று வேண்டும். அது நுழைய ஒரு துவாரம் வேண்டும். அந்த துவாரமே ஆகாசம். நுழைவது ஒளி, காற்று, ஒலி, மண், நீர் 9 வாசல் ஏழுமுகத்திலும், இரண்டு உடல் கீழ்பாகத்திலும் இருக்கிறது. நம் நினைவு இரண்டிலே இருப்பது போல் எழில் இல்லை. ஏழையே நினைப்பதே எழுச்சி ஆகும். நினைவு கழுத்துக்கு மேலேயே இருந்தால் 'நான்' அறிவாகும். இதுவே மனமாற்றம். அதற்கு பயிற்சி தேவைப்படுகிறது. அதுவே அகமுக பயிற்சி நாம் அதீதமான பொய் உலகத்திலேயே வாழுகிறோம். அதுவே உருவ உலகம். தோற்ற அளவில் உண்மை அப்பா, அம்மா இல்லை. அம்மா அம்மா இல்லை. பெயரளவில் சகோதரர் சகோதரி. கோவில், குளம், பள்ளிக்கூடம், கோர்ட், அரசியல், சமுதாயம் எல்லாமே பெயரளவில் உண்மையே ஒழிய நடைமுறையில் கூத்தாகத்தான் இருக்கிறது. சட்டம் ஒரு இருட்டறை. ஆகையால் உருவக்கவர்ச்சி மறக்கப்பட வேண்டும். அருவமே உண்மை. அறிவு ஒளியே நான் என்று சொல்லிப் பழகுங்கள். நினைத்துப் பழகுங்கள், நினைவு அறிவாகும். என்றும் நிலைத்த ஆற்றல் திருவடியைப் பெற்றவர் இல் அடைந்தவர் ஆவர். அதை அடைந்தவர் எதையும் சாரார்.

யார் தயவையும் நாடார். அவர்க்கு தேவர்களும் ஒப்பாக மாட்டார்கள். தன்னை அறிந்தவர் ஆகிறார். தன்னை அறியும் அறிவே அறிவு. மற்றதெல்லாம் பேயறிவு. தன்னை அறியில் தனக்கு ஒரு கேடில்லை. அறிவுக்கு ஆக்கமுமில்லை அழிவும் இல்லை

ஆனை மயக்கும் அறுபத்து நாலு அறி
ஆனை இருக்கும் அறுபத்து நாலொளி
ஆனை இருக்கும் அறுபத்து நாலு அறை
ஆனையும் கோடும் அறுபத்து நாலிலே 1393

ஆண் (எண்ணங்களால் ஆன) உயிருடன் கலக்கும் உச்சித் தொளைக்கு மேல் சொல்லப்படும் அருள் ஆணையாகிய நிலை களத்திலிருந்து மேல் நோக்கி எழுந்து விரியும் கதிர்கள் ஆறு பத்து நான்கு (64) ஓம் மொழி உருவாம் சிவன் முக்கண்ணன் ஆனை (ஆக்ஞா சக்கரம்) எனப்படுவான், ஆன் + ஐ, உயிர்களின் தலைவன் அவன் அவ்வொளிகட்கு உள் ஒளியாக விளங்குபவன் அவ்வொளிக் கதிர்களாகிய அறையில் (கண்குழி) வீற்றிருந்து அருள்வன். ஒலிக்கலையும் ஒளிக்கதிர்களோடு தோன்றி அருளும் ஒன்று முதல் நான்கு தந்திரங்களும் ஒரு புடை ஒப்பாக அறம் பொருள் / இன்பம், வீடு என்ற நான்கு பொருள்களும் ஓதுவன ஆகும். மேல்வரும் ஐந்து தந்திரங்களும் பேறு, பெறும் வழி வழிபாடு, வழிபாட்டு உறுதி, மாறா வாழ்வு ஐந்தையும் உணர்த்துவன, அருள் என்றும் ஒரு சொல்லால் வழங்கப்பெறும்.

ஓம்



முடிவுரை

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப"

– தொல்காப்பியம்

மூவாயிரம் தமிழ் என்று புகழ்ந்தணியப் பெற்ற திருமந்திரம் என்னும் சிறப்பு நூலைப் படித்து பொருளுணர்ந்து ஆன்ம அழுக்கை அகற்றி மேன்மையடைந்துள்ளீர்கள். எப்படி தினமும் நீராடி உடலை சுத்தமாக வைத்துள்ளோமோ அதுபோல் எந்த நேரமும் இறைவன் திருவடிப் பெருமை பற்றியும், இறைவனின் பண்பு பற்றியும், இறைவனின் நற்குணங்கள் பற்றியும் சிந்தித்த வண்ணமிருக்க' தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், திருவிசைப்பா, திருவருட்பா, திருக்குறள் போன்ற நன்னூல்களைப் படித்து அதனதன் நெறியைப் பின்பற்ற ஆன்மா எப்போதும் சுத்தமாக இருக்கும்.

கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை

– தமிழ்மறை

எண்குணங்கள்

கொல்லாமை, புலனடக்கம், பொறுமை,இரக்கம், அறிவு, மெய், தவம் அன்பு என எட்டாகும். இவ்வெண் குணங்களையுமுடைய இறைவன் திருவடிகளை வணங்காத தலை குற்றமற்ற கருவிகளையுடைய உடலாயிருப்பினும் நல்ல குணங்களற்றவையே என வள்ளுவர் கூறுகிறார்.

மனிதப் பிறவியால் அடைய வேண்டியது திருவடிப்பேறு. இறை சிந்தனையே. அதை நல்கும். தவமே இறை சிந்தனையை வளர்க்கும். ஆர்வமே தவநிலைக்கு அழைத்துச் செல்லும். பக்தியே ஆர்வத்தை வரவழைக்கும் தன்னலமற்ற சேவையே பக்தியுணர்வைத் தூண்டும் பக்தியுணர்வே கல்மனத்தை கனியச் செய்யும். மன உருக்கமே கருணையை வரவழைக்கும். கருணையே அன்பாக மாறும். அன்பே சிவமாய் மிளிரும்.

வாழ்க சைவம்
வளர்க சைவ நீதி

– நூலாசிரியனின்
அன்புமாணவன்

இந்நூல் வெளியிட உதவிய அன்பர்கள்

THE INTER NATIONAL LIONS CLUB, TIRUCHY.

திரு. **சுப்ரமணியம்,** *நவிலு மார்பிள்ஸ், திருச்சி*

திரு. **A.V.K. சொக்கலிங்கம்,** *ஹவுசிங் யூனிட்*

திரு. **அனுராதா பாஸ்கர்,** *அண்ணாநகர், திருச்சி*

திரு. **நாகராஜன், BHEL**

திரு. **பெரியகருப்பன்,** *ஸ்டேட் பாங்க்*

திரு. **நல்லதம்பி,** *பர்மா பஜார், திருச்சி*

திரு. **சுந்தரம்,** *விஜய் லாட்ஜ், திருச்சி*

திரு. **நாராயணமூர்த்தி,** *திருச்சி*

திரு. **தசரதன்,** *பொன்னை*

திரு. **வெங்கடேசன்,** *பொன்னை*

திரு. **தருமராஜ், BHEL**

திரு. **ஸ்டீபன் சேவியர், BHEL**

திரு. **M. நடராஜன், BHEL**

திரு. **திருமாவழவன், BHEL**

திருமதி. **மல்லிகா,** *ஸ்டேட் பாங்க்*

திரு. **சின்னையன்,** *கோரப்பட்டி*

ஆசிரியரின் பிற மெய்யுரை விளக்க நூல்கள்

- விநாயகர் அகவல்
- மனிதனும் தெய்வமாகலாம்
- ஐயப்ப சுவாமி மாலை
- கந்தர் சஷ்டி கவசம்
- அறியாமை நீக்கம்
- அவ்வை குறள்
- கந்தர் கலிவெண்பா
- மறைபொருள் விளக்கம்
- திருமந்திரம் (முதல் தந்திரம்)
- திருமந்திரம் (இரண்டாம் தந்திரம்)
- திருமந்திரம் (மூன்றாம் தந்திரம்)

விலை : 70.00

கிடைக்குமிடம்

வீர. உலகநாதன்
திருமூலர் திருமந்திராலயம்,
DD4 வீட்டு வசதி வாரியம்,
சாலை ரோடு, திருச்சி 620 003.